மொழி ஒப்பியலும் வரலாறும்

பேராசிரியர்
டாக்டர். ரா. சீனிவாசன்
எம். ஏ; எம். லிட்; பி. எச்டி

அணியகம்
சென்னை-30.

மொழி ஒப்பியலும் வரலாறும்

பேராசிரியர்

டாக்டர். ரா. சீனிவாசன்

எம். ஏ; எம். லிட்; பி. எச்டி

அணியகம்

சென்னை-30.

நூல் விளக்கம்

முதற் பதிப்பு	1974
இரண்டாம் பதிப்பு	1978
மூன்றாம் பதிப்பு	1980
நான்காம் பதிப்பு	1999
நூல் பெயர்	மொழி ஒப்பியலும் வரலாறும்
ஆசிரியர்	ரா. சீனிவாசன்
பொருள்	மொழியியல்
பதிப்பகம்	அணியகம் 5 செல்லம்மாள் தெரு, செனாய் நகர், சென்னை - 600 030. தொலைபேசி : 644 96 30
தாள்	11.6 kg. Map litho
அளவு	டபுள் கிரௌன்
எழுத்து	10 புள்ளி
பக்கம்	248
விலை	ரூ.50.00
அச்சீடு	நெல்சன் பிரிண்டர்ஸ் சென்னை - 600 029.

உள்ளுறை

1.	திராவிட மொழிகளின் ஒலியியல்	... 1
2.	வல்லொலி மெல்லொலி மாற்றம்	... 10
3.	ஒலித் திரிபுகள்	... 19
4.	உயிர் ஒலி மாற்றங்கள்	... 25
5.	மெய்யொலித் திரிபுகள்	... 36
6.	ஆய்த ஒலித் திரிபுகள்	... 59
7.	தமிழ் ஒலியசைமுறை	... 65
8.	திராவிடச் சொற்கள் சொல்லாக்கம்	... 69
9.	பெயர்ச் சொற்கள்	... 79
10.	எண்ணுப் பெயர்கள்	... 81
11.	மூவிடப் பெயர்கள்	... 98
12.	பெயரடைகள்	... 106
13.	வேற்றுமை	... 110
14.	வினைச்சொற்கள்	... 118
15.	வினைவகைகள்	... 122
16.	தன்வினை பிறவினைகள்	... 128
17.	காலங் காட்டல்	... 131
18.	எதிர்மறை வினைகள்	... 139
19.	தெரிநிலை வினையும் குறிப்பு வினையும்	... 144
20.	தொடரியல்	... 148
21.	மொழியும் மொழி வரலாறும்	... 159
22.	திராவிட மொழிகள்	... 164
23.	செந்தமிழும் கொடுந்தமிழும்	... 173
24.	தமிழ் உயர்தனிச் செம்மொழி	... 180
25.	திராவிட மொழிகளும் வடமொழியும்	... 182
26.	சொற்பொருள் மாற்றம்	... 192
27.	சொல் இலக்கணமாற்றம்	... 197
28.	மொழிக் கலப்பு	... 200
29.	மொழி நிலைகள்	... 215
30.	காலந்தோறும் ஏற்பட்ட மாறுதல்கள்	... 231
31.	தமிழ் எழுத்து வடிவ வரலாறு	... 242

முன்னுரை

இம் மூன்றும் பதிப்புப் பல திருத்தங்களைக் கொண்டு வெளிவருகிறது. மொழி ஒப்பியலும் வரலாறும் ஒன்றற்கு ஒன்று தொடர்புடையன என்பதால் அவற்றை ஒரே நூலாக வெளியிட்டுள்ளோம்.

எமது மொழியியல் என்னும் நூல் மொழிவிளக்க இயல் அடிப்படையில் அமைந்துள்ளது. இது முற்றிலும் ஒப்பியல் நோக்கிலும் வரலாற்றியல் அடிப்படையிலும் அமைந்துள்ளது.

சில இடங்களில் தமிழ் மொழியின் விளக்க வியலும் தந்துள்ளோம். தமிழ் மொழியை அறியத் துணை செய்யும் அளவுக்கே பிற மொழிச் செய்திகள் தரப்பட்டுள்ளன.

செய்திச் சுமையைக் குறைத்து விதிகளைக் காட்டும் போக்கில் சான்றுகள் தரப்பட்டுள்ளன.

இது நன்கு வெளிவர உதவிய பேராசிரியர் திரு. இராம சுப்பிரமணியன் அவர்களுக்கு நன்றியுடையேன்.

ரா. சீனிவாசன்

1. திராவிட மொழிகளின் ஒலியியல்

ஒலி, சொல், தொடர்நிலை எனும் மூன்று நிலைகளில் மொழி ஆராயப்படுகிறது. திராவிட மொழிகளின் ஒலி ஒப்பியலை அறிவதால் அவற்றுக் கிடையே உள்ள ஒற்றுமை, வேற்றுமைகள் புலனாகின்றன. அறிஞர் கால்டுவெல் வடமொழி ஒலிகட்கும் திராவிட ஒலிகட்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளைச் சிறப்பாகக் காட்டுவர்.

வடமொழி, திராவிட மொழி ஒலிகளுள் ஒற்றுமையும் உள்ளது; வேறுபாடும் உள்ளது. வருக்க எழுத்துகளுள் தமிழில் முதல் வரிசை எழுத்து k மட்டுமே உள்ளது. ஒலிப்பு ஒலியும் (g), மூச்சொலி கலந்த ஒலிப்பில் ஒலியும் (kh), மூச்சொலி கலந்த ஒலிப்பு ஒலியும் (gh) தமிழில் எழுத்து களாக அமையவில்லை. இவற்றுள் ஒலிப்பு ஒலி, தமிழ்மொழி யில் வழங்கினாலும் அதற்கு எழுத்து வடிவம் தரப்படவில்லை.

பின்னண்ண வல்லொலிகள் வடமொழியில் க(k), க(g), kh, gh என வழங்குகின்றன. தமிழில் க(k) என்ற ஓர் எழுத்தே வழங்குகிறது. க, ச, ட, த, ப க்களுக்கு நான்கு வருக்க எழுத்துகள் வடமொழியில் உள்ளன.

வடமொழியில் உள்ள ஸ ஷ ஹ முதலிய உரசு ஒலிகள் (fricatives) தமிழில் இல்லை.

ற, ழ, ன தமிழுக்கே உரிய சிறப்பெழுத்துகளாகும். எ, ஒக் குறில் வடிவங்கள் தமிழில் உள்ளன. வடமொழியில் நெடில் வடிவங்களே உள்ளன.

திராவிட உயிர் ஒலிகள் (Vowels)

அ, ஆ—இதழ் குவியா நடு உயிர்கள்

இ, ஈ, எ, ஏ—இதழ் குவியா முன்னண்ண உயிர்கள்

உ, ஊ, ஒ, ஓ—இதழ்குவி பின்னண்ண உயிர்கள்

ஐ—அய் அல்லது அஇ என்பவற்றின் கூட்டொலியாகும்.

ஔ—அவ் அல்லது அஉ என்பவற்றின் கூட்டொலி யாகும். ஐ, ஔ இவற்றைச் சந்தியக்கரம் என்பர்.

மெய்யொலிகள் (Consonants)

க—பின்னண்ணத் தடையொலி (Velar stop)
ங—பின்னண்ண மெல்லொலி (Velar nasal)
ச—அண்ணத் தடை ஒலி (Palatal stop)
ஞ—அண்ண மெல்லொலி (Palatal nasal)
ட—வளைநாத் தடையொலி (Retroflex stop)
ண—வளைநா மெல்லொலி (Retroflex nasal)
த—பல்லினத் தடையொலி Dental stop)
ந—பல்லின மெல்லொலி (Dental nasal)
ப—இதழ்த் தடையொலி (Bilabial stop)
ம—இதழ் மெல்லொலி (Bilabial nasal)
ய, வ—அரை உயிர்கள் (Semi vowels)
ர—அண்பல் வருடொலி (Alveolar flap)
ல, ள—பிரிவளி ஒலிகள் (Laterals)
ழ—வளைநா வருடொலி (Retroflex flap)
ற—அண்பல் உரப்பொலி (Alveolar trill)
ன—அண்பல் மெல்லொலி (Alveolar nasal)

தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய மொழிகளில் k, kh, g, gh என நான்கு வருக்கங்களுக்கும் தனித் தனி எழுத்துகள் உள்ளன. தமிழைவிட இம் மொழிகளில் வடமொழித் தாக்குதலும் பிறமொழித் தாக்குதலும் மிகுதி யாக உள்ளன. தமிழ், மலையாளம் இவை இரண்டும் ஒலி

வகையால் மிகவும் நெருங்கிய மொழிகளாகும். கன்னடமும், தெலுங்கும் தனித்தனிப் போக்கு உடையன எனலாம்.

ஒலிகளின் பிறப்பியல்

மெய்யொலிகள்

உள்ளிருந்து எழும் காற்றுக் குரல்வளை வழியாக மேல் நோக்கி எழுகிறது. குரல்வளையில் இரண்டு தசைநார்கள் சேர்ந்தும், பிரிந்தும் ஓசையில் தடைகளை ஏற்படுத்துகின்றன. அங்கே ஒருவகை அசைவை (Vibration) ஏற்படுத்தி ஒலிப்பு (Voice) உண்டாக்கினால், அது ஒலிப்பு ஒலி (Voiced Sound) என்றும், ஒலிப்பை ஏற்படுத்தாமல் எழும் ஒலி, ஒலிப்பில் ஒலி (Voiceless Sound) என்றும் வழங்கும்.

மெய்யொலிகளுள் k, c, t (ட), t (த), p

—இவை ஒலிப்பில் ஒலிகள்

g, j, d (ட), d (த), b

—இவை ஒலிப்பு ஒலிகள்

இவற்றை அறிஞர் கால்டுவெல் வல்லொலி (Surd) மெல்லொலி (Sonant) என்று பிரித்துக் கூறுவர்.

ஏனைய உயிர் ஒலிகளும், மெல்லொலிகளும் (Nasals), இடையொலிகளும் ஒலிப்பு ஒலிகளே.

முயற்சி பற்றிய பிரிவுகள்

மேல் வாய்ப் பகுதியில் (Oral cavity) நா தொடும் இடம் நோக்கியும், முயற்சி வேறுபாடு நோக்கியும் இவை பல்வேறு ஒலிகளாக மாறுகின்றன.

தடையொலி (Stop)

நாவும், இதழும் மேல்நோக்கிச் சென்று பல், அண்பல், அண்ணம் முதலிய உறுப்புகளைப் பொருந்தி விலகுவதால் பிறக்கும் ஒலிகளைத் தடை ஒலிகள் என்பர். இவற்றை வெடி

ஒலிகள் (Plosives) என்றும் கூறுவதுண்டு. இதே இடங்களில் இவ்வுறுப்புகள் பொருந்தி நிற்க ஒலி மூக்கு வழியாகச் சென்றால் மெல்லொலிகள் (Nasals) பிறக்கும் என்பர். ங, ஞ, ண, ந, ம, ன என்பன மெல்லொலிகள் ஆகும்.

க, ங—பின்னண்ண ஒலிகள் (Velar sounds)

ச, ஞ—இடையண்ண ஒலிகள் (Palatal sounds)

த, ந—பல்லின ஒலிகள் (Dental sounds)

ப, ம—இதழ்இயை ஒலிகள் (Labial sounds)

ற, ன—அண்பல் ஒலிகள் (Alveolar sounds)

ட ண—நாமுயற்சி நோக்கி இவற்றை வளைநா ஒலிகள் (Retroflex sounds) என்பர்.

தொடரொலிகள் (Continuants)

ய, வ க்களை அரையுயிர்கள் (Semi vowels) என்பர். இவை தொடர்ந்து ஒலித்தல்பற்றி யகரத்தை முன்னண்ணத் தொடர் ஒலி (Palatal Continuant) என்றும், வகரத்தை இதழ்த் தொடர் ஒலி (Labial Continuant) என்றும் கூறுவர்.

வருடொலி

ரகரத்தை வருடொலி (Flap) என்பர். பிறக்கும் இடம் நோக்கி இதனை அண்பல் வருடொலி (Alveolar flap) என்றழைப்பர்.

உரப்பொலி

றகரத்தை உரப்பொலி (Trill) என்பர். பிறக்கும் இடம் நோக்கி இதனை அண்பல் உரப்பொலி என்பர்.

பிரிவளி ஒலி

ல, ள, ழ மூன்றையும் பிரிவளி ஒலிகள் என்பர். லகரத்தை அண்பல் பிரிவளி ஒலி (Alveolar lateral) என்றும், ளகரத்தை அண்ணப் பிரிவளி ஒலி (Palatal lateral) என்றும்,

ழகரத்தை அண்ணப் பிரிவளித் தொடர் ஒலி (Palatal lateral Continuant) என்றும் கூறுவர்.

தமிழ் இலக்கண நூல்கள் இவற்றை வருடொலி (Flap) என்று கூறும்.

நாமுயற்சி நோக்கி ள, ழ க்களை வளைநா ஒலிகள் என்றும் கூறுவர்.

உயிர் ஒலிகள்

உயிர் ஒலிகள் குரல்வளையில் ஒலிப்பைப் (Voice) பெறுகின்றன. இவை நா முயற்சியும், இதழ் முயற்சியும் ஒட்டிப் பிரித்து அறியப்படும். நாவின் உயரம், எழுச்சி இவற்றை ஒட்டியும், இதழ் குவிவு, குவியாமை பற்றியும் இவை பிரித்து அறியப்படும். முன்னோக்கி எழுதலும் பின்னோக்கி எழுதலும் என நாவின் எழுச்சி இருவகைப்படும். மேல், இடை, கீழ் என்ற மூன்று நிலைகளில் நாவின் உயர்வு தாழ்வு நிலைகள் அறியப்படும்.

எனவே,

இகரம் முன்னோக்கி எழும் உயர்வு உயிர் ஒலி
(Front High Vowel)

உகரம் பின்னோக்கி எழும் உயர்வு உயிர் ஒலி
(Back High Vowel)

எகரம் முன்னோக்கி எழும் இடை உயிர் ஒலி
(Front Mid Vowel)

ஒகரம் பின்னோக்கி எழும் இடை உயிர் ஒலி
(Back Mid Vowel)

அகரம் நடுநோக்கி எழும் கீழ் உயிர் ஒலி
(Central low Vowel)

என்று பிரித்தறியப்படும்.

உ, ஒ—இதழ்குவி உயிர் ஒலிகள்
(Lip Rounding Vowels)

இ, எ, அ—இதழ் குவியா உயிர் ஒலிகள் (Non-lip Rounding)

இதழ் குவி முயற்சிபற்றி இவை பிரித்தறியப்படும்.

வளைநா ஒலிகள் (Retroflex sounds)

ட (t), ட (d) ண மூன்றும் வடமொழியிலும் தமிழிலும் உள்ளன. இவை திராவிட மொழிகட்கே உரிய ஒலிகள் என்றும்; வடமொழி, திராவிட மொழிகளினின்றும் இவற்றை ஏற்றுத் தமிழ் மொழிச் சொற்களில் புகுத்தியுள்ளன என்றும் அறிஞர் கால்டுவெல் கூறுவர். அதற்கு அவர் காட்டும் காரணங்கள் :

1. திராவிட அடிச் சொற்களின் பொருள் உணர்ச்சிக்கு இவ்வொலிகள் அடிப்படையானவை. த வுக்கும் ட வுக்கும், ல வுக்கும் ள வுக்கும், ன வுக்கும் ண வுக்கும் இம் மொழிகளில் வேறுபாடு மிகவும் தேவைப்படுகிறது.

த, ட : குதி—குடி
ன, ண : மனை—மணை } வெவ்வேறு பொருளின.
ல, ள : கல்—கள்

2. வட மொழியோடு தொடர்புடைய இந்தோ-ஐரோப்பிய மொழிகளான கிரேக்கம், லத்தீன், கோத்திக், லித்துவேனியம், பாரசீகம் முதலிய எந்த மொழிகளும் இவற்றைப் பெற்றிருக்கவில்லை. எனவே, ஆரியர்கள் திராவிடர்களோடு தொடர்புகொண்ட பிறகே இவற்றை ஏற்றிருக்க வேண்டும்; சிறப்பாக எழுத்து மொழியாகிய வடமொழியைவிடப் பேச்சு மொழியாகிய பிராகிருதத்திலேயே இவை மிகுதியாக இடம் பெற்றுள்ளன என்பது குறிப்பிடத் தக்கது.

3. வடமொழியினின்று பெறும் சொற்களைத் தமிழ், தம் ஒலி மரபுக்கு ஏற்ப மாற்றிக்கொள்ளும் இயல்புள்ளது. ஷ, ஸ, ஹ முதலியவற்றைத் தமிழ் தம் ஒலிகளாக மாற்றுதலைக் காண்கிறோம். இவை வடமொழிக்கே உரியன என்றால்

இவற்றையும் தமிழ் மொழி மாற்றியிருக்க வேண்டும். அவ்வாறு மாற்றாமையால் இவை திராவிட மொழிகளுக்கே உரிய ஒலிகள் என்பது பெறப்படுகிறது.

4. தெலுங்கு மொழி வடமொழியோடு நெருங்கிய தொடர்பு கொண்டு அதன் சொற்களை ஏற்று வருகிறதென்றாலும், தமிழ் மொழியிலேயே இவ்வொலிகள் பயிலும் சொற்கள் மிகுதியாக உள்ளன. எனவே, இவ்வொலிகள் வடமொழியின் தாக்குதலாக இருக்க முடியாது.

5. வடமொழியில் இவ்வொலிகளை நீக்கி எழுதினால் பொருள் பிறழ்ச்சியோ, கேடோ உண்டாவதில்லை. தமிழில் இவ்வொலிகளை நீக்கிவிட்டால் பல கருத்துகளைச் சொல்லச் சொற்களே இல்லாமல் போகும்; தமிழ்மொழி தன் வளத்தையும் இழந்துவிடும்.

மூச்சொலிகள் (Aspirates)

'ஹ'—இது மூச்சொலி (Aspirate) எனப்படும். செறிவாக மூச்சை வெளிப்படுத்தித் தள்ளும் பொழுது இவ்வொலி உண்டாகின்றது. இம் மூச்சொலி கலந்த வல்லொலிகளை மூச்சொலி கலந்த வல்லொலிகள் (Aspirated stops) என்பர்.

kh, gh, ch, jh; th (ட), dh (ட), th (த), dh (த), ph, bh இவை வடமொழியில் வழங்கும் மூச்சொலித் தடை ஒலிகள்.

மெய் இணைப்பொலிகள்

இரண்டு மெய்யொலிகள் சேர்ந்து ஒலிப்பின் அவை இணைப்பொலிகள் (clusters) எனப்படும். அவை வடமொழியில் மிகுதி. த்யாகம் (த்ய்) ப்ரகாசம், (ப்ர்) முதலியன அவ்வகையின.

தமிழில் போன்ம், மருண்ம் முதலிய சொற்களில் ன்ம், ண்ம் இணைப்பொலிகளாக அமைந்துள்ளன. தொல்காப்பியர் 'போன்ம்' என்ற வடிவை மட்டும் கூற நன்னூலார்

'மருண்ம்' என்ற வடிவையும் கூறுகின்றார். சங்க இலக்கியத்தில் இவை பயின்று வந்துள்ளன. கேண்ம், சென்ம் எனவும் வழங்கின[1]. இவை மொழியீற்றின்கண் அமைந்த இணைப் பொலிகளாகும்.

உயிர்களும் உடன் நிற்றல் உண்டு. அவையும் இணைப் பொலிகளாகக் கருதப்படும். அவற்றை உயிர் அளபெடை என்பர். நெடிலின் பின் அதன் இனக்குறில் உடன் நிற்கும்.

ஆஅ, ஈஇ, ஊஉ, ஏஎ, ஐஇ, ஓஒ, ஔஉ

தழு என்ற பகுதியோடு உ என்னும் சாரியை சேரும் பொழுது 'தழுவு' என ஆகும். பழங்காலத்தில் 'தழூஉ' என நின்றது.

சிறு+அன்—சிறுவன்; சிறூஅன்; குரு+இ—குருவி; குரீஇ என்பன பிற சான்றுகள்.

ஆ,இ; ஓ,இ என்பனவே ஆவி ஓவி என்றாகியிருக்கவேண்டும் எனப் பேராசிரியர் தெ. பொ. மீ. கருதுவர். இவை வகர உடம்படுமெய் பெற்ற வடிவங்களே.

ஆவி—ஆவியர் பெருமகன் (சிறுபாண் - 86)

ஓவி—ஓவியர் பெருமகன் (சிறுபாண் - 122)

உடம்படுமெய் பெறாமல் அளபெடை நிலையிலேயே பண்டைக் காலத்து இவை விளங்கின என்பர்.[2]

அசைஇ, நசைஇ என்னும் வடிவங்களே அளபெடை நீங்கி அசைந்து, நச்சி எனப் புதுவடிவங்கள் பெற்றுத் தற்காலத்தில் வழங்குகின்றன.

ஒலியழுத்தம் (accent)

திராவிட மொழிகளில் ஒலியழுத்தம் உண்டு. இதனை எடுத்தல், படுத்தல், நலிதல் என்பர். பொதுவாக உயிர் ஒலிகளில் இவ் வொலியழுத்தம் ஏற்படுகிறது.

---

1. A History of the Tamil Language—பக். 169
2. A History of the Tamil Language—பக். 66

1. 'தபு' என்பது படுத்துச் சொல்ல நீ சா எனத் தன் வினையாகவும், எடுத்துச் சொல்லச் சாகச்செய் எனப் பிறவினை யாகவும் பொருள்படும் என்பர் இளம்பூரணர்.

2. மெய்களிலும் ஒலியழுத்தத்தால் தன்வினை, பிறவினை வேறுபாடுகள் அமையும்.

சேர்கிறேன்—தன்வினை

சேர்க்கிறேன்—பிறவினை (வல்லொற்றுத் தோன்றிற்று)

திருந்து—தன்வினை

திருத்து+பிறவினை (மெல், வலியாயிற்று)

3. மரூஉ முடிபுகள் பொருட் பகுதிகளைப் போற்றிக் காக்கின்றன. பகுதிகளில் ஒலியழுத்தம் நிலைபெறுகிறது.

ஆதன்தந்தை—ஆந்தை

பூதன்தந்தை—பூந்தை

மலைநாடு—மலாடு

அருமருந்தன்ன—அருமந்த

தஞ்சாவூர்—தஞ்சை

4. ஒலியழுத்தத்தால் செப்பு வாக்கியம், வினா வாக்கிய மாகவும், ஐய வாக்கியமாகவும், வியப்பு வாக்கியமாகவும் அமைதல் உண்டு.

அவன் வந்தான்.—செப்பு வாக்கியம்

அவன் வந்தான்?—வினா வாக்கியம்

அவன் வந்தான்! —ஐய வாக்கியம்

அவன் வந்தான்!—வியப்பு வாக்கியம்

2. வல்லொலி மெல்லொலி மாற்றம்

கசடதபற ஆறும் வல்லினம் எனப்படும். றகரம் பழங் காலத்தில் தடையொலியாகவே ஒலிக்கப்பட்டது. அப் பழைய ஒலியை இரட்டிக்கும் (இணைந்து வரும்) இடத்தில் மட்டும் இன்றும் காணலாம்.

மாற்றம், கூற்று.

ஏனைய ஐந்து ஒலிகளும் பழங்காலத்தில் ஒலிப்பில் ஒலி களாக ஒலிக்கப்பட்டனவா, ஒலிப்பு ஒலிகளாக ஒலிக்கப் பட்டனவா என்பது ஆய்வுக்குரிய செய்தியாகும்.

கசடதப என்பவை தமிழில் மொழிக்கு முதலில் தனித்து வரு மிடத்தும் இரட்டிக்கு மிடத்தும், வல்லொலியாகவும் (surd), மெலியை அடுத்து வரும் இடத்தில் மெல்லொலியாக வும், (sonant) ஏனை இடத்து உரசு ஒலியாகவும் ஒலிக்கும் என்பர் அறிஞர் கால்டுவெல்.

கந்தன்—k வல்லொலி (ஒலிப்பில் தடை ஒலி)
பக்கம்—k ,, ,,
பங்கு—g மெல்லொலி (ஒலிப்புத் தடையொலி)
பகல்—h உரசு ஒலியாக ஒலிக்கிறது

இவ்வாறே ஏனைய வல்லொலிகளும் மூவகை ஒலிகளைப் பெறும்.

சகரம் ஒன்று மட்டும் இக் காலத்தில் மொழி முதலினும் இடையினும் வருமிடத்தும் தனித்து வருமிடத்தும் உரசு

ஒலியும், இரட்டித்து வருமிடத்து வல்லொலியும், மெலியடுத்து வருமிடத்து மெல்லொலியும் பெறும்.

சட்டி, பச்சை, பஞ்சு.

டகரம் இரட்டிக்குமிடத்து வல்லொலியும், மெலியடுத்து வருமிடத்து மெல்லொலியும், இடையில் தனித்து வருமிடத்து வருடொலியும் பெறும்.

பட்டம், பண்டு, படகு.

தகரமும், பகரமும் ககரத்தைப் போன்ற மாற்றொலி களையே பெறும்.

தம்பி, பத்து, கதவு
படகு, தப்பு, அபலை

றகரம் இக் காலத்தில் இரட்டிக்குமிடத்து வல்லொலியும், தனித்து வருமிடத்து வருடொலியும், மெலியடுத்து வரு மிடத்து உரப்பொலியும் பெறும்.

அற்றம், அறிவு, அன்று

இஃது இன்றைய தமிழ் மொழியில் காணப்படும் ஒலிப்பு முறையாகும். அறிஞர் கால்டுவெல் இதனையே திராவிட மொழிகளின் தொல்லியல் என்பர். தமிழில் வழங்கும் பல வடசொற்களும் இவ்வொலி நியதியைப் பெற்றுள்ளன.

danta (சமஸ்)—தந்தம் (tandam) தமிழில்

bhaghyam (சமஸ்)—பாக்கியம் (Pakkiam) தமிழில்

மொழிக்கு முதலிலும் இரட்டிக்குமிடத்தும் வல்லொலி யும் ஏனைய இடங்களில் மெல்லொலியும் அமைதல் தமிழுக்கே உரிய சிறப்பு விதியாகும். ஏனைய திராவிட மொழிகளில் இவ் விதி போற்றப்படுவதில்லை. தமிழ் ஒன்றில் மட்டும் பழைய தென் திராவிடக் கூறுகள் இருத்தலே இதற்குக் 'காரணமாகும்.

ஏனைய தென்திராவிட மொழிகளுக்கு இவ் விதியே அடிப்படை எனினும், பிறமொழிக் கலப்பாலும் ஏனைய

திராவிடப் பகுதிகளின் சாயலாலும் இவ்வமைப்புக்கு மாருகப் பல சொற்கள் ஒலிக்கின்றன; மொழிமுதற்கண் மெல்லொலி களாக ஒலிக்கின்றன. இவ்வாறு ஒலிப்பது பண்டைத் திராவிட ஒலியியல் முறை அன்று என்பதும், அது பிற்காலத்து மாறுதல் என்பதும் பேராசிரியர் பர்ரோவின் கருத்தாகும். இவ்வாறு மாறி ஒலிப்பதற்கு அவர் நான்கு காரணங்களைக் காட்டுவார்.

1. கன்னடத்திலும் தெலுங்கிலும் உள்ள க (g), த (d) எனத் தொடங்கும் சொற்களுள் பல தமிழில் இல்லை.

கம்பெ (gampe)-கன்; கம்ப (gampa) - தெலுங்கு. இவை கூடை என்னும் பொருள் தரும் சொற்களாகும்.

கிஞ்சு (glnju)-கன்; கிஞ்ச (ginja) - தெலுங்கு - இவை விதை என்னும் பொருள் தரும் சொற்களாகும்.

இவை தமிழில் வழங்கப் பெறவில்லை.

2. கன்னட, தெலுங்குச் சொற்கள் சில தமிழில் வந்து வழங்குங்கால் அவற்றிலுள்ள வல்லெழுத்துகள் மெல்லொலி யாக ஒலித்தல் உண்டு.

குமுகு (gumuku) - தெலுங்கு; குமுக்கு—தமிழ்

கெலுசு (தெலு); கெலி (தமிழ்)

3. பழஞ்சொற்களிலும் ஒலி ஒற்றுமை இருந்தாலும் தமிழ், தெலுங்கு, கன்னடம் ஆகிய மூன்று மொழிகளிலும் ஒரே வகையான ஒலி இருப்பது இல்லை என்பர்.

காதல் - g(கன்); காதிலி (gadili)-தெலு; காதல் (தமிழ்)

கொடெ (கன்); கொடுகு (godugu)-தெலு; குடை (தமிழ்)

கிளி (gili) (கன்); சிலுக (தெலுங்கு); கிளி (தமிழ்)

4. சில கன்னட, தெலுங்கு சொற்களில் மொழி முதற் கண் மெல்லொலி பெறுதல் பிற்காலத்து மாறுதலாகும். அவை மரூஉச் சொற்களாகவும் உள.

பெரும்புலி (தமிழ்) - பெப்புலி (bebbuli)-தெலு.

திருந்து(தமிழ்)-தித்து (diddu)-தெலு; தித்து(tiddu)-கன்

குருடன்-தமிழ்; குட்டி (guddi)-தெலு; குருடி, குட்டி-கன்

குருவி (தமிழ்); குப்பி (gubbi) - கன்.

பெரு—தமிழ்; பெர்த (perda), பெத்த (pedda) தெலுங்கு. இம் மருஉச் சொற்களில் ஒலிப்பு (voiced) ஒலிகளே உள்ளன.

இந் நான்கு காரணங்களைக் கூறி ஏனைய திராவிட மொழி களும் மெல்லொலி பெற்றிருப்பதை வலியுறுத்துவர். தமிழ் ஒலிப்பு முறையே பழைய திராவிட மொழியின் ஒலிப்பு முறை என்பது பேராசிரியர் பர்ரோவின் கருத்தாகும். இது டாக்டர் கால்டுவெல்லின் கருத்துக்கு அரண் செய்வதாக அமைகிறது. மொழி முதற்கண் வல்லொலியாக ஒலித்தலே திராவிட மொழியின் தொல்லியல் என்பதும், அஃது இன்றுவரை தமிழில் மாறாமல் போற்றப்படுகிறது என்பதும் அவர் கருத்து களாகும்.

பழந்தமிழ்மொழி¹ முதற்கண் அன்றி ஏனையிடத்தும் வல்லொலியே பெற்றிருந்தது என்பதற்குப் பின்வரும் சான்று களைக் காட்டுவர்.

1. தொல்காப்பியர் உயிர்களை முதல் ஒலி, சார்பொலி என இரு வகையாகப் பிரிப்பர்; குறில் இ, குறில் உ, ஆய்தம்

---

1. Tamil alone among the Dravidian languages represents the state of affairs in the parent languages in this matter, Telugu and Kanarese have for reasons that are obscure in most inatances introduced secondary voicing into primitive Dravidian words. At the same time a large percentage of words beginning with the voiced stops in these languages are of extra-Dravidian origin. —Collected papers on Dravidian Linguistics. —page 17.

எனும் மூன்றையும் சார்பொலிகள் எனக் குறிப்பிடுவர். வல்லினத்திலும் இரு வகை ஒலிகள் வழங்கியிருந்தால் அவற்றை எடுத்துக்காட்டாமல் இருந்திரார்; வல்லினம் க ச ட த ப ற ஆறே என்று மட்டும் குறிப்பிடுகிறார்.

2. மொழியீற்றின்கண் வல்லொலி தனித்து இடம் பெறுவதில்லை. மொழி முதலிலும் இடையில் தனித்தும் இரட்டித்தும் மெலியடுத்தும் வருமிடத்தும் வல்லொலியே இடம் பெற்றது.

பகல்—pakal

பக்கம்—pakkam

பங்கு—panku

(இக் காலத்தைப் போலச் சூழ்நிலைக்கேற்ப மாறி ஒலிக்கும் நிலை அன்று இல்லை என்பர் P. S. சுப்பிரமணிய சாஸ்திரி.)[1]

3. கி. மு. மூன்றும் நூற்றுண்டுக் குரியன எனக் கருதப் படும் குகைக் கல்வெட்டுகளில் மொழிமுதற்கண் ஒலிப்பு ஒலி (voiced) காணப்படவில்லை. பிராமி எழுத்தில் எழுதப்பட்ட சொற்கள் பிராகிருதமும் தமிழும் கலந்தவை. அவற்றுள் எந்தத் தமிழ்ச் சொல்லும் ஒலிப்புத்தடை ஒலியைப் (voiced stop) பெற்றிருக்கவில்லை. எல்லாச் சூழ்நிலைகளிலும் தமிழ்ச் சொற்களில் தடை ஒலிகள் வல்லொலிகளேயாகும்.

4. பல்லவர் காலத்திலும் சோழப் பேரரசர் காலத்திலும் கிரந்த எழுத்துகள் வடமொழிக் கல்வெட்டுகளில் இடம் பெற்றன.[2] அவற்றுள் உள்ள தமிழ்ப் பெயர்கள் சில எல்லாச் சூழ்நிலைகளிலும் ஒலிப்பில் வல்லொலிகளாகவே (Voiceless Stops) இடம் பெற்றுள்ளன.[1] அக் கல்வெட்டுகளில்

---

1. தமிழ் எழுத்தியல் அன்றும் இன்றும்—பக். 168.
2. தமிழ் எழுத்தியல் அன்றும் இன்றும்—பக். 168.

வடமொழிச் சொற்கள் மட்டும் மெல்லொலிகளாகவும் தமிழ்ச் சொற்கள் வல்லொலிகளாகவும் இடம் பெற்றுள்ளன.

கரிகாலன்	(Karikalan)
நல்லடி	(nallati)
கூடல்	(kutal (ஊர்ப்பெயர்)
துணையாகவும்	(tunaiyakavum)
கடியது	(katiyatu)
வேம்பநாடு	(vempanatu)
செங்குடி	(cenkuti)
இந்த	(inta)
நந்தி	(nanti)
நந்தா விளக்கு	(nantavilakku)
கோச்செங்கணன்	(Koccenkanan)
அறிஞ்சகன்	(arinjakan)
அருந்தூர்	(aruntur)
காந்தளூர்	(kantalur)
நுளம்ப பாடி	(nulampapati)
ராஜேந்திர	(Rajentira)
தஞ்சாபுரி	(tanjapuri)
எழுந்தருளி	(eluntaruli)
இறந்த	(iranta)
எறிந்த	(erinta)
வீற்றிருந்தருளிய	(virtiruntaruliya)

1. A History of the Tamil Language—p. 132.

இவை ஒன்பதாம் நூற்றாண்டு முதல் பதினோராம் நூற்றாண்டுவரை கிடைத்த செப்பேடுகளினின்றும் கல்வெட்டுகளினின்றும் எடுக்கப்பட்ட சான்றுகளாகும். இவற்றில் உள்ள தமிழ்ச் சொற்களில் எல்லாச் சூழ்நிலைகளிலும் வல்லொலியாகவே இடம்பெற்றுள்ளன. அதே சமயத்தில் வடசொற்கள் அவற்றிற்குரிய மெல்லொலிகளாக இடம் பெற்றுள்ளன.

ராஜகேசரி	(Rajageeari)
சங்கமன்	(Cangaman)
சௌகரியம்	(Sougariyam)
அசுர கண	(acuragana[1])

5. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த குமாரில பட்டர் என்னும் வடமொழியறிஞர் சோறு என்ற தமிச் சொல்லை 'சோர்' (Cor) எனவே குறித்துள்ளார். அவர், தாம் எழுதிய 'தந்த்ர வார்த்திகா' என்னும் நூலில் ஐந்து தமிழ்ச் சொற்களைத் தந்து ஆய்கின்றார்; அவை ஐந்தும் திராவிடச் சொற்களே என்று குறிப்பிடுகிறார். சோர (cor)—சோறு; அதர் (atar); பாப் (pap)—பாப்பு (பாம்பு என்பதன் வேற்றுமைத் தொடர் வடிவம்); மால் (mal)—(மகள் என்பதன் திரிபு) வயிர் (vayir)—வயிறு என்னும் சொற்களைத் தந்து, இவற்றின் பொருள் சிறப்பைக் காட்டுகிறார். சோர்; அதர்; பாப் எனும் மூன்று சொற்களிலும் தடையொலிகள் வல்லொலிகளாகவே இடம் பெற்றுள்ளன[2].

6. பல்லவர், சோழர் காலங்களுக்குப் பிறகு எழுந்த கல்வெட்டுகளிலுள்ள தமிழ்ச் சொற்களில் இருவகை ஒலி வடிவங்களும் இடம் பெற்றுள்ளன.

---

1. A History of the Tamil Language p. 130.

2. The unvoicing of initial stops became established in Tamil 600 A. D. In the non-initial position voicing started as late as 1350 A. D.—Comparative Dravidian Phonology—Kamil Zvolebil—p. 79.

எனவே, கி. பி. ஆயிரம்வரை தமிழ்ச் சொற்களில் தடையெழுத்துகள் (stops) அனைத்தும் மொழி முதலிலேயன்றி இடையிலும் வல்லொலியாகவே ஒலித்தன என்று அறுதியிட்டுக் கூறலாம்.

கி. பி. 1350லேயே சொல்லிடையே தடையொலிகள் ஒலிப்புப் பெற்றன.

தமிழை வடமொழியாளர்கள் Dravida என்றும், Dravadi என்றும் Damili என்றும் குறித்தனர். பல தமிழ்ச் சொற்கள் வடமொழியில் ஒலிமாற்றி ஒலிக்கப்பட்டன. அதனால், அவற்றைக் கொண்டு பழைய ஒலிகள் இவை என்று நிறுவுவதற்கு வழி இல்லை. அவர்கள் ஒலிப்பு முறைக் கேற்பத் திரித்துக் கொண்ட வடிவங்களாகவே அவற்றைக் கொள்ளுதல் பொருந்தும்.[1]

இக் காலத்தில் சில சொற்களில் மொழி முதலில் ஒலிப்பு ஒலியாக ஒலித்தலும் பழக்கத்தில் வந்துவிட்டது.

பல்லி, பலம், பலிபீடம், பலபம், பாரதி, கலாட்டா, கெலிப்பு, குடிசை, கும்மாளம், கொலுசு, கோவிந்தன், கோபுரம், கோபாலன், காயம், கடிகாரம், திட்டம், திடீர், தருமம், தயவு, திராவிடம், திரவம், முதலாயவற்றுள் மொழிக்கு முதலில் மெல்லொலிகளே அமைந்துள்ளன.

இவை வட தமிழகத்தில் மட்டும் இவ்வாறு ஒலிக்கின்றன என்றும், அதற்குத் தெலுங்கு, கன்னடச் சார்பே காரணம் என்றும் கூறுவர்.[2] ஆங்கிலமும் பிற மொழிக் கலப்பும் இதற்குக் காரணம் எனக் கூறலாம்.

சங்க இலக்கியத்தில் மொழி மூவிடத்தும் வல்லொலியே பெற்றது என்பதை முடிந்த முடிபாகக் கொள்வதற்கில்லை. குமாரில பட்டர் காட்டும் எடுத்துக்காட்டுகளும், கல்வெட்டுகள் தரும் சான்றுகளும் பேச்சொலிகளிலிருந்து எடுக்கப்பட்ட

---

1. தமிழ் எழுத்தியல் அன்றும் இன்றும்—பக். 166.
2. தமிழ் எழுத்தியல் அன்றும் இன்றும்—பக். 163.

வையே என உறுதியாகக் கூறுவதற்கில்லை. அவர்கள் தமிழ் ஏட்டெழுத்து வடிவை அவ்வவ்வாறே எழுதியிருக்கலாம். ஆதலால், கால்டுவெல் கூறும் ஒலிநியதி சங்க இலக்கியத்துக்குப் பொருந்தாது என்று கூறுவதனை முழுவதும் ஏற்பதற்கில்லை. எழுத்துகளைத் தேர்ந்து எடுத்த தொல்காப்பியர் மாற்றொலிகளைக் குறிப்பிடாமல் விட்டுவிட்டிருக்கலாம் என்ற கருத்தும் உள்ளது. அதனால், பழந்தமிழில் மொழி முதலில் வல்லொலியும் ஏனையிடத்து மாற்றொலிகளும் வழங்கி இருக்கலாம் எனவும் கருத இடமுண்டு.[1]

1. Comparative Dravidian—Kamil Zvelabil p. 83.

3. ஒலித் திரிபுகள்

சொற்கள் காலந்தோறும் மாறவல்லன. அம் மாற்றம் மொழிக்கு மொழி வேறுபடுகின்றன. சில புணர்மொழிக்கண் மாற்றம் அடைகின்றன. அவற்றைச் சில தலைப்புகளில் காணலாம்.

1. வலி மெலி தோன்றல் : வல்லினம் மிகுதல், மெல்லினம் மிகுதல் என மிகுதல் இருவகைப்படும். தமிழ்த் தொடர் மொழிகளுக்கிடையே வல்லினம் மிகுமிடமும் மிகா இடமும் உள. பெரும்பாலும் வேற்றுமையில் மிகுதலும், அல்வழியில் மிகாமையும் காணப்படுகின்றன.

புலி + தோல்—புலித்தோல் (வேற்றுமை)

புலி + பாய்ந்தது—புலிபாய்ந்தது (அல்வழி, எழுவாய்த் தொடர்)

ஏனைய திராவிட மொழிகளில் மிகுதல் ஏற்கப்படுவதில்லை. கன்னடத்தில் இதற்கு மாறான நிலைமையே உள்ளது.

huli + togalu—huli dogalu

ஈண்டு இரட்டிப்பதற்கு மாறாகத் தனி மொழிக்கண் togalu என்பது புணர்மொழிக்கண் dogalu என மாறி வல்லொலி மெல்லொலியாக ஒலிக்கிறது.

2. வல்லினம் மிகுதல் : தனிச் சொற்களிலும் இம் மிகல் இடம் பெறுகிறது. அடிச் சொல்லோடு ஆக்க விகுதி சேரும் பொழுதும், இலக்கண விகுதி சேரும் பொழுதும் இம் மிகுதி

சேர்ந்து இரட்டிப்பைப் பெறுகிறது. பிறவினை விகுதிகளில் இது மிகுதி.

சேர் + கை—சேர்க்கை—ஆக்க விகுதி
நட + து—நடத்து—பிறவினை விகுதி

3. **மெல்லினம் மிகுதல் :** இதனை மெல்லினச் சாயல் பெறல் (Nasalisation or euphonic nunnation) என்பர் அறிஞர் கால்டுவெல். இது சிறப்பாகத் தமிழிலும் தெலுங்கிலும் போற்றப்படுகிறது. தெலுங்கில் 'அர்த்தானுஸ்வாரம்' என்ற பாதி மெல்லொலியும் சேர்க்கப்படுகிறது. தமிழில் முழு மெல்லொலி சேர்க்கப்படுகிறது.

பூங்கொம்பு—தமிழ்
வா0டு—அரை மெல்லொலி—தெலுங்கு

4. **ஆக்க விகுதி துணை மெல்லொலி பெறுதல்**

1. இது தமிழில் மிகுதியாக வழங்குகிறது. பிறவினையில் வல்லினம் வரும் இடங்களில் தன்வினையில் மெல்லினம் வரும்.

பிறவினை	தன்வினை
சேர்த்தேன்	சேர்ந்தேன்
அடக்கு	அடங்கு
திருத்து	திருந்து
திருப்பு	திரும்பு

2. சுட்டடியோடு ஆக்க விகுதி சேரும் பொழுது இம் மெல்லொலி இடம் பெறும்.

அ + கு—அங்கு
இ+கு—இங்கு

3. தமிழில் ங வரும் இடங்களில் தெலுங்கில் ஞகரம் வரும்.

பகு—பங்கு; பஞ்சு.

4. சொற்புணர்ச்சிகளிலும் மெல்லெழுத்து வரும்.
பூ+செடி—பூஞ்செடி

5. சொல்லீற்று மகரம், திரிந்து ங, ஞ, ந வாக அமையும்.

செம் - செங்காய், செஞ்சாந்து, செந்தார்.

இவ்வாறே தெலுங்கு, கன்னட மொழிகளிலும் மகரம் ஏனைய மெல்லினங்களாகத் திரியும்.

6. பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் வரும் வல்லொலியும் சில இடங்களில் பகுதியின் ஈற்று எழுத்தின் திரிபாக அமையும்.

சார் + து—சாத்து (ர் - த்)
நீர் + து—நீந்து (ர் - ந்)
மழ் + கு—மங்கு (ழ் - ங்)
துய் + சு—துஞ்சு (ய் - ஞ்)

7. சில இடங்களில் விகுதியின் ஆற்றலாலும் மெல்லினமும் வல்லினமும் தோன்றும்.

சேர் + து—சேர்ந்து; சேர்த்து
ஆழ் + து—ஆழ்ந்து; ஆழ்த்து

8. ஓரினமாதல் (Assimilation) : புணர்மொழிக்கண்ணும் தனிமொழிக்கண்ணும் நிகழும் திரிபு எனும் ஒலி மாறுதல் ஓரினமாதல் எனப்படும்.

(1) மெய் திரிதல் : இவை வருமொழி நோக்கித் திரிவனவும் நிலைமொழி நோக்கித் திரிவனவும், ஒன்றை ஒன்று நோக்கி இருவழியும் திரிவனவும் என மூவகைப்படும்.

நல் + சேர்க்கை—நற்சேர்க்கை—வருமொழி நோக்கி
பொன் + நன்று—பொன்னன்று—நிலைமொழி நோக்கி
கல் + தூண்—கற்றூண்—இருமொழி நோக்கி

(2) உயிர் திரிதல் : உயிர் ஒலிகளுள்ளும் ஓர் ஒலி மற்றோர் உயிர் ஒலியைத் தன்னினமாக மாற்றிவிடுதல் உண்டு.

இதனை உயிர் ஒலி இயைபு (Vowel harmony) என்பர். அறிஞர் கால்டுவெல் இதனை ஒலி நயம்பற்றித் தொடர்தல் (Harmonic sequence of vowels) என்பர். இவ்வடிப்படையில் தெலுங்கிலும் பல சொற்கள் மாற்றம் பெற்றுள்ளன இதுவும் ஓரினமாதல் ஆகும்.

தமிழ் நான்கன் உருபு 'கு' தெலுங்கில் இகரம் நோக்கி 'கி' ஆக மாறுதல் உண்டு.

பிட்ட+கு—பிட்டகு (குழந்தைக்கு)
தல்லி+கு—தல்லிகி (தாய்க்கு)

குகரம் கிகரமாக மாறியது காண்க. (நிலைமொழி இகரப் நோக்கி உகரம் திரிந்தது.)

கி, உகரம் நோக்கிக் கு வாக மாறலும் உண்டு.

கத்தி+கி—கத்திகி
கத்தலு+கு—கத்தலுகு

யகரம் நோக்கி உகரம் இகரமாதலும் உண்டு.

அரு+மை—அருமை { அரு+யது—அரியது
பெருமை—பெரியது
சிறுவன்—சிறியோர்
கருமை—கரியன்

நாகு+யாது—நாகியாது என ஆதலும் இத் தகையதே

6. ஒலி இடம் பெயர்தல் (Metathesis)

உயிரும் மெய்யும் இடம் பெயர்தல் உண்டு. இது தெலுங்குச் சொற்களில் காணப்படும் ஒலி நியதியாகும்.

(1) மெய்யொலி பிறழ்ச்சி

தமிழ்	தெலுங்கு	கன்னடம்
கொப்புள்	பொக்கிலி	——
படர்	——	பரடு

(2) உயிர் ஒலி பிறழ்ச்சி

தெலுங்கு மூவிடப் பெயர்கள் பலவற்றில் முதல் உயிர் அடுத்த மெய்யின் பின் தொடர்ந்து நிற்றல் உண்டு.

மூவிடப் பெயர்கள்

தமிழ்	தெலுங்கு
அவர்	வாரு
இவர்	வீரு
அதனை	தானி

7. ஏனைய சொற்கள் இடம் பெயர்தல்

உரல்—ஒரலு—ரோலு
ஆகாது—காது
இலது—லேது
உள்—லோ
எழுபது—டெப்பை
இரண்டு—எரண்டு—ரெண்டு
உகிர்—ஒகிர்—கோரு
அடங்கு—டாகு (தெலுங்கு) (ஒளிந்துகொள்ளல்)
தாகு (dagu)
ஓர் (ஆராய்தல்)—ரோயு (தெலு)
உரலு—ரோலு
இல்—லே
இறக்கை—றெக்க

தமிழ்ச் சொற்களிலும் இவ்வாறு ஒலி (மொழி) இடம் பெயர்தல் உண்டு. அவற்றைத் தமிழ் இலக்கண நூலார் இலக்கணப் போலி என்பர்.

மரநுனி—நுனிமரம்
கண்ணுதல்—நுதற்கண்
கால்வாய்—வாய்க்கால்

8. ஒலி இடையில் கெடுதல் : ர, ழ ஒலிகள் கெட்டுப் பல சொற்கள் அமைகின்றன. பல தமிழ்ச் சொற்கள் இவ்வாறு மாறியுள்ளன. அவற்றைத் தெலுங்கிலும் கன்னடத்திலும் காணலாம்.

தமிழ்	தெலுங்கு	கன்னடம்
நெருப்பு	நிப்பு	
எலும்பு	எம்மு	
உடல் (ஒடல்)	ஒல்லு	
பொழுது	பொத்து	
எருது	எத்து	
மருந்து	மந்து	மத்து
எழுபது		எப்பத்து
கொழுப்பு	கொவ்வு	கொப்பு
எருமை	எனுமு	எம்மெ

4. உயிர் ஒலி மாற்றங்கள்

1. திராவிட அடிப்படை உயிர் ஒலிகள் அ, இ, உ, எ, ஒ, என்பன. இவற்றின் நெடில் வடிவங்கள் ஆ, ஈ, ஊ, ஏ, ஓ என்பன. அய் என்பதன் கூட்டு வடிவமே ஐ என்பது. அஃது அ, இ க்களின் கூட்டு வடிவம் எனவும் கருதப்படும். அவ்வாறே அவ் அல்லது அ, உ என்பதன் கூட்டு வடிவமே ஔ என்பது. எனவே, இவ்விரண்டையும் தனி எழுத்துகளாகக் கொள்வ தற்கு வழி இல்லை. இவை சேர்க்கை ஒலிகளாகும்.

தமிழில் குறில், நெடில் வடிவங்கள் மாறி வருதல் உண்டு.

வாழ் — வாழ்க்கை; வாழி — வழி வழக்கு — வாடுக (தெலுங்கு)

பேர்—பெருமை—பெரிது.

யான்—எனக்கு; யனக்கு என்பதே பழைய வடிவாக இருத்தல் வேண்டும்.

நாம்—நமக்கு; நீன்—நினக்கு, சீற்—சிறுவன்; சிறியர்; கார்—கருமை, கரியது; போர்—பொருதல்; பார்—பாரு.

—நெடில்கள் குறிலாயின.

கண்—காண்; மின்—மீன்; விடு—வீடு; உண்—ஊண், உணவு; கொல்—கோல்; வெல்—வேல்; கொழு—கோழ்; கொள்—கோள்; பண்—பாண்.

—குறில்கள் நெடிலாயின.

---

1. Comparative Dravidian phonology-Kamil Zvelebil — P. 36

2. பெயரிலும் வினையிலும் இவ் விருவகை வடிவங்கள் வழங்குகின்றன.

ஏனைய திராவிட மொழிகளிலும் இவ் விருவகை வடிவங்கள் வழங்குகின்றன என்பர்.

பணி (தமிழ்)—பனுசு (தெலுங்கு); பான் (பிராஹீ)

ஆர், அரற்று (தமிழ்); அருவு (தெலுங்கு); அர (கொடகு)

க, ய, வ, இடையிடும் குறுகிய வடிவங்கள் நீட்சி பெறும் பொழுது இவ்வொலிகள் கெடுகின்றன.

பகல்—பால் (க, கெட்டது)
தொகுப்பு—தோப்பு (கு, கெட்டது)
உயிர்—ஊக்கம் (ய, கெட்டது)
துயில்—தூங்கு—தூக்கம் (ய, கெட்டது)
அவ்—ஆ — (சுட்டு) ஆயிருதிணை (வ, கெட்டது)
உவகை—ஓகை (வ, கெட்டது)

3. தென்திராவிட மொழிகளில் பல சொற்கள் சகரம் கெட்டு உயிர் முதல் வடிவங்களாக வழங்குகின்றன.

சில் (பழந்திராவிடம்)—இல் (தமிழ்); இல்ல (மலே); சில (பர்ஜி)
சய்ந்து (பழந்திராவிடம்) அய்ந்து (தமிழ்)
சாறு (பழந்திராவிடம்); ஆறு (தமிழ்)
சேரு (கூஇ); ஏர் (தமிழ்)

4. சில திராவிட உயிர் முதல் மொழிகளின் முன் துணை மெய்யான நகரம் இடம் பெறுதல் உண்டு.

ஈர்,—பழந்திராவிடம்; நீர்—தமிழ்
நீர், ஈரம்—மலேயாளம், ஈர்—கொலாமி
நீர், ஈர—கன்னடம்

நீர்—தெலுங்கு

நீர்—கொண்டா[1]

சிறப்புச் செய்திகள்

அகரம்

சகரம் அகரத்தோடு மொழி முதற்கண் வாராதென்பர் ஆசிரியர் தொல்காப்பியர்.[2] அதனால், பழந்திராவிட மொழியில் மொழி முதற்கண் சகரம் வழங்கும் சொற்கள் மூவகை மாற்றங்களைப் பெற்றன என்பர்.

(1) சகரம் மொழி முதற்கண் கெடல்;

சவில் (பர்ஜி); அவல் (தமிழ்)

(2) சகரம் தகரமாக மாறல்

சல் (பழந்திராவிடம்); தழல் (தமிழ்); அழல (கன்னடம்) அழல் (தமிழ்).

(3) சகர அகர ஆகாரம் சகர எகரமாக மாறல்.

சல்—செல்

சம்—செம், செ

சா —செத்தான்

தொல்காப்பியர் காலத்தில் ச ஞ ய மொழி முதற்கண் அகரத்தோடு வருதல் இல்லை. சங்க இலக்கியத்தில் சமம் (புறம் 14/9), ஞமலி (புறம் 74/3), யவனர் (புறம் 56/8) என்ற சொற்கள் இடம் பெறுகின்றன. தொல்காப்பியர் காலத்துக்கு முன்பு இவை பேச்சு வழக்கில் இருந்து, பின் சங்க காலத்தில் ஏட்டுவழக்கில் ஏறி இருக்க வேண்டும்; அல்லது இவை பிற மொழி வழக்குகளாகப் புகுந்திருக்க வேண்டும் என்பர்.

ஞகரத்தைத் தொடர்ந்த அகரம் எகரமாகக் கன்னடத்தில் திரியும். ஓரளவு தமிழ் தெலுங்கிலும் மாறுவ துண்டு.

---

1. In the initial position a rather unstable n-occurs in many Dravidian languages without defenite features o distribution—C. D. P. page 39.

2. தொல் எழுத்து—62

ஞும்—ஞெும், நெமரு (கன்); நெமரு (தலு);
ஞெமி (தமிழ்), ஞெமுங்கு (தமிழ்)

வரலாற்றுச் செய்திகள்

(1) பல்லவர் சோழர் கல்வெட்டுகளால் அகரம் எகரமாக மாறியமை தெரிய வருகிறது.

கங்கை—கெங்கை

தண்டம்—தெண்டம்

(2) பழஞ்சோழர் கல்வெட்டுகளிலும் இடைக் காலச் சோழர் கல்வெட்டுகளிலும் இதே மாறுதல் காணப் படுகிறது.[1]

கல்—கெல்; களிறு—கெளிறு.

(3) ச, ஞ, ய, அகரத்தைத் தொடருமிடத்து அகரம் ஐகாரமாக மாறுவதுண்டு. இதனை அண்ணஒலியாதல் என்பர். பல்லவர் கல்வெட்டுகளால் இம் மாற்றம் தெரிய வருகிறது.

அரசர்—அரைசர் (கல்வெட்டு)

12ஆம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியங்களிலும், இம் மாறுதல் காணப்படுகிறது.

தச்சன்—தைச்சன்

சமயம்—சமையம்

(4) சோழர் கல்வெட்டுகளால் அகரம் இதழ் உயிராக மாறியமை அறியவருகிறது.

அனுபவித்து—அனுபொவித்து

புதவரி—புதொவரி

1. C. D. P. பக். 43.

13ஆம் நூற்றாண்டில் வைணவ மணிப்பிரவாள நடையிலும் இம் மாற்றத்தைக் காணலாம்.

கேட்டீர்கள்—கேட்டீர்கொள்
காடுகள்—காடுகொள்[1]

ஆகாரம்

ஞகர யகரங்கள் ஆகாரத்தோடு தொடருமிடத்துப் பழந்திராவிட மொழியில் ஆகாரம் ஏகாரமாதல் உண்டு. சில திராவிட மொழிகளில் ஆகாரமும் சிலவற்றுள் ஏகாரமும் நிலைபெற்றன.

தமிழ்—ஞான்று; தெலுங்கு—நேடு
" —ஞாலம்; " —நேல
" —யானை; " —ஏனுக
" யாடு; துளு —ஏடு[2]

இ, உ, எ, ஒ

பழந்திராவிட மொழிகளில் இகரம் எகரமாக மாறுதல் உண்டு.

தமிழ்—வில்; குவி—வெல்லு
தமிழ்—இல்; கொலாமி—எல்ல

இதழொலிக்குப் பின் இகரம், வளைநா ஒலி தொடருமிடத்து உகரமாகப் பேச்சுத் தமிழில் மாறுதல் உண்டு.

பிடி—புடி; பிட்டு—புட்டு
பிள்ளை—புள்ளை; மிட்டாய்—முட்டாய்.[3]

---

1. C. D. P. பக். 44
2. C. D. P. பக். 45
3. C. D. P. பக். 47

பகர இகரத்தை அடுத்த மெய்யைத் தொடர்ந்து அ வருமானல் இகரம் ஒகரமாக மாறுகிறது. இம் மெய்யொலி பெரும்பாலும் வளைநா ஒலியாக இருக்கும் என்பர்.[1]

பிழப்பு—பொழப்பு; பிணம்—பொணம்;
மிளகு—மொளகு; மிதந்து—மொதந்து.

வரலாற்றுச் செய்திகள்

(1) சோழர் கல்வெட்டுகளில் இகரம் அகரமாக மாறி யமை காணப்படுகிறது.

எதிர்—எதர்; ஞாயிறு—ஞாயறு[2]
வயிறு—; வயறு

இகரம் உகரமாக மாறியமையும் இக் கல்வெட்டுகளால் அறியவருகிறது.

களிறு—களுறு; தமிழ்—தமுழ்; மதில்—மதுல்;
தளிர்—தளுர்; துளிர்—துளுர்.

(2) சோழர் கல்வெட்டுகளில் வடமொழிச் சொற்களில் உகரம் ஒகரமாக மாறியுள்ளது.

புத்தகம்—பொத்தகம்[2] உலகம்—ஒலகம்;
குலோத்துங்கன்—கொலோத்துங்கன்[2]

(3) கன்னட மொழியில் எட்டாம் நூற்ருண்டுக்குப் பிறகு எகரம் சில சொற்களில் இகரமாவதைக் காணலாம்.

எலி (பழங் கன்னடம்)—இலி (புதுக் கன்னடம்)

தமிழ்	கன்
எதிர்	இதிர்
வெதிர்	பிதிரு
செவிடு	கிவிடு
தெரி	திரி

1. C. P. D. பக். 55
2. ” பக். 59

(4) 11—13ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுகளில் சில சொற்களில் எகரம் இகரமாவதைக் காணலாம்.

எனக்கு—இனக்கு[1]

எ, இ; உ, ஒ மாற்றங்கள்

தென் திராவிட மொழிகளில் எகரம் இகரமாதல், ஒகரம் உகரமாதல் எனும் இருவகை ஒலி மாற்றங்கள் பழங்காலத்தில் நிகழ்ந்திருக்கின்றன. அதனால், தென்திராவிட மொழிகளுக்குள் சொல் மாற்றங்களும் ஏற்பட்டுள்ளன. ஒரே மொழியில் ஒன்றுக்கு மேற்பட்ட வடிவங்களும் ஏற்பட்டிருக்கின்றன.

இவற்றுள் எகர ஒகரமே பழமையானவை என்றும், அவற்றின் மாற்றமே இகர உகரம் என்றும் கூறுவர்.[2]

தமிழ்	மலை	கன்	துளு	தெலுங்கு
இலை —	இல —	எலெ —	எலெ	
திரை —	திர —	தெரெ		
உடல் —	உடல் —	ஒடலு —	ஒடல் —	ஒடலு
குடை —	குட —	கொடெ —	கொடை —	கொடுகு

தமிழிலும் மலையாளத்திலும் இகரமும், உகரமும் வழங்க, ஏனைய மொழிகளில் எகர ஒகரங்கள் வழங்குகின்றன.[3]

இவர்	தமிழ்	— எகரு	கன்	
இதழ்	”	— எசல்	”	
புகை	”	— பொகெ	”	— பொக - தெலு
துவர்	”	— தொகரு	”	— தொகரு - தெலு

1. C. D. P. பக். 60
2. Collected Papers பக். 18
3. ” பக். 19

தென் திராவிட மொழிகளுக்குள் இருக்கும் இம் மாற்று வடிவங்களைத் தமிழ் மொழிக்கண்ணும் காணலாம்.

இ, எ மாற்றங்கள்

இலங்கு, இலகு—எல்; இள—எளி; சிறை—செறு; சிவ — செம் (கெம்); பிணவு — பெண்; பிற — பெறு; விளங்கு—வெள்ளை.

உ, ஒ மாற்றங்கள்

உடை — ஒடி; உடன் — ஒடு; உளவு — ஒளி; குடு—கொடு; குழ—கொழுந்து; குயம்—கொய்; சுர—சொரி; துயங்கு — தொய்; துளை — தொள; புடை — பொடி; புதை—பொதி; புரை—பொரு; முழங்கு—மொழி.

இவற்றுள் எகர ஒகர வடிவங்களே பழமையானவை; இகர உகரம் அவற்றின் திரிபு என்பர்.[1]

வெம்மை என்னும் பகுதியிலிருந்தே வியர்வை (வெவ்) என்ற சொல் வந்திருக்க வேண்டும். செம் (கெம் என்பதன் திரிபு) என்பது சிவப்பு என்பதன் பழைய வடிவமாகும்.[2]

எகர ஒகரமே பழைய வடிவாயினும், அதனை நியதி என்று வற்புறுத்த இயலாத விதி விலக்குகள் உள்ளன என்பர்.

இரண்டு என்பதே தமிழின் பழைய வடிவாகும். எரடு (கன்னடம்) புதிய வடிவம் என்பர். இடம் (தமிழ்) — எட (கன்); இழை (தமிழ்)—எழெ (கன்); சில (தமிழ்) — கெல (கன்); நிழல் (தமிழ்) — நீட (தலு) — நெழல் (கன்); பிணை (தமிழ்) — பெணெ (கன்); விலை (தமிழ்) — பெலெ

1. C. P. பக். 24
2. C. P. பக். 26

இமை (தமிழ்)—எமெ (கன்); நிணம் (தமிழ்) —நெண (கன்); உலை (தமிழ்)—ஒலெ (கன்); நுரை (தமிழ்)—நொரெ (கன்).

இவற்றுள் இகர உகரங்களே பழைய வடிவங்கள் என்பர் பேராசிரியர் பர்ரோ.

தமிழில் எகர ஒகரமாகத் தொடங்கும் வடிவங்களுள் சில கன்னடத்தில் இகர உகரமாக வழங்குகின்றன.

எதிர் (தமிழ்)—இதிர் (கன்); எலி—இலி; எய்—இய்; கெடு—கிடு; கெவி—கிவி; தெளி—திளி; வெதிர்—பிதிர்; வெயில்—பிசில்; ஒலி—உலி; கொடி—குடி; கொடு—குடு; தொடி—துடி; நொடி—நுடி; பொடி—புடி; பொருள்—புருள்; பொய்—புசி.[1]

இவற்றுள் எகர ஒகரமே பழமையானவை என்பர் பேராசிரியர் பர்ரோ.

ஐ, ஔ கூட்டொலிகளே

இவை தனி எழுத்துகள் அல்ல; இரண்டொலிகளின் கூட்டு ஒலிகளே. அதற்குக் காரணங்கள்:

(1) ர, ல, ழ முதலிய ஈற்று எழுத்துகளைப் போல யகரமும் ஈற்று எழுத்தாக இருந்திருக்க வேண்டும்.

கல்—கய்

ர, ல க்களைப் போல யகரமும் விகுதி ஈற்று எழுத்தாக அமையும்.

மலர், நிழல்; அன்னய், பனய்; நீள்வு—அன்னுய், பனுட்டு என அமைதல் காண்க.

(2) யகரம் சகரத்தோடு உறழ்வு பெறும். சகரத்தின் திரிபாகவே யகரம் பல இடங்களில் அமையும்.

---

1. Collected papers—பக். 30

பசு→பய்→ பச்சிலை, பய்ங்கிளி

(3) கய்—காய்; பய்—பாய்; வய்—வாய் என்பனவற்றுள் உறழ்வு காணப்படுகிறது. எனவே, பழைய உறழ்வு வடிவங்கள் அய்—ஆய் என்பனவாம்.

(4) அஇ என்பதும், அய் என்பதும் விரவி வரும் என்பர் தொல்காப்பியர்.

நாய்—நாஇ—யி

(5) மெய்வேல் என்பதற்குக் கய் (கை) வேல் என்பதும், கய் (கை) வகை என்பதற்குப் பொய்வகை என்பதும் எதுகைகளாக அமைகின்றன.

'கய்வேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும்.' —குறள்

(6) ஐ என்பதும் அய் என்பதும் வடிவத்தால் வேறுபட்டாலும் பொருள் மாறுவது இல்லை.

ஐயர்—அய்யர்; பையன்—பய்யன்

(7) தொல்காப்பியர் அஉ, ஔ ஆகும் என்பர்.

ஔவை—அவ்வை. தவ்வை; நவ்வி; பவ்வம்; மவ்வல்; வவ்வல் என்பனவும் ஔகாரத்தின் மாற்று வடிவங்களே.

ஏனைய திராவிட மொழிகளில் அவ் என்பதே 'அவ்வை' என்பதன் அடிச் சொல்லாக வழங்குகிறது.

கன் — அவ்வெ; தெலுங்கு — அவ்வ; பர்ஜி — அவ்வ; கொண்ட—அவெ.

(8) பல்லவர் கல்வெட்டுகளில் 'அய்ந்தே கால்', 'கெய்' என்னும் வடிவங்கள் வருகின்றன என்பர்.

எனவே, யாண்டும் அய். அவ் வடிவங்களே அடிச் சொற்களில் இடம் பெற்றுள்ளன எனத் தெரிகிறது. இதனால்,

ஐ, ஔ என்பன சந்தியக்கரமாக அமைந்த தனி ஒலிகள் அல்ல; அகரத்தோடு யகரமும் வகரமும் சேர்ந்த கூட்டசை ஒலிகளாகும் என்பர்.

பழந்திராவிடத்திலும் அ+உ=ஔ எனவும், அ+இ=ஐ எனவும் ஆயின என்று கூறுவதைவிட, அ+ய்; அ+வ் என்பனவே ஐ, ஔ என ஆயின எனக் கூறுதல் பொருந்தும் என்பர்.[1]

ஐ, ஔ என்ற எழுத்துகளை நீக்கி அவற்றுக்கிணையாக அய், அவ், என்றே வழங்கலாம் என்ற கருத்துப் பரவி வருகிறது.

அய்யர், அவ்வை, பொறுமய், செம்மய் என்று எழுதலாம்.

5. மெய்யொலித் திரிபுகள்

வல்லினம் ஆறு; மெல்லினம் ஆறு; இடையினம் ஆறு; மெய் மூவாறு எனத் தமிழ் இலக்கணங்கள் குறிப்பிடுகின்றன.

வல்லினம் மொழி முதலில் தனித்தும், இடையில் இரட்டித்தும் வருமிடத்து வல்லொலியும், ஏனையிடத்து மெல்லொலியும் உள்ளன என்பர் அறிஞர் கால்டுவெல். இக் காலத்து ஒலிப்பு முறை அதுவே.

வல்லின மெய்கள்: ககரம்

தென் திராவிடத்தில் ககரம் சகரமாக மாறியது. இது குறிப்பிடத் தக்க மாறுதலாகும். இ, ஈ, எ, ஏ, ஐ தொடரு மிடத்துக் ககரம் சகரமாகும். கன்னடத்தில் மட்டும் இம் மாற்றம் நிகழவில்லை. கன்னடத்தில் ககரத்தில் தொடங்கும் சொற்கள் தமிழில் சகரத்தில் தொடங்குகின்றன. இம் மாறுதலை அண்ண மெய்யாதல் (Palatalisation) என்பர்.

சகரமாகத் திரியுமுன் இருந்த பழைய வடிவத்தைக் கன்னட மொழியில் இன்றும் காணலாம். மாற்றம் பெற்ற தமிழ் வடிவங்கள் சில:

சிதர் (தமிழ்); கெதரு (கன்னடம்), சிதல்— (தெலு); சிரங்கு—கெரகு; சிரி—கிரி; சிரை—கெரெ; சில—கெல; சிலதன்—கெலதன்; சிலை—கெலெ; சிறு—கிறு, சினம்—கினுசு; சீ—கீ; சீப்பு—கீபு; செம்—கெம்; செடி—கிட; செத்து—கெத்து;

செரு—கெரள்; செய்—கெய்; செருப்பு—கெர்பு; செருமு—கெம்மு; செவி—கெவி; செறு—கிறு; சென்னி—கென்னெ; சுவர்—கோர்; சே—கே; சேரி—கேரி; சேல்—கேல்; சேரன்—கேரன்.[1]

கேல் என்னும் கன்னட வடிவம் கயல் என்பதன் திரிபு என்பர்.[2] கயல் என்னும் சொல்லுக்குச் சேல் என்னும் சொல்லுக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளதாகத் தெரிகிறது.

'கேரள புத்ர' என்னும் தொடர் அசோகர் கல்வெட்டில் சேரமான் என்பதைக் குறிக்கிறது. அதனால், அக் காலத்தில் 'கேரல' என்ற சொல்லே வழக்கில் இருந்திருக்க வேண்டும் எனக் கருதப்படுகிறது. எனவே, ககரம் சகரமாக மாறியது கி. மு. 300க்கு அண்மையிலேயே என்பர்.[3]

தொல்காப்பியர் உரியியலில் சீர்த்தி என்ற சொல்லுக்கு மிகுபுகழ் என்று பொருள் கூறுவர். கீர்த்தி என்னும் வட சொல்லே சீர்த்தி என மாறியிருக்கலாம் எனக் கருத இடம் தருகிறது.[4]

விதி விலக்கு

சில சொற்கள் திரிவதில்லை. முன்னுயிர்களை அடுத்து டணழள எனும் வளைநா ஒலிகள் தொடர்வதே அதற்குக் காரணம் என்பர். சில தெலுங்குச் சொற்கள் இச் சூழ்நிலையில் மாறுவது உண்டு. தமிழ், மலையாளத்தில் இச் சூழ்நிலையிலும் ககரம் சகரமாக மாறுவதில்லை.

கெடு—தமிழ், மாற்றம் இல்லை.

செடு—தெலுங்கு, மாறிவிட்டது.

கிளி—தமிழ், சிலுக—தெலுங்கு; கீள்—தமிழ், சீல்—தெலுங்கு என்பன பிற சான்றுகள்.

---

1. C. P. பக். 32-40
2. C. P. பக். 40
3. C. P. பக். 41
4. C. P. பக். 41

கிட, கிழங்கு, கிழக்கு, கிழம், கெழு, கிளி, கிள், கிளர், கிள, (கிளவி) கிளை, கிள்ளு, கீழ், கேள் இத் தமிழ்ச் சொற்கள் மாற்றம் பெறவில்லை.

மற்ருெரு வகையிலும் தெலுங்கு, தமிழினின்று மாறுபடுகிறது. ககரத்தை அய் தொடருமிடத்துத் தமிழில் மாற்றம் பெறவில்லை; தெலுங்கில் மாறிவிட்டது.

கய் (தமிழ்)—சேயி (தெலுங்கு)
கய் (கசப்பு) தமிழ்—சேது (தெலுங்கு)

பழைய சொற்கள் சில மாருமலும் வழங்குகின்றன. அவை கன்னடத்திலிருந்து பிற்காலத்தில் தமிழில் புகுந்திருக்கலாம்; அல்லது பேச்சு மொழியினின்று இலக்கியத்தில் புகுந்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

தமிழ்	தெலுங்கு	கன்னடம்	மலையாளம்
கீரை	கிர, கூர	கீரெ	கீரெ
கீல்	கீலு	—	கீலம்
கெம்பு	கெம்பு	கெம்பு	கெம்பு

மொழியிடைக் ககரம் கெடுதல்

பேச்சு மொழியில் மொழியிடை வரும் ககரம் தன்முன்னின்ற உயிர் நீளுமிடத்துக் கெடுதலும் உண்டு.

அகப்பை — ஆப்பை; துகள் — தூள்; பகுதி — பாதி; புகுந்து—பூந்து; அகத்துக்காரி—ஆத்துக்காரி; அகமுடையான்—ஆம்படையான்; தகப்பன்—தோப்பன்.

முன்னின்ற உகரம் ஒகரமாகத் திரியும் போதும் ககரம் கெடுதல் உண்டு.

புகையிலை—பொகயிலே—பொயலே.

இலக்கிய வழக்கிலும் இத்திரிபு காணப்படுகிறது.

தொகுப்பு—தோப்பு; பகல்—பால்; மகன்—மான்.

---

1. C. D. P. பக். 112

சகரம்

மொழி முதலில் வல்லொலியாக ஒலிக்க வேண்டிய சகரம் கற்றோர் பேச்சில் உரசு ஒலியாகவே ஒலிக்கிறது; ஈழ நாட்டிலும், தென் தமிழகத்திலும், சேரிகளிலும் வல்லொலியே பெற்றுள்ளது. கி. பி. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த குமாரில பட்டர் 'சோறு' என்னும் தமிழ்ச் சொல்லை Cor எனவே குறித்துள்ளார்.

மலையாளத்தில் சகரம் தடையொலியாகவே ஒலிக்கிறது தெலுங்கில் உயர்குடிமக்கள் சகரமாகவே ஒலிக்கின்றனர் தாழ் குடியினரே ஸகரமாக ஒலிக்கின்றனர்.

கன்னடத்தில் உயர்குடிமக்கள் ஸகரமாகவும் தாழ்குடி மக்கள் சகரமாகவும் ஒலிக்கின்றனர்.

மொழி முதற்கண் சகரம் கெடுதல் உண்டு. இது தென் திராவிட மொழியின் தொல்லியல்பு.

சவில் (பர்ஜி)—சவ்லி—(கொண்டா)—அவல் (தமிழ்)

சாருங்க் (கோந்தி)—ஆறு (தமிழ்)

சீ (Si)—(கொலாமி)—ஈ (தமிழ்)

சுப் (Sup)—(கொலாமி)—உப்பு (தமிழ்)

(Saiyung)—(கோந்தி)—அய்ந்து (தமிழ்)

சீர் (Cir)—(கொலாமி) ஈர் (தமிழ்)

கூஇ; சேர் (Seru)—(கோந்தி)—ஏர் (தமிழ்)

சணிலு (துளு)—அணில் (தமிழ்)

சக்கிலி (தெலுங்கு)—அக்குள் (தமிழ்)

சந்த (கன்; துளு); சந்தமு (தெலுங்கு)—அழகு (தமிழ்)

சகரம் தென் திராவிட மொழிகளில் இழப்பு அடைய மத்திய திராவிடத்திலும் பிராஹுஈ நீங்கலாக வடதிராவிடத்திலும் அஃது இழப்புப் பெறவில்லை.[1]

---

1. C. P. பக். 106

தென் திராவிடத்தில் சகரம் கெடாத இடத்துத் தகர மாகத் திரிந்து வழங்குகிறது.

தழல், அழல்-பழந்திராவிட வடிவம். இது 'சழல்' ஆக இருந்திருக்க வேண்டும்.

அவ்வையார் பாடிய அதியமான் நெடுமான் அஞ்சி, அசோகர் கல்வெட்டில் சதியபுதொ (Satiya Puto) எனக் குறிப்பிடப்படுகிருன். 'அதியர் மான்' என்பது 'அதியர் மகன்' என்பதன் திரிபாகும். சகரம் கெடாத நிலையில் அது 'சதியர் மான்' என்று வழங்கி இருக்க வேண்டும். அதனை ஒட்டியே 'சதிய புதொ' என்ற சொல்லும் வழங்கியிருக்க வேண்டும். மகன் என்பதே வடமொழியில் புதொ என மொழி பெயர்க்கப்பட்டிருக்க வேண்டும்.

பல சகிர முதல் வடசொற்கள், சகரம் கெட்டுத் தமிழில் வழக்குப் பெற்றுள்ளன என்பர்.

சரண (Sarana)—அரண், அரணம்
சாடக—(Sataka)—ஆடை
சால—(Sala)—அலை
ச்ரகால (Sragala)–இகலன் (நரி)
சுல்கா (Sulka)—உல்கு
ச்யாமல (Syamala)—யாமளம்
ச்ரமண (Sramana)—அமண்; அமணம்
ச்ரவிஷ்டா (Sravlstha)—அவிட்டம்
ச்ரவண (Sravana)—ஆவணி
ஸ்ரெஷ்டின் (Sresthin) சமஸ் (Sethi Prakrit)—எட்டி
ச்ரேணி (Sreni-skt) Sreni (Prakit)—ஏணி
ச்ரவண (Sravana-skt.)—ஓணம்
சந்தி (Sandhi-skt)—அந்தி
சமர (Samara-skt.)—அமர்
சமய (Samaya-skt)—அமையம்
சபா (Sabha-skt)—அவை

I. C. P. பக். 158

சஹஸ்ர (Sahasra-skt)—ஆயிரம்
சிந்து (Sindhu-skt)—இந்து
சீச (Sisa-skt)—ஈயம்
சிம்ஹல (Simhala-skt)—ஈழம்
சூசி (Suci-skt)—ஊசி
சுபர்ண (Suparna-skt)—உவணம்
சாப (Supa-skt)—ஆவம் (விற்கயிறு)
சேட (Ceta-skt)—ஏடன் (அடிமை)
சேமம் (Semam-skt) – ஏமம்

மொழியிடையிலும் சில சொற்களில் சகரம் கெட்டுள்ளது.[1]

வடமொழி		தமிழ்
அசுர	—	அவுணர்
தைச (taisa)	—	தை
தேச (desa)	—	தேம்
தோஷ (dosa)	—	தோம்
நிர்வசன (nirvasana)	—	நிர்வாணம்
உப (upa)	—	உவா
துளசி (tulasi)	—	துளவு
பனச (panasa)	—	பலா, பல்வு

பழங்காலத்தில் மொழி முதற்கண் சகரம் கெட்ட வடிவங்களே தமிழில் வழங்கின; பிற்கால இலக்கியங்களில் மொழி முதற்கண் சகரம் பெற்ற வடிவங்கள் மீண்டும் இடம் பெற்றுச் சகரம் கெட்ட வடிவங்களை வழக்கொழியச் செய்தன.[2]

சரண், சாணம், சாலை, சுல்கம், சாமளம், சமண், செட்டி. சேணி, சண்டன், சந்தி, சபை, சிந்து, சீசம், சுவணம், சூசி

1. C. P. பக். 152
2. C. P. பக். 154

சகரம் கெட்ட வடிவங்கள் தமிழில்தான் உள்ளன.

அமை(பொருந்து)—சமை; அல்லல்—செல்லல் (துன்பம்); அளி—சளி; அருவி—சரிவு; ஆய்—சாய்; (உள்ளதன் நுணுக்கம்); ஆய்—சாயல் (அழகு); ஆர்—சார் (நிறைதல், சார்தல்); ஆன்ற—சான்ற; இதை—சிதை, சிதார்; இப்பி—சிப்பி; இமிழ்—சிமிழ்; இமை—சிமை, சிமிழ்த்த; இல்லி—சில்லி; இரற்று — சிரற்று; இறை — சிறை; இறகு — சிறகு; ஈங்கை—சீக்காய்; உடல் (மாறுபாடு)—சுடு—சுடல்; உடு, உடுபு—சூடு; உவல், உவலை—சுப்பல் (உலர்ந்த இலை); உருள்—சுருள்; உலாவு—சுலாவு; ஊழ்—சூழ்; ஏர்—சேர்; ஒல்கு—சொலை (எளியனுதல்).[1]

சகரம் கெடுதலேயன்றி அது தகரமாகவும் மாறுதல் உண்டு.[2]

அணில் (தமிழ்)—சணிலு; தணிலு (துளு)
ஆமை (தமிழ்)—தாம்பேலு (தெலுங்கு)
உத்தி (தமிழ்)—தித்தி (தமிழ்)

தமிழில் இருவகை வடிவங்களும் வழங்குகின்றன என்பர்.[3]

இமில் (தமிழ்) சிமிழ்—திமில் (தமிழ்)
அழல்—தழல்
இறு; இறை—திறை (வரி தருதல்)
உயங்கு—துயங்கு
உயல்—துயல்
உவள்—துவள்
உருவு—துருவு

சோழர் கல்வெட்டுகளில் சகரம் தகரமாயினமைக்குச் சான்றுகள் உள.

---

1. C. P. பக். 167.
2. C. P. பக். 167.
3. C. P. பக். 115.

சண்டேஸ்வர—தண்டேச்வர
செருமுனை—திருமுனை[1]

தமிழில் தூங்கு என்பது தெலுங்கில் தூகு என்றும், ஊகு என்றும் வழங்குகின்றன.

இச் சொற்களில் சகரமே தகரம் ஆயிற்று என்பர்.[2]

சகரத்தில் தொடங்கும் சொற்கள் அனைத்தும் இவ்வாறு மாறுவதில்லை என்றும், சில சொற்களில் சகரம் நிலைபெறுகிறது என்றும் காட்டுவர்.

சரி, சா, சாத்து, சால், சாறு, சாற்று, சிந்து, சிலந்தி, சீ, சுர, சுரா, சூல், சூள், செருக்கு, செல், செறை, (செரங்கை)

இச் சொற்களில் சகரம் கெடவில்லை .

தென் திராவிட மொழிகளில் சகரம் கெடுகிறது என்றால் அதற்கு மத்திய திராவிட மொழிகளிலும், பிராஹுஈ (Brahui) நீங்கலாக ஏனைய வடதிராவிட மொழிகளிலும் சகரம் நிலை பெறுவதைக் கோட்பாடாகக் கொண்டுள்ளது என்பர்.[3]

சகரமும் யகரமும் மாறி வருதல் உண்டு.

நயத்தல்—நசை; நச்சு—நயம்; நம்பு—(நய் + பு) 'நம்பும் மேவும் நசையா குமமே' என்பர் தொல்காப்பியர்.[4]

கயம்—கசம்
பய்ம்பொன்—பசும்பொன்—பய்—பச்.
இயைத்த—இசைத்த—ய, ச;
மய்—மாய்—மாசு (தெலுங்கு - மசி)
எய்—ஏசு (எய்த)
உயிர் (தமிழ்)—உசிர் (கன்)
வயிறு (தமிழ்)—பசறு (கன்)

---

1. C. D. P. பக். 115.
2. C. P. பக். 169.
3. C. D. P. பக். 106.
4. உரியியல் சூ. 31.

சோழர் கல்வெட்டுகளில் குயவர் என்பது குசவர் என்றும்; உயர்த்த என்பது உசத்த எனவும் வழங்குகிறது.[1]

பேச்சு மொழியில் பையன்கள் என்பது பசங்க எனத் திரிபு பெற்றுள்ளது.

பழந்தமிழில் சகரம் கெட்டது ஒருபுறமிருக்க இன்றைய தமிழில் சகரம் சேர்தலும் உண்டு.[2]

வரி—வரிசை; குடி—குடிசை; புரி—புரிசை; கடை—கடைசி; அரி—அரிசி.

சகரம் தகரமாகத் திரிந்தது போகத் தகரம் சகரமாகத் திரிந்த சொற்களும் இக் காலத்தில் வழங்குகின்றன.

பெரிது—பெரிசு; வயது—வயசு; மனது—மனசு; புலைத்தி—புலைச்சி; செய்தான்—சேஞ்சான்; சிறிது—சிறிசு; மைத்துனன் — மச்சினன்; மைத்துனி — மச்சினி; வைத்தான் — வச்சான்.

டகரம்

டகரமும் றகரமும் மொழி முதற்கண் வருவது இல்லை. இவை இரண்டும் ஈரெழுத்துகளின் புணர்ப்பால் ஏற்பட்டவை எனக் கருத இடம் உண்டு.

ள்+த் = ட்
ழ்+த் = ட்
ல்+த் = ற்

இக் காரணம் பற்றியே இவை மொழி முதற்கண் வருவதில்லை.

தென் திராவிட மொழிகளில் ளகரமும் டகரமும் மாறி இடம் பெறுகின்றன. ளகரமே பழையது; அது ணகரமாகவும் மாறுகிறது.

---

1. C. D. P. பக். 112.
2. தமிழ் எழுத்தியல் அன்றும் இன்றும்—பக். 181.

நீளம்—நீடு; நீட்டு; நீண்

ஆள்—ஆடவர்; ஆண்

பல தமிழ்ச் சொற்கள் தெலுங்கில் வருங்காலத்து டகரம் இடம் பெயர்ந்து மொழி முதலில் வழங்குகின்றது.

ஏழு—ஏடு—எடுபது—டெப்பை

தெலுங்கில் ழகரம் டகரமாக மாறுகிறது.

கோழி—கோடி

ஏழு—ஏடு

உழல்: உடல்—ஒடலு (தலு)

இழி—டிகு

அடங்கு—டாகு (ஒளி)

சில சொற்களில் டகரம் கெடுதலும் உண்டு.

கொடுக்கி—கொக்கி

ட்—ட்ட் (tt) ஆதலும் உண்டு

இட்லி—இட்டிலி (தமிழ்)—இட்டலி (கன்னடம்)

தகரம்

தகரம் அண்ண உயிரின் சார்பால் சகரமாகும்.

பெரிது—பெருசு, சிறிது—சிறிசு, புதிது—புதுசு, பழையது—பழசு, சிரித்த—சிரிச்ச, வய்த்த—வச்ச, மய்த்துனன்—மச்சினன், படித்தேன்—படிச்சேன்.

இடையில் வரும் தகரம் ரகரமாகவும் மாறும்.

செதுக்கி—செருக்கி

போதும்—போரும்

போதாது—போராது

விதை—விரை[1]

பல்லவ சோழர்கள் கல்வெட்டுகளில் வைத்து என்பது வைச்சு என வழங்குகிறது.[2]

---

1. C. D. P. பக். 93
2. ” பக். 94

பகரம்

பகரம் கன்னடத்தில் ஹகரமாகத் திரியும். சில சொற்களில் கெட்டும் வழங்கும்.

பாகு—ஹாகு—ஆகு
பெயர்—பெசர்—ஹெசரு—யெசரு
புகை—பொக—ஹொகெ
பத்து—ஹத்து
பள்ளி—ஹள்ளி

வகரமாக மாறுதல் : மொழியிடைப் பகரம் வரும் வடிவங்கள் தமிழில் மிகவும் குறைவு. 'தபு' என்ற பழைய வடிவமும் 'தவறு' என மாறி விட்டது. அளபு, சார்பு என்பன அளவு சார்வு என மாறிவிட்டன. செய்பு என்னும் வினை வாய்பாடு பால் ஈறு புணரும் பொழுது செய்வான் என மாறுகிறது. உண்பான், தின்பான் என்பன முறையே உண்ணுவான் தின்னுவான் என மாறுகின்றன.

சோழர் கல்வெட்டுகளில் மார்பில் என்னும் சொல் மார்வில் எனக் குறிக்கப்பட்டுள்ளது. நிபந்தம் என்பது நிவந்தம் என வழங்குகிறது.

ப, ம, வ எனும் இதழ் இயை மெய்களின் சார்பால் அடுத்து வரும் இகரம், இதழ்குவி உயிராகிய உகர ஒகரங்களாதலும் உண்டு.

பிள்ளை—புள்ளெ
வீடு—வூடு
பெண்—பொண்ணு
பிணம்—பொணம்
பெண்டாட்டி—பொண்டாட்டி[1]

1. C. D. P. பக். 87

றகரம்

தொல்காப்பியர் இதனை வல்லெழுத்து என்பர். பழந் திராவிடத்தில் றகரம் வேறு; ரகரம் வேறு. இக் காலத்தில் இஃது உரப்பொலியாக ஒலிக்கிறது. றகரம் இரட்டிக்கு மிடத்தே பழைய ஒலியைக் காணலாம். னகரத்தை அடுத்து வரும் றகரம் உரப்பொலி; ஏனையிடத்து ரகர ஒலியே ஒலிக் கிறது. இக் காலத்தில் ரகர, றகர வேறுபாடு ஒலிப்பில் மிகுதி யாக இல்லை. எனினும், பொருள் வேறுபாட்டுக்கு இவ்விரு எழுத்துகள் தேவைப்படுவதால் றகர ரகர வேறுபாடு போற்றப்படுகிறது.

கறி—கரி
பறி (பிடுங்கு) - பரி (வருந்து)
அறம் (தருமம்)-அரம் (கருவி)

சோழர் கல்வெட்டில் றகர ரகர வேறுபாடு மறைந்த நிலையில் இருவகைச் சொற்கள் வழங்கின.[1]

மேர்க்கு (மேற்கு), விரகு (விறகு)
இறண்டாவது (இரண்டாவது)

ற்ற என்பது த்த எனவும் வழங்கியது.

மாவேத்தத்து (மாவேற்றத்து) எனச் சோழர் கல்வெட்டில் இடம்பெற்றுள்ளது.

வீரசோழியம் ஆற்றுக்கால், சேற்றுநிலம் என்பன ஆத்துக்கால், சேத்துநிலம் என வழங்குவதை எடுத்துக் காட்டும்.

பத்தாம் நூற்றாண்டுக்குரிய கல்வெட்டுகள் கீழ்வரும் வழக்காறுகளை எடுத்துக் காட்டுகின்றன.

திருவையாத்து (திருவையாற்று)
முன்னெத்தி (முன்னெற்றி)
திருச்சித்தம்பல (திருச்சிற்றம்பல)[2]

---

1. C. D. P. பக். 97
2. தமிழ் எழுத்தியல்—பக். 192

கீழ்வரும் சொற்கள் ரகர றகர வேறுபாடு மறைந்து வழங்கியமையைக் காட்டும்.

இவை சோழர் காலத்துக் கல்வெட்டுகளில் காணப்படும் வழக்குகள்.

நீற் வாற்த்து (நீர் வார்த்து)
பதிநாரும் (பதினாறும்)
ருசருச (ராசராச)[1]

இச் சான்றுகள் சோழர், பல்லவர்கள் காலத்தில் றகரம் ரகரமாகவே ஒலிக்கப்பட்டது என்பதை எடுத்துக் காட்டுகின்றன. பழங்காலத்தில் றகரம் தடை வல்லொலியாகவே ஒலிக்கப்பட்டது என்பது தொல்காப்பியத்தால் விளங்குகிறது. இன்று ஏனைய வல்லொலிகளைப் போலவே இதன் இயல்பும் உள்ளது.

வயிறு—வயிற்று
கயிறு—கயிற்று

என இரட்டுதலும் பெறுகிறது.

ஏனைய வல்லொலிகளைப் போலவே சொற்களில் இஃது உகரம் பெற்றே முடிகின்றது.

கயிறு; வயிறு

இக் காலத்தில் சாற்று என்பது சாட்டு என மருவி விட்டது. குற்றச்சாட்டு என்னும் சொல் பெருவழக்காகி விட்டது.

மெல்லின மெய்கள் —ஙகரம்

தமிழில் ஙகரம் அருகிய வழக்காகும். அங்ஙனம் இங்ஙனம் எங்ஙனம் யாங்ஙனம் என்ற சொற்களில் மட்டும் ஙனம் என்ற சொல்லில் தனி எழுத்தாக அது வழங்குகிறது; ககரத்தின்முன் மகரத்தின் திரிபாகவும் வழங்குகிறது.

செம்பவளம்—செங்காந்தள்; செங்கால்

1. தமிழ் எழுத்தியல்—பக். 192

ஞகரம்

ஈ, ஊ என்பவற்றோடு ஞகரம் மொழி முதலில் வருவதில்லை; ஆ, எ, ஒ என்பவற்றோடு தொல்காப்பியர் காலத்தில் வழங்கியது. ஞகரம் வழங்கும் சொற்களில் நகரம் இடம் பெற்றுள்ளது. 'ஞாயிற்றுக்கிழமை' என்னும் ஒரே சொல்லில் மட்டும் ஞகரம் திரியாமல் இருக்கிறது. மலையாள மொழியில் ஞகரம் நகரமாகத் திரியாமல் வழங்கி வருகிறது. அம் மொழிக்கு இஃது அடிப்படை ஒலியாகும்.

சோழர் கல்வெட்டில் ஞகரம் இருந்த இடத்தில் நகரம் இடம் பெற்றுள்ளது.

நாயிறு (ஞாயிறு); நான்று (ஞான்று) என வழங்குகின்றன.[1]

கீழ்வரும் சொற்களில் ஞகரம் வழங்குகிறது.

ஞண்டு, ஞமலி, ஞாஞ்சில், ஞாயிறு, ஞாலம்.

இவை மொழி முதற்கண் ஞகரம் வந்த சொற்களாம்.

மஞ்ஞை; நெஞ்சம்; உழிஞை; உரிஞ்.

இவை இடையும் கடையும் வந்த சொற்களாம்.

யகரம் ஞகரமாகவும் நகரமாகவும் திரிதல் உண்டு.

யமன்—ஞமன்—நமன்

இவற்றுள் யகரமே பழையது எனத் தெரிகிறது.

தேவார காலத்தில் நகரம் ஞகரமாகத் திரிந்தமைக்கு அப்பர் தேவாரம் சான்று பகர்கின்றது.

கை—நின்ற—கைஞ்ஞின்ற
மெய்—நின்ற—மெய்ஞ்ஞின்ற

தொல்காப்பியர் யகரம் வருமிடத்து ஞகரம் வரும் வழக்கைக் குறிப்பிடுவர். —தொல்-எழு. 147

மண் யாத்த—மண்ஞாத்த
பொன் யாத்த—பொன்ஞாத்த

---

1. C. D. P. பக். 126

ஞமில் என்பது இடம் பெயர்ந்து மஞில் என ஆகிப் பின் மயில் ஆகியது என்பர். ஞமில் என்பது மயிலைக் குறிக்கும் பழஞ்சொல்லாகும்.

பேச்சு மொழியில் ஞகரம் 'க்ய' என மாறுகிறது.

ஞானம்—க்யானம்
ஞாபகம்—க்யாபகம்

ணகரம்

தமிழில் மொழி முதற்கண் ணகரம் வருதல் இல்லை தெலுங்கில் ணகரம் னகரமாக மாறுகிறது.

கண்—கன்னு (தெலு)
மண்—மன்னு (தெலு)

ளகரம் ணகரமாகவும் டகரமாகவும் மாறும் இயல்பிற்று[1]

நள்—நண்பு—நட்பு

நகரம்

நகரம் மொழி முதற்கண் வரும்; செய்யுநர், அறியுநர், முதலிய சொற்களில் இடையிலும் வருகிறது. பொருந், வெரிந் என்ற இரு சொற்களில் மட்டும் நகரம் ஈற்றில் வருகிறது. வேறு எங்கும் மொழியிடையும் கடையும் வரவில்லை.

மொழியிடையே தகரத்தின் முன் மெல்லொலியாக வருகிறது.

செம்பவளம்—செஞ்சாந்து—செந்தார். இது மகரத்தின் திரிபாகும்.

இருந்தனர், வந்தனர் முதலிய சொற்களில் தகரத்தின் இன மெல்லொலியாக வருகிறது.

வடசொற்களைத் தமிழில் எழுதும் பொழுது இருவகை வடிவங்களால் எழுதுகின்றனர்.

---

1. C. D. P. பக். 138

ஆநந்தம்—ஆனந்தம்

விநாயகர்—விஞயகர்

அநுபவம்—அனுபவம்

சீநிவாசன்—சீனிவாசன்

னகரம்

இது மொழி முதற்கண் வருவதில்லை. லகரமும் னகரமும் மாறி வருகின்றன.

பொல்—பொன்

நல்—நன்மை

செல் (தமிழ்)—சென் (பர்ஜி)

நோல் (தமிழ்)—நோன் (கன்)

லகரம் றகரமாகவும் மாறுகிறது.

சில்சில—சிற்சில; பல்பல—பற்பல

மகரம்

மகர வகரம் ஒன்று ஒன்ருகத் திரிகின்றன.

வதுவை (தமிழ்)—மத (கன்னடம்)—மதுமெ (துளு)

மயல் (தமிழ்)—வயவு (தமிழ்)

மீசை—வீசை

வானம்—மானம் (பேச்சுத் தமிழ்)

விழுங்கு (இலக்கியத் தமிழ்) — முழுங்கு (பேச்சுத் தமிழ்)

மனை—வனை

தாமணி—தாவணி

முழி—விழி

தமிழில் மொழியிறுதிக்கண் மகரமும் னகரமும் மாறி வருகின்றன.

இடம் — இடன்; மரம் — மரன்; நிலம் — நிலன்;
குளம் — குளன்; அறம் — அறன்; முகம் — முகன்

திருச்சி, தஞ்சைப் பகுதிகளில் முப்பது என்பது நுப்பது என வழங்குகிறது. நாற்பது என்பதை ஒட்டி முப்பது, நுப்பது ஆகி இருக்க வேண்டும்.[1]

இடையின மெய்கள் : யகரம்

தமிழ் ஒன்றில் மட்டும் யகரம் நிலைபெற ஏனைய திராவிட மொழிகளில் கெடுகிறது என்பர்.[2]

பழந்தமிழில் யகரம் ஆகாரத்தோடு மட்டும் மொழி முதற்கண் வந்தது.

யாறு(பழந்தமிழ்)—ஆறு(தமிழ், மலை): ஏறு(தெலு)
யாடு " ஆடு (தமிழ், மலை, ஆடு;) (கன்).

மொழியிடையில் யகரம் கெடுதலும் உண்டு.

பெயர்—பேர்; வியர்வை—வேர்வை

சில சொற்களில் யகரம் சகரமாக மாறுதல் உண்டு.

முயல்—முசல்
அயல்—அசல்
பையன்கள்—பசங்கள்
வயவு—வசவு (திட்டுதல்)
பய்ம்பொன்—பசும்பொன்
உயிர்—உசிரு

ரகரம்

ரகரம் மொழி முதற்கண் வருவதில்லை.
சில சொற்களில் ரகரம் லகரமாக மாறுதல் உண்டு.

இருப்பை—இலுப்பை
தகராறு—தகராலு

---

1. C. D. P. பக்.—128
2. " பக்.—159

சில சொற்களில் ரகரம் கெடுதல் உண்டு.

பருப்பு (தமிழ்)—பப்பு (தெலுங்கு)
நெருப்பு (")—நிப்பு (தெலுங்கு)
உருண்டை (")—உண்டை (பேச்சுத் தமிழ்)
இருப்பை (")—இப்பை (கன்.)

சொற்களிடையில் ரகரம் தோன்றுதலும் உண்டு.

தேகம்—த்ரேகம்
கோவை—கோர்வை

லகரம்

லகரம், மொழி முதற்கண் வருவதில்லை. இக் காலப் பிறமொழிச் சொற்கள் மொழி முதற்கண் லகரம் பெற்று வருகின்றன.

லட்டு, லாட்டரி, லாரி, லாவகம், லீலை.

லகரம் ளகரமாகவும், றகரமாகவும் மாறுவதைத் தவிர வேறு மாற்றங்கள் பெறுவதில்லை.

லகரம் மொழி ஈற்றுக்கண் ஒலித் துணையாக உகரம் பெறுகிறது.

சொல்—சொல்லு; பல்—பல்லு

இந்த உகரம் ஏனைய இடையின எழுத்துகளாகிய ரகரத்தோடும், ளகரத்தோடும், ழகரத்தோடும் சேர்கிறது.

கேள்—கேளு; பேர்—பேரு; வாழ்—வாழு

வகரம்

இது மொழி முதற்கண்ணும் வழங்குகிறது, எனினும்; இதழ்குவி உயிர்களாகிய உ, ஊ, ஒ, ஓ - என்பவற்றோடு மொழி முதற்கண் வருவதில்லை.

மொழியிறுதிக்கண் வகரம் வருதல் இல்லை. தொல்காப்பியர் அவ், இவ், உவ், தெவ் என்ற நான்கு மொழிக்கண்

மட்டும் வகரம் இறுதியாக வரும் என்பர். இக் காலத்தில் அவை வழக்கிழந்து விட்டன.

தமிழில் வகரம் கன்னடத்தில் பகரமாக மாறும்.

வரு (தமிழ்)—பர் (கன்.)
வல் " — பல் (கன்.)
வாய் " — பாய் (கன்.)
வான் " — பான் (கன்.)
விரல் " — பெரல் (கன்.)
வெள் " — பெளு (கன்.)

கி. பி. ஏழாம் நூற்றாண்டுக்குப் பிறகே கன்னடத்தில் வகரம் பகரமாக மாறியிருக்க வேண்டும்.[1]

தமிழில் பேச்சு மொழியில் வகரம் மகரமாக மாறுகிறது.

என்னவோ—என்னமோ

வகரம் ககரமாகவும் மாறுதல் உண்டு.

நாவல்பழம்—நாகப்பழம்
பவளம்—பகளம், பகடமு (தெலுங்கு)
கழுவு—கடுகு (தெலுங்கு)

முன்னின்ற உகரம் ஒகரமாகத் திரியுங் காலத்து வகரம் கெடுதலுண்டு.

உவகை—ஓகை
வச்சன்—ஓச்சன்
உவமை—ஒப்புமை

ழகரம்

ழகரம், மொழி முதற்கண் வருவதில்லை; இறுதிக்கண் வரும்.

வாழ், பாழ், புகழ், இகழ்.

---

1. C D. P. பக். 156

2. ஒவ் என்பதே உவ் எனத் திரிந்திருக்க வேண்டும். அல்லது உபமானம் என்பது உவமானம், உவமை எனத் திரிபு பெற்றிருக்க வேண்டும்.

ழகரம் கெட்டு இரட்டிப்பு வடிவங்கள் சில உண்டாகின்றன.

கொழுமை—கொவவு (தெலுங்கு)
மழுங்கு—மங்கு—மக்கு
விழுங்கு—மிங்கு (தெலுங்கு)

லகர ளகரத்தைப் போன்று இஃது இரட்டிப்புப் பெறுவது இல்லை.

பல்லவர் காலத்தில் ழகரமும் ளகரமும் ஒன்றாகக் கருதப் பட்டன.

கிழமை—கிளமை
சோழ—சோள
புகழ்—புகள்
கிழக்கு—கிளக்கு[1]

இவ்வாறு ழகர ளகர வேறுபாடு மறையத் தொடங்கி 11—13 நூற்றாண்டுகளில் ளகரத்திற்குக் கூறப்பட்ட சந்தி விதிகள் ழகரத்திற்கும் ஏற்றிக் கூறப்பட்டன. வீரசோழியம் ழகரத்திற்கு ளகரத்தின் விதியையே கூறும்.

வாழ்—நாள்—வாணாள்
சோழ—நாடு—சோணாடு
திகழ்—தசக்கரம்—திகட சக்கரம்[2]

ளகரம்

ளகரம் மொழி முதற்கண் வருவதில்லை. இது லகரமாக வும் ணகரமாகவும் திரியும்.

தெலுங்கில் லகரமும் ளகரமும் ஒன்றாகிவிட்டன.

ஆள் (தமிழ்) —ஏலு (தெலுங்கு)
முள் (தமிழ்) —முல்லு (தெலுங்கு)

---

1. C. D. P. பக். 149
2. கந்தபுராணக் காப்புச் செய்யுள்.

கொள் (தமிழ்) —கொனு (தெலுங்கு)
பள்ளி (தமிழ்) —பல்லி (தெலுங்கு)
உள்ளி (தமிழ்) —உல்லி (தெலுங்கு)
பிள்ளை (தமிழ்) —பில்ல (தெலுங்கு)

சோழர், பல்லவர் காலத்துக் கல்வெட்டுகளில் ளகரம் ழகரமாகத் திரிபு பெற்றது. (பதினோராம் நூற்றாண்டு)

கேள்வி—கேழ்வி
சிங்களர்—சிங்கழர்
பரமச்வாமிகள்—பரமச்வாமிகழ்

பல்லவர் கல்வெட்டுகளில் (7ஆம் நூற்றாண்டு) நாடாழ்ச்சி (நாடாட்சி) என்னும் வழக்கு உள்ளது.[1]

பேச்சு மொழியில் ளகரம் லகரமாக ஒலிக்கப்படுகிறது.

மாப்பிள்ளை—மாப்பிலே—(இராமநாதபுரம்)
வளர்த்து—வலத்து—(திண்டுக்கல்)

ஈரோட்டில் எல்லாச் சொற்களிலும் ளகரம், லகரமாகவே ஒலிக்கிறது.

சில சொற்களில் ளகரம் தேவை இல்லாமல் பேச்சு மொழியில் புகுத்தப்பட்டுள்ளதைக் காணலாம்.

எண்பது—எம்ளது (தஞ்சை; திருச்சி)
தேவை—தேள்வை (யாழ்ப்பாணம்)[2]

இரட்டிப்பு ஒலிகள்

திராவிட மொழிகளில் மென்மையையடுத்து வல்லினம் வருதலும், வல்லினம் இரட்டித்து வருதலும் பகுதியோடு விகுதி சேருமிடத்தே நிகழ்வனவாகும்.

பகுதி ஈற்று ய ர ல வ ழ ள க்கள் அடுத்து வரும் வல்லினத்தால் ஒரினமாகி அமையும்.

---

1. C. D. P. பக். 141
2. C. D. P. பக். 141

நய் + பு—நம்பு; துய் + சு—துஞ்சு

நய் + சு—நச்சு

கால் + து—காற்று

சில் + பு + அம்—சிற்பம்

செவ் (செவி) + பு—செப்பு

சில் + து; சிற்று—சிட்டு (சிட்டுக்குருவி)

கொழ் + து—கொத்து

பொழ்து—பொத்து (தெலு)

நள் + பு—நட்பு

துய் + கு—தூய்கு—தூங்கு; தூக்கம்

உய் + கு + அம்—ஊக்கம்

தாழ்—தழ் + கு—தங்கு; தக்கு (தெலு); தாக்கு (தாழச்செய்)

மழ் + கு + ஐ—மங்கை

மழ் + கு—மங்கு; மக்கு

உருள் + து—உருட்டு; உருண்டு

மெய்யீறுகளில் உயிர் ஒலித்துணை

க ச ட த ப ற க்களைப் போல ஏனைய ஈறுகளும் உகரத்தை ஒலித்துணையாகப் பெறுகின்றன.

பெயர்—பேரு; நீர்—நீரு; நீள்ளு (தெலுங்கு)

பெண்—பொண்ணு; கண்—கண்ணு

கள்—கள்ளு; கொள்—கொள்ளு

யகர ஈறு ஒலித்துணையாக இகரத்தைப் பெறுகிறது.

நாய்—நாயி, பாய்—பாயி, பேய்—பேயி, வாய்—வாயி, நெய்—நெய்யி, பொய்—பொய்யி.

இன்றைய பேச்சுத் தமிழில் ஈற்று மெல்லின மெய்கள் ஒலிப்பதில்லை; உயிராகவே ஒலிக்கின்றன. அவ்வுயிரில் மென்மை கலக்கிறது.

போறுன்—போறு

வந்தான்—வந்தா

இன்றைய பேச்சுத் தமிழில் லகர ளகர ஈறுகளும் ஒலிப்ப தில்லே. அவற்றின் சாயல் அடுத்து வரும் உயிர்களில் படிகின்றன.

வத்தல் குழம்பு—வத்த குழம்பு

வந்தாள்—வந்தா

இதனுல், தற்காலப் பேச்சு மொழியில் தமிழ்ச் சொற்கள் மெய்யெழுத்துகளால் முடிவதில்லே என்று கூறலாம்.

6. ஆய்த ஒலித் திரிபுகள்

ஆய்தம் தொல்காப்பியரால் சார்பொலிகளுள் ஒன்றாகக் கொள்ளப்படுகிறது. குற்றியல் உகரம், குற்றியல் இகரம், ஆய்தம் எனும் மூன்றையும் சார்பொலிகள் என்பர்.

ஆய்தம் தனிமொழியில் வருதலோடு தொடர்மொழியில் ல, ள, வக் களின் திரிபாகவும் வருகிறது.

எஃகு, கஃசு—தனித்து வந்தது.

பவ் + து—பஃது அவ் + கடிய—அஃகடிய கல் + தீது—கஃறீது முள் + தீது—முஃடீது	திரிபு

கற்றீமை, கஃறீது என இருவகை அமைப்புகளில் 'ஃற்' என்பது 'ற்ற்' என்பதன் மாற்று வடிவமாகக் கொள்ளப் படுகிறது. 'ற்ற்' என்பது வல்லொலியின் நீட்டிப்பு ஒலியாகும். 'ஃற்' என்பது நலிபு ஒலியாகும். 'ஃற்' என்பன சேர்ந்தே ஒலிக்கின்றன.

இ, உ வல்லெழுத்தை ஒட்டியே அவற்றின் பின் வரும். ஆய்தமே அவற்றின்முன் வருகிறது. தமிழில் வல்லொலி களால் சொற்கள் இறுவதில்லை. அவற்றோடு உகரம் சேர்ந்து ஒலித்துணையாக அமைகிறது. அவ்வாறே ஆய்தமும் வல் லொலியை நலிபுறச் செய்ய அமைந்த ஒலித்துணை எனக் கொள்ளலாம்.

யாண்டும் ஆய்தம் தனித்து ஒலிக்கப்படவில்லை. அதற் கென ஒரு தனி ஒலி இல்லை என்று கொள்வதே தக்கது.

கற்றீமை என்பதில், 'ற்ற்' என்பதன் முதல் 'ற்' க்கு என ஒரு தனி ஒலி இல்லையாதல் போலவே, 'ஃற்' என்பதிலும் ஆய்தத் திற்கும் தனி ஒலி இல்லை என்று கொள்ளலாம்.

'உருவினும் இசையினும் அருகித் தோன்றும்'

மொழிக்குறிப் பெல்லாம் எழுத்தின் இயலா
ஆய்தம் அஃகாக் காலை யான'

எனும் தொல்காப்பிய நூற்பாவுக்கு இளம்பூரணர் கீழ் வரும் எடுத்துக்காட்டுகளைத் தருவர்.

'கஃறு என்னும் கல்லதர் அத்தம்
சுஃறு என்னும் தண்டோட்டுப் பெண்ணை'

'கஃறு' 'சுஃறு' என்பன முறையே நிறக் குறிப்பு, ஒலிக் குறிப்புச்சொற்களாகஒலிக்குமிடத்து 'கறு, சுறு' எனவே ஒலித் திருக்க வேண்டும். அங்கே ஆய்த ஒலி இருத்தற்கு வழி இல்லை. அவை முஃடீது கஃறீது என்பவற்றில் காணப்படும் நலிபு ஒலிகளாகவே இருத்தல் வேண்டும். அதனால் றகரத்தின் நீட்டிப்பு ஒலிகளாக அவற்றைக் கொள்ளல் தகும்.

ஒற்று, அளபு எடுக்கும் நிலையில் வல்லொலிகள் இடம் பெறுவதில்லை. ஆய்தம் சார்ந்த வல்லொலி நலிபு ஓசை பெற்று நீளுகிறது. அதனை விரித்தல் விகாரம் என்றும், ஆய்த அளபெடை என்றும் குறிப்பிட்டனர்.

'ஓர்ந்துகண் ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்
தேர்ந்துசெய் வஃதே முறை'

செய்வதே என்பது செய்வஃதே என விரித்தல் விகார மாயிற்று என்பர். இதனையும் தகரத்தின் நீட்டிப்பு ஒலியாகக் கொள்ளுதல் பொருந்தும்.

'இலஃஃகி வீங்கிருள் ஓட்டுமே மாதர்
இலஃஃகு முத்தின் இனம்'.

நன்னூல் எழுத்தியல் ஆறுமுக நாவலர் உரை இவற்றை ஆய்த அளபெடை எனக் குறிப்பிடுகிறது. ககரத்தின் நீட்சியே விலஃஃகி, இலஃஃகு என அமைந்தது என்பர்.[1]

எனவே, ஆய்தம் என்பது ல, ள, வ க்களின் திரிபாகவும், வல்லொலிகளின் நீட்டிப்பாகவும் அமைந்தன என்று கொள்ளுதலே சால்புடைத்து. அந் நீட்டிப்பு ஒலிகளைச் செய்யுளில் விரித்தல் விகாரம் எனவும், ஆய்த அளபெடை எனவும் இலக்கண நூல்கள் குறிப்பிடுகின்றன.

பிற்காலத்தில் ஆய்தம் ககரமாகக் கருதப்பட்டது. ஏனெனில், ஆய்தம் பெரும்பாலும் ககரத்தோடு இணைந்த வழக்காகியது.

எஃகு, அஃகு, (அல்கு)
வெஃகு (வெவ்+கு)
றஃகான், னஃகான், மஃகான்,

கம்பர் காலத்திலும் ஆய்தம் ககரமாகவே கருதப்பட்டது என்பதற்குக் கீழ்வரும் செய்யுள் சான்றாகும்.[2]

'அஃதைய நினைமது அரண்என உடையேம்
இஃதொரு பொருள்அல எமதுயி ருடன்ஏழ்
மகிதலம் முழுதையும் உறுகவம் மலரோன்
உகுபகல் அளவென உரைநனி பகர்வார்'

ஆய்தம் ககரத்திற்கு ஒத்த எதுகையாக வந்திருத்தல் காண்க.

ஆய்தத்தைக் ககர ஒலியாகக் கொள்ளப்பட்டதைப் போலவே யகரமாகவும் கொண்டனர்.

'செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்
எஃகதனிற் கூறியது இல்' குறள்—759

1. தமிழ் எழுத்தியல் அன்றும் இன்றும்—பக். 282
2. த. எ. இ. அ—பக். 280.

இதனில் யகரமும் ஆய்தமும் எதுகைகளாக அமைந்துள்ளமையைக் காண்க.[1]

'கய்ந்நவி லாளனை எஃகுள் ளடக்கி'—பெருங்கதை 1 ; 56 : 161
'எஃகொளி களிற்றின் வெய்துயிர்த் துயங்கு' 1 : 33 : 109

கய், எஃ; எஃ, வெய் என்பன அடி எதுகைகளாக அமைந்துள்ளமையைக் காண்க.[2]

நம்மாழ்வார் பாடலிலும் இவ்வகை எடுத்துக்காட்டுகள் இடம் பெற்றுள்ளன.

அஃதே.................
கொய்பூம் பொழி..............
செய் கோலத்து...........
அஃகாமல்........... —திருவாய் மொழி 4—11

யகர ஒலி போலவே ஆய்தத்திற்கு ஹகர ஒலியும் இருந்தது. றகரத்தின் முன்னும் டகரத்தின் முன்னும் வரும் ஆய்தம் ஹவாக ஒலித்தது. ஏனெனில் றட முன் யகரம் வருவதில்லை.

ஹவாக ஒலித்த ஆய்தம் ஆய்தக் குறுக்கம் என்றும், யகரமாக ஒலித்த ஆய்தம் முற்றாய்தம் எனவும் பேராசிரியர் தெ. பொ. மீ. குறிப்பிடுவார்.[3]

நன்னூலார் ல, ள ஈற்றுச் சொற்கள் புணருமிடத்து வரும் ஆய்தம் அஃகும் என்றும், அஃது ஆய்தக் குறுக்கம் எனப்படும் என்றும் கூறுவார்.

'லளஈற்று இயைபினும் ஆய்தம் அஃகும்' நன்—97

1. த. எ. இ. அ—பக். 292.
2. A History of tha Tamill Langnage T.P.M.—பக். 187
3. A History of the Tamil Language T. P. M. பக். 139

எனவே, வகரத்தின் திரிபாக அமையும் ஆய்தமும் எஃகு கஃசு போன்ற சொற்களில் வரும் ஆய்தமும் அஃகா என்பது பெறப்பட்டது.

பல்லவர் காலத்திலும் சோழர் காலத்திலும் ஆய்தம் வழக்கில் இருந்தது. பல்லவர் காலத்து வேள்விக்குடிப் பட்டயத்தில் ஈது, இஃது, இது என மூன்று வடிவங்கள் வழங்கின. கி. பி. 1077 இல் திருவெஃகா என்னும் ஊர்ப் பெயர் குறிக்கப் பட்டுள்ளது. இதற்குப் பிறகு கல்வெட்டுகளில் ஆய்த வழக்கு இல்லை என்பர்.[1]

அஃது, இஃது, உஃது, பஃது என்னும் சொற்களிலும் ஆய்தம் வழங்குகிறது. சாரியை வருங்கால் அவ் வாய்தம் கெடுகிறது.

அஃது — அதனை
பஃது — பதின்

சுட்டுப் பெயர் தன்முன் உயிர் வருமிடத்து அஃது எனவும், மெய் வருமிடத்து அது எனவும் வழங்குகிறது. பஃது, பத்து என்பன சூழ்நிலை ஒட்டி மாறுவதில்லை. பஃது என்பது தொல்காப்பியர் காலத்து வழக்காகும். இக் காலத்தில் பத்து என்பதே வழங்குகிறது.

ஆய்தம் ஏனைய திராவிட மொழிகளில் வழங்கவில்லை என்பது குறிப்பிடத் தக்க செய்தியாகும். இது தமிழில் மட்டும் காணப்படும் நலிபு ஓசையாகும். ஆய் என்பது சாய் என்பதன் திரிபாகும்.

ஆய்தல்—உள்ளதன் நுணுக்கம்

'ஒய்தல் ஆய்தல் நிழத்தல் சாஅய்
ஆவயின் நான்கும் உள்ளதன் நுணுக்கம்'—தொல்—உரி—32

---

1. A History of the Tamil Language-T. P. M. பக். 148

ஆய்த ஒலி பயிலும் செய்யுளின் ஓசையை நலிபு வண்ணம் என்பர் தொல்காப்பியர்.

'நலிபு வண்ணம் ஆய்தம் பயிலும்'—தொல்—செய்யுள்—221

இக் காலத்தில் ஆய்தம் 'அஃகு' எனக் குறிக்கப்படுகிறது. நன்னூலார் காலத்திலும் இஃது அஃகு என ஓர் எழுத்தாக வழங்கப்பட்டது. அதனுல்தான் இதற்கு அங்கா முயற்சி எனக் குறிப்பிட்டிருக்கிறுர்.

ஆய்தத்திற்கு 'ஹ அல்லது க' ஒலியே முதல் ஒலியாகக் கொள்ளப்படுதலால் அதன் பிறப்பிடம் தலே என நன்னூலார் குறிப்பிட்டார் போலும்!

இக் காலத்தில் 'காஃபி' என 'f' ஒலியை உணர்த்த ஆய்த எழுத்துப் பயன்படுகிறது. பகரத்தின்கண் 'f' ஒலியை ஏற்ற இஃது அறிகுறியாக நிற்கிறது.

7. தமிழ் ஒலியசை முறை

மொழிக்கு மொழி எழுத்துகள் வேறுபடுவதைப் போல ஒலியசை முறையும் வேறுபடும். தமிழ் மொழிக்கு உரிய ஒலியசை முறைகளில் சில குறிப்பிடத் தக்க சிறப்புடையன.

1. இடையின எழுத்துகளுள் யகரமும் வகரமும் மட்டுமே மொழிக்கு முதலில் வருகின்றன. ஏனைய ர, ல, ழ, ள க்கள் வருவதில்லை. வல்லெழுத்துகளுள் ட, றக்களும் மொழி முதற் கண் வருவதில்லை.

2. யகரம் ஆவோடு மட்டும்தான் மொழி முதலில் வரும் எனத் தொல்காப்பியர் குறிப்பிடுவார். யவனர், யூபம் என்பன சங்க இலக்கியத்தில் வந்துள்ளன. என்றாலும் இவை பிறமொழிச் சொற்களாகும்.

யான், யாம் என்பன நெடுமுதல் குறுகிய வடிவங்களாக வருவழி, யன், யம் என ஆகாமல் என், எம் என ஆவது யகரம் அகரத்தோடு மொழி முதலில் வருவதில்லை என்னும் விதி பற்றியே யாகும்.

3. சகரத்தோடும் ஞகரத்தோடும் அகரம் தொல்காப்பியர் காலத்தில் மொழி முதலில் வருவதில்லை. சங்க இலக்கியத்தில் சமம், சமழ்ப்பு, ஞமலி எனும்சொற்கள் வந்துள்ளன. சா என்பது குறுகிய வடிவமாக வந்தால் 'சத்தான்' என்று வரவேண்டும். அவ்வாறு வாராமல் செத்தான் என்றே வந்துள்ளது. இதுவும் சகரம் மொழி முதற்கண் வாராது என்னும் விதிபற்றியதே என்க.

4. தொல்காப்பியர் காலத்தில் நகர முதலாக இருந் தவை சங்க காலத்தில் ஞகர முதலாயின.

நெண்டு—ஞண்டு
நெமலி—ஞமலி
ஞெமன்—ஞமன்—சமன்

5. தென் திராவிட மொழிகளுள் ஒன்றான தமிழில் இ, ஈ, எ, ஏ, ஐ வழிக் ககரத்தைத் தொடர்ந்து வளைநா ஒலிகள் வந்தால் அக் ககரம் சகரமாகத் திரிபு பெறுவதில்லை.

கிழக்கு, கீழ், கிளி, கிட, கெடு, கேடு, கெழு, கேழ் கேளிர். பிற மெய் ஒலிகள் திரிவதில்லை.

கிரி; கிலி; கெலி; கேது —இவை பிறமொழிச் சொற்கள்.

6. கன்னடத்தில் இ ஈ எ ஏ ஐ வழிக் ககரம் திரிபு பெறுவதில்லை. கன்னடத்தில் ககரம் வழங்குமிடத்தில் தமிழில் சகரம் வழங்கியது.

கெவி—செவி
கிரி—சிரி
கெம்—செம்

7. ர, ல, ய என்பன தமிழில் மொழிக்கு முதலில் வருவதில்லை. நன்னூலார் காலத்தில் இவை அ, இ, உ எனும் முச் சுட்டுகளை ஒலித்துணையாகப் பெற்று ஒலித்தன.

அரங்கம்
இயக்கன்
உலோகம்

8. ஆங்கிலத்தில் பல மெய்கள் தொடர்ந்து மொழி முதலில் நிற்கும் (Strong). தமிழில் தனிமெய் மொழி முதற்கண் வாராது; உயிரோடு கூடிய மெய்தான் வரும். இது தமிழ் மொழியின் ஒலியசை முறையாகும்.

9. தமிழில் மொழியிடை இரண்டு உயிர்கள் மயங்குவ தில்லை. ஈருயிர் இணையின் அவற்றை அளபெடை என்பர்.

சிறு+அன்—சிறுஅன்
மக+அர்—மகாஅர்
குரு+இ—குரீஇ
நசை+இ—நசைஇ
அசை+இ—அசைஇ

• ஈருயிர் மயங்குதலைத் தவிர்க்கவே பிற்காலத்தில் உடம்படு மெய்கள் இடம்பெற்றன. தொல்காப்பியர் காலத்தில் உடம்படுமெய் பெற்ற வடிவங்கள் குறைவு.

சிறு+அன்——சிறுவன்
குரு+இ—குருவி
கிளி+அழகு—கிளியழகு

• 10. தமிழில் மொழி இடையே இரண்டு மெய்கள் மயங்குதல் உண்டு. மூன்று மெய்கள் அருகி மயங்கும். அதற்கு மேல் மெய்கள் தொடர்வதில்லை. மூன்று மெய்கள் மயங்குவதாயின் அவற்றுள் முதல் மெய் ய, ர, ழ மூன்றனுள் ஒன்றாக இருக்கும்.

சுக்கு, சங்கு, மார்பு—இருமெய்
வாய்ப்பு, சேர்க்கை, வாழ்க்கை—மூன்று மெய்

11. தமிழில் நெடிலைத் தொடர்ந்தும் இரண்டெழுத்துகளை அடுத்தும் வரும் மெல்லெழுத்துகள் இரட்டிப்பதில்லை. தனிக்குறிலை அடுத்த மெல்லெழுத்துகளே இரட்டிப்பைப் பெறும்.

தான்+ஐ—தன்னை (தானை என வருவது இல்லை)
தாம்+ஐ—தம்மை
கண்+ஐ—கண்ணை
தான், தாம் என்பன தன் தம் எனக் குறுகின.

• 12. இடையினமும் குறிலை அடுத்து வரும் பொழுதே இரட்டிப்பைப் பெறுகின்றன. ஏனைய இடத்துப் பெறுவதில்லை.

அய்யர், பல்லி, அவ்வை, பள்ளம்
ர, ழ யாண்டும் இரட்டிப்பைப் பெறுவதில்லை.

13. மொழியீற்றில் வல்லெழுத்துகள் நிற்பதில்லை. நிற்பின், உகரத்தை ஒலித்துணையாகப் பெறும். இதனைக் குற்றியலுகரம் என்பர்.

தற்காலத்தில் பேச்சு மொழியில் பெரும்பாலும் எல்லா ஈறுகளுமே உகரத்தை ஒலித்துணையாகப் பெறுகின்றன. ஏனைய திராவிட மொழிகளிலும் மெய்களால் சொற்கள் முடிவதில்லை என்பர்.

14. குற்றியலுகர ஈற்றுச் சொற்கள் யகரம் வருவழி இகரமாகத் திரியும். அவ்விகரம் குற்றியலிகரம் எனப்படும்.

நாகு + யாது—நாகியாது
வரகு + யாது—வரகியாது

கேண்ம், சென்ம் முதலிய சொற்கள், யா என்னும் அசைச் சொல் வருமிடத்து இகரம் பெறும். அதுவும் குற்றியலிகரமாகும்.

கேண்மியா, சென்மியா

இவையே யன்றி, ஏனைய ஈற்றுச் சொற்களையும் யகரம் தொடருமிடத்து இகரம் வருவதுண்டு. அதுவும் குற்றியலிகரமே.

வேள் + யாவன்—வேளியாவன்
மண் + யாது—மணிண்யாது

இவ்வாறு ஒலித்துணையாக இகரம் வருதல் தமிழ் மொழிக்கண் காணப்படும் சிறப்பு நியதியாகும்.

இன்குரற் சீறியாழ்—(சிறுபாண் - 35)
ஓரியான் ஆகுவது—(அகம்)
இவரியார் என்குவை யாயின்—(புறம் - 201)[1]

---

1. தமிழ் எழுத்தியல் அன்றும் இன்றும் —பக். 310.

8. திராவிடச் சொற்கள் சொல்லாக்கம்

1. சொற்களின் அமைப்பு

சொல்லாக்கம் ஒட்டிச் சொற்களைத் தனிநிலை மொழி, ஒட்டு நிலை மொழி, உட்பிணைப்பு மொழி என மூவகையாகப் பிரித்துக் காண்பர்.

(1) அடிச் சொல்லே தனித்து நின்று சொல்லாதல் உண்டு. அது தனிநிலை மொழி (isolative language) எனப் படும்.

சீன மொழியில் இவ்வமைப்பு மிகுதியாக உள்ளது என்பர்.

கல், மண், பார், தீ

(2) அடிச் சொல்லும் விகுதியும் சேர்ந்து எளிதில் பிரித்து அறியக் கூடிய நிலையில் சொற்கள் அமைதல் உண்டு. அஃது ஒட்டுநிலை மொழி (agglutinative language) எனப் படும்.

திராவிடச் சொற்களுள் இவ்வமைப்பு மிகுதியாக உள்ளது. அதனால், திராவிட மொழிகளை ஒட்டுநிலை மொழிகள் என்பர்.

பார்த்தான்—பார் + த் + ஆன்; கல்லை—கல் (ல்) + ஐ
தீயினால்—தீ (ய்) + இன் + ஆல்

இவ்வாறு எளிதில் பிரித்தறிய முடியும்.

(3) அடிச்சொல்லும் விகுதியுமன்றிப் பிறிதோர் அடிச்சொல்லுடனும் சேர்ந்து பிணைந்து நின்று, பிரித்தறிய முடியாத நிலையில் உள்ள மொழி உட்பிணைப்பு மொழி (Inflectional language) எனப்படும்.

• வடமொழியும் இந்தோ ஐரோப்பிய மொழிகளும் இந்நிலையின என்பர்.

தமிழிலும் சில சொற்கள் உள.

கொணு கொண்டா	—கொண்டு வா என்பதன் பிணைப்பு
காமரு	—காமம் வரு என்பதன் பிணைப்பு
அலமரு	—அலம் + வரு " "

பேச்சு மொழியுள் பல சொற்கள் இவ்வாறு மருவி அமைந்துள்ளன.

கீது—இருக்கிறது என்பதன் மரூஉ
ஆந்தை—ஆதன் + தந்தை என்பதன் மரூஉ
சோணாடு—சோழன் + நாடு என்பதன் மரூஉ

திராவிடச் சொற்கள் இரண்டாம் நிலையாகிய ஒட்டு நிலையைச் சார்ந்திருப்பதால் அவற்றை அடிச்சொல் எனவும், விகுதிகள் எனவும் எளிதில் பிரித்தறிய முடிகிறது. அடிச்சொல் என்பது பொருள் உணர்த்தும் பகுதியாகும். விகுதி என்பது இலக்கணமும் சொல்லாக்கச் சிறப்பும் உணர்த்தும் சேர்க்கை ஆகும்.

2. அடிச்சொற்கள்

(1) தமிழ்ச் சொற்களுள் பல்வற்றின் அடிச்சொற்கள் பெயருக்கும் வினைக்கும் பொதுவாக நிற்கின்றன.

பூ—பெயர்; பூத்தது—வினை
காய்—பெயர்; காய்த்தது—வினை
கனி—பெயர்; கனிந்தது—வினை
அடி—பெயர்; அடித்தான்—வினை

பெயரா, வினையா என்பது அது தொடரில் (வாக்கியத்தில்) பெறும் இடம் நோக்கியும், காலம், வேற்றுமை உணர்த்தும் விகுதிகள் நோக்கியும் உணரப்படும்.

(2) வினை அடிச்சொற்களைப் பண்பு அடிச்சொல் (Quality root) எனவும், செயல் அடிச்சொல் (action root) எனவும் இருவகையாகப் பிரிக்கலாம்.

நல்லன்—நல்—பண்பு அடிச்சொல்
செய்தான்—செய்—செயல் அடிச்சொல்

(3) எல்லாச் சொற்களையும் பெயரா, வினையா என்பதை அடிச்சொல்லைக் கொண்டு நிறுவ முடியாது. பலவற்றை விகுதி பெற்ற பிறகே அடிச்சொல் பெயரா, வினையா என்பதை முடிவு செய்ய முடியும்.

செய்கை—செய்+கை பெயரடிச் சொல்
செய்தான்—செய்+த்+ஆன் வினையடிச்சொல்

பெயர் அடிச்சொல், வினையடிச்சொல் என்று பிரிப்பதை விடப் பொருள் உணர்த்தும் பகுதிகளாகவும், விகுதிகள் சேர நிற்கும் அடிப்படை முதல் நிலைகளாகவும் இருப்பவற்றை அடிச்சொல் எனப் பொதுப்படையாகக் கூறல் தகும்.

(4) பகுதி என்பது (Stem) விகுதி, இடைநிலை முதலியன ஒழிய நிற்பது.

வருகிறான்—வரு+கிறு+ஆன்
வரு என்பது பகுதியாம்.

இதனை அடிச்சொல் எனக் கூறலாம். எனினும், வரு என்பதை வர்+உ எனப் பிரித்து உகரத்தை ஒலி நயச் சேர்க்கையாகக் கொள்ளுங்கால் 'வர்' என்பது அடிச்சொல்லாகிறது.

நிலைத்தான்—நிலை—பகுதி
நின்றான்—நில்—பகுதி

நிலை—நில்—ஐ—நில் அடிச்சொல்

நில் ஐகாரம் பெற்று நிலை என்றுவதால் ஐகாரம் ஆக்க விகுதி எனப்படும்.

இவற்றால் ஒரு குறிப்பிட்ட சொல் இடைநிலை, விகுதி முதலியன ஒழிய முதல் நிலையாக நிற்பது பகுதி (stem) யாகும் என்பதும், பல பகுதிகளை ஒப்பிட்டு ஆக்க விகுதிகளையும் ஒலித்துணைகளையும் நீக்கிக் காண நிற்பது அடிச்சொல்லாகும் என்பதும் பெறப்படுகின்றன. நன்னூலார் பகுதி எனக் காண்பது இவ்வடிப்படையில்தான் எனக் கொள்ளலாம். அறிஞர் கால்டுவெல்லும் ஒலித்துணைகளும், ஆக்க விகுதிகளும் நீங்க நிற்கும் முதல் நிலைகளையே அடிச்சொல் எனக் குறிப்பிடுகிறார்.

• (5) நன்னூல் பகுதியை வினைப்பகுதி எனவும், பண்புப் பகுதி எனவும் இருவகையாகப் பிரித்துக் காண்கிறது.

நட, வா, மடி, விடு முதலியன வினைப் பகுதிகளாம். செம்மை, கருமை, வெண்மை முதலியன பண்புப் பகுதிகளாம்.

தெரிநிலை வினையின் பகுதிகள் செயல்வினைப் பகுதிகளாகவும், குறிப்பு வினையின் பகுதிகள் பண்புப் பகுதிகளாகவும் விளங்குதல் குறிப்பிடத் தக்கது.

செய்தான்—செய்—தெரிநிலைவினை
கரியன் —கருமை—குறிப்பு வினை

இப்பாகுபாடு தமிழ் வினைச்சொற்களை அறிய உதவுகிறது. வினைத்தொகை, பண்புத்தொகை முதலிய தொடர் நிலைகளும் இவ்வடிப்படையிலேயே அமைந்துள்ளன.

கொல்யானை—கொல்—வினையடி (வினைத்தொகை)
செந்தாமரை—செம்மை—பண்படி (பண்புத்தொகை)

3. ஒலிநயச் சேர்க்கை

அ, இ, உ முதலிய உயிர் ஒலிகள் ஒலிநயச் சேர்க்கைகளாக அமைகின்றன என்று அறிஞர் கால்டுவெல் கருதுவார்.

விள்—விள } அ
நில்—நில

அர்—அரி } இ
கர்—கரி

கர்—கரு } உ
அழ்—அழு

4. ஆக்க விகுதிகள் (Formative Suffixes)

(1) ஒலிநய விகுதிகள் சேர்ந்தோ, தனித்தோ அமையும் அடிச்சொற்கள் முதல் நிலைகளாக நின்று, ஆக்க விகுதிகள் பெற்றுச் சொற்களாக அமைகின்றன.

பெரு + கு —பெருகு } ஒலிநய விகுதிகள் சேர்ந்தவை
நில + வு —நிலவு

நில் + அம் —நிலம் } தனித்து நின்றவை
நிழ் + அல் —நிழல்

சில சொற்கள் பல ஆக்க விகுதிகளைப் பெறுதல் உண்டு.

இன் + பு + அம்—இன்பம் } பல ஆக்க விகுதிகள் பெற்றவை
துன் + பு + அம்—துன்பம்

(2) கு, சு, டு, து, பு, று முதலியனவும் அம், அல், அர், அழ், இழ், அள், இள் முதலிய இணை ஒலிகளும் ஆக்க விகுதிகளாக வரும்.

இன் + பு—இன்பு
இன்பு + அம்—இன்பம்

(3) அடிச்சொற்கள் ஒரு விகுதியோ, விகுதிக்குமேல் விகுதியோ பெற்றுச்சொற்களாக அமைதல் உண்டு.

துய்—துயில் (இல்)—ஒரு விகுதி

தூய் + கு—தூங்கு + அம்—தூக்கம் } விகுதி மேல் விகுதி
துடை + பு—துடைப்பு + அம்—துடைப்பம்

கு சு டு து பு று க்கள் தனித்தோ, மெல்லினங்களோடு சேர்ந்தோ விகுதிகளாக வரும்; இரட்டித்தும் வருதல் உண்டு.

அழு+கு —அழுகு
எழு+து —எழுது } தனித்து வந்தன

அழு+ங்கு —அழுங்கு
அழு+ந்து—அழுந்து } மெல்லினத்தோடு சேர்ந்து வந்தன

அழு+க்கு —அழுக்கு
எழு+ச்சி —எழுச்சி } இரட்டித்தன

இவ்வாறே எல்லாச் சொற்களையும் பிரித்துக் காணலாம்.

5. சிறப்பு விகுதிகள் (Particles of Specialisation)

பொதுவாகத் திராவிட அடிச்சொற்கள் ஓரசை வாய்ந்தவை (Mono syllabic). இவற்றின் பொருட் சிறப்புக்கேற்ப ஆக்க விகுதிகள் அமையும்.

அழ்—அழி—இ
அழ்—அழு—உ
நில்—நிலை—ஐ
நில்—நிலம்—அம்
எழு—எழுது—து

இவற்றைப் பொருட் சிறப்பு விகுதிகள் என்று அறிஞர் கால்டுவெல் கூறுவார்.

இந்நிலை ஓர் அடிச்சொல்லைக் கொண்டே பல சொற்கள் அமைய ஏதுவாகிறது.

அட் — அடு, அடங்கு, அடக்கு
அண் — அணி, அணை, அணவு, அண்மை

இவற்றைப் பெயர்க்குரியன, வினைக்குரியன எனப் பிரித்துக் காண இயலாது. இவற்றைப் பொதுவாகச் சொல்லாக்க விகுதிகள் என்று கூறுவர்.

	வினை	பெயர்
அர்	வளர்	சுடர்
அழ்	புகழ்	இதழ்
அறு	இடறு	கிணறு
அல்	கழல்	ஈரல்
இல்	துயில்	வெயில்
அள்	துவள்	திங்கள்
உள்	உருள்	இருள்

6. இலக்கண விகுதிகள் (Grammatical Suffixes additions)

அடிச்சொல்லோடு விகுதிகள் சேர்ந்து வினையாயின் அது திணை, பால், எண், இடம் காலங்களை உணர்த்தும். பெயராயின் திணை, பால், எண், இடம், வேற்றுமைகளை உணர்த்தும்.

செய்தான்—செய் + த் + ஆன்—உயர்திணை ஆண்பால் ஒருமை படர்க்கை இறந்தகாலம்.

இறைவனை—இறைவன் + ஐ —உயர்திணை ஆண்பால் ஒருமை படர்க்கை இரண்டாம் வேற்றுமை.

அடிச்சொல் ஒழிந்த சேர்க்கை உருபுகள் விகுதி (affixes) எனப்படும். அவை முன்னால் சேர்ந்தால் முந்து உருபுகள் (prefixes) எனப்படும்; பின்னால் சேர்ந்தால் பிந்து உருபுகள் (suffixes) எனப்படும்.

இச் சேர்க்கை உருபுகள் இலக்கணச் சிறப்பை உணர்த்திப் பெயர், வினை அமைப்புகளுக்குக் காரணமாகின்றன.

தல், அல், சி, கை, மை, பு முதலியன தொழிற் பெயர் விகுதிகளாகும். 'ஆ' எதிர்மறை விகுதியாகும். இவ்விலக்கண விகுதிகளை எல்லாம் நன்னூல் விளக்கிக் கூறுகிறது.

7. சொல்லாக்கம்

(1) ஆக்க விகுதிகள்

அடிச்சொற்களோடு ஆக்க விகுதிகள் சேர்ந்து சொற்கள் அமைதல் உண்டு.

நில்+அம்—நிலம்
நிழ்+அல்—நிழல்

(2) இலக்கண விகுதிகள்

அடிச் சொற்களோடும் ஏனைய பகுதிகளோடும் இலக்கணச் சிறப்பு விகுதிகள் சேர்ந்து சொற்கள் அமைதல் உண்டு.

செய் + த்—ஆன்—செய்தான்—முற்றுவினை

செம் + மை—செம்மை—பண்புப் பெயர்

செய்+கை—செய்கை—தொழிற் பெயர்

கெடு + தி—கெடுதி— " } பிற மொழிப் பகுதி

செடு+பு—செடுபு— " (தெலுங்கு)

(3) உயிர்களில் மாற்றம்

அடிச் சொற்களிலுள்ள உயிர்களில் மாற்றம் ஏற்பட்டுப் புதிய சொற்கள் தோன்றுதலும் உண்டு.

பெயர்—பெசர் (கன்.); பேர்
தொகுப்பு —தோப்பு
தொகலு (கன்.)—தோல் (தமிழ்)
} ஆதி நீடல் வெறும் ஒலிநய மாறுதல்

(4) அடிச்சொற்கள் குறுகல்

யான், நீ, நீர், தான், யாம், நாம், தாம் என்பன வேற்றுமையில் முறையே என், நின், நும், தன், எம், நம், தம் எனக் குறுகும். எழுவாய்த் தொடரில் (அல்வழி) குறுகாது நிற்கும்.

தமிழ்		தெலுங்கு
யான்	என்	
நீ	நின்	நின்னு
நீர்	நும்	

எண்ணுப் பெயர்கள் அடையாக வரும்பொழுது குறுகியும் தனித்து வரும்பொழுது குறுகாதும் நிற்கும்.

ஒவ்வொன்று, ஒருபது — ஒன்று

இவ்விரண்டு, இருபது — இரண்டு

முப்பது	— மூன்று
நவ்வாலு	— நான்கு
அறுபது	— ஆறு
எழுபது	— ஏழு

சில எண்ணுப் பெயர்கள் அடையாக வருங்காலத்தும் குறுகாது நிற்றல் உண்டு.

நான்கு—நாற்பது
ஐந்து—ஐம்பது

(5) ஒலிநயம் பற்றிய மாறுதல்

சில சொற்கள் வருமொழி மெய் முதலாக இருந்தால் முதல் குறுகிய வடிவும் உயிர் முதலாக இருந்தால் குறுகா வடிவும் கொள்ளும்.

கரு	+	நிறம்	—கருநிறம்
அரு	+	நெறி	—அருநெறி
கொழு	+	மீன்	—கொழுமீன்
கரு	+	இருள்	—கார்இருள்

அரு + இடை —ஆரிடை
கொழு + இலை —கோழ்இலை

சில வினைப் பகுதிகள் குறில் நெடிதாகிப் பெயர்த்தன்மை மைதல் உண்டு. அவை இலக்கண மாறுதல் எனப்படும்.

நொய் —நோய்
கெடு —கேடு
மின் —மீன்
வெல் —வேல்

9. பெயர்ச் சொற்கள்

பெயர் காலம் காட்டாது; வேற்றுமை ஏற்கும். வினை வேற்றுமை ஏலாது; காலம் காட்டும். பெயர், வினைகளுக்கிடையே உள்ள வேற்றுமை இவையே.

பெயர், திணை பால் எண் உணர்த்தல்

. 1. திராவிடச் சொற்கள் உயர்திணை, அஃறிணை எனும் பாகுபாடுகளைப் பெற்று இயங்குகின்றன. தெலுங்கு இலக்கணம் இவற்றை முறையே மஹத், அமஹத் எனக் குறிப்பிடுகிறது. நன்னூல் மக்கள், தேவர், நரகர் உயர்திணை; ஏனைய உயிர் உள்ளனவும் இல்லனவும் அஃறிணை எனக் கூறும்.

. 2. திராவிடச் சொற்களில் பால் ஈறுகள் மூவிடப் பெயர்களிலும் வினைமுற்றுகளிலும் தெளிவாக உணரத் தக்க நிலையில் உள்ளன. பெயர்களுள் சிலவே பால் காட்டாதன. அவை பயனிலையாக முடியும் வினைகளைக் கொண்டு பால் உணரப் படும்.

. 3. பெயர்களில் இகரமும் ளகரமும் பெண்பால் விகுதிகளாக அமைய, வினைமுற்றில் ளகரஈறு மட்டும் இடம் பெற்றுள்ளது.

ஒருத்தி வந்தாள்
அவள் வந்தாள்

4. தெலுங்கில் இகர விகுதி பெயரிலும் வினையிலும் பெண்பாலை உணர்த்துவதோடு, ஒன்றன்பாலுக்கும் உரியதா வருகிறது.

அதி வச்சினதி—அவள் வந்தாள்; அது வந்தது எனப் பொருள்படும்.

இது மத்திய திராவிட மொழியின் இயல்பு எனக் கருதப் படுகிறது.

5. மலையாளத்தில் சுட்டுப் பெயர்கள் பால், எண் வேறு பாடுகளைக் காட்டும். எனினும், அவை கொள்ளும் வினைகள் பால் ஈறுகளைப் பெறுவதில்லை.

6. நீலகிரி வாழ் துதவர் மொழியில் சுட்டுப் பெயர்களில் ஒருமைப் பன்மை வேறுபாடுகள் இருக்கின்றன. ஆனால், ஆண், பெண், ஒன்றன்பால்களுக்குத் தனி உருபுகள் இல்லை.

அத்—(அவன், அவள், அது)
அதம்—(அவர்கள், அவை)

7. பிராஹுய் மொழியிலும் சுட்டுப் பெயர்களும் வினை முற்றுகளும் ஒருமைப் பன்மை வேறுபாடுகளை மட்டும் காட்டும் என்பர்[1]

8. ஏனைய திராவிட மொழிகள் அனைத்தும் சுட்டுகளிலும் முற்றுகளிலும் பால், எண் பாகுபாடுகளைப் பெற்றுள்ளன என்பர்.[2]

9. கொண்டா, கோந்தி, கோயா, கொலாமி, நயிகி, பர்ஜி, கதப முதலிய மத்திய திராவிட மொழிகளில் தெலுங் கைப் போலவே சுட்டுப் பெயர்களிலும் வினைமுற்றுகளிலும் பெண்பாலுக்கு எனத் தனி விகுதிகள் இல்லை. ஒன்றன் பாலுக்கும் பெண்பாலுக்கும் பொதுவாக ஒரே விகுதியைப் பெற்றுள்ளன.[3]

1. Dravidian Nouns S. V. Shanmugam பக். 3
2. D. N. பக். 3
3. D. N. பக். 5

10. தெலுங்கில் பிச்காலத்தில் ஆ அம்மா (அந்த அம்மாள்) என்ற சொல், ஆமெ எனத் திரிபு பெற்று வழங்கத் தொடங்கியது என்பர். அதுவே தற்காலத்தில் உயர் திணை ஒருமை வழக்காறாக உள்ளது.[1]

11. கள் ஈறு முதன் முதலில் அஃறிணையிலேயே இடம் பெற்றது; பிற்காலத்தில் உயர்திணையிலும் பன்மையை உணர்த்த இடம் பெற்றது.

பையன்கள்; மனிதர்கள்; மகளிர்கள்; மகள்கள்

12. னஃகான் ஒற்றுத் தமிழில் ஆண்பாலையும் ளகர ஒற்றும் இகரமும் பெண்பாலையும், ரகர ஒற்றும் அதனோடு சேரும் கள் ஈறும் பலர்பாலையும், கள் பலவின்பாலையும் உணர்த்துகின்றன.

13. கள் பலவின்பால் விகுதியாகும். தொல்காப்பியர் அது பலவறி சொல்லுக்கு வரும் என்று குறிப்பிட்டாரே தவிர வற்புறுத்தவில்லை. சங்க இலக்கியத்திலும் 'கள்' மிகவும் அருகியே வழங்கியது.

'மா விரைந்தனவே'—ஐங். 493/2

இதில் மா என்பது கள் பெறுமல் வந்துள்ளமையைக் காண்க.[2]

கள் பெற்று வந்தமைக்கு எடுத்துக்காட்டுகள்.[3]

மாண்புகள்	—தொல். 1098/4.
யாண்டுகள்	—புறம். 367/4.
அரண்கள்	—பதி. 44/13.
இயங்கள்	—பத். 10/277.

1. D. N. பக். 5
2. D. N. பக். 43
3. ,, பக். 43

14. னகர ஈறு ஆண்பால் ஈறு எனினும், அது பல்வேறு மாற்று வடிவங்களாக வருகின்றது. அவை அன், ஆன், வன், நன், ஞன், இயன், ஓன், அனன், அவன், த்தன், க்கன் எனக் குறிப்பிடுவர்.[1]

இவற்றுள் பெரும்பாலானவை சங்க இலக்கியத்தில் இடம் பெற்றுள்ளன. பிற பிற்காலத்தவை.

அன்—உழவன்	—குறு. 181/4.
வன்—சிறுவன்	—குறு. 45/4.
நன்—பொருநன்	—புறம். 78/6.
இயன்—கம்மியன்	—நற். 94/4.
ஓன்—கிழவோன்	—அக. 356/13.
அனன்—பார்ப்பனன்	—நற். 321/4.
அவன்—தென்னவன்	—அக. 138/7.

'த்தன்' என்பது சங்க கால நூல்களிலும்' பிற்கால நூலாகிய கலித்தொகையிலும் இடம் பெற்றுள்ளது.

ஒத்தன் —கலி. 60/9.

ஒத்தன்—ஒருத்தன் எனத் திரிந்து வழக்காறு பெற்றுள்ளது.

'க்கன்' என்பது இடைகாலத் தமிழில் வருகிறது.[3]

சிறுக்கன்—பெரியாழ்வார் திருமொழி 1. 4. 2

15. நன் என்பதன் திரிபே ஞன். நன் என்பது. முதன் முதலில் வினைவடிவத்தில் இடம் பெற்றுப் பின் பெயர் வடிவங்களிலும் புகுந்திருக்க வேண்டும்.

---

1. D. N. பக். 35
2. D. N. பக். 35
3. D. N. பக். 37

செய்யும் என்னும் வாய்பாட்டிற்கு நிகராகச் 'செய்யுந்' என்ற வடிவம் இருந்து மறைந்திருக்க வேண்டும். 'பொருந்' என்ற வடிவே அதற்குச் சான்றாகும்.

செய்யுந் என்பதனோடு அன் சேர்ந்து 'செய்யுநன், அறியுநன், பொருநன் முதலிய சொற்கள் அமைந்திருக்க வேண்டும். இவற்றுள் உகரம் கெட்ட வடிவே அறிநன், பொருநன் முதலியன.

இகர ஐகாரத்தைத் தொடருங்கால் நகரம், ஞகரம் ஆகும்.

அறிஞர், கலைஞர், இளைஞர், கிளைஞர், பகைஞர்

இக் காலத்தில் நகர இடைநிலையைப் புகுத்திப் பல சொற்களைப் படைத்து வழங்குகின்றனர்.

ஓட்டுநர், நடத்துநர், அனுப்புநர், விடுக்குநர், வழங்குநர்.

பொருநர் என்பது சங்ககால வழக்காகும். அவ்வடிவை மறக்காமல் போற்றி வருவது குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

16. மார் விகுதி வினையொடு வரும் எனத் தொல்காப்பியர் குறிப்பிட்டாலும், சங்க இலக்கியத்தில் அது பெயரிலும் இடம் பெற்றுள்ளமையைக் காணலாம்.*

ஐமார்	—புறம். 342/5,
தோழிமார்	—அகம். 15/9.
தாய்மார்	—சில. 24-10-1.
பாவைமார்	—சில. 29-26-5.

17. கள் விகுதி சங்க காலத்துப் பலர்பாலில் வந்துள்ளது.

வாளிகள்	—பரிபாடல் 9/54
நோன்பிகள்	—சில. 10/24; மணி. 31/5
பெண்கள்	—சில. 30/50

* D. N. பக். 42

கள் விகுதி பெரும்பாலும் அர் விகுதியை அடுத்து வருதல் உண்டு.[1]

அரசர்கள்	—கலி. 25/3
சிறுமியர்கள்	—சில. 17-28-2
வானோர்கள்	—சில. 24-23-4
பூரியர்கள்	—திருக்குறள் 919

கள் ஈறு உயர்திணைக்கு வருதல் பிற்கால வழக்கு. பரிபாடலும் கலித்தொகையும் சங்க இலக்கியத்துள் காலத்தால் பிற்பட்டவை.

18. ளகர, இகர ஈறுகளின் மாற்று வடிவங்களும் சங்க காலத்தில் வழங்கின.

அள்—மகள்	தொல். 648
இ—தோழி	தொல். 982; நற். 46/4
த்தி—புலைத்தி	குறு. 330/1
ச்சி—ஆய்ச்சி	கலி. 106/32; சில. 15/206
வி—மனைவி	தொல். 1097/7
மி—சிறுமி	கலி. 65/10; சில. 17-28-2
ஆள்—மனையாள்	சில. 9-7
ஒள்—கிழவோள்	தொல். 1093/43
ஆட்டி—அயலிலாட்டி	குறு. 201/1
அனி—பார்ப்பனி	சில. 30/69; மணி. 13/5
ஐ—பரத்தை	தொல். 987; அகம். 25/12

ஆத்தி—வண்ணாத்தி தட்டாத்தி

இவை பிற்காலத்து வழக்குகள்.[2]

19. து ஒன்றன் பாலுக்குரிய விகுதியாகும்.

அது, இது, உது, யாது

1. D. N. பக். 42 2. D. N. பக். 38-39

ஒன்று, இரண்டு, மூன்று, ஐந்து, ஆறு, எட்டு, பத்து எனும் சொற்களின் ஈறுகளில் வரும் து, டு, று எனும் மூன்று விகுதிகளுள், து என்பது ஆக்க விகுதியாகும். ஏனையயிரண்டும் அதன் மாற்று வடிவங்களாகும். இரண்டு முதலாய எண்கள் ஒன்றன்பாலுக்குரிய விகுதியைப் பெற்றமைக்குக் காரணம், எண்களைத் தொகைப்படுத்தி ஒன்றாகக் காணும் உணர்வே யாகும்.

மரது போன்ற வடிவம் ஒன்றன்பாலைக் குறித்திருக்கலாம். அதுவே வேற்றுமையில் 'மரத்துக் கிளை' என இரட்டித்திருக் கலாம்; பின்னால் 'அத்து' என்பதைச் சாரியையாகக் கொண் டிருக்கலாம்.[1]

20. மலையாளத்தில் னகரமே ஆண்பால் விகுதியாகும். அன், ஆன், க்கன் என்பன அதன் மாற்று வடிவங்களாகும்.

தச்சன், தட்டான். செறுக்கன்.

இ, அள் என்பன பெண்பால் விகுதிகளாகும்.

மகள், ஒருத்தி, கொறத்தி, வேளாத்தி, வண்ணாத்தி.[2]

அர், ஆர், வர், மார், கள் முதலியன பலர்பால் விகுதி களாக வழங்குகின்றன.

கள் என்பதே பலவின்பால் விகுதியாகும்.[3]

21. கன்னடத்தில் அன், அம் என்பன ஆண்பால் விகுதி களாகும். அள், இ, தி என்பன பெண்பால் விகுதிகளாகும். அர், வர், கள் என்பன பலர்பால் விகுதிகளாகும். கள் (gal) பலவின்பால் விகுதியாகும்.

22. பழந்தெலுங்கில் அன் என்பதனோடு ண்டு என்ற வடிவ வம் ஆண்பால் விகுதியாக வழங்கியது.

---

1. தெ. பொ. மீ.
2. D. N. பக். 44.
3. D. N. பக் 45.

மகன்று (மகன்)

ன்று என்பது ண்டு என்றும் வழங்குதல் உண்டு.

தமுண்டு (தம்பி)

தனயுண்டு (அண்ணன்)

ஆலு என்பது பெண்பால் விகுதி. இஃது இடைக்காலத்து வழக்கு என்பர்.

மனமராலு (பெயர்த்தி)

கோடலு (மருமகள்)

செலியலு (தங்கை)

ரகரமும் கள்ளும் பலர்பால் விகுதிகளாகும். ரகரத்தோடு உகரம் ஒலித்துணையாகச் சேரும்.

உல், ளு, லு என்பன பலவின்பால் விகுதிகளாம்*

* D. N. பக். 62

10. எண்ணுப் பெயர்கள்

எண்ணுப் பெயர்களின் அடிச்சொற்கள் தனித்து நிற்கும் பொழுது ஒருவகை வடிவும், அடையாகுங்கால் மற்றொரு வடிவும் பெறுகின்றன.

தமிழைப் பொறுத்த வரையில் பொதுவாக அடையாகும் பொழுது குறுகிய வடிவும், தனித்து வரும் பொழுது நெடில் வடிவும் பெறுகின்றன.

1. ஒன்று

ஒன்று என்பது தமிழ் எண்ணுப் பெயராகும். அது பேச்சு வழக்கில் ஒண்ணு எனத் திரிந்து வழங்குகிறது.

ஒரு, ஓர் என்பன அடையாகும் வடிவங்கள். இவ்வடிவங்களே பாலீறு ஏற்று உயர்திணைப் பெயர்களாக முடியும்.

ஒருவன், ஒருத்தி, ஒருவர்.

ஒவ்வொன்று, ஒன்பது என்பவற்றுள் ஒவ்வும் ஒன்னும் அடைகளாகும்.

ஒற்றை என்னும் வடிவத்தை நோக்க ஒன்று என்பதே தொல்வடிவம் என்பது புலனாகும். இதனுள் 'று' என்பதை ஆக்க விகுதியாகக் கொண்டால், ஒன் என்பதே அடிச்சொல் லாகும்.

தமிழில் 'ஒண்டிக்கு ஒண்டி' என்ற சொல் வழக்குத் தெலுங்கை ஒட்டி அமைந்திருக்கலாம்;

மலையாளம் : ஒன்று என்பதன் திரிந்த வடிவமாகிய ஒன்னு என்பதே மலையாளத்தில் எண்ணுப் பெயராக வழங்குகிறது. ஒரு ஓர் என்பன அடை வடிவங்களாகும்.

தெலுங்கு ; 'ஒகடி' என்பது ஒன்றை உணர்த்தும். அடையாகுங்கால் ஒக என அமையும். பால் விகுதி ஏற்கும் வடிவும் இதுவே யாகும்.

ஒகடு (ஒருவன்); ஒகதி (ஒருத்தி)

ஒண்டு என்ற வடிவமும் உண்டு. இஃது அடையாகுங்கால் ஒண்டி என முடிகிறது.

'ஒண்டி வாடு'

கன்னடம் : ஒன்று என்றே கன்னடத்தில் வழங்குகிறது. ஒருவன் என்னும் தமிழ் வடிவுக்கு நிகராக ஒர்பது, ஒப்பது எனவும், ஒருத்தி என்பதற்கு நிகராக ஒப்பளு எனவும் வழங்குகின்றனர்.

திராவிட மொழிகளில் ஒரு, ஓர், ஒன், ஒக, ஒண், ஒற் என்பன அடிச் சொற்களாக விளங்குகின்றன. தமிழில் அடையாகுங்கால் ஒரு, ஓர் என மாற்று வடிவங்கள் அமைகின்றன. உயிர்முன் ஓர் என்பதும் மெய்ம்முன் ஒரு என்பதும் அடைக்ளாக அமைகின்றன.

ஓர் உயிர்; ஒரு நாள்

சங்க காலத்தில் இவ்வாறு சூழ்நிலைக்கேற்ப மாறி வர வேண்டும் என்ற நியதி இல்லை.

ஓர் தேர் — அகம். 7/11

ஓர் பெருங்களிறு — புறம். 140/8

ஓர் என்பது மெய் வருமிடத்தும் வந்துள்ளது.[1]

ஒன்று என்பதன் அடிச் சொல் 'ஒன்' என்பதேயாகும். அஃதப்படியே அடையில் இடம் பெறுமல் ஒரு, ஓர் எனத் திரிந்தது.

---

1. D. N. பக். 144.

இரண்டு என்பதன் அடை வடிவங்களான இரு, ஈர் என்பவற்றை ஒட்டி ஒப்புமை ஆக்க நயத்தால் ஒரு ஓர் என்ற வடிவங்கள் அமைந்திருக்க வேண்டும் என்ற கருத்தைப் பேராசிரியர் எமனேவ் வெளியிட்டுள்ளார்.[1]

2. இரண்டு

தமிழ்—இரண்டு; மலையாளம்—இரண்டு; கன்னடம்—எரடு; தெலுங்கு—ரெண்டு.

அடைவடிவங்கள் ; தமிழ் — இர், ஈர்; கன்னடம், தெலுங்கு—இ

ஓரினமாதல் விதிப்படி இர் என்பதன் ரகரம் கெட்ட வடிவங்கள் ஏனைய திராவிட மொழிகளில் வழங்குகின்றன.

தமிழ்	கன்னடம்	தெலுங்கு
இருவர்	இப்பரு	இத்தரு
இருபது	இப்பத்து	இரவை

அடையாகுங்கால் உயிர்முன் நீட்சியும், மெய்ம்முன் குறுக்கமும் ஆகின்றன. இம் மாற்றங்கள் திராவிட மொழி அனைத்திலும் பொதுவாகக் காணப்படுகின்றன.

தமிழ் : ஈரறிவு; இருமருந்து
மலை : ஈரார்; இருநாழி
கன் : ஈரேளு; இர்க்குள (இரு குடும்பங்கள்)
தெலு : ஈரேனு (ஈரைந்து); இருவுட்டி (இரு புட்டி அளவு)[2]

இரு என்ற பகுதியிலிருந்து தமிழில் இருவர், இருமை, முதலிய சொற்கள் தோன்றியுள்ளன.

'இரண்' என்பது இரண்டு என்பதன் அடிச்சொல்லாக இருக்கலாம். 'இரணை' என்பது நற்றிணையில் இரண்டைக்

---

1. Emeneau papers—பக். 141.
2. D. N. பக். 147.

குறிக்கிறது. (நற். 123/10) இதனைச் சுட்டி இரண் என்பதே இரண்டுக்குத் தெளிவான அடிச்சொல் என்பர்.[1]

அடையாகுங்கால் ஒன்று ஒற்றை என்றாவது போல, இரண்டு என்பது இரட்டை என்றாகிறது.

3. மூன்று

தமிழ்—மூன்று; மலையாளம்—மூந்து; கன்னடம்—மூறு; தெலுங்கு—மூடு

மூ, மு என்பன பெயரடைகளாகும். மூன்று மனிதர் எனவும் வழங்கும்.

தமிழ்	மலையாளம்	கன்னடம்	தெலுங்கு
மூவர்	மூவர்	மூவரு	முக்கரு
முப்பது	முப்பது	மூவத்து	முப்பை
முந்நூறு	முந்நூறு	முந்நூறு	முந்நூறு

மூ. மு என்பவற்றை மூன்று என்பதன் அடிச் சொற்களாகக் கொள்ளலாம்.

று, டு, னு, து முதலியன ஆக்க விகுதிகளாகும். 'ன்' என்பது றகரத்தை அடுத்து வரும் மெல்லொலியாகும்.

மூ என்ற அடிச் சொல்லிலிருந்து மூவர், மும்மை என்ற வடிவங்கள் அமைந்துள்ளன.

அடையாக வரும் பொழுது நெடில் வடிவமும், குறில் வடிவமும் இடம்பெறுகின்றன.

மூவேந்தர்; முப்பழம்

நுப்பது என்ற சொல் வழக்கு, நாற்பதை ஒட்டி அமைந்திருக்கலாம்.[2]

1. D. N. பக். 145.
2. D. N. பக். 151

4. நான்கு

தமிழ்—நான்கு, நால்கு, நாலு; மலையாளம்—நால்; கன்னடம்—நான்கு; தெலுங்கு—நாலுகு.

பெயரடைகளாக வருங்காலத்துத் தமிழில் நன்னான்கு, நாற்பது எனவும், மலையாளத்தில் நால்பது எனவும், கன்னடத்தில் நால்வத்து (40), நானூறு (400) எனவும், தெலுங்கில் நலுபை (40), நானூறு (400) எனவும் வழங்குகின்றன.

இதனால், நல், நால், நான் என்பன அடிச்சொற்கள் எனத் தெரியவருகிறது. நால் என்பது நாற் எனத் திரிதல் இயற்கை.

அடைகளில் குறுகிய வடிவமும் நெடில் வடிவமும் வருகின்றன.

நன்னான்கு, நாற்பது

நால், நான் எனும் இரண்டு வடிவங்களும் தொல்காப்பியத்தில் காணப்படுகின்றன. நால்கு என்பதே நான்கு எனத் திரிந்திருக்க வேண்டும்.

நால்கு என்னும் எண்ணுக்கு முன்னும் பின்னும் இரண்டு, மூன்று, ஐந்து எனும் எண்களுள் மெல்லினத்தை அடுத்துச் சொல்லாக்க விகுதிகள் இயங்குவதால், அவ் வெண்களின் ஒப்புமை நயத்தால் நால்கு என்பதும் நான்கு எனத் திரிபு பெற்றிருக்க வேண்டும்.[1] நன்னான்கு, நானான்கு, நானூறு முதலிய சொல் வழக்குகளும் இம் மாற்றத்திற்குக் காரணமாக இருக்கலாம்.

சங்க இலக்கியத்தில் நால்கு என்னும் சொல் வழக்குக் காணப்படுகிறது. அகம். 104-6; பத். 4-489; தொல்—442 [2]

5. ஐந்து

தமிழ்—ஐந்து; மலையாளம்—அஞ்ஞு, ஐந்து; கன்னடம்—அய்து; தெலுங்கு—அய்து, ஏனு.

---

1. D. N. பக். 152
2. D. N. பக். 151

பதஹேனு (15) என்னும் தெலுங்குச் சொல்லில் ஏனு என்பது ஐந்தைக் குறிக்கும்.

பெயரடைகள் : தமிழ்—ஐம்பது; மலையாளம்—ஐம்பது. கன்னடம்—ஐவத்து; தெலுங்கு ஏபை, எனபை, ஐந்நூறு.

இரட்டிப்பில் ஐயைந்து என வரும். அய், ஏ, ஏனு முதலியன அடிச் சொற்களாகும். கால்டுவெல் அய் என்பதே அடிச் சொல் என்பர். ஏனைய மத்திய திராவிட மொழி களோடு ஒப்பிட்டுக் காணுங்கால் ஒரு புது உண்மை புலனாகிறது. மத்திய திராவிட மொழிகளில் சகரம் கெடாத வடிவங்கள் உள்ளன, கோந்தி மொழியில் Saiyuung என்ற வடிவும், கூவி மொழியில் 'Singi' என்ற வடிவமும் வழங்கு கின்றன. இவற்றை நோக்கச் 'சய்ம்' என்பதே பழைய வடிவ மாக இருந்திருக்க வேண்டும் எனக் கொள்ளலாம்.[1]

6. ஆறு

தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு எனும் நான்கு மொழிகளிலும் ஆறு என்ற சொல் வழக்கே உள்ளது. அறு ஆறு என்பன அடிச்சொற்கள்.

அறுவர், அறுபது, அறுநூறு முதலியன பெயர் அடைகள். ஆறுபேர் என நெடில் வடிவமும் அடையாக வரும்.

'சாறு' என்பதே ஆறு என்பதன் பழைய வடிவாக இருந் திருக்க வேண்டும். மத்திய திராவிட மொழியாகிய கோந்தி மொழியில் 'சாருங்க்' (Saarung) என்ற வடிவம் வழங்குகிறது.

7. ஏழு

தமிழ் — ஏழு; மலையாளம் — ஏழு; கன்னடம்—ஏழு; தெலுங்கு—ஏடு.

ஏழ் என்பதே தொல்காப்பியர் சுட்டும் வடிவமாகும். இஃது ஏழு எனவும் வழங்குகிறது.

---

1. D. N. பக். 151

நெடில் வடிவமும் குறில் வடிவமும் அடையாக வருகின்றன.

ஏழுநூறு; எழுபது

தமிழ் ழகரம் கன்னடத்தில் ளகரமாகவும், தெலுங்கில் டகரமாகவும் வழங்குதல் இயல்பு.

கோழி, கோளி, கோடி

ஏழ் என்பதே தொல் வடிவமாக இருத்தல் வேண்டும். எழு என்பது அதன் குறுக்கல் வடிவாகும்.

தெலுங்கில் டெப்பை என்பது எழுபதைக் குறிக்கும்.

எழுபை—எடுபை—டெப்பை.

உயிர்ஒலி இடம் மாறி நின்றது.

8. எட்டு

தமிழிலும் மலையாளத்திலும்—எட்டு; கன்னடம்—எண்டு; தெலுங்கு—எனிமிதி.

தமிழில் எண்பது எனவும், தெலுங்கில் எனபை எனவும், கன்னடத்தில் எண்டு நூறு எனவும், மலையாளத்தில் எம்பது எனவும் அடை வடிவங்களாக வழங்குகின்றன. யாண்டும் குறில் வடிவமே வழங்குவதால் எண் என்பதே அடிச்சொல் லாகும்.

தமிழ் ணகரம் தெலுங்கில் னகரமாக ஒலித்தல் மரபு.

மண்—மன்னு; கண்—கன்னு

இம் மரபால் எனிமிதி என்ற வடிவம் வழங்குகிறது.

எனிமிதி என்பது எட்டு பத்து என்பதன் கூட்டு வடிவ மாகும். மிதி என்பது தெலுங்கில் பத்தை உணர்த்தும். பத்தை அடுத்து நிற்கும் ஒன்பது என்பதற்கு நிகராகத் தெலுங் கில் தொம்மிதி என்ற சொல் வழங்குகிறது. அதன் ஒப்புமை

நயத்தால் எட்டு என்பது எனிமிதி என்று வழங்கத் தொடங்கிற்று.

எண் என்பதே எட்டின் பழந்திராவிட அடிச்சொல்லாகும்.

பழந்தமிழில் இவ் வடிச்சொல்லே அடைமொழியில் இடம் பெற்றுள்ளது,

[1]எண்ணுள் (குறு. 129/3); எண்தேர் (புற. 87/3)

9. ஒன்பது

ஒன்பது என்பது கூட்டுச் சொல்லாகும். பத்தை அடுத்து நிற்பதால் இதுவும் பத்து என்னும் அடையால் குறிக்கப் பட்டுள்ளது. 'தொண்டு பத்து என்பது குறுகி ஒன்பது என்றாயிற்று. பழந்தமிழில் இஃது ஒன்பது, ஒன்பான், ஒன்பதிற்று என வழங்கியது.

தெலுங்கில் தொம்மிதி என்ற வழக்குள்ளது. ஒன்பது நூறு என்பது தெலுங்கில் தொம்மநூறு என வழங்குகிறது.

தொண்ணூறு, தொள்ளாயிரம் என்னும் தமிழ்ச்சொல் வழக்குகளிலும் தொண், தொள் என்பன ஒன்பதைக் குறிக்கும் சொற்களாகும். இவற்றை ஒப்பிட்டு நோக்கத் தொண்டு என்னும் பழந்தமிழ்ச் சொல்லின் முதல் நிலையே தொண், தொள் என்பனவாகும். அதனால், தொண்டு என்பதே ஒன்பதைக் குறித்த பழஞ்சொல் என்பதும் தெரிகிறது.

பத்து என்னும் பேரெண்ணை வைத்து 'தொண்டுபத்து' என்னும் சொல் வழக்கு ஏற்பட்டிருக்க வேண்டும். அவ்வாறே தொண்ணூறு, தொள்ளாயிரம் என்னும் வழக்குகளும் ஏற்பட்டிருக்கவேண்டும்.

தொம்மிது, தொம்ம நூறு என்னும் தெலுங்கு சொற்களில் தகரம் கெடாத நிலை காணப்படுகிறது. தகரம் கெட்ட நிலையில் தொண்பது என்பது ஒண்பது என்றே வழங்க வேண்டும்.

---

1. D. N. பக். 161

ஒண் என்பது ஒன்று என் பதன் பகுதியாகிய ஒன்னும். ஒண் என்பது ஒன்றுஎனப் பிறழ உணரப்பட்டுக் கூட்டு வடிவத்தில் ஒன்பது என வழங்கியிருக்க வேண்டும் எனக் குறிப்பிடுவர் பேராசியர் எமனேவ்.[1]

மலேயாளத்தில் ஒம்பது என்ற வழக்குள்ளது. பழைய வடிவம் ஒன்பது என்பதாகும். தமிழ்ப் பேச்சு வழக்கிலும் ஒம்பது என்று வழங்குகிறது.

கன்னடத்தில் ஒம்பத்து என்ற வழக்கு உள்ளது. அடை யின்கண் ஒம்பை நூறு என வழங்குகிறது.

தெலுங்கில் தொம்பை என்பது தொண்ணூற்றைக் குறிக்கும்; ஒன்பது நூற்றைக் குறிக்கத் தொம்ம நூறு என்ற சொல் வழங்குகிறது.

10. பத்து

பத்து, பஃது, பது, பன், பான், பதின் என்பன பத்தைக் குறிக்கும் பல்வேறு தமிழ் வடிவங்களாகும்.

பதின் என்பதன் தி கெட்ட வடிவமே பன் என்பது. பதினென்கு, பன்னிரண்டு, பதின்மூன்று என்ற வடிவங்களில் பன்னிரண்டு என்பது மட்டும் பதின் இரண்டு என வழங்காமல் பன்னிரண்டு என வழங்குகிறது. ஏனைய இரண்டும் பதின் என்ற வடிவமே பெற்றுள்ளன. ஆனால், பன் என்பது பதின் என்பதன் திரிபே எனக் கொள்வர்,

பஃது என்பதற்குப் பவ் என்பதே அடிச்சொல்லாகும். அவ்+து—அஃது ஆதலைப் போலப் பவ்+து—பஃது என்றாகி இருக்கலாம்.

பவ்+து என்பது பஃது எனவும், பத்து எனவும் இருவகை வடிவங்கள் பெற்றன.

கல்+தீது—கஃறீது; கற்றீது என இருவகை வடிவங்கள் அமைதல் காண்க.

---

1. D. N. பக். 166

மலையாளத்தில் பத்து எனவும், கன்னடத்தில் பத்து எனவும், தெலுங்கில் பதி எனவும் வழங்குகின்றன. கன்னடத்தில் பத்து என்பது ஹத்து என மாறியுள்ளது. தெலுங்கு பதி என்பதனைப் பதின் என்பதன் னகரம் கெட்ட வடிவமாகக் கொள்ளலாம்.

மிதி என்பது பதி என்பதன் மாற்று வடிவமாகும்.

பேரெண்கள்

நூறு என்னும் சொல் வழக்கே தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு மொழிகளில் வழங்குகின்றது. அடை வடிவம் 'நூற்' என்பதாகும். 'வந்த' என்னும் தனிச் சொல் தெலுங்கில் உள்ளது.

ஆயிரம் என்னும் தமிழ்ச்சொல் சாயிரம் என்பதன் திரிபாகும். சாயிரம் என்பது 'ஸஹஸ்ர' என்னும் வடமொழியிலிருந்து ஏற்கப்பட்ட சொல்லாகும்.

தெலுங்கில் 'வெய்யி' என்ற தனிச்சொல் வழங்குகிறது. அதன் பன்மை வடிவம் 'வேலு' என்பதாகும். இது திராவிடச் சொல்லாக இருக்கலாம் எனக் கருதப்பட்டாலும், இது வேறு எந்தத் திராவிட மொழியிலும் வழங்கவில்லை என்பர்.

மேலும் ஆம்பல், தாமரை, வெள்ளம் என்னும் பேரெண்களைத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.

எண் முறைப் பெயர்கள்

ஒன்று, இரண்டு, மூன்று முதலியன எண்ணுப் பெயர்களாம்.

ஒரு, ஓர்; இரு, ஈர்; மு, மூ முதலியன எண் அடைப் பெயர்களாம். ஒன்றாம், இரண்டாம், மூன்றாம் முதலியன எண் முறைப் பெயர்களாம். இவற்றுள் 'ஆம்' என்பது ஈற்று

நிலே. இஃது ஆகும் என்பதன் திரிபாகும். ஆம் என்பதற்கு மாறாக ஆவது என்பதும் எண்முறைப் பெயராகிறது.

மலேயாளத்தில் ஆம் எனவும், கன்னடத்தில் அனெய், அனெ எனவும், தெலுங்கில் அகுன், ஓ எனவும் வழங்கு கின்றன. தெலுங்கில் அகுன் என்பது பழைய வடிவமாகும். ஓ என்பதே தற்கால வழக்காகும்.

தமிழில் ஓராவது என்னும் வழக்கோடு முதல் என்ற வழக்கும் உள்ளது.[1]

---

1. D. N. பக். 174

11. மூவிடப் பெயர்கள்

1. மாற்றுப் பெயர்களுள் மூவிடப் பெயரும் ஒன்று. தன்மை, முன்னிலை, படர்க்கை என்பன மூவிடங்களாகும். திராவிட மொழிகளில் மூவிடப் பெயர்களுக்குள் பெரிதும் ஒற்றுமை நிலவுகிறது.

யான் வந்தேன்—தன்மை
நீ வந்தாய்—முன்னிலை
தான் வந்தான்—படர்க்கை

சுட்டுப் பெயர்கள் படர்க்கை இடத்தில் வருகின்றன.

அவர் வந்தார்—படர்க்கை

2. பொதுப் பெயர்களினின்று மூவிடப் பெயர்கள் கீழ்வரும் வகையில் அமைப்பால் வேறுபடுவதைக் காட்டுவர். மூவிடப் பெயர்கள் ஆறும் வேற்றுமைப் பொருளில் தம் முன் அடையைப் பெறு எனக் காட்டுவர்.

மகனுடைய வீடு—பொதுப் பெயர்
மகனுடைய நான்—மூவிடப் பெயர்

'மகனுடைய நான்' என வராது. இது மூவிடப் பெயர்களின் தனி அமைப்பாகும்.[1]

மூவிடப் பெயர்கள் ஒருமைப் பன்மைகளோடு திணை, பால்களையும் சுட்டும். எழுவாயாக நிற்குங்காலத்து ஒரு

---

1. D. N. பக். 175

வடிவாகவும் அடையாகுங் காலத்து வேறோர் வடிவாகவும் நிற்கும் எண்ணுப் பெயர்களைப் போல மூவிடப் பெயர்களும் இருவகை வடிவங்களைப் பெறும்.

யான்-என்; யாம்-எம்; நாம்-நம்.
நீ-நின்; நீர்-நும்.
தான்-தன்; தாம்-தம்.

ஏனைய திராவிட மொழிகளிலும் இவ்விருவகை வடிவங்கள் உள்ளன.

1. தன்மை ஒருமை

1. மலையாளத்தில் நான், ஞான் என வழங்குகின்றன கன்னடத்தில் பழைய வடிவம் 'ஆன்' என்பதாகும், 10ஆம் நூற்றாண்டுக்குப் பிறகே நான் என்பது வழங்கியது என்பர்.[1] என், என. நன் என்பன அம்மொழியில் குறுகிய வடிவங்களாகும்.

ஏனு, நேனு என்பன தெலுங்கில் எழுவாய் வடிவங்களாகும்; நன், நா, என்பன உருபேற்கத் திரிந்த வடிவங்களாகும்.

2. யான் என்பதே பழந்திராவிட வடிவமாக இருக்க வேண்டும். அதன் குறுகிய வடிவம் 'யன்' என்பது. யகரம் மொழி முதற்கண் வாராமையின், என் என உருபு ஏற்கத் திரிந்தது.[2]

3. தென்திராவிட மொழிகளிலும் வட திராவிட மொழிகளிலும் யான் என்பது என் என வழங்க, மத்திய திராவிட மொழியில் அன் என்றே வழங்கியது. இந்த அன் என்பதே நா எனத் திரிந்து இருக்கவேண்டும். அனக்கு என்பது தெலுங்கில் நாக்கு என இடம் பெயர்ந்து வழங்குகிறது. நா என்பதே

1. D. N. பக். 177
2. D. N. பக். 179

ஏனைய வேற்றுமைகளை ஏற்கும் வடிவாக அமைந்திருக்க வேண்டும்.

4. நான் என்பது தமிழில் பிற்காலத்தில் அமைந்த வடிவாகும். இது முதன் முதலில் பரிபாடலில் வழங்கிற்று என்பர். (பரி 6/87). சிலப்பதிகாரத்திலும் மணிமேகலை யிலும் இடம் பெற்றுள்ளது.

'முந்நா லாண்டின் முதிர்கனி நான்ஈங்கு'—மணி. 27/45

'நல்விருந் தாயினுன் நான்அவன் தன்மகள்'—சிலப். 29/10

2. தன்மைப் பன்மை

யாங்கள், நாங்கள் என்பன தமிழில் வழங்கும் தன்மைப் பன்மை வடிவங்களாகும். எம், எங்கள் என்பன உருபேற்கத் திரிந்த வடிவங்களாகும்.

மலையாளத்தில் ஞாங்கள் என்பது எழுவாய் வடிவமாம்; எங்ஙள், ஞங்ஙள் என்பன உருபு ஏற்கத் திரிந்த வடிவங் களாகும்.

கன்னடத்தில் ஆம் என்பது பன்மை வடிவமாகும். எம் என்பது உருபேற்கத் திரிந்த வடிவமாகும்.

தெலுங்கில் ஏமு, நேமு, மேமு என்பன எழுவாய் வடிவங் களாகும். மா, மம் என்பன உருபு ஏற்கத் திரிந்த வடிவங் களாகும்.

1. யாம் என்பது யம் என ஆகாமல் எம் என ஆனது மொழி முதற்கண் யகரம் அகரத்தோடு வாராது எனும் நியதி பற்றியதே யாகும். மத்திய திராவிட மொழிகளில் அம் என்பதே தன்மைப் பன்மை வடிவாக வழங்குகிறது. அதன் ஒலியிட மாற்றுப் பெயர் வடிவே தெலுங்கில் மா என வழங்குகிறது.

2. தமிழிலும், மலையாளத்திலும், கன்னடத்திலும் உளப்பாட்டுத் தன்மைப் பன்மை வடிவங்களாக நாம், நம்

1. D. N. பக். 175

என வழங்கத் தெலுங்கில் மனமு, மன என வழங்குகின்றது. யாம் என்பது ஞாம் எனத் திரிந்து, பின்னர் நாம் என்றாகி யிருக்க வேண்டும். யமன் ஞமன் எனவும் நமன் எனவும் ஆதல் காண்க.

'யாங்கள்' என்னும் வடிவம் முதன் முதலில் சிலப்பதி காரத்தில் இடம் பெறுகிறது.[1]

'யாங்களும் நீள்நெறிப் படர்குதும்'

3. முன்னிலை ஒருமை

1. நீ என்பது எழுவாய் வடிவம்; நின் என்பது உருபு ஏற்கத் திரிந்த வடிவம்; உன் என்ற வடிவும் உள்ளது. நீ என்பதே பழைய வடிவாகும். நின் என்பதில் னகரம் இருத்த லால் அதன் நீள் வடிவம் நீன் என்றே இருந்திருக்க வேண்டும். கன்னடத்தில் நீன் என்ற வடிவம் உள்ளது.

2. மலையாளத்திலும் நீ, நின் என்னும் வடிவங்களே உள்ளன.

கன்னடத்தில் நீன் நீனு என்பன எழுவாய் வடிவங்களாம். நின் என்பது உருபு ஏற்கத் திரிந்த வடிவாகும்.

தெலுங்கில் ஈவு நீவு என்பன எழுவாய் வடிவங்களாம். நின், நீ என்பன உருபு ஏற்கத் திரிந்த வடிவங்களாகும்.

4. முன்னிலைப் பன்மை

1. தமிழில் நீம், நீயிர் என்னும் வடிவங்கள் முன்னிலைப் பன்மை வடிவங்களாம். நீம் என்ற சொல் வழக்குச் சிந்தாமணியில் காணப்படுகிறது. —சிந் 1932/3

நீங்கள் என்பது பல்லவர் காலத்து வழக்காகும்.

"பிணமுடை உடலுக்காகப் பித்தராய்த் திரிந்து நீங்கள்"
—அப்பர் தேவாரம் 4/45/7

---

1. D. N. பக். 185

2. நீவிர் என்பதை நன்னூல் குறிப்பிடுகிறது. நீர் என்பது சங்க இலக்கியத்தில் பயின்று வருகிறது. நீம் என்பதன் குறுக்கல் வடிவம் நிம் என இருந்திருக்க வேண்டும். மகரத்தின் சார்பால் இதழ் குவி உயிராகிய உகரத்தைப் பெற்று நும் எனத் திரிந்தது என்றும், நிம் என்பதே பழைய வடிவமாக இருந்திருக்க வேண்டும் என்றும் கூறுவர்.

3. நீயிர் என்பதன் திரிபே நீர் ஆகும். நீன் என்ற ஒருமை வடிவோடு; முன்னிலை வினைமுற்றின்கண் உள்ள பால் ஈறாகிய 'இர்' சேர்ந்து, நீயிர் என மற்றோர் வடிவம் தோன்றி யிருக்கவேண்டும்.

4. நீம் என்பதன் மகரம் கெட்டு வகரம் பெற்று நீவிர் என்ற வடிவம் பிற்காலத்தில் தோன்றியிருக்க வேண்டும் எனக் கருதப்படுகிறது.

5. நும் என்பதன் நகரம் கெட்ட வடிவம் உம் என்பது. அது பிற்காலத்து வழக்காகும். நும், உம் என்பவற்றை ஒட்டி நுன், உன் என்ற இருவடிவங்கள் பல்லவர் காலத்தில் வழக்காறு பெற்றன.

6. கன்னடத்தில் நீவு என்ற சொல்வழக்கு இருத்தலை நோக்க நீம் என்பது நீவ் எனத் திரிந்து, 'இர்' பெற்று நீவிர் என வழங்கி இருக்கலாம் என்பர்.[1]

5. படர்க்கைப் பெய

1. தான், தாம் எ.. பன படர்க்கைப் பெயர்களாகும். இக்காலத்தில் படர்க்கைப் பெயர்களாக வழங்குவதில்லை; தற்சுட்டுப் பெயர்களாகவும், இடைச் சொற்களாகவும் வழங்கு கின்றன. சுட்டுப் பெயர்களாகிய அவன், அவள், அவர், அவை, இவை, இவர் முதலியன சேய்மைச் சுட்டையும் அண்மைச் சுட்டையும் உணர்த்துவதோடு, பால் ஈறுகள்

1. D. N. பக். 191

பெற்ற படர்க்கைப் பெயர்களாகிப் பாலோடு திணையையும் சுட்டுதலின் இவை செல்வாக்குப் பெற்றுவிட்டன.

நான் தான் வந்தேன் — தற்சுட்டுப் பெயர்

செய்யத் தான் வந்தேன்— இடைச்சொல்

2. சங்க காலத்தில் அவை படர்க்கை இடப்பெயர் களாக வழங்கியமைக்குக் கீழ்வரும் சான்றுகளைக் காட்டுவர்.[1]

'தானே கள்வன்'—குறு 25/11

'அறியான் தானும்'—குறு 74/3

'தான் தண்ணியள்'—குறு 84/5

3. யாய், ஞாய், எந்தை என்பனவும் நுந்தை என்பதும், தந்தை என்பதும், முறையே தன்மை, முன்னிலை படர்க்கைக்கு உரியனவாகும்.

தம்பி, தங்கை, தமக்கை, தாய், தந்தை முதலியன முறையை உணர்த்துவன. அவை மூவிடத்திற்கும் உரிய பொதுச் சொற்களாகிவிட்டன. அதனால், என் தம்பி, உன் தம்பி, அவன் தம்பி என அடை கொடுத்துக் கூறும் மரபு ஏற்பட்டுள்ளது.

4. பழங்காலத்தில் நாம், யாம், நும், தாம் எனும் மூவிடப் பெயர்களைக் கொண்டு முறைப் பெயர்களை வழங் கினர். நம்பி, எம்பி, உம்பி, தம்பி என்ற சொற்கள் இவ்வாறு அமைந்தவையே. இந் நுட்பத்தையும், சிறப்பை யும், அமைப்பையும் கம்பர் உணர்ந்துள்ளார். தக்க இடத் தில் எடுத்துக் காட்டி இவற்றின் அழகில் தாம் ஈடுபட்டமை யைப் புலப்படுத்துகிறார்.

தம்பிஎன நினைந்திரங்கித் தவிரான்அத் தகவில்லான்
நம்பிஇவன் தனைக்காணிற் கொல்லும்இறை நல்கானல்
உம்பியைத்தான் உன்னைத்தான் அனுமனைத்தான் [ஒருபொழுதும்
எம்பிபிரி யானாக அருளிதியான் வேண்டினேன்."

—கும்பகருண வதைப்படலம்.

---

1. D. N. பக். 193

6. சுட்டு, வினாப் பெயர்கள்

1. உயர்திணைச் சுட்டுப் பெயர்கள் அவன், அவள், இவன், இவள், அவர், இவர் முதலியனவாம். உவன், உவள், உவர், உவை என்பன பழங்காலத்தில் வழங்கின; இக் காலத்தில் வழக்கிழந்து விட்டன; ஈழத்தில் மட்டும் பேச்சு வழக்கில் நிலை பெற்றுள்ளன.

2. அஃறிணைச் சுட்டுப் பெயர்கள் அது, இது, உது, அவை, இவை, உவை என்பனவாம். அது இது என்பன அஃது இஃது என உயிர்முன் மாறி வழங்குகின்றன. அவற்றை இவற்றை என்னும் வடிவங்களை நோக்க அவறு, இவறு என்பன பன்மையைச் சுட்டும் பழைய வடிவங்களாக இருந் திருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

3. அவ், இவ், உவ் என்பன பழைய வடிவங்களே. வகரம் நீங்கிய அ, இ, உ என்பனவும் சுட்டுகளாகவே கருதப் பட்டன.

அதன், இதன், உதன் என்பன பழைய வடிவங்களாக இருந்திருக்க வேண்டும். பஃது பதின் என வழங்குதலைப் போல, அஃது, அதன் என வழங்கியிருக்க வேண்டும். அ+து—அஃது என்றாகியிருக்க வேண்டும். அவ் என்பதே சுட்டு அடிச்சொல்லாகும். அவ், இவ், உவ், தெவ் என்னும் இந் நான்கனையும் வகர ஈற்றுப் பெயர்கள் எனத் தொல்காப் பியர் குறிப்பிடுவார்.

4. யா என்பது வினா அடிச்சொல்லாகும். எவ், எ என்பன அதன் மாற்று வடிவங்களாகும். யார், யாவன், யாவள், யாது, யாவை என்பன வினா அடியாகப் பிறந்த பால் காட்டும் வினாப் பெயர்களாம். எவன் என்ற சொல் அஃறிணை இருபால்களிலும் வழங்கியது. அஃது இக் காலத்தில் என்ன, என்னை, என் எனத் திரிபு பெற்றுள்ளது. என்ன என்பது பன்மை வடிவாகவும், என்னை என்பது ஒருமை வடிவாகவும் கருதப்படுகின்றன. இக் காலத்தில் என்ன என்பதே ஒருமைக் கும் பன்மைக்கும் பொதுவாக வழங்குகிறது.

5. அது என்னும் தமிழ் வடிவே கன்னடத்திலும் மலையாளத்திலும் வழங்குகிறது. தெலுங்கில் அதி என வழங்குகிறது. அவன் எனும் தமிழ் வடிவு ஒலியிடம் பெயர்ந்து தெலுங்கில் வாடு என வழங்குகிறது. அவம் என்பது கன்னட வடிவு. மலையாளத்தில் அவன் என்றே வழங்குகிறது. அவர் எனும் தமிழ் வடிவு இடம் பெயர்ந்து வாரு எனத் தெலுங்கில் வழங்குகிறது. கன்னடத்தில் அவரு எனவும், மலையாளத்தில் அவர் எனவும் வழங்குகின்றன. இவர் எனும் தமிழ் வடிவு ஒலியிடம் பெயர்ந்து தெலுங்கில் வீரு எனவும், கன்னடத்தில் இவரு எனவும், மலையாளத்தில் இவர் எனவும் வழங்குகின்றது.

6. யாவன் என்பது தெலுங்கில் எவடு எனவும், கன்னடத்தில் ஆவரு எனவும் வழங்குகிறது. யாவர் என்பது எவரு, ஆவர் என முறையே தெலுங்கிலும், கன்னடத்திலும் வழங்குகிறது. யார் என்பது தெலுங்கில் ஏரு எனவும், கன்னடத்தில் ஆர் எனவும் வழங்குகிறது. தமிழ் வழக்குகளே மலையாளத்தில் இடம் பெற்றுள்ளன. யா எனும் தமிழ் வடிவு தெலுங்கில் எகரமாகத் திரிபு பெற்றுள்ளது.

7. சுட்டும், வினவும் செய்யுளுள் நீண்ட வடிவங்களாகவும் வழங்குகின்றன. வழக்கிலும் ஆங்கு, ஈங்கு என நீள் வடிவங்கள் வழங்குகின்றன. எண்ணுப் பெயர்களும் மூவிடப் பெயர்களும் குறில், நெடில் வடிவங்களைப் பெற்றிருப்பது போலச் சுட்டும், வினவும் இருவகை வடிவங்களைப் பெற்றுள்ளன. இது திராவிட மொழிகளின் பொது வியல்பாகும்.

12. பெயரடைகள்

1. பெயர்களே அடையாக நின்று பிற பெயர்களைச் சிறப்பித்தல் உண்டு.

பொன் வளையல்
பொற் சிகரம்
காட்டுப் பசு

இடத்திற்கேற்ப ஈற்று நிலை இரட்டிப்போ, வல்லினமாக மாறுதலோ நிகழ்கிறது.

2. பண்பு அடிச் சொற்களும் அடையாக வருதல் உண்டு.

நல்வழி; செம்பவளம்; நன்னூல்; பன்மலர்

3. அம் ஈற்றுச் சொற்கள் மகரம் கெட்டுப் புணர்கின்றன.

சுபம்+தினம்—சுபதினம்

தெலுங்கில் அமு என்று இறுவனவும் இந் நியதியையே பெறுகின்றன.

4. அம் ஈற்றுப் பெயர்கள் அடையாகுங்கால் 'அத்து' என மாறுகிறது.

குளம் + மீன்—குளத்து மீன்
மரம் + இலை—மரத்திலை

தமிழில் மகர ஈற்றுப் பெயர்களோடு 'ஆன்' என்ற துணைச் சொல்லும், தெலுங்கில் 'அமு' என்பதோடு 'ஆயன'

என்ற துணைச் சொல்லும், கன்னடத்தில் 'ஆத' என்ற துணைச் சொல்லும் சேர்ந்த பெயரெச்ச வடிவு தோன்றுகிறது.

6. கு, சு, டு, து, று, ண்டு, ம்பு, ந்து என்னும் ஈற்றுப் பெயர்கள் அடையாகுங்கால் வேற்றுமைத் தொகையில் மெய்கள் இரட்டிப்பைப் பெறுகின்றன.

குரங்கு + படை — குரக்குப் படை
நாடு + வழக்கம் — நாட்டு வழக்கம்
எருது + பொதி — எருத்துப் பொதி
இரும்பு + கோல் — இருப்புக் கோல்
மருந்து + பை — மருத்துப்பை

7. தமிழில் பெயர்ச் சொற்கள் பெயரடையாகுங்கால் அத்தும், இன்னும் தெலுங்கில் 'னி'யும், 'டி'யும், 'தி'யும் சாரியைகளாக அமைதல் உண்டு.

8. வினை அடிச்சொல் முதற்சொல்லாக அமைந்து வினைத் தொகையாகவும் அதுவே கால உருபுகள் பெற்ற நிலையில் பெயரெச்சமாகவும் நின்று பெயரடையாகும்.

உயர் மனிதன் — வினைத்தொகை
உயர்ந்த மனிதன் — பெயரெச்சத் தொடர்

9. கீழ் என்ற பொருளில் 'கிந்த' என்ற தெலுங்குச் சொல் வழங்குகிறது. அதன் இறந்தகால வினையெச்சம் 'கிந்தி' என்பதாகும்.

கிந்த இல்லு — கீழ் வீடு

இறந்தகால இகர விகுதி சேர்ந்த வினையெச்சம் ஈண்டுப் பெயரடையாகியுள்ளது.

10. அடிப்படை வேர்ச்சொற்களோடு காலக் கிளவி யல்லாத விதிகள் சேர்ந்து பெயரெச்சங்களாகிப் பெயரடை களாதல் உண்டு.

பெரு - பெரிய பையன் — 'இய' சேர்ந்தது
சிறு - சிறிய பையன் — 'இய' சேர்ந்தது

பெயரடை என்ற இலக்கணத்திற்கு இய சேர்ந்த வழக்கே முற்றிலும் பொருந்துகிறது என்பார் அறிஞர் கால்டுவெல். இதனைக் குறிப்புப் பெயரெச்சம் என இலக்கண நூல்கள் கூறும்

11. அகர ஈற்றுப் பெயரெச்சமும் உம் ஈற்றுப் பெய ரெச்சமும் பெயரடைகளாக அமையும். நிகழ்காலப் பெய ரெச்சமாகச் 'செய்கிற' என்ற வாய்பாடமையும்.

செய்த பையன்
செய்யும் வேலை
செய்கிற வேலை

12. இய சேராமல் அகரம் சேர்ந்த பல குறிப்புப் பெயரெச்சங்கள் அமைகின்றன.

நல்ல பையன்
பெத்த பில்ல (தெலுங்கு)-பெரிய பெண்

இந்த அகரம் முழுப் பெயர்களோடு இணைந்து பெய ரடைகள் ஆதலுண்டு.

மலைய, அனைய, தீய

பெயரெச்ச அகரமும் ஆறன் உருபு அகரமும் நெருங்கிய தொடர்பு கொண்டவை என்பது இதனுல் புலப்படும்.

13. பல், சில் என்ற அடிப்படை வேர்ச் சொற்கள் அகரம் பெற்றுப் பல சில என்ருகிப் பெயரடையாதல் உண்டு.

பல கடல்கள்
சில கடல்கள்

14. 'பெர்' என்ற அடிச்சொல் 'உம்' பெற்றுப் பண்படிப் பெயராகிப் பெயரடையாதல் உண்டு.

பெரும் புலவன்

இவ்வாறே பண்பு அடிச்சொற்கள் மை கெட்டு ஒலிச் சூழ்நிலைக்கேற்ப மாறிப் பெயரடைகளாக வருதல் காண்க.

செம்பவளம், செங்காந்தள்,
செஞ்சாந்து, சேவடி, வெற்றிலை

15. திராவிடச் சொற்களில் 'ஆகும்' அல்லது 'ஆதல்' என்பதன் மாற்று வடிவங்கள் துணை உருபுகளாக நின்று பெயரடையாதல் உண்டு.

தமிழ்—ஆன, ஆகும், உள்ள முதலியன
தெலுங்கு—அடு, அயின முதலியன
கன்னடம்—ஆத

ஒப்புமை அடைகளும் உயர்வு அடைகளும்

(1) இன் அல்லது இல் என்ற உருபு பெறல்
இன் என்பதே முதல் வடிவு

(2) அவற்றோடு 'உம்' சேர்தல்

அவற்றினும் நல்லது
அவற்றிலும் நல்லது

(3) பார்க்க, காட்ட முதலியவற்றோடு உம் சேர்ந்த இல் தொடர்தல் உண்டு. தனித்தும் வருதல் உண்டு.

அதைப் பார்க்கிலும் இது நல்லது
அவனைக் காட்டிலும் இவன் நல்லவன்
அவனைவிட இவன் நல்லவன்

(4) ஏகாரம் அல்லது தான் என்ற சொல் ஒப்பீட்டுப் பொருளில் வருதல் உண்டு.

இதுவே நல்லது; இதுதான் நல்லது.

(5) மிக, மிக்க, மிகவும் முதலிய மிகுதிப் பொருள் தரும் சொற்களும் வினையெச்சமாதல் உண்டு.

மிக நல்லது; மிகவும் நல்லது; மிக்க நல்லது

(6) அடுக்கியும் வருதல் உண்டு.
மிகமிக நல்லது.

(7) உறழ்ச்சியைச் சிறப்பிக்க 'எல்லாம்' என்ற சொல் ஒப்பிடப்படும் பெயருக்கு முன்னால் சேர்தல் உண்டு.

எல்லா விலங்குகளிலும் வேங்கை கொடியது.

13. வேற்றுமை

1. திராவிட மொழிகளில் வேற்றுமை உருபுகள் பின் நிலைகளாக (Post Positions) அமைந்துள்ளன. வேற்றுமை உருபுகள் தனிச் சொற்களின் திரிபுகள் என்பது அறிஞர் கால்டுவெல்லின் கருத்தாகும். எல்லா வேற்றுமை உருபு களையும் இவ்வாறு கொள்ளுதற்கில்லை. பண்டைக் காலத்து இவை சில சொற்களின் ஈறுகளாக இருந்திருக்க வேண்டும் எனக் கருத இடமுள்ளது.

✓ *2.* இந்தோ, ஐரோப்பிய மொழிகளைப் போலப் பன்மைக்கு ஒருவகை வேற்றுமை உருபு, ஒருமைக்கு ஒருவகை உருபு என்ற நியதி திராவிட மொழிகளில் இல்லை. பன்மை உருபு சேர்ந்த பிறகே வேற்றுமை உருபு இடம் கொள்ளும்.

3. வேற்றுமைக்கு முதல் வேற்றுமை, இரண்டாம் வேற்றுமை என எண்ணால் பெயர் கொடுப்பதும் அதன் ஏனைய அமைப்பு முறையும் வடமொழி மரபை ஒட்டியதே என்பது கால்டுவெல்லின் கருத்தாகும்.

தமிழில் இரண்டு முதல் ஏழு உருபுகளும் தொக்கும் விரிந்தும் வேற்றுமைப் பொருளைத் தரும்.

1. எழுவாய் வேற்றுமை

(1) தமிழில் எழுவாய் வேற்றுமை திரிபில் பெயராகும். அஃது எவ்வுருபையும் ஏற்பதில்லை. வடமொழியில் முதல் வேற்றுமையும் உருபு ஏற்றல் உண்டு; ஆம் என்பது முதல்

வேற்றுமை உருபாகும். மரம், நிலம் முதலிய தமிழ்ச் சொற்களிலுள்ள அம், சொல்லீற்று விகுதியாகும்.

(2) எல்லாத் திராவிட மொழிகளிலும் மூவிடப் பெயர்கள் எழுவாயில் ஒருவகை வடிவையும், பிற வேற்றுமை உருபுகளை ஏற்க ஒருவகைத் திரிந்த வடிவையும் பெறுகின்றன. பொதுவாக எழுவாயில் குறுகா வடிவும் ஏனைய வேற்றுமைகளில் குறுகிய வடிவும் பெறுகின்றன.

நாம்—நம்; யான்—என்; நீ—நின்; தான்—தன்; தாம்—தம்.

தமிழைப்போல ஏனைய திராவிட மொழிகளிலும் இவ்விருவகை வடிவங்கள் உள்ளன.

கன்னடம் : நானு—நன்ன; நானு—நீனு—நின்ன; தானு தன்ன

தெலுங்கு : நேனு—நன்னு; நீவு—நின்னு

2. இரண்டாம் வேற்றுமை

'ஐ' என்பது தமிழில் இரண்டன் உருபாகும். அம் என்பது பழங்கன்னட உருபு.

பனம்காய் என்பது பனங்காய் என அமைதல் காண்க. அய் எனத் திரியும் அம் சொல்லீற்று நிலையாகும்.

'காவலோனக் களிறஞ் சும்மே' என்னும் தொடரிலுள்ள அகரத்தை இரண்டன் உருபென்றும் அஃது அம்மின் திரிபே என்றும் கூறுவர்.

சங்க இலக்கியத்தில் மூவிடப் பெயர்களில் இரண்டன் உருபு விரிந்து வருதல் இல்லை என்பர்.

நிற் கண்டிசினோர் (ஐங். 85/5)
நப் புரை (நற். 126/8)
தற் படர்ந்தனம் (குறு. 74/3)

---

1. D. N. பக். 79

மலையாள மொழியிலும் ஐ என்பதே இரண்டன் உரு பாகும். பத்தாம் நூற்றாண்டிலிருந்து எ என்பது இடம் பெற்றதென்பர்.

ஆன், அன், அம், ஆ என்பன கன்னட உருபுகளாம்.

ன், னு, னி, னின் என்பன தெலுங்கு உருபுகளாகும்.

3. மூன்றும் வேற்றுமை

இது கருவிப் பொருளையும், உடனிகழ்ச்சிப் பொருளையும் தரும். ஆன் என்பதே பழந்தமிழில் கருவி வேற்றுமை உரு பாகும். ஆல் என்பது நன்னூல் உடன் சேர்த்த உருபாகும்.

கொண்டு, பொருட்டு, உடன் என்னும் சொல்லுருபுகளும் கருவிப் பொருளில் வரும் என்பர்.

'ஒருகணை கொண்டு மூவெயில் உடற்றி'—புறம் 55/2
'உயிர்ப் பொருட்டால் நாண் துறவார்'—திருக் 10/1
'நெய்தல் பூவுடன் நெரிதரு தொடலை தைஇ'
—நற். 138-70[1]

ஒடு, ஓடு என்பன உடனிகழ்வை உணர்த்தும் உருபு களாகும்.

'மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல்'—தொல். 512
'இளையரும் முதியரும் கிளையோடு குழீஇ'—அகம். 348/12
என்பனவற்றை எடுத்துக் காட்டாகக் காட்டுவர்.[3]

மலையாளத்தில் ஆல், கொண்டு என்பனவும், கன்னடத்தில் இம், இன், இந்த என்பனவும், தெலுங்கில் னன், ன என்பன வும் கருவி உருபுகளாம். சே, சேத என்பன சொல்லுருபுகள்.

மலையாளத்தில் ஒடு, ஓடு என்பன உடனிகழ்ச்சி உருபு களாகும். கன்னடத்தில் ஒடனே என்பதும் தெலுங்கில் தோ, தோட என்பனவும் சொல்லுருபுகளாகும்.

---

1. D. N. பக். 261
2. D. N. பக். 262
3. D. N. பக். 263

4. நான்காம் வேற்றுமை

தமிழில் கு, க்கு என்பன நான்கன் உருபுகளாகும். மலையாளத்தில் 'க்கு' என்பதும், தெலுங்கில் கு அல்லது கி என்பதும், கன்னடத்தில் கெ (ge) அல்லது கெ (ke) என்பதும் நான்கன் உருபுகளாகும்.

பெஹிஸ்தன் அட்டவணையில் (Scythin tablets of Behistan) இக்கி அல்லது இக்க என்னும் வடிவம் உள்ளது என்பர். இதனைக் கொண்டு திராவிட மொழிகளுக்கும், மத்திய ஆசிய மொழிகளான சித்திய மொழிகளுக்கும் தொடர்புள்ள தாகக் கூறுவர்.

முறைப் பெயர்களோடு உயர்திணைப் பெயர்கள் இணையு மிடத்து ஆறன் பொருளில் நான்கன் உருபு இடம் பெறும்.

சாத்தனுக்கு மகன்

இக்குச் சாரியை புணரும் தொடர்களில் வரும் இக்கை நான்கன் உருபு என்றும், அஃது ஏழன் இடப் பொருளில் வருகிறதென்றும் குறிப்பிடுவர் [1]

ஆடிக்குக் கொண்டான்
சித்திரைக்குக் கொண்டான்

'கடிநிலை இன்றே ஆசிரியர்க்க' என்னும் தொடரில் 'க' என்பதே நான்கன் உருபாக வந்துள்ளது. அது 'கு' உருபன்று .

5. ஐந்தாம் வேற்றுமை

ஐந்தாம் வேற்றுமை உருபு இன் ஆகும். அது நீங்கல், ஒப்பு, எல்லை, ஏது என்னும் பொருள்களில் வரும். நின்று, இருந்து என்பன சொல்லுருபுகளாம். உவம உருபாகிய இன் என்பதே ஐந்தன் உருபாக மாறியதென்பர்.

மலையாளத்தில் இல், நின்று, இல்; நின்னு, இன்னு, ன்னு என்பனவும், பழங் கன்னடத்தில் இம் என்பதும், புதுக் கன்ன

---

1. D. N. பக். 226
2. Caldwell பக். 65

டத்தில் அல்லிந்த அல்லது இல்லிந்த என்பதும் ஐந்தனுருபு களாம். புதுக் கன்னட உருபு இல், இருந்து அல்லது இல், நின்று என்பவற்றோடு தொடர்பு கொண்டதாகத் தோன்றுகிறது. தெலுங்கு உருபாய ன் என்பது தமிழ் இன் என்பதோடு உறவுடையது. தெலுங்கில் உண்டி, னிஞ்சி என்பன சொல் லுருபுகளாக வழங்குகின்றன. அவை தமிழிலுள்ள இருந்து என்பதற்கு இணையானவையாகும்.

6. ஆறும் வேற்றுமை

அது என்பது ஆறாம் வேற்றுமை உருபாகும். அகரச் சாரியையே ஆறன் உருபாக வருகிறது என்பதற்குப் பின்வரும் எடுத்துக்காட்டுகளைக் காட்டுவர்.[1]

மரத்தகோடு	—குறு. *99/4*
நின்ன கண்ணி	—புறம். *45/3*
நின யானே	—பரி. *19/85*
நுன சீறடி	*(சிந்தா)*

இன், அன் என்னும் சாரியைகளும் ஆறன் பொருளில் வருகின்றன என்பர்.[2]

மெய்யின் இயக்கம்	—தொல். எழு-*46*
பலவின் சினை	—குறு. *153/2*
நக்கதன் பயனே	—குறு. *381/8*

உடை, உடைய என்பன ஆறும் வேற்றுமைச் சொல்லுருபு களாகும்.

நின்னுடை வாழ்க்கை	—பதி. *37*
தம்முடைய தண்ணளி	—சிலப். *7/32/1*

தமிழில் மூவிடப் பெயர்களின் குறுகல் வடிவங்கள் ஆறன் பொருளில் வருகின்றன.

என் புத்தகம்; நின் கை; தன்னுயிர்

---

1. D. N. பக். 271
2. D. N. பக். 271

அவன், அவள், அவர் ஆகியன தொகையாக நின்று ஆறன் பொருளைத் தருகின்றன.

அவன் வீடு; அவள் அழகு; அவர் நிலை.

அது, இது என்பன 'அன்' சாரியை ஏற்று ஆறன் பொருளைத் தருகின்றன.

அதன் விலை, இதன் விலை

உருபுகள் விரிந்து நின்று ஆறன் பொருளைத் தருவ தனினும் தொகைச் சொற்களே பெருவாரியாக ஆறன் பொருளைத் தருகின்றன.

மரக்கிளை, குளத்து மீன், வீட்டு வாசல், காட்டுப் பசு, என் வீடு, எம் வீடு, நும் வீடு, தம் வீடு

மலையாளத்தில் தெ என்பது ஆறன் உருபாம். உடை, உடைய, உடெ என்பன சொல்லுருபுகளாம். உடை, உடைய என்பன பழைய வழக்குகள்; தெ, உடெ என்பனவே தற்கால வழக்குகள்.

கன்னடத்தில் ட, ஏ என்பன ஆறன் உருபுகளாம்.

தெலுங்கில் அகரமே ஆறன் உருபாம். ஒக்க, ஒக என்பன சொல்லுருபுகளாம்.

ஊரகவி

நாயொக்க—என்னுடைய

10. ஏழாம் வேற்றுமை

இடப்பொருள் உணர்த்தும் சொற்களெல்லாம் திராவிட மொழிகளில் ஏழன் உருபாக அமைகின்றன. எனினும், சில சொற்கள் மட்டும் உருபுகளாகவே வழங்குகின்றன.

தமிழில் கண் என்பது இடப்பொருள் உணர்த்தும் உருபாகும்.

கண் அகல் ஞாலம்

தமிழில் 'இல்' மிகுதியான வழக்குடையது. இஃது இன் என்பதன் திரிபாகும்.

கண், கால், புறம், அகம், உள், உழை, கீழ், மேல், பின், சார், அயல், புடை, தே முதலியனவும் ஏழன் உருபுகளாம்.[1]

மலையாளத்தில் இல், கல், கால், உள், பக்கல் என்பன ஏழன் உருபுகளாம்.

பழங்கன்னடத்தில் உள், ஒள் என்பன ஏழன் உருபு களாம்.

புதுக் கன்னடத்தில் 'அல்லி' என வழங்குகின்றது.

தெலுங்கில் லோ என்னும் சொல்லுருபு வழங்குகிறது. இஃது உள் என்பதன் இடம் பெயர்ந்து வழங்கும் வடிவமாகும். மற்றும், அன், னி, அந்து என்பனவும் ஏழன் உருபுகளாம்.

அந்து என்பது சுட்டடியாகப் பிறந்த சொல்லுருபாகும்.

ஆன், அத்து என்பன சாரியைகளாயினும் அவை ஏழன் பொருளில் வரும் உருபுகளாகக் கொள்ளலாம்.[2]

பரணியாற் கொண்டான்
பணியத்துக் கொண்டான்

11. விளிவேற்றுமை

திராவிட மொழிகளில் விளிவேற்றுமைக்குத் தனி உருபுகள் இல்லை. ஈற்று நிலை ஒலியழுத்தத்தாலும், நீள்வதாலும், ஈற்றயல் குன்றுவதாலும், ஏ, ஓ, முதலிய உயிர்கள் சேர்வதாலும் பெயர்கள் விளித்தன்மை பெறுகின்றன.

பலர்பால் வடிவில் இர், ஈர் என்பன சேர்கின்றன.

மலையாளத்திலும் ஏ சேர்தல், ஈற்று உயிர் நீட்சி, னகரம் கெடுதல் முதலிய மாறுதல்கள் நிகழ்கின்றன.

கன்னடத்தில் ஏ சேர்ந்து விளியாகிறது. சில ஈற்று உயிர்கள் நீடலும் உண்டு. இர் பலர்பால் ஈற்றில் சேர்கிறது.

---

1. தொல். 566
2. D. N. பக். 273

தெலுங்கில் ஆ அல்லது அ சேர்கிறது. ஈற்று உயிர் நீள்வும் ஓ அல்லது ஒ சேர்தலும் காணப்படுகின்றன. ஆரா அல்லது ஆர பலர்பால் ஈற்றில் சேர்கிறது.

12. சாரியைகள்

வேற்றுமைத் தொடர்களில் சாரியைகள் இடம் பெறுதல் உண்டு.

இன், வற்று, அத்து, அம், ஒன், ஆன், அக்கு, இக்கு, அன் என்பன தொல்காப்பியர் குறிப்பிடும் சாரியைகள் ஆகும்.

தம், நம், நும், கெழு, உம், ஏ என்பனவற்றையும் உரையாசிரியர்கள் சாரியைகள் என்பர்.

சில சாரியைகள் சில சமயங்களில் அல்வழித் தொடர்களிலும் இடம் பெறுதல் உண்டு.

சொற்களின் ஈறுகளே பல சாரியைகளாக அமைகின்றன என்பர் பேராசிரியர் தெ. பொ. மீ. அவர்கள்.[1]

---

1. A History of the Tamil Language.

14. வினைச் சொற்கள்

சிறப்பியல்புகள்

1. திராவிட அடிச்சொற்களோடு வேற்றுமை உருபுகள் சேர்ந்தால் பெயராகவும், காலக்கிளவிகள் சேர்ந்தால் வினையாகவும் அமைகின்றன.

வேற்றுமை உருபுகள் ஏலாமல் எழுவாயாக அமைவனவும் பெயர்ச் சொற்களே.

2. திராவிட வினைகள் ஒட்டு நிலை வகையைச் சார்ந்தவை. அடிச் சொற்களில் எவ்வித மாற்றமும் விளைவிக்காமலேயே இலக்கண விகுதிகளைச் சேர்க்கலாம். எளிதில் பிரித்தும் காட்டலாம்.

3. ஏவற்பொருளில் வரும் பகுதிகள் பாலும் காலமும் உணர்த்தும் விகுதிகளைப் பெறுவதில்லை.

சிறுபான்மை ஒருமைப் பன்மைப் பாலுணர்த்தும் விகுதிகளைப் பெறுதல் உண்டு.

4. காலங்கள் மூன்று எனக் கருதப்பட்டாலும் நிகழ்காலம் என ஒன்று தனியாகப் பிரித்து அறியத் தக்க வினை வடிவங்கள் பழங்காலத்தில் இல்லை. இறப்பு, அஃதல்லாத காலம் என்ற இரண்டு பிரிவுகளையே பெற்றிருந்தன எனத் தெரிகிறது.

5. வினைகள் எச்சம், முற்று என இருவகைப்படுகின்றன. பால் ஈறுகள் பெற்று விளங்குவன முற்று; அவ்வீறுகள் பெறாதன எச்சம் எனக் கருதப்படுகின்றன. இவை சொல் நிலையில் காணப்படும் அடிப்படை வேறுபாடுகளாகும்.

மற்றொன்றை எதிர்நோக்கி நிற்பது எச்சவினை; தானே பயனிலையாக அமைவது முற்றுவினை. இவை தொடர் நிலைகளில் காணப்படும் வேறுபாடுகளாகும்.

செய்யும் என்னும் வடிவம் முற்றாகவும் எச்சமாகவும் நிற்கின்றது.

சாத்தன் ஓடும் (செய்யும்—முற்று)
ஓடும் சாத்தன் நல்லன் (செய்யும்—எச்சம்)

6. குறிப்பு வினைகள் பெயர் அடியாகவும், பண்பு அடியாகவும் பிறக்கும். அவை காலக் கிளவிகளை ஏற்பதில்லை. எதிர்மறை வினைகளுள் சில காலக்கிளவி இன்றி இயங்கும்.

7. வினைகள் பால்விகுதி பெற்றும் பெறாமலும் இயங்கும்.

அவன் செய்வான்
அவள் செய்வாள் } பால்விகுதி பெற்றன.

யான் செய்கு (செய்வேன்)
அவன் செய்யும் (செய்வான்) } பால்விகுதிபெறாதன.

8. பழந்தமிழில் கால இடைநிலை தெளிவாகப் பிரித்தறியக் கூடிய நிலையில் இல்லை.

சங்க காலத்தில் 'த்' கரமும் 'இ' கரமும் இறந்த காலத்தை உணர்த்தின.

'க' கரம் இறப் பொழிந்த நிகழ்வையும், எதிர்வையும் உணர்த்திற்று.

9. கால இடைநிலைகளோடு சாரியைகளும் வினைச் சொற்களில் இடம் பெறுதல் உண்டு.

வந்தனன்—வா + ந் + த் + அன் + அன் (அன்)

10. சங்க காலத்தில் நிகழ்கால இடைநிலை என்பது தனியாக இல்லை. செய்யும் என்ற வாய்பாடு நிகழ்காலத்தை உணர்த்தியது. கிறு, கின்று, ஆநின்று என்பன பிற்காலத்து வழக்குகளாகும்.

11. க, ப, வ என்பன எதிர்கால இடைநிலைகளாகும். அவற்றுள் 'க' கரம் காலத்தால் முந்தியது.

12. 'த்' என்பது இறந்தகால இடைநிலையாகும். ட், ற் என்பன அதன் மாற்று வடிவங்களாகும்.

இகரமும் அதன் மாற்று வடிவமான 'இன்' என்பதும் இறந்த காலம் காட்டின. இவை சூழ்நிலைக்கேற்ப மாறி வருவன.

13. தமிழ் வினையமைப்பில் தன்வினை பிறவினை என்னும் பாகுபாடு அடிப்படையானதாகும். சில இயக்கு வினைகளாக வும் இயங்குகின்றன.

14. பொருள்களுக்கு ஏற்ப வினைவடிவத்திலும் மாறு தல்கள் நிகழ்கின்றன. அவற்றை வினைநிலை உரைத்தல் (indicative mood), ஏவற்பொருள் (imperative mood), வியங் கோள் பொருள் (optative mood), விதி வினை (Conditional mood), செயல் எஞ்சுவினை (infinitive mood) என ஐவகை யாகப் பிரித்துக் காண்பர்.

15. தெரிநிலைவினை, குறிப்பு வினை என்னும் பாகுபாடு தமிழ் வினை அமைப்பில் காணப்படும் சிறப்பியல்பாகும். இத் தகைய பாகுபாடு வேறு எம் மொழியிலும் இல்லை.

16. வினை உடன்பாடாகவும், எதிர்மறையாகவும் அமை யும். 'ஆ' எதிர்மறை இடைநிலை எனக் கருதப்பட்டாலும் இல், அல் என்னும் வடிவங்கள் எதிர்மறையை உணர்த்தும் துணை வினைகளாகச் சேர்கின்றன. எதிர்மறை வினைகளுள் குறிப் பிட்ட காலத்தைக் காட்டுவனவும் உள; முக் காலத்துக்கும் உரிய பொது வினையாக வருவனவும் உள.

17. செயப்பாட்டு வினைக்குத் தனி விகுதி இல்லை எனினும் செய்வினைப் பகுதியுடன் படு, உண் முதலிய துணைவினைகள் சேர்ந்து அப் பொருளை உணர்த்துகின்றன.

18. தொழிற் பெயர், வினையாலணையும் பெயர், வினை யடிக் காரணப் பெயர், வினையடியாகப் பிறக்கும் பொதுப் பெயர் முதலிய பலவகைப் பெயர்கள் வினையடியாகப் பிறக் கின்றன.

தல், அல், கை, மை, சி முதலியன தொழிற் பெயர் விகுதிகளாம்.

பாலீறு பெற்ற முற்று வடிவங்கள் தம் வினைப் பொருளை ஒழித்து, வினையுடைப் பொருளை உணர்த்துங்கால் வினையாலணையும் பெயர் எனப்படும்.

அஃது ஏனைய பெயர்களைப் போல எழுவாயாகவும் நிற்கும்; ஏனைய வேற்றுமை உருபுகளையும் ஏற்கும்.

பொருநர், ஓட்டுநர், அறிஞர் முதலியன வினையடிக் காரணப் பெயர்களாம் (agent nouns).

வலைஞர் கலைஞர் முதலியன பெயரடியாகப் பிறந்த காரணப் பெயர்களாம்.

எழுது-எழுத்து, மின்-மீன், பண்-பாண், இரு+பு-இரும்பு, அறி+வு-அறிவு முதலியன வினையடியாகப் பிறந்த பொதுப் பெயர்களாம்,

19. ஓசை பற்றியும், குறிப்புப் பற்றியும், பண்பு பற்றியும் வரும் அடிச்சொற்கள் சேர்ந்து இரட்டிப்பதால், புதுப் பகுதி உண்டாகிறது. அஃது இரட்டைக் கிளவி என வழங்குகிறது.

சலசலப்பு — ஓசை பற்றியது

பரபரப்பு — குறிப்புப் பற்றியது

பசபசப்பு — பண்பு பற்றியது.

15. வினை வகைகள்

1. தன்வினை பிறவினைகள்

கருத்தா தானே செய்யும் செயலை உணர்த்துவது தன்வினை யாகும்.

சாத்தன் படித்தான்
சாத்தான் சேர்கிறான்

கருத்தா பிறரால் செய்விக்கும் செயலை உணர்த்துவது பிறவினையாகும்.

சாத்தன் படிப்பித்தான்
சாத்தன் சேர்க்கிறான்

வி, பி என்னும் பிறவினை விகுதிகள் அடுக்கி வருவன வற்றை இயக்கு வினைகள் என்பர். அவையும் பிறவினையிலேயே அடங்கும்.

அறிந்தான்; அறிவித்தான்; அறிவிப்பித்தான் என்பன முறையே தன்வினை, பிறவினை, இயக்கு வினைகளாம்.

(1) பகுதி இரட்டிப்பதால் பிற வினையாதல்

அடங்கு (தன்வினை)—அடக்கு (பிறவினை)
மடங்கு (தன்வினை)—மடக்கு (பிறவினை)

மெல்லின வடிவம் தன்வினையாகவும் வல்லின வடிவம் பிறவினையாகவும் அமைகின்றன. இது பகுதி இரட்டிப்பு.

(2) இடைநிலை இரட்டிப்பதால் பிறவினையாதல்

சேர்ந்தான்—சேர்த்தான் (இறப்பு)

சேர்கிறான்—சேர்க்கிறான் (நிகழ்வு)
சேர்வான்—சேர்ப்பான் (எதிர்வு)

(3) வி. பி. சேர்தல்

பகுதியோடு வி அல்லது பி தனித்தோ, வி, பி, இரண்டும் அடுக்கியோ வரின் பிறவினை ஆகும்.

அறி, அறிவி; அறிவிப்பி
உண், உண்பி; உண்பிப்பி

இகரம் வி எனவும் பி எனவும் இடம் நோக்கி மாறிவரும்.

கன்னடத்திலும், தெலுங்கிலும் முறையே இசு, இஞ்சு என்பன பிறவினை விகுதிகளாக வருகின்றன. வி, பி இரண்டனுக்கும் இகரம் அடிப்படை எனத் தெரிகிறது. அதனால், இகரத்தைப் பிறவினைக்கும் இயக்கு வினைக்கும் துணை செய்யும் விகுதி எனலாம்.

செய்—தன்வினை

சேயிஞ்சி—சேயிபிஞ்சு—பிறவினை

செயவென்னும் வாய்பாட்டு வினையெச்சத்தோடு செய், சொல், பண் முதலிய துணைவினைகள் சேரப் பிறவினைகளும், இயக்கு வினைகளும் அமையும்.

உறங்கச்செய்; செய்யச்சொல்; உறங்கப்பண்ணு

2. வினைப் பொருள்கள் (moods)

உணர்த்தும் பொருள்களுக்கேற்ப வினைகளை வகைப் படுத்திக் காண்பர்.

வினைநிலை உணர்த்தல், ஏவல், வியங்கோள், நிபந்தனைப் பொருள் முதலிய பொருளமைப்புகளை வினைகள் பெற்று வரும். அப்பொருள்களுக்கேற்ப வடிவத்திலும் சிற்சில மாறுதல்கள் விளையும்.

(1) வினைநிலையுரைத்தல் (Indicative mood)

செயல் இன்னது என்று தெரிவிப்பது.

ஆ உண்டு
அவன் கரியன்

(2) ஏவற் பொருள் (Imperative mood)

கட்டளைப் பொருளைத் தருவது.

நட, வா, மடி, சீ போன்றன.

ஆய், இ, ஐ முதலாய விகுதிகளைப் பெற்று வருதலும் உண்டு.

கேளாய் தோழி (ஆய்)
போதி (இ)
வந்தை (ஐ)

(3) வியங்கோள் பொருள் (Optative mood)

கட்டளை, வாழ்த்தல், வைதல், வேண்டிக்கோடல் முதலாய பொருள்களில் வருதல். இஃது ஏவலில் அடங்கும். க, இய, இயர் முதலாய விகுதிகளைப் பெற்று வரும்.

செய்க, வாழ்க, வாழிய, வாழியர்

சங்க காலத்தில் இது படர்க்கை ஒன்றனுக்கே உரியதாய் இருந்தது; இக் காலத்து மூவிடங்களிலும் வருகிறது.

(4) நிபந்தனை வினை (Condit ional mood)

நிபந்தனையைக் குறித்து வருதல்

வந்தால் தருவேன்
வரின் தருவேன்

ஆல், இன் முதலியன நிபந்தனைப் பொருளைத் தரும் விகுதிகளாகும்.

3. சொல் எஞ்சுவினை (The infinitive mood)

முற்றுப் பெறுநிலையில் வருதல்

வரச் சொன்னான்
போகச் சொன்னான்

இவ்வாறு மற்றொரு வினையைக்கொண்டு முடிவன இவ் வகையைச் சாரும்

மழை பெய்ய நெல் விளையும்
நெல் விளைய மழை பெய்யும்

கோழி கூவப் பொழுது விடிந்தது

முதலியனவும் இவ்வகையைச் சார்ந்தனவே

4. குறிப்பு வினையும், தெரிநிலை வினையும்

பண்பு அடிச் சொல்லாகவும், பெயர் அடிச் சொல்லாகவும் நின்று பால் ஈறுகள் பெற்ற வடிவங்கள் தொடர்நிலையில் பயனிலையாக வருகின்றன. அவற்றைக் குறிப்புவினை என்பர்.

செயல் வினைப் பகுதியினின்று தோன்றும் வினைகள் காலத்தைத் தெளிவாகக் காட்டும்; அவை தெரிநிலை வினை எனப்படும்.

அவன் கரியன் (பண்பு அடி) } குறிப்பு வினை
அவன் மலையன் (பெயர் அடி) }

அவன் செய்கிறான் (செயல் அடி) } தெரிநிலை வினை
அவன் வருகிறான் (,,) }

5. எதிர்மறை வினை

வினைப் பகுதிகள் அ, ஆ, அல், இல் என்னும் எதிர்மறை இடைகளைப் பெற்று எதிர்மறை வினைகளாகின்றன.

வாரான்—அ

உண்ணான்—ஆ

செய்யலன்—அல்

வந்திலன்—இல்

வாரான் — வார் + அ + அன் எனப் பிரிக்கலாம். தெலுங்கிலும் அகரம் எதிர்மறையை உணர்த்துதல் காண்க.

சேயனு—சே + அ — அனு (தெலுங்கு)

6. செயப்பாட்டு வினை

(1) செய்வினைகளோடு ஆயிற்று, போயிற்று முதலிய துணைவினைகள் சேர்ந்து செயப்பாட்டு வினைகள் ஆதல் உண்டு.

வேலை வந்தாயிற்று

வீடு கட்டியாயிற்று

(2) முதல் வேற்றுமைக் கருத்தா ஆலுருபேற்று மூன்றும் வேற்றுமைக் கருத்தாவாயின், அதன் தொழில் செயப்பாட்டுப் பொருளைத் தரும். இஃது அருகிய வழக்காகும்.

அஃது என்னால் உடைந்தது.

(3) செய்வினைப் பகுதியோடு உண், படு முதலாய துணை வினைகள் சேர்ந்து செயப்பாட்டு வினையாதல் உண்டு.

கொலையுண்டான், உதைபட்டான்

(4) பொதுவாகச் செயப்பாட்டு வினைகளையும் செய் வினையாகக் கூறுதல் தமிழ் மரபாகும்.

எழுதிய நூல் வேண்டும் (எழுதப்பட்ட)
பாடிய பாட்டு நன்று (பாடப்பட்ட)
உண்ட சோறு நல்லது (உண்ணப்பட்ட)

இவை அருகிய வழக்காகும்

7. இரட்டைக் கிளவி

ஓசை, குறிப்பு, பண்பு பொருள்களைத் தரும் அடிச் சொற்கள் இரட்டித்துப் புதுப்பகுதிகள் தோன்றுதல் உண்டு. அவை இரட்டைக் கிளவி எனப்படும்.

சலசலப்பு—ஓசை பற்றியது
பரபரப்பு—குறிப்புப் பற்றியது
பசபசப்பு—பண்பு பற்றியது

8. வினையடியாகப் பிறக்கும் பெயர்கள்

(1) தொழிற்பெயர் : வினைப் பகுதியோடு அல், தல், கை, மை முதலிய விகுதிகள் சேர்ந்து தமிழில் தொழிற் பெயர்கள் அமையும்.

ஆடல், ஓடுதல், உண்கை, உண்ணுமை.

அவ்விகுதிகளைப் பெறாமல் தனித்துத் திரிந்தும் திரியாதும் நிற்றலும் உண்டு. அவை முறையே முதனிலைத் தொழிற் பெயர் எனவும், முதனிலை திரிந்த தொழிற் பெயர் எனவும் வழங்கும்.

அறி, அடி, கடி—முதனிலைத் தொழிற் பெயர்கள்

கோள், வீடு, ஆடு—முதனிலை திரிந்த தொழிற் பெயர்கள்

(2) வினையாலணையும் பெயர் : தெரிநிலை வினையும் குறிப்பு வினையும் தம் செயலை உணர்த்தாது வினையுடைப் பொருளை உணர்த்துங்கால் அவை வினையாலணையும் பெயர் எனப்படும். அவை எழுவாயாக நின்றும், ஏனைய உருபுகளை ஏற்றும் வரும்; காலத்தையும் காட்டும்.

வந்தானைக் கண்டேன்—தெரிநிலை வினையாலணையும் பெயர்.

பொன்னனைக் கண்டேன்—குறிப்பு வினையாலணையும் பெயர்.

(3) வினையடிக் காரணப் பெயர் : வினைப் பகுதியோடு இ, ஐ, அம் என்னும் மூன்று விகுதிகளும் சேர்ந்து வினையடிக் காரணப் பெயர்கள் அமையும்.

அலரி (இ), பறவை (ஐ), எச்சம் (அம்)—வினை முதற் பொருளன

ஊருணி (இ), தொடை (ஐ), நீத்தம் (அம்)—செயப்படு பொருளன

மண்வெட்டி (இ), பார்வை (ஐ), நோக்கம் (அம்)—கருவிப் பொருளன

நகரமும் ஞகரமும் இடைநிலைகளாக நின்று சில காரணப் பெயர்கள் அமைவதும் உண்டு.

பொருநன், பொருநர்
அறிஞன், அறிஞர்

(4) வினையடி ஆக்கப் பெயர்கள் : வினையடிகள் வல்லினம் இரட்டித்தும், முதல் நீண்டும், ஆக்க விகுதிகள் பெற்றும் பிற பொருள்களைத் தருதல் உண்டு. அவை ஆக்கப் பெயர்கள் எனப்படும்.

எழுது	— எழுத்து	— வல்லினம் இரட்டித்தது
மின்	— மீன்	— முதல் நீண்டது
இரு—பு	— இரும்பு	— ஆக்க விகுதி பெற்றது.

16. தன்வினை பிறவினைகள்

திராவிட வினைச் சொற்களில் தன்வினை, பிறவினை என்பன அடிப்படைப் பாகுபாடுகளாகும்.

கருத்தா தானே செய்யும் செயலை உணர்த்தும் வினை தன்வினையாகும்.

சாத்தன் படித்தான்

கருத்தா பிறரால் செய்விக்கும் வினை பிறவினையாகும்.

சாத்தன் படிப்பித்தான்

மெல்லொற்று வல்லொற்றாகியும், ஒற்றிரட்டியும், கு, சு, டு, து, பு, று என்னும் விகுதிகளுள் ஒன்றனைப் பெற்றும், கால எழுத்துகள் இரட்டியும், வி, பி என்னும் பிறவினை விகுதிகளைப் பெற்றும் தன்வினை, பிறவினையாகும்.

வி, பி பெற்றுப் பிறவினை ஆதலை இயக்குவினை என்பர்.

1. அடங்கு — அடக்கு
   அருந்து — அருத்து
   திரும்பு — திருப்பு
   } மெல்லெழுத்து வல்லொற்றாயிற்று.

2. ஆடு — ஆட்டு
   பெருகு — பெருக்கு
   } ஒற்றிரட்டிற்று

3. போ — போக்கு
   பாய் — பாய்ச்சு
   உருள் — உருட்டு
   நட — நடத்து
   எழு — எழுப்பு
   துயில் — துயிற்று
   } கு, சு, டு, து, பு, று பெற்றன

4. சேர்ந்தான் — சேர்த்தான்
கரைகிறான் — கரைக்கிறான்
தேய்வான் — தேய்ப்பான்
} கால எழுத்துகள் இரட்டின

5. செய்தான் — செய்வித்தான்
நடந்தான் — நடப்பித்தான்
} வி, பி சேர்ந்தன

சில வினைகளில் வி, பி இரண்டும் இணைந்து வருதலும் உண்டு. இணையுங்கால் 'வி' தன்னொடுதான் இணையாது. பி தன்னொடும் பிறிதொடும் இணையும்.

நடத்துவிப்பித்தான்
கேட்பிவிக்கிறான்
நடப்பிப்பித்தான்

இவ்வாறு வருவன இயக்குவினை எனப்படும்.

தொல்காப்பியத்திலும் சங்க இலக்கியங்களிலும் இத்தகு இயக்கு வினைகள் அருகி வருகின்றன.[1]

அம்ம கேட்பிக்கும்	—தொல்-சொல்-276
மறப்பித்தாய்	—கலி. 50
போர்ப்பித்திலது	—புறம். 286
படர்வித்தவள்	—கலி. 141
கொட்பித்தான்	—கலி. 143
உணர்ப்பித்தல்	—பரி. 3173
பிறப்பித்தோர்	—பரி. 2/73
[2]தாழ்ப்பிக்கும்	—பரி. 5/175

இக் காலத் தமிழில் வி, பி விகுதிகள் இடம் பெறுவதற்கு மாறாக வை, செய், பண், சொல் முதலிய துணைவினைகள் சேர்ந்து தொடர்களாகின்றன.[3]

---

1. Dravidian Verb Morphology; P. S. Subramaniyam பக். 8.
2. D. V. M. பக். 8
3. D. V. M. பக். 9

படிக்க வை
கட்டச் செய்
உறங்கப் பண்ணு
செய்யச் சொல்.

மலையாளத்திலும் தமிழைப் போன்ற அமைப்புகள் உள்ளன என்பர்.

அடங்கு — அடக்கு
தின் — திற்று
கேள் — கேள்ப்பி[1]

கன்னடத்தில் பிறவினை விகுதி இசு என்பதாகும். இசு என்பது சு, அசு என இடத்துக்கேற்ப மாறி வருதலும் உண்டு.

என் — எனிசு
ஓடு — ஓடிசு[2]

தெலுங்கில் சு, பு, இஞ்சு என்பன பிறவினை விகுதிகளாகும்.

சேரு — சேர்சு
நிறுசு — நிறுபு
சேயு — சேயிஞ்சு[3]

---

1. D. V. M. பக். 11
2. D. V. M. பக். 21
3. D. V. M. பக். 25

17. காலங் காட்டல்

இறந்த கால இடைநிலைகள்

பண்டைக் காலத்து இறப்பு, இறப்பல்லாத நிகழ்வு எனக் காலம் இருபிரிவுகளாகவே இருந்திருக்க வேண்டும். அக் காலத்திலிருந்தே இறந்தகால இடைநிலைகள் தெளிவாகப் பிரித்தறியக் கூடிய நிலையில் இருந்தன.

த், இ என்பன இறந்த கால இடைநிலைகளாகும்.

த், தனித்து நிற்றலேயன்றி ந்த் எனவும் த்த் எனவும் இனத்தோடும் தன்னோடும் இணைந்தும் வரும்; சூழ்நிலையால் டகரமாகவும் றகரமாகவும் மாற்றம் பெறுதலுமுண்டு. தகரத்துக்கு முன்வரும் எழுத்தே இம்மாற்றத்திற்குக் காரணமாகும்.

செய்தான்—செய் + த் + ஆன்—தனித்து வந்தது

நடந்தான் — நட + ந்த் + ஆன் — இனத்தோடு இணைந்து வந்தது

படித்தான்—படி + த்த் + ஆன்—தன்னோடு இணைந்து வந்தது

உண்டான்—டகரமாக மாற்றம் பெற்றது

தின்றான்—றகரமாக மாற்றம் பெற்றது

டகர றகர மாற்றத்திற்கு முறையே முன்னின்ற ணகர னகரங்களே காரணங்களாகும்.

இகரம், இன், ன என மாறி வரும். குற்றுகர ஈற்றுச் சொற்கள் இவ்விடைநிலைகளைப் பெற்றுவரும்.

சிறுபான்மை முற்றுகர ஈறுகளும் பிற ஈறுகளும் இவ் விடைநிலைகளைப் பெறுதல் உண்டு.

எஞ்சியது—எஞ்சு + இ + ய் + அ + து

குற்றுகர ஈறு இகர இடைநிலை பெற்றது.

ஆடினன்—ஆடு + இன் + ஆன்

கட்டினன்—கட்டு + இன் + ஆன்

குற்றுகர ஈறு இன் இடைநிலை பெற்றது.

தாவினன்—தாவு + இன் + ஆன்

முற்றுகர ஈறு இன் இடைநிலை பெற்றது. தழுவு, தள்ளு, அள்ளு, பண்ணு போன்றவையும் இவ்வாறு வருதல் காண்க.

போயினன்—போ + இன் + ஆன்

பிற ஈறு இன் இடைநிலை பெற்றது.

போனன்—போ + ன் + ஆன்

பிற ஈறு னகர இடைநிலை பெற்றது.

பகுதி இரட்டித்து இறந்தகாலம் காட்டல்

சில பகுதிகள் இரட்டித்தும் இறந்தகாலம் காட்டுதல் உண்டு.

நக்கான்—நகு → நக் + த் + ஆன்

விட்டான்—விடு → விட் + த் + ஆன்

உற்றான்—உறு → உற் + த் + ஆன்

ந்த் என்பது ஞ்ச் எனவும், த்த் என்பது ச்சி எனவும் மாற்றம் பெறுதல் உண்டு. இம் மாற்றம் 7 ஆம் நூற்றாண்டி லிருந்து நிகழ்ந்திருக்க வேண்டும். இன்றைய பேச்சு மொழியில் இம் மாற்றம் மிகுதியாகக் காணப்படுகிறது.

இ, ஈ, ஏ, ஐ, என்னும் முன்னண்ண உயிர்கள் வருவழியே இம் மாறுதல் நிகழும்.

அய்ந்து என்பது அஞ்சு என ஆவதைப் போல உய்ந்து என்பது உஞ்சு என்றாகும். இவ்வாறு அப்பர் தேவாரத்தில் வந்துள்ளது.[1]

தற்காலத்தில் செய்தான் என்பது செஞ்சான் எனவும், பெய்தது என்பது பேஞ்சது எனவும் வழங்குகின்றன.

காய்ந்தது என்பது காஞ்சது எனவும், தீய்ந்தது என்பது –தீஞ்சது எனவும் வழங்குகின்றன.

படித்தான் என்பது படிச்சான் எனவும், நடித்தான் என்பது நடிச்சான் எனவும் வழங்குகின்றன.

இறந்தகால வினையெச்சம்

செய்து, உண்டு, தின்று என்பன இறந்தகால வினையெச்ச வடிவங்களாகும்.

செய்யா, செய்யூ, செய்பு என்னும் வாய்பாடுகளும், அழீஇ, தழீஇ போன்றனவும் பழந்தமிழில் வரும் இறந்த கால வினையெச்ச வடிவங்களாகும்.

புகா (புகுந்து); காணூஉ; அருந்துபு

இறந்த காலப் பெயரெச்சம்

செய்த என்னும் வாய்பாடு இறந்தகாலப் பெயரெச்ச வடிவாகும். ஈண்டு அகர ஈறு பெயரெச்சத்தைக் காட்டுகிறது. இய என்பதும் இப் பெயரெச்ச விகுதியாக வரும்.

வந்த, பார்த்த, உண்ட
ஒரீஇய, தழீஇய

செயின் என்னும் வாய்பாடும் பழங்காலத்தில் வினையெச்சமாக வழங்கியது. இது நிபந்தனை வினையாகும்.

---

1. D. V. M பக். 109

'மயிர் நீப்பின்'

இவ் வாய்பாட்டின் இன் என்பதற்கு மாறாகத் திருக்குறளில் 'இல்' என்பது வருகிறது.

உணில் —குறள்—922

பிற்காலத் தமிழில் இன் என்பதற்கு மாறாக ஆல் இடம் பெற்றது. ஆல் என்பது ஆகில் என்பதன் திரிபாகும்.

அஃது சில இடங்களில் ஏல் எனவும் திரிபு பெறுகிறது.

தமிழைப் போலவே மலையாளத்தில் இறந்தகால இடைநிலைகள் இடம்பெற்றுள்ளன.

ந்த் என்பது ஞ்ஞ் எனவும், த்த் என்பது ச்ச் எனவும் மாறி வருகின்றன.

கன்னடத்தில் த (d), த (t), ந்த், இத் (id), இ என்பன இறந்த கால இடைநிலைகளாக வருகின்றன.

தெலுங்கில் எ, இ, இதி என்பன இறந்தகால இடைநிலைகளாகும்.[2]

இம் மொழியில் வினையெச்ச வடிவங்களில் இகரம் வருகிறது.

நிகழ்கால இடைநிலைகள்

பழங்காலத்தில் நிகழ்வுக்கு எனத் தனிக் காலஇடைநிலை இல்லை. நன்னூல் கின்று என்னும் இடைநிலையை நிகழ்காலத்திற்குரியதெனக் குறிப்பிடுகிறது.

இவ் விடைநிலை முதன்முதல் பரிபாடற்கண் வந்துள்ளது.

சேர்கின்ற (பரி. 22-35)

சிலப்பதிகாரத்திலும் கீழ்வரும் சொற்களில் இடம் பெற்றுள்ளது.

ஓசனிக்கின்ற, ஊர்கின்ற, உருள்கின்ற

---

1. D. V. M. பக். 112
2. D. V. M. பக். 112

மணிமேகலையிலும் பின்வரும் சொல்லில் இடம்பெற்றுள்ளது.

சாதிக்கின்ற[1] (மணி. 29-299)

இச் சான்றுகள் அனைத்தும் பெயரெச்ச வடிவங்களே.

ஏழு, எட்டாம் நூற்றாண்டுகளில் இது முற்று வடிவத்தில் இடம்பெறுகிறது.

இலக்கண நூல்களுள் பதினொன்றாம் நூற்றாண்டைச் சார்ந்த வீரசோழியமே முதன்முதலில் கின்று, கிறு என்னும் நிகழ்கால இடைநிலைகளைக் குறிப்பிடுகிறது.

பலவின்பால் முற்றில் மட்டும் கின்று என்ற வடிவம் இடம் பெறுகிறது.

கிறு, அம் முற்றில் இடம் பெறவில்லை. இது பேச்சுத் தமிழில் ர, க்ர எனத் திரிபு பெற்றுள்ளது.

வர்ரான், செய்ரான்; பாக்ரான்

இடைக் காலத்தில் கின்று, கிறு என்பனவேயன்றி நில், கிட, இரு என்பன ஆ என்பதனோடு சேர்ந்து நிகழ்காலத்தை உணர்த்தின.

ஆநின்று, ஆகிடந்து, ஆவிருந்து, என்பன உரைகளில் மட்டும் வருகின்றன.

செய்யாநின்று—இஃது இரு சொற்களின் சேர்க்கை. இதனைச் செய்+ஆநின்று எனப் பிறழப் பிரித்ததால் ஆநின்று என்னும் வாய்பாடு ஏற்பட்டது என்பர்.

வீரசோழியமும் நன்னூலும் ஆநின்று என்பதை நிகழ் கால இடைநிலை என்று கூறுகின்றன. இவ் விரு நூல்களும் ஆகிடந்து, ஆவிருந்து என்பனவற்றைக் குறிப்பிடவில்லை.[2]

---

1. D. V. M. பக். 240
2. A History of the Tamil Language பக். 142

சங்க இலக்கியத்தில் 'செய்கின்று' என்னும் வடிவம் இறந்தகால வினைமுற்றைக் குறிக்கிறது.

அது செய்கு + இன் + து என்பதன் சேர்க்கையாகும்.

ஐங்குறுநூற்று உரையாசிரியர் செய்கின்று என்பதற்கு நிகழ்காலப் பொருளில் உரை கூறியுள்ளார். இதுவும் பிறழ உணரும் உணர்ச்சியால் செய்+கின்று எனப் பிரித்துக் கின்று என்பதைத் தனி இடைநிலையாகக் கொண்டதன் விளைவே யாகும்.

செய்கின்று என்ற இறந்தகால வடிவமே பிற்காலத்து நிகழ்காலத்தை உணர்த்தத் தொடங்கி, கின்று என்னும் தனி இடைநிலை அமையக் காரணமாயிற்றெனத் தெரிகிறது.

எதிர்கால இடைநிலைகள்

1. ப, வ என்பன எதிர்கால இடைநிலைகளாகும். சூழ் நிலைக்கேற்ப இவை மாறிவரும்.

செய்வான்; உண்ணுவான்—வ
உண்பான்; நடப்பான்—ப

2. செய்யும் என்னும் வாய்பாடும் எதிர்காலத்தை உணர்த்தும். இது முற்றுப் பொருளிலும் பெயரெச்சப் பொருளிலும் வரும்.

3. சில சொற்களில் வகரமும் பகரமும் பொருள் வேறு பாட்டிற்குக் காரணமாகின்றன.

சேர்வேன்—தன்வினை—வ
சேர்ப்பேன்—பிறவினை—ப

4. சில சொற்களில் ககரம் எதிர்காலத்தை உணர்த்து கிறது.

செய்கு, செய்கம்; காண்கு, காண்கம்; பாடுகேம்

5. பகரம் அகரத்தோடு சேர்ந்து படர்க்கைப் பன்மைப் பொருளையும் தருதல் உண்டு.

என்ப, ஆகுப, உண்ப

6. தகரம் தனித்தோ, இணைந்தோ நின்று, தன்மை முன்னிலை வினைகளில் எதிர்காலத்தைக் காட்டுதல் உண்டு.

அஞ்சுதும், அறிதும்—த்
அடித்தும், கடித்தும்—த்த் } தன்மை வினை

படர்தி, அறிதிர்—த்
சேறி, கோறி—ற் (த்) } முன்னிலை வினை

சேறி, கோறி என்பனவற்றிலுள்ள றகரம் தகரத்தின் திரிபாகும்.[1]

7. மார் என்னும் விகுதி எதிர்காலத்தை உணர்த்தும். அது பண்டைக் காலத்து முற்றுப் பொருளிலும் எச்சப் பொருளிலும் வந்தது.

பிற்கால இலக்கணிகள் முற்றுப் பொருளில்தான் வரும் என்றனர்.

கொண்மார் (புறம். 15)

காண்மார் (குறு. 4)[2]

தொல்காப்பியர் இதனைப் பல்லோர் படர்க்கை எனக் குறிப்பார்.

'மாரைக் கிளவியும் பல்லோர் படர்க்கை'

பெயரெச்சங்கள்

செய்கின்ற, செய்கிற என்பன நிகழ்காலப் பெயரெச்ச வடிவங்களாகும்.

செய்யும் என்பது எதிர்வையும் நிகழ்வையும் உணர்த்தும் பெயரெச்ச வாய்பாடாகவும் வரும்.

வரும் சிறுவன் நல்லன் (எதிர்வு)

படிக்கும் பாடம் நன்று (நிகழ்வு)

---

1. D. V. M. பக். 244
2. D. V. M. பக். 245

சிறுவன் வரும்;

சிறுவன் படிக்கும்

இத் தொடர்களில் வந்துள்ளவை எதிர்வையும் நிகழ்வையும் உணர்த்தும் முற்று வாய்ப்பாடுகளாகும்.

வினையெச்சங்கள்

வான், பான், பாக்கு என்னும் வினையெச்ச வடிவங்கள் முதன் முதலில் குறுந்தொகையிலும் பரிபாடலிலும் இடம் பெற்றன.

பான் என்பது வான் என்பதன் மாற்று வடிவமாகும்.

காண்பான்—குறு. 97

வருவான்—குறு. 113

கொள்வான்—பரி. 10

புரிவான்—பரி. 15[1]

பாக்கு என்பது திருக்குறளில் மட்டும் இடம் பெற்றுள்ளது.

படுபாக்கு—குறள். 164

என்பாக்கு—குறள். 136[2]

உந்ந் என்பது மலையாளத்தில் நிகழ்வை உணர்த்தும். இது கிறு, கின்று என்பவற்றின் திரிபாகும். உம் என்பது எதிர்கால இடைநிலையாகும்.

உத் என்பது கன்னடத்தில் நிகழ்கால இடைநிலையாகும். வ, ப (b) என்பன எதிர்கால இடைநிலைகளாகும்.

உண்டு என்பதன் திரிபாகிய உன் என்பதும், துன்னு என்பதும் தெலுங்கில் நிகழ்கால இடைநிலைகளாகும். தா, துன், தி என்பன எதிர்கால இடைநிலைகளாகும்.[2]

---

1. D. V. M. பக். 240, 248
2. D. V. M. பக். 249, 256, 263

18. எதிர்மறை வினைகள்

1. எதிர்மறை இடைநிலைகள், முற்றுகள்

இன்று, இல்லை; அன்று, அல்ல எனும் தனிச் சொற்களைப் பெற்றுத் தொடர்நிலைகளில் எதிர்மறைப் பொருளை உணர்த்துவதோடு, சொல் நிலையிலும் எதிர்மறை இடைநிலைகளைப் பெற்றுத் திராவிட வினைச்சொற்கள் எதிர்மறைப் பொருளை உணர்த்துகின்றன.

1. ஆ, இல், அல் என்பன எதிர்மறை இடைநிலைகளாகும். இவற்றுள் ஆகாரம் புணர்ந்து கெட்டதாகக் கொள்ளுவர்.

செய்யான்—செய் + ஆ + ஆன் வாரான்—வார் + ஆ + ஆன்	ஆ
செய்திலன்—செய் + த் + இல் + அன் வந்திலன்—வ + ந் + த் + இல் + அன்	இல்
செய்யலன்—செ + ய்அல் + அன் வாரலன்—வார் + அல் + அன்	அல்

இக் காலத் தமிழில் மாட்டு என்னும் துணைவினையோடு ஆகரம் சேர்ந்து எதிர்மறைப் பொருளை உணர்த்துகிறது.

செய்யமாட்டான்

வரமாட்டான்[1]

அல், இல் என்பன சங்க இலக்கியங்களிலும் துணைவினைகளாக நின்று எதிர்மறைப் பொருளை உணர்த்தின.[2]

---

1. D. V. M. பக். 332 2. D. V. M. பக். 334

2. அல் என்பது தனக்கு முன்னின்ற பொருளை மறுத்துப் பிறிதொன்றனைச் சுட்டும்.

குற்றியல்லன்
மகனன்று

சொல் நிலையில் முக்காலத்துக்கும் பொதுவான பகுதியோடு சேர்ந்து எதிர்மறைப் பொருளை உணர்த்தும்.

செய்யலன்—செய் + அல் + அன்

3. இல் என்பது தனித்து நின்று இன்மைப் பொருளை உணர்த்தும்.

குருடு காண்டல் பகலிலும் இல்லை.

சொல் நிலையில் கால இடைநிலையை யடுத்துநின்று எதிர்மறைப் பொருளை உணர்த்தும்.

செய்திலன்—செய் + த் + இல் + அன்

4. இல், அல் என்பன சங்ககாலத்தில் பகுதிகளோடும் முற்றுகளோடும் சேர்ந்து எதிர்மறைப் பொருளை உணர்த்தின. முற்றுகளோடு சேரும்பொழுது அல், பாலீறுகளைப் பெற்று நிற்கும்.

செய்திலம்—செய் + த் + இல் + அம்

செல்லலம்—செல் + அல் + அம்

இல், அல் என்பன பகுதிகளோடு சேர்ந்து எதிர்மறைப் பொருளை உணர்த்தின.

கலங்கினேன் இல்லை

கலங்கினேன்	அல்லேன்	அல், பாலீறு பெற்றது
கலங்கினாய்	அல்லை	
கலங்கினான்	அல்லன்	

இல், அல் என்பன முற்றுவினையோடு சேர்ந்து எதிர் மறைப் பொருளை உணர்த்தின.

இல், அல் என்பன பெயர்களோடு சேருங்கால் பாலீறு களைப் பெறும்.

உண்டலும் இலர்
அறிந்ததும் இலேன்
பெண்டிரேம் அல்லேம்
மலைந்தோன் அல்லன்[1]

இல் என்பது முதன்முதலில் திருக்குறளில் பாலீறு பெறாது வந்துளது.

யாம் கண்டது இல்—திருக்குறள்—1071
யாம் அறிவது இல்லை—திருக்குறள்—61[2]

இல் என்பது ஐகாரச் சாரியை பெற்று இருதிணை ஐம்பால் களிலும் வருகிறது. அது முற்று வினையோடும் எச்சவினை யோடும் சேர்ந்து நிற்கும்.

வந்தது இல்லை—முற்றோடு சேர்ந்தது
வரவில்லை—எச்சத்தோடு சேர்ந்தது

இக் காலத்து வந்தான் இல்லை, செய்திலன் போன்ற நிலையில் சொற்கள் இடம் பெறுவதில்லை. தொகுநிலையினின்று பிரிநிலையெய்திக் காலம் காட்டுகின்றன. இவ்வாறு காலம் காட்டுங்கால் நேற்று, இன்று, நாளை என்பனவற்றை முன்னிட் டுக்கொண்டு முறையே முக் காலங்களையும் காட்டும்.

எதிர்காலத்து வருங்கால் ஆகாரத்தோடு கூடிய மாட்டு என்பது வினைக்கண் இடம் பெறும்.

வந்திலன் } தொகுநிலை
வாரலன் }

நேற்று அவன் வரவில்லை }
இன்று அவன் வரவில்லை } பிரிநிலை
நாளை அவன் வரமாட்டான் }

---

1. D. V. M. பக். 334, 335
2. D. V, M. பக். 335

இல்லை என்பது இருதிணை ஐம்பாற்கண் வருதலோடு முக்காலத்துக்கும் பொதுவாகவும் வருதல் உண்டு.

வந்தது இல்லை—இறப்பு

வருகிறது இல்லை—நிகழ்வு

வருவது இல்லை—எதிர்வு

2. எதிர்மறை வினையெச்சங்கள்

பழந்தமிழில் எதிர்மறை வினையெச்சங்கள் மூவகை வடிவில் வழங்கின.[1]

1. அஞ்சா—அஞ்சு + ஆ
2. அஞ்சாது—அஞ்சு + ஆ + து
3. அஞ்சாமல்—அஞ்சு + ஆ + மல்

இக் காலத்து மல் ஈற்று வினையெச்சங்களே மிகுதியாக வழங்குகின்றன.

ஆ கார எதிர்மறையை முன்னிட்டு வரும் விடு என்னும் துணை வினையும் இக் காலத்து எதிர்மறைப் பொருளில் பயின்று வருகிறது.[2]

சொல்லாவிட்டால்

போகாவிட்டால்

3. எதிர்மறைப் பெயரெச்சம்

வினைப் பகுதியோடு ஆகாரம் சேர்ந்த வடிவே (செய்யா) பழைய பெயரெச்ச வடிவாகும்.

ஓவாப் பிணி—திருக்குறள்-134

வாழாக் கவரிமா— " -963[3]

இலக்கணிகள் இதனை ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் என்பர்.

1, 2, 3. D. V. M. பக். 336, 337

செய்யாது என்னும் வினையெச்ச வடிவு, ஈற்றில் பெயரெச்ச விகுதியாய அகரத்தைப் பெற்றும் பெயரெச்ச வடிவு அமைதல் உண்டு. இஃது அருகிய வழக்காகும்.

செய்யாத—செய்யாது+அ

வாழாத—வாழாது+அ

இலக்கணிகள் இதனை செய்+ஆ+த்+அ எனப் பிரித்துத் தகர ஒற்றை எழுத்துப்பேறு என்பர்.

4. ஏனைய திராவிட மொழிகளில்

மலையாளத்திலும் பழந்தமிழைப் போலவே எதிர்மறை வடிவம் உண்டு. அவ் வடிவில் ஆகாரமே எதிர்மறை இடைநிலையாகும்.

இக் கால மலையாளம் 'இல்ல' என்னும் சொல்லைப் பெற்று எதிர்மறைப் பொருளை உணர்த்துகிறது.

கன்னடத்தில் அகரம் எதிர்மறைப் பொருளை உணர்த்தும் விகுதியாக வருகிறது.

இல்ல என்பது எதிர்மறை வினையாக வழங்குகிறது.

தெலுங்கிலும் அகரம் எதிர்மறைப் பொருளை உணர்த்தும் விகுதியாக வருகிறது.

இக் காலத் தெலுங்கில் 'லேது' என்பது எதிர்மறை வினையாக வழங்குகிறது.

19. தெரிநிலை, குறிப்பு வினைகள்

தெரிநிலைவினை, குறிப்புவினை என வினைகள் இருவகைப் படும்.

1. தெரிநிலைவினை

தெரிநிலை வினை காலத்தை வெளிப்படையாகக் காட்டும். இதன் பகுதி வினையாக இருக்கும்.

செய்தான்—இறப்பு
செய்கிறான்—நிகழ்வு
செய்வான்—எதிர்வு

தொல்காப்பியர் காலத்தில் சில தெரிநிலைகள் குறிப்பாவே காலம் காட்டின.

2. குறிப்புவினை

குறிப்புவினை காலத்தைக் குறிப்பாக உணர்த்தும். இதன் பகுதி பெயராகவும் பண்பாகவும் இருக்கும். இஃது ஆறாம் வேற்றுமை உடைமைப் பொருளையும், ஏழாம் வேற்றுமை இடப் பொருளையும், ஒப்புப் பொருளையும் உணர்த்தும்.

பொன்னன்—பெயர்
கரியன்—பண்பு } உடைமைப் பொருள்

அகத்தன்
புறத்தன் } பெயர் } இடப் பொருள்

பொன்னன்னன்
புலி போல்வன் } பெயர் } ஒப்புப் பொருள்

இக் குறிப்பு வினைமுற்று உடைமைப் பொருளிலும், இடப் பொருளிலும் வருதலோடு, அன்மை, இன்மை, உண்மை, வன்மை முதலாய பொருள்களிலும் வரும்.

அல்லன், அல்லள்—அன்மைப் பொருள்

இலன், இலள்—இன்மைப் பொருள்

உளன், உளள்—உண்மைப் பொருள்

வல்லன், வல்லள்—வன்மைப் பொருள்

நல்லன், தீயன், உடையன் என நன்மை, தீமை, உடைமை ஆகிய பொருள்களிலும் வருதல் காண்க.

3. பெயர், குறிப்பு வினைமுற்று—வேறுபாடு

பாலீறுகள் பெற்ற பெயர்களுக்கும், குறிப்பு வினைமுற்று களுக்கும் சிறுவேறுபாடு உண்டு. பெயர்கள் சாரியை பெறுவ தில்லை; குறிப்பு வினைமுற்றுகள் சாரியை பெறும்.

பெயர்	குறிப்புவினை
கண்ணன்	கண்ணினன்
ஊரன்	ஊரினன்
அன்பன்	அன்பினன்
இல்லாள்	இல்லினள்

சில பெயர்ச் சொற்கள் பகுதி, விகுதி யெனப் பிரித்தறியக் கூடா நிலையில் பாலீறுகளைப் பெற்று நிற்றல் உண்டு. அவை குறிப்பு வினைகள் அல்ல.

தலைவி, தோழி, வண்ணாத்தி

4. தெரிநிலை, குறிப்புவினை—வேறுபாடு

1. தெரிநிலை வினைகள் பகுதியளவில் நின்றும், ஏவல், வியங்கோள் விகுதிகளைப் பெற்றும் ஏவற் பொருளையும் வியங் கோள் பொருளையும் உணர்த்தும்.

குறிப்பு வினைகள் ஏவற் பொருளையோ, வியங்கோள் பொருளையோ உணர்த்தா.

2. தெரிநிலை வினைகளுக்குச் செயலை உணர்த்தும் வினை களே பகுதியாக வரும்.

குறிப்பு வினைகளுக்குப் பெயர்களும், பண்புச் சொற்களுமே பகுதியாக வரும்.

3. தெரிநிலை வினைகள் கால இடைநிலைகளைப் பெறும்; குறிப்பு வினைகள் அவ்வாறு பெறுவதில்லை.

4. தெரிநிலை வினைகள் எதிர்மறை இடைநிலைகளை ஏற்று எதிர்மறைப் பொருளை உணர்த்தும்.

குறிப்பு வினைகள், பொதுவாக எதிர்மறை இடைநிலைகளை ஏற்பதில்லை. அன்மை, இன்மை, முதலாய அடிச் சொற்களே எதிர்மறைப் பொருளை உணர்த்தலின் தனியாக எதிர்மறை இடைநிலையை அவை பெறுவதில்லை.

சில சொற்களில் மட்டும் ஆகாரம் சேர்ந்து எதிர்மறைப் பொருளைத் தருகின்றது.

அது இன்னது
அவை இன்ன

5. தெரிநிலை வினையில் வாரா, தின்னு என அடிச்சொற் களோடு ஆகாரம் சேர்ந்து எதிர்மறைப் பொருளை உணர்த் துதல் போலக் குறிப்பு வினைமுற்றுகளில் வருவதில்லை.

6. தெரிநிலை வினைகள் அன் சாரியை ஏற்கும்.

குறிப்பு வினைகள் இன் சாரியை ஏற்கும்.

தெரிநிலை	குறிப்பு
நடந்தனன்—அன்	அன்பினன்—இன்

7. தெரிநிலை வினைகள் இக் காலத்தும் பயின்று வழங்கு கின்றன. குறிப்பு வினைமுற்றுகள், செய்யுள், வழக்கு இரண் டிலுமே வழக்கிழந்துவிட்டன.

குறிப்பு வினையாலணையும் பெயர் மட்டும் வழக்கில் உள்ளது.

நல்லதைச் செய் } குறிப்பு வினையாலணையும்
தீயதைக் கேளாதே } பெயர்கள்

அவன் கரியன், அவன் நல்லன் என்பன இன்று முறையே அவன் கரியவன், அவன் நல்லவன் என வழங்குகின்றன.[1]

8. தெரிநிலை வினையில் பெயரெச்சங்கள் செய்த, செய்கின்ற, செய்யும் என்னும் வாய்பாடுகளில் முறையே முக் காலங்களை உணர்த்துகின்றன.

குறிப்புப் பெயரெச்சங்கள் காலத்தை உணர்த்துவதில்லை.

உண்ட சிறுவன்—செய்த }
உண்கின்ற சிறுவன்—செய்கின்ற } தெரிநிலை வினை
உண்ணும் சிறுவன்—செய்யும் }

நல்ல சிறுவன் } குறிப்பு வினை
தீய செயல் }

9. தெரிநிலைப் பெயரெச்சம் அ, உம் என்னும் இருவிகுதிகளைப் பெறும்.

குறிப்புப் பெயரெச்சம் அகரத்தை மட்டுமே விகுதியாகப் பெறும்.

---

1. இலக்கண உலகில் புதிய பார்வை —பக். 65.

20. தொடரியல்

1. தமிழில் தொடர் அமைப்பின் அடிப்படையிலேயே சொல்லிலக்கணமும்,எழுத்திலக்கணமும் ஆராயப்படுகின்றன.

தொடர் இலக்கணம் அல்வழித் தொடர், வேற்றுமைத் தொடர் எனும் இருவகை நிலைகளில் ஆராயப்படுகிறது.

நிலைமொழி, வருமொழி புணரும் புணர்ச்சி, இவ்விரு வகை நிலைகளில் அமைகிறது.

2. தொடர் நிலைகளில் திராவிட மொழிகள் வடமொழி களினின்றும் பெரிதும் அடிப்படையிலேயே வேறுபடுகின்றன.

முதலில் எழுவாயும், அடுத்துச் செயப்படுபொருளும், இறுதியில் பயனிலையும் நிற்றல் தமிழ் மரபாகும்.

சாத்தன் வீடு கட்டினான்.

வடமொழியில் செயப்படுபொருள் இறுதியில் நிற்கும். ஆங்கிலமும் இவ் வமைப்பினதே.

Sathan bought a houe

செய்யுளிலும், உணர்ச்சி நிலையிலும் இம் முறைமாறி வருதலும் உண்டு.

'கண்டனன் கற்பினுக் கணியை'—கம்பர்

'பார்த்தேன் அவளை நேற்று' (பேச்சு மொழி)

3. வடமொழியில் பெயர்களே அன்றிப் பெயரடைகளும் பாலையும், எண்ணையும் உணர்த்துகின்றன. இந்தி மொழியும் இவ்வமைப்புடையதே.

அச்சா லட்கா—நல்ல பையன்

அச்சி லட்கி —நல்ல பெண்

அச்சே லட்கே—நல்ல பையன்கள்

தமிழ் மொழியில் பெயரடைகள் பால், எண் காட்டுவதில்லை. அவை இருதிணை ஐம்பால்களுக்குப் பொதுவாக வழங்குகின்றன.

நல்ல சிறுவன்—ஆண்பால்
நல்ல சிறுமி—பெண்பால் } உயர்திணை
நல்ல மக்கள்—பலர்பால்

நல்ல மாடு—ஒன்றன்பால்
நல்ல மாடுகள்—பலவின்பால் } அஃறிணை

4. ஆங்கில மொழியில் ஆண்பாற் படர்க்கையில் மட்டும் எழுவாயும் பயனிலையும் பால் இயைபு பெறுதல் உண்டு.

He comes

ஏனைய இடங்களில் அந் நியதி இல்லை; பண்டைக் காலத்தில் இருந்திருக்கலாம்.

Thow cometh; He comes

முன்னிலைப் பெயரிலும் ஆங்கிலத்தில் ஒருமைப் பன்மை வேறுபாடு மறைந்து விட்டது.

You

இஃது ஒன்றே முன்னிலை ஒருமைப் பன்மைக்குப் பொதுவாக வழங்குகிறது.

5. பண்டைத் தமிழில் முற்று முன்னும் அது கொள்ளும் பெயர் பின்னுமாக வரும் தொடர்களே (வினைமுற்றுத் தொடர்கள்) வழக்கிலிருந்தன எனலாம்,

செய்தான் சாத்தன்—வினைமுற்றுத் தொடர்

பின்வரும் தொடர்களும் வினைமுற்றுத் தொடர்களாக இருந்திருக்க வேண்டும்.

செய்யும் சாத்தன்

செய்கு யான்

வந்த சாத்தன்

வந்து அவன்

இவற்றுள் வந்து அவன் என்பது 'வந்தான்' என இணைந்து ஒரு சொல்லாகிப் பின் மீண்டும் ஒரு பெயரைப் பெற்று வந்தான் அவன் என்றாகி இருக்க வேண்டும்.

இதனால், இன்று வினையெச்சங்களாக உள்ளவை அனைத்தும் பண்டைக் காலத்து முற்றுகளாக வழங்கியிருக்க வேண்டும் என்பது பெறப்படுகிறது.

செய்தான் சாத்தன்

வந்தான் அவன்

என்பன போன்ற வினைமுற்றுத் தொடர்கள் பிற்காலத்தில் முன்பின்னாக மாறிச்

சாத்தன் வந்தான்

அவன் வந்தான்

என எழுவாய்த் தொடர்களாக அமைந்திருக்க வேண்டும்.

6. மலையாள மொழியில் அவன் வந்நு (வந்து) என்பதே தொடர்நிலை. ஆண்டு முற்றுகள் பாலீறுகளைப் பெறுவதில்லை.

7. செய்யும் என்னும் வாய்பாடு பயனிலைப் பொருளைத் தருங்கால், முற்று எனவும் அடைமொழிப் பொருளைத் தருங்கால் பெயரெச்சம் எனவும் வழங்கும்.

செய்யும் பொன்னன் } பயனிலைப் பொருளன-முற்று
பொன்னன் செய்யும் }

செய்யும் பொன்னன் வந்தான்	}	அடைமொழிப்பொரு
வந்தான் செய்யும் பொன்னன்	}	ளன-பெயரெச்சம்

எச்சப் பொருள் படுங்கால் எழுவாய் பிறிதோர் வினையைப் பயனிலையாக ஏற்றல் காண்க.

8. வான், பான், பாக்கு என்பன முற்றுகளாக வழங்கிப் பின் எச்சங்களாக மாறியிருக்க வேண்டும்.

அவன் செய்வான்—முற்றுப் பொருளது

அவன் செய்வான் வந்தான்—எச்சப் பொருளது

எச்சப் பொருள்படுங்கால் எழுவாய் பிறிதோர் வினையைப் பயனிலையாக ஏற்றல் காண்க.

எச்சங்கள் திணை, பால் காட்டா.

9. (பண்பும், சினையும், முதலும் தொடருங்கால் பண்பு (அடை), சினை, முதல் எனும் முறையில் தொடர்தல் வேண்டும்.

செய்யுளுள் சினையடை முதலடையாக முறைமாறி நிற்றலும் உண்டு.

கருங்கைக் கொல்லன்	}	முறையே நின்றன
செங்கால் நாரை		
கைக்கருங் கொல்லன்	}	செய்யுளுள் முறைமாறி
கால்செந் நாரை		நின்றன

10. இயற்பெயரும் கல்வி, குடி, தொழில் முதலியவற்றான் வரும் சிறப்புப் பெயரும், ஒரு பொருள்மேல் வரின் சிறப்புப் பெயர் முன்னும் இயற்பெயர் பின்னும் வருதல் வேண்டும்.

புலவன் தொல்காப்பியன்—கல்வி

பாண்டியன் நெடுஞ்செழியன்—குடி

ஆசிரியன் அகத்தியன்—தொழில்

எழுவாய், பயனிலையாகத் தொடரும் தொடர் நிலைக்கண் எழுவாயும், பயனிலையும் திணை, பால், எண் இடங்களால் ஒத்தியைதல் (concord) வேண்டும்,

சாத்தன் வந்தான் சாத்தி வந்தாள் சான்றோர் வந்தனர்	உயர்திணை	படர்க்கை
அது வந்தது அவை வந்தன	அஃறிணை	படர்க்கை
நீ வந்தாய் நீயிர் வந்தீர்	விரவுத்திணை—முன்னிலை	
யான் வந்தேன் யாம் வந்தேம்	விரவுத்திணை—தன்மை	

தன்மை, முன்னிலை இருதிணைக்கும் பொது. தன்மையை உயர்திணைக்கே உரித்தென்பார் தொல்காப்பியர்.

11. தொடர்நிலை வேற்றுமைத் தொடர், அல்வழித் தொடர் என இருவகைப்படும்.

இரண்டாம் வேற்றுமை முதல் ஏழாம் வேற்றுமை வரை ஆறு உருபுகளும் வெளிப்பட்டும் தொக்கும் நிற்கத் தொடரும் தொடர் வேற்றுமை எனப் பெயர்படும்.

எஞ்சி நின்ற 1. எழுவாய்த் தொடரும், 2. விளித் தொடரும், 3. வினைமுற்றுத் தொடரும், 4. எச்சத் தொடரும், 5. இடைச் சொற்றொடரும், 6. உரிச்சொற்றொடரும், 7. அடுக்குத் தொடரும். 8. வினைத்தொகையும், 9. பண்புத் தொகையும், 10. உவமைத் தொகையும், 11. உம்மைத் தொகையும், 12. அன்மொழித் தொகையும் அல்வழி எனப் படும்.

இவற்றுள் முன்னைய ஏழும் அல்வழித் தொகாநிலையெனவும், ஏனைய ஐந்தும் அல்வழித் தொகைநிலை எனவும் வழங்கும்.

12. தொடர் நிலைக்கண் வரும் சொற்கள் ஒன்றனை ஒன்று பொருளாற்றழுவி நிற்றல் வேண்டும். அவ்வாறு நிற்கும் தொடர்கள் தழுவு தொடர் எனப்படும்.

வினைமுற்றும், பெயரெச்சமும் பெயரையும் வினையெச்சம் வினையையும் தழுவி நிற்கும்.

சில இடங்களில் தழுவாது நிற்றலும் உண்டு. அது தழாத் தொடர் எனப்படும்.

✓13. அச்சம், வெகுளி, விரைவு முதலியன பற்றிச் சொற்கள் அடுக்கி வருதலும் உண்டு. அஃது அடுக்குத் தொடர் எனப்படும்.

பாம்பு பாம்பு—அச்சம்

அடி அடி—வெகுளி

போப் போ—விரை

✓14. இடப்பொருளைத் தரும் உருபுகள் வட மொழிக் கண்ணும், ஆங்கிலத்தும் இடப்பொருளின் முன்வரும் (Prepositions). திராவிட மொழிக்கண் அவ் வுருபுகள் இடப் பொருட்குப் பின்வரும் (Postpositions). இது திராவிட மொழியின் சிறப்பியல்பாகும்.

On the table—ஆங்கிலம்

மேசையின்மேல்—தமிழ்

✓15. இணைப்பிடப் பெயர் இடைவந்து இரு தொடர்களை இணைத்தல் ஆங்கில இயல்பாகும்.

பெயரெச்சமும், வினையாலணையும் பெயருமாய்த் தொடர் தல் தமிழியல்பாகும்.

This is the man who came

வந்த சாத்தன் போனான்

வந்தவன் போனான்

17. ஆங்கிலத்தில் And எனும் இணைப்புச் சொல்லால் இரு தொடர்கள் இணைகின்றன.

தமிழில் ஒன்றுக்கு மேற்பட்ட தொடர்கள் வினையெச்சங் களால் இணைகின்றன.

அவன் கண்டு கேட்டு உண்டு உயிர்த்து மகிழ்ந்தான்.

17\. தெரிநிலைவினை, குறிப்புவினை எனும் பாகுபாடு திராவிட மொழியின் சிறப்பியல்பாகும்.

தெரிநிலைவினை, வினைப்பகுதியை அடியாகக் கொண்டு தோன்றும். குறிப்புவினை, பெயர்ச் சொற்களையும் பண்புச் சொற்களையும் அடியாகக் கொண்டு தோன்றும்.

வனைந்தான்—தெரிநிலை வினை

பொன்னன்
கரியன் } குறிப்பு வினை

இவ் வமைப்பு ஐரோப்பிய மொழிகளில் இல்லை.

18\. ஐரோப்பிய மொழிகளில் வினைதான் பயனிலையாக வரும்.

தமிழில் வினையேயன்றிப் பெயரும், வினாவும் பயனிலைகளாய் வரும்.

அவன் வந்தான்—தெரிநிலை
அவன் பொன்னன்—குறிப்பு வினை
அவன் சாத்தன்—பெயர்
அவன் யாவன்—வினா

19\. ஐயுற்றவிடத்தும், இருதிணைப் பொருள்கள் விரவுமிடத்தும் பொதுமையும், மிகுதியும் காட்டும் பெயர், வினைகளே தமிழில் முடிபுகளாக (பயனிலைகளாக) வருகின்றன.

குற்றயோ மகனோ தோன்றா நின்ற உருபு?
ஆணோ பெண்ணோ தோன்றா நின்ற உருபு?
ஆணோ பெண்ணோ தோன்றா நின்றார்?
சோறும், கறியும் அயின்றார்
உடையும், வளையும், முடியும் அணிந்தார்.

செப்புத் தொடர், வினாத் தொடர் எனத் தமிழில் தொடர்கள் இருவகையாக அமையும்.

யாவர், யாது முதலாய வினாப் பெயர்களோ, ஆ, ஓ எனும் எழுத்துகளை ஈற்றில் கொண்ட பெயர், வினைகளோ செப்புத்

தொடரின் முன்போ, பின்போ நிற்கத் தமிழில் வினைத் தொடர்கள் அமையும்.

✓ 20. பெயர், வினைகளை அடுத்துக் கொல், ஆ, ஓ முதலாய இடைச்சொற்கள் வரத் தமிழில் ஐயத்தொடர்கள் அமையும்

அவனா இவனா அறியேன்
அவனோ இவனோ அறியேன்
அணங்குகொல் ஆய்மயில்கொல்

✓ 21. இன்று ஆங்கிலத்தை ஒட்டி ஐயத் தொடர்களில் அல்லது எனும் சொல் புகுந்துள்ளது.

சோறு அல்லது கறி உண்டான்

சோறோ கறியோ உண்டான் என்பது பழைய தொடர்.

✓ 22. வடமொழிக் காப்பியங்கள் தமிழில் புகுந்தமை யால் அக் காப்பியக் கவிதைகளைப் பின்பற்றிப் பல்வேறு விதமான அமைப்புடைய தொடர்கள் தமிழில் புகுந்துள்ளன.

'பரக்கழி இதுநீ பூண்டால் புகழையார்
பரிக்கற் பாலார்' —கம்பர் வாலிவதை-79

இதன்கண் செயப்படுபொருள் முதற்கண் வந்துள்ளமை காண்க.

'இச் சூத்திரம் எழுத்தினது இலக்கணம் சொல்லுதல் நுதலிற்று என்றவாறும்.'

'முதல் இடை கடைநிலை எழுத்துகள் சிறப்பியல்பு கொண்டவையாம் என்க.'

இவை போல்வன தமிழ் முடிபெனக் கூறுதற்கில்லை; வடமொழி முடிபுகளே.

✓ 23. சில வடமொழித் தொடர்கள் ஆங்கிலம் வழி யாய்த் தமிழ்க்கண் புகுந்துள்ளன.

'எவன் படிக்கிறானோ அவன் தேர்ச்சியடைவான்'
'குற்றம் செய்பவர்கள் தண்டிக்கப்படுவார்கள்'

இவை அவ்வாறு வந்தவை.

24. தமிழில் இடைச் சொற்கள் தொடர்நிலைகளில் வந்து தேற்றம், பிரிநிலை, முற்று, எச்சம், ஒழியிசை, கழிவு முதலாய பொருள்களைத் தோற்றுவிக்கின்றன.

அவனே செய்தான்—தேற்றம், பிரிநிலை முதலாயின
மூவேந்தரும் வென்றனர்—முற்று
சாத்தனும் வந்தான்—இறந்தது தழீஇய எச்ச உம்மை
படிக்கவோ வந்தான் (விளையாட வந்தான் எனும் பொருளது)—ஒழியிசை
வறிஞர்க்கு வழங்கினான் மன்—கழிவு

25. பண்டைக் காலத்து எதிர்மறை வினைகள் தனிச் சொல் நிலையிலேயே காலங் காட்டின. இக் காலத்துக் காலச் சொற்கள் தனியே பிரிந்து நின்று காலம் காட்டப் பிரிநிலைத் தொடர்களாகி எதிர்மறைப் பொருளைத் தருகின்றன.

செய்திலன்—நான் நேற்றுச் செய்யவில்லை
உண்டிலன்—அவன் இன்று உண்ணவில்லை

✓ 26. பண்டைக் காலத்துத் தன்மை வினைகள் பாலீறுகள் இன்றி, முற்றுப் பொருளைத் தந்தன; பிற்காலத்துப் பாலீறுகள் பெற்று அப் பொருளைத் தந்தன.

யான் செய்து—யான் செய்தேன்
யான் செய்கு—யான் செய்வேன்

✓ 27. எழுவாய், செயப்படுபொருள், பயனிலை, எச்சம், முற்று என ஆற்றொழுக்காகச் சொற்கள் தொடர்ந்து நின்று பொருளுணர்த்தல் தமிழ்த் தொடர் மரபாகும்.

வடமொழியில் உருபுகளை நோக்கியே பொருள் உணரப் படுவதால் கொண்டு கூட்டு, மொழிமாற்று முதலாய பொருள்கோளே மரபாகும்,

பொதுவாகக் கொண்டு கூட்டுப் பொருள்கோள் வட மொழியில் மிகுதி என்பர்.

வடமொழித் தாக்குதலால் தமிழ்க்கண்ணும் கொண்டு கூட்டும், மொழிமாற்றும் சில இடங்களில் வருகின்றன.

சுரை மிதப்ப அம்மி ஆழ—ஆற்றொழுக்கு

சுரையாழ அம்மி மிதப்ப—மொழிமாற்று

28. பண்டைக் காலத்து வினைமுற்று (பயனிலை) முன்பும் பெயர் (எழுவாய்) பின்புமாகத் தொடர்களில் இடம் பெற்றன.

'நோகோ யானே'

பிற்காலத்தும், செய்யுட்கண்ணும் உணர்ச்சிபடப் பேசுங் கால் உரைநடைக்கண்ணும் அம் மரபு இடம் பெற்றன.

'கண்டனன் கற்பினுக் கணியைக்
கண்களால்' —கம்பர்-திருவடி. 55

29. ஒருவர் என்பதும், அவர் என்பதும் ஆண், பெண் எனும் இருபாற்கும் பொதுவாக நிற்றல், திராவிட மொழியின் தனித் தன்மையாகும்.

ஈண்டு ரகர ஈறு ஆண்பாலுக்கும் பெண்பாலுக்கும் பொதுவாக வருகிறது.

ஒருவர் வந்தார்
அவர் வந்தார்
ஆசிரியர் வந்தார்

30. யாவர் என்பதன் மரூஉ மொழியாகிய யார் எனும் பன்மை வினுப்பெயர், பிற்காலத்து ஒருமைப் பெயர் களோடும் இயைந்துள்ளது.

இவன் யார் என்குவை யாயின்—புறம். 25

31. அன்பு காரணமாக அஃறிணையை உயர்திணையாக வும், உயர்திணையை அஃறிணையாகவும் சுட்டுதல் உண்டு.

எந்தை வந்தான் (எருதினை)
காளை வந்தான் (மகனை)

'செந்தார்ப் பைங்கிளியார்' என அஃறிணையை உயர் திணை வாய்பாட்டால் கூறுதலும் உண்டு.

32. தாம், தாங்கள் எனும் தற்சுட்டுப் பன்மைப் படர்க்கைப் பெயர்கள் இக் காலத்து முன்னிலைக்கண் வந்து மரியாதையைக் குறிக்கின்றன.

33. விரைவு, தெளிவு முதலாய பொருட்கண் காலம் மயங்கியும் வருதல் உண்டு.

இதோ வந்துவிட்டேன்—இறப்பு, நிகழ்வில் எதிர்வு—விரைவு

ஆண்டுச் சென்றால் அவன் செத்தான்—தெளிவு

21. மொழியும் மொழி வரலாறும்

மொழியின் தோற்றம்

மொழி எனும் சொல்லுக்கும், முழங்கு எனும் சொல்லுக்கும் தொடர்புண்டு என்றும், 'மொழி' என்பதினின்றே 'முழங்கு' எனும் சொல் தோன்றிற்று என்றும் சிலர் கூறுவர்.

'உணவு கோடற்கும், சுவாசித்தலுக்கும், பிறவற்றுக்கும் அமைந்த வாய், மூக்கு, குரல்வளை, நார்கள் முதலாய பல்வேறு உறுப்புகளை மனிதன் பேசுதற்கும் பயன்படுத்திக் கொண்டான். அஃது அவனது அறிவாற்றலைக் காட்டுகிறது.

தொடக்க கால மனிதன் முதன்முதலில் தன் கருத்தினைச் சைகைகளாலேயே பிறருக்கு அறிவுறுத்தி வந்தான். அச் சைகைகளுக்கு ஒலியும் துணை நின்றது. காலப் போக்கில் சைகைகள் குறைய, ஒலியே கருத்துணர்த்தும் கருவியாகி மொழி எனப்பட்டது. ஒலியும், அஃதுணர்த்தும் பொருளும் வேறின்றி நிற்பதே மொழியாகும். ஒலிக்கும் அதன் பொருளுக்கும் தொடர்பேற்பட்ட சூழலை மேனாட்டார் ஐவகைக் கொள்கைகளாகப் பகுத்துக் காட்டுவர்.

1. போலி மொழிக் கொள்கை (The Imitation theory or the Bou-wow theory):

ஒரு பொருள் ஒலிப்பது போல் ஒலிக்க அவ் வொலி, அப் பொருளை உணர்த்துவதைக் காண்கிறோம். காக்கை எனும்

---

1. Collected Papers—பக், 24.

ஒலி, அவ் வொலியைச் செய்யும் பறவையை உணர்த்துகிறது. cuckoo எனும் ஆங்கிலச் சொல்லும் அவ் வாறமைந்ததே. குழந்தை பேசும் பேச்சுகளுள் பல சொற்கள், அவ்வாறமை கின்றன. பூனையை 'மியாவ் மியாவ்' எனவும், நாயை 'வள் வள்' எனவும் அது குறிப்பிடுகிறது.

இவ்வாறே சொற்கள் படைக்கப்பட்டன என்பது இக் கொள்கையாளரின் கருத்தாகும்.

2. உணர்ச்சி மொழிக் கொள்கை (The Interjectional theory or the pooh-pooh theory):

வெறுப்பு, மகிழ்ச்சி, அழுகை, வியப்பு, அச்சம் முதலாய உணர்ச்சிகள் மேலோங்கும்போது சில ஒலிகள் வெளிப்பட்டு அவ் வுணர்ச்சிகளைக் குறிப்பதுண்டு. சீசீ, ஆஆ, ஐயோ ஐயோ, த்சீ, ஏஏ, ஓஓ, முதலாய சொற்கள் அத்தகையனவே.

இவ்வாறே சொற்கள் படைக்கப்பட்டன என்பது இக் கொள்கையாளரின் கருத்தாகும்.

3. பண்பு மொழிக் கொள்கை (The Ding dong theory):

ஒவ்வொரு பொருளும் ஒவ்வொரு தனித்தன்மை பெற்றிருப்பது போலவே ஒவ்வொரு ஒலியும் தனி இயைபை உடன் கொண்டுள்ளது என்பர்.

ஒளியுடைய பொருள் ஒளியோடு தொடர்புடைய சொல் தோன்ற ஏதுவாகிறது. இருள் (கருமை) உடைய பொருள் அவ்விருளோடு தொடர்புடைய சொல் தோன்ற ஏதுவாகிறது. இவ்வாறு பொருள்களுக்கு அமைந்துள்ள பண்புகள் தாமாக ஒலி வடிவில் சொற்களாக வெளிப்படுகின்றன. கருமை, செம்மை, வெண்மை, பொன்மை முதலாய சொற்கள் இவ்வாறு தோன்றியனவே.

இவ்வாறே சொற்கள் படைக்கப்பட்டன என்பது இக் கொள்கையாளரின் கருத்தாகும்.

4. ஏலேலோ கொள்கை (The yo—he—ho—theory)

சுமை தூக்குதல், வண்டியிழுத்தல், படகோட்டுதல் முதலாய கடினமான தொழிலாற்றுவோர், தம் உழைப்புச் சுமையை மறப்பதற்காகப் பல்வேறு ஒலிகளை எழுப்புதல் உண்டு. அவ் வொலிகளுள் சில காலப்போக்கில் குறிப்பிட்ட தொழில்களை உணர்த்திச் சொற்களாதல் உண்டு, இசைக்கு அடிப்படையான சொற்கள் இவ்வாறு தோன்றியிருக்கலாம்.

இவ்வாறே சொற்கள் படைக்கப்பட்டன என்பது இக் கொள்கையாளரின் கருத்தாகும்.

5. பாட்டு மொழிக் கொள்கை (The lyric theory)

உணர்ச்சிப் பெருக்கால் வெளிப்படும் இனிய ஓசை, அவ் வுணர்ச்சிகளை உணர்த்திச் சொல்லாதலும் உண்டு. மொழி களில் செய்யுள் வடிவே முதலில் அமைந்தமைக்கு இதுவே காரண மாகலாம். உணர்ச்சி ஒலிகள்—பாட்டு ஒலிகள்—மழலை ஒலிகளைப் போல இன்பந்தர வல்லன. குறிப்பிட்ட ஒலிகளே திரும்பத் திரும்ப வந்து, அவ் வொலிகளுக்குக் காரணமான உணர்ச்சிகளை உணர்த்திச் சொற்களாதல் உண்டு.

இவ்வாறே சொற்கள் படைக்கப்பட்டன என்பது இக் கொள்கையாளரின் கருத்தாகும்.

இவ் வைந்தனையும் தனித்தனியே நோக்குங்கால், ஒவ் வொன்றும் மொழியின் சில கூறுகளை உணரத் துணை செய்யுமே தவிர, மொழி முழுமைக்கும் காரணமாகா. மொத்தமாக நோக்குங்கால் இவ் வைந்தும் மொழியின் தோற்றத்திற்குக் காரணமாகலாம்.

தொல்காப்பியர், பவணந்தி முதலாய தமிழிலக்கணிகள் சிலரும் இவற்றோடு ஒத்த கருத்துகளை வெளியிட்டுள்ளனர்.

'இசையினும் பண்பினும் குறிப்பினும் தோன்றி' என உரிச் சொற்களின் தோற்றத்திற்கு விளக்கம் தருகிறார் தொல்காப் பியர். இசை, பண்பு, குறிப்பு எனும் மூன்றனையும் அடியாகக்

கொண்டு உரிச்சொற்கள் தோன்றின என்பது இத் தொடரின் கருத்தாகும். இம் மூன்றும் மேற்கூறிய ஐந்து கொள்கைகளை யும் தன்னுள்ளடக்கியுள்ளமை நோக்குவார்க்குப் புலனாகும்.

சொல்லுக்கும், அதன் பொருளுக்கும் இடையேயுள்ள தொடர்பு காரண காரியம் பற்றியது எனத் திட்டவட்டமாகக் கூறல் இயலாது.

முதலில் இடுகுறியாக அமைந்த சொற்களுள் சில, வளர்ச்சி பெற்ற நிலையில் காரணமும் காட்டத் தொடங்கின. இது பற்றியே பவணந்தியாரும்,

'இடுகுறி காரணப் பெயர்பொதுச் சிறப்பின'

என்றார். எனினும், ஒவ்வொரு சொல்லுக்கும், அதனதன் பொருளுக்கும் இடையேயுள்ள தொடர்பினை அறிதல் அவ்வளவு எளிதன்று. இதுபற்றியே தொல்காப்பியரும்,

'மொழிப்பொருட் காரணம் விழிப்பத் தோன்றா'

என்றார். மக்கள் வழங்கும் மொழிக்குப் புலவர்கள் வடிவு தந்து அதனை எழுத்து வடிவில் உலவவிட்டு நிலைபெறச் செய்தார்கள். இதனை உணராது புலவர்களே மொழிகளைப் படைத்தனர் எனல் பொருந்துவதன்று.

தமிழ்மொழி வரலாற்றை அறிவதற்குத் தமிழ் இலக்கண நூல்கள் மிகவும் துணை செய்கின்றன. அவை அவ்வக் காலங் களில் வழங்கிய சிறப்பு வழக்குகளையும், வடிவங்களையும் உணர்த்திக் காலப்போக்கில் மொழி அடைந்து வரும் மாற்றங் களைக் காட்டிவருகின்றன.

தமிழகத்தைப் பொறுத்தவரை சாசனச் சான்றுகளும் இம் மாற்றங்களைக் காட்ட ஓரளவு துணை செய்கின்றன.

காலந்தோறும் தோன்றி வரும் இலக்கியங்களும், அவ் விலக்கிய வழக்குகளை ஆராய்ந்து தரும் ஆய்வுக் கட்டுரை களும் மொழி வரலாற்றுக்குத் துணை செய்கின்றன.

இலக்கணங்களுக்கு எழுதப்பட்ட உரைகள் அவ்வக் காலங்களில் தோன்றிய வழக்காறுகளை அறிய உதவுகின்றன.

மெகாஸ்தனீசு, பிளினி, தாலமி, யுவான்சுவாங்கு, மார்க்க போலோ முதலியோர் தத்தம் காலங்களில் எழுதி வைத்த குறிப்புகளும் சில வழக்குகளை அறிய உதவுகின்றன. அவர்கள் தமிழ்ச் சொற்களை எவ்வாறு கேட்டுஉணர்ந்தார்கள் என்பதையும் அக் குறிப்புகள் விளக்குகின்றன.

மொழியாராய்ச்சி எனும் தொடரில் மொழி என்பது இலக்கியத்தை மட்டும் குறிப்பதன்று; பேச்சு மொழியையும் குறிக்கும். 'வழக்கும் செய்யுளும்' என இரண்டனையே தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். வழக்கு என்பது உரைநடை இலக்கிய வழக்கைக் குறிப்பதெனக் கூற இயலாது. அக் காலத்தில் இலக்கியம் என்பது செய்யுளாகத்தான் இருந்திருக்க வேண்டும். ஆனால், வழக்குஎன்பது பேச்சுவழக்கையே குறிப்ப தாகும்.

அளவுப் பெயர், நிறைப் பெயர், திசைப் பெயர், மரப் பெயர் முதலியன அடைந்த மாற்று வடிவங்களைத் தொல் காப்பியர் காட்டுவதால் அவற்றை இலக்கிய வழக்குச் சொற்கள் எனக் கொள்வதைவிடப் பேச்சு வழக்குச் சொற்கள் எனக் கொள்வதே பொருத்தமாகும்.

வடவேங்கடத்திற்கும், தென்குமரிக்கும் இடைப்பட்ட பகுதியே தமிழ்மொழி வழங்கிய நிலப்பரப்பாகும். திராவிட மொழிகளுள் தமிழும் ஒன்று.

22. திராவிட மொழிகள்

1856 ஆம் ஆண்டு அறிஞர் கால்டுவெல் வெளியிட்ட ஒப்பிலக்கணத்தில், தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம், துளு, குடகு என்னும் ஆறனையும் திருந்திய மொழிகள் எனவும், துதம், கோதம், கோண்ட, கோந்த் அல்லது கூ (ku), ஒரோஒன் (oraon), ராஜ்மஹால் எனும் ஆறனையும் திருந்தா மொழிகள் எனவும் குறிப்பிட்டுள்ளார்.[1]

இப் பொழுது திராவிட மொழிகள் இருபத்திரண்டு எனக் கண்டுபிடித்துள்ளனர்.[2]

பிராஹுுீ மொழி ஒன்று மட்டும் பாரத நாட்டைக் கடந்துள்ளது. ஏனையவற்றுள் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு, குடகு என்பவை தென்னிந்தியாவில் பேசப் படுகின்றன. வட ஈழத்திலும், தென் ஆப்பிரிக்காவிலும், மலேயா, சிங்கப்பூர்ப் பகுதிகளிலும் தமிழ் மிகுதியாய்ப் பேசப் படுகிறது. ஏனைய திருந்தா மொழிகள் வட இந்திய மலைப் பகுதிகளில் பேசப்படுகின்றன.

மேற்குப் பாகிஸ்தானில் பேசப்படும் பிராஹுுீ மொழியும், வங்காளத்திலும், ஒரிசாவிலும் பேசப்படும் குருக் மால்தோ மொழிகளும் வட திராவிட இனத்தைக் சார்ந்தவை எனவும்,

---

1. கால்டுவெல் ஒப்பிலக்கணம்—பக். 6
2. C. D. P—பக். 14, 15

தெலுங்கு, கோந்தி, கொண்டா, பெங்கோ, மண்டா, கூஇ, கூவி, கொலாமி, நயிகி. பர்ஜி, கதபா முதலியவை மத்திய திராவிட இனத்தைச் சார்ந்தவை எனவும், ஏனைய தமிழ், மலையாளம், கன்னடம், துதம், கொதம், இருளம், துளுவம் முதலியவை தென் திராவிட இனத்தைச் சார்ந்தவை எனவும் திராவிட மொழிகளை மூவகைகளாகப் பாகுபடுத்திக் காண்பர்.

தெலுங்குமொழி ஒலி வகையால் தென் திராவிடத் தோடும், சொல் வகையால் மத்திய திராவிடத்தோடும் ஒத்துள்ளது. அது தமிழோடு நெருங்கிய தொடர்பு பெற்று வந்திருப்பதால், அதனைத் தென் திராவிடம் எனக் கூறுவது இயல்பாகிவிட்டது. சொல்வகையாலும், சில இலக்கண நியதி களாலும் இது மத்திய திராவிடக் கூறுகளைத் தாங்கியுள்ளது.

---

1. Prom the four literary languages. Tamil Is the one which Is the most well-known, enjoys the greatest geographical extension, has a rich and very ancient literature and has a Phenological (and to some extent also grammatical) system corresponds rather closely to state of affairs Into parent proto-Dravidian.
C.D.P.—பக். 15

The languages of North Dravidian sub-group are Kurux, Malto and Brahul—D.V.M.P. 508

The lauguage of the South Dravidian are Tamil Malayalam, Kodagu, Kota, Toda, Kannada (Badaga dialect) and Tulu—P. 505 Dravidian Verb Morpholy.

The languages of the central Dravidian sub-group are: Telugu, Gondi, Konda, Pengo, Manda, kwi, kuvi, kolami (Naiki dialect) Naiki (chanda), Parji and Gadaba (Ollari and Salur dialects)—D.V.M. p. 507

2. D.V.M,—பக். 507

இலக்கிய மொழிகள் நான்கனுள்ளும் தமிழே தொன்மையும், இலக்கிய வளமும், இடப்பரப்பும் கொண்ட மொழியாகும். அதன் ஒலி அமைப்புப் பழந்திராவிட ஒலியமைப்பைக் கொண்டது. ஓரளவு சொல்லமைப்பாலும் இலக்கண அமைப்பாலும்கூட ஒற்றுமை உடையது. 1960ஆம் ஆண்டு மக்கள் கணக்கெடுப்பின்படி, தமிழகத்தில் தமிழ் பேசுவோர் தொகை 30,465,442 ஆவர்.[1] ஈழத்தில் 2,500,000; பர்மா, மலேசியா இந்தோனேசியா, வியட்நாம் பத்து லட்சம்; கிழக்குத் தென் ஆப்பிரிக்கப் பகுதிகளில் 250,000 எனக் கணக்குத் தரப்பட்டுள்ளது. தமிழின் பழைய இலக்கிய நூல் கி. பி. மூன்றும் நூற்றாண்டுக்கு முற்பட்டதாகும். பிராமி எழுத்தில் எழுதப் பட்ட முதல் கல்வெட்டுகளும் இக் காலத்தைச் சார்ந்தவையே.[2]

தொன்றுதொட்டுச் செந்தமிழ், கொடுந்தமிழ் எனத் தமிழ் பாகுபாடு செய்யப்பட்டு வருகிறது. 'வடவேங்கடம், தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகம்' எனத் தொல்காப்பியப் பாயிரம் கூறுவதால் இதுவே பழங்காலத்துத் தமிழகமாக இருந்திருக்க வேண்டுமெனத் தெரிகிறது. சென்னைப் பகுதித் தமிழ், கொங்குநாட்டுத் தமிழ், தெற்குப் பகுதித் தமிழ், ஈழத் தமிழ் என இன்றைய பேச்சுத் தமிழை நால் வகையாய்ப் பிரித்துக் காண்பர். இடத்திற்கு ஏற்ப வேறுபடுவதோடு சாதி வகைக்கு ஏற்பவும் பேச்சுத்தமிழ் வேறுபடுகிறது.[3]

மலையாளமும் இடவகையால் தென் கேரளம், மத்திய கேரளம், வடகேரளம் எனப் பேச்சு நிலையில் வேறுபடுகிறது. வட்டார மொழிகளே யன்றிச் சாதி, சமய வேறுபாட்டை ஒட்டியும், நம்பூதிரி, நாயர், மாப்பிளா, புலையா, நசராணி என இனத்தையொட்டியும் திரிபு பெற்றுள்ளது என்பர்.

---

1. C. D. P.—பக். 15
2. C. D. P.—பக். 16
3. C. D. P.—பக். 16

1961ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்குப்படி கேரள நாட்டில் மலையாளம் பேசுவோர் தொகை 16,994,919. இடைக் கால மேற்குப் பகுதிப் பேச்சுத் தமிழே இலக்கிய மலையாளமாக மாறிவிட்டது. 10ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு தான் சாசனச் சான்றுகள் கிடைக்கின்றன. 13, 14 நூற்றாண்டு களில்தான் மலையாளம் தனித்து இயங்கி இருக்க வேண்டும்.

நீலகிரி மலைப் பகுதிகளில் மலைவாழ் மக்களுள் சிலர் திராவிட மொழிகளைப் பேசி வருகின்றனர். கொதகிரி மலைப் பகுதியில் மலையாளம் பேசுவோருள் கொதவர்கள் 862; தொதவர்கள் 765 (இவர்கள் ஆடு மாடு மேய்ப்போர்) பதகர்கள் (விவசாயிகள்) 85463, (இவர்கள் மொழியைக் கன்னடப் பேச்சு மொழியின் திரிபு என்பர் சிலர்). இருள மொழி பேசுவோர் 4124. கூர்க்கில் குடகு மொழி பேசுவோர் தொகை 78,202 என்பர்.[1]

மைசூர் நாட்டில் கன்னடம் பேசுவோர் தொகை 17,415,827; தமிழகப் பகுதியிலும் ஆங்காங்கே கன்னடம் பேசுவோர் உளர். கன்னடத்தில் கி. பி. 450 முதல் பழைய சாசனங்கள் கிடைக்கின்றன. பழந்திராவிடத்திலிருந்து கன்னடம் கி. மு. ஐந்து, நான்காம் நூற்றாண்டிலேயே பிரிந் திருக்க வேண்டும். கி. பி. 9, 10ஆம் நூற்றாண்டுகளிலேயே கன்னட இலக்கியங்கள் தொடங்குகின்றன என்பர்.[2]

இலக்கிய நடை வேறு, பேச்சு நடை வேறு எனக் கன்னட மொழி இயங்கி வருகிறது. பிராமணர் பேசுவது, பிராமண ரல்லாதார் பேசுவது, ஹரிஜனங்கள் பேசுவது எனக் கன்னடப் பேச்சு மொழி மூவகையாகப் பிரிந்து இயங்குவதாகக் கூறுவர். சாதிப் பிரிவு அடிப்படையில் மட்டுமன்றி, இடவேறுபாட் டாலும் கன்னடம் தார்வார், பங்களூர், மங்களூர் என மூவகையாகத் திரிபு பெற்றுள்ளது என்பர்.[3]

---

1. C. D. P.—பக். 16
2. C. D. P.—பக். 16
3. C. D. P.—பக். 17

கன்னடப் பிரதேசத்தின் தெற்கிலும், இந்தியாவின் மேற்கிலும் துளுவர்கள்வாழ்கின்றனர். அவர்கள் எண்ணிக்கை 934, 849. அவர்கள் பேசும் மொழி துளுவம். அது கன்னடத்தோடும், தெலுங்கோடும் நெருங்கிய தொடர்புள்ளது. வளர்ந்த இலக்கியம் யாதும் அம் மொழியில் தோன்றவில்லை.

ஆந்திரப் பிரதேசத்தின் வட்டார மொழி தெலுங்காகும். அது சென்னை மைசூர்ப் பகுதிகளிலும், தென் கிழக்காசிய நாடுகளிலும் பேசப்படுகிறது. ஆந்திர நாட்டில் தெலுங்கு பேசுவோர் தொகை 37.642,439 என்பர். கி. பி. 633 க்குப் பிறகுதான் தெலுங்கு சாசனங்கள் கிடைக்கின்றன. பதினோராம் நூற்றாண்டிலேயே முதல் தெலுங்கு இலக்கியம் தோன்றியுள்ளது. தெலுங்கில் மத்திய ஆந்திரப் பகுதியில் கவிஞர் மொழி, கற்றோர் பேசும் மொழி எனும் இருவகையும் உயர்நடை என இயங்குகிறது. பேச்சு வகைத் திரிபு மொழி, தெலுங்கானு (வடமேற்கு ஆந்திரம்) மொழி, கடற்கரைப் பகுதி (விசாகப்பட்டினம் ஸ்ரீகாகுளம்) மொழி இராயல் சீமா (தென்மேற்கு) மொழி என மூவகையாக விளங்குகிறது. தெலுங்கு மொழியும் கன்னடத்தைப் போலவே பிராமணர், பிராமணர் அல்லாதார், அரிசனங்கள் எனச் சாதிக்கேற்பத் திரிபுகளைப் பெற்றுள்ளது. தெலுங்கு பேசுவோரின் தொகையே நாட்டில் மிகுதியாகும்.[1]

திருந்தா மொழிகள்

ஆந்திரத்தின் வடபகுதியில் கொலாமி பேசுவோர் தொகை 46,065; அவர்களுள் நயிகி பேசுவோர் தொகை 1000.[2]

மத்தியப் பிரதேசத்தில் பாஸ்தர் (Bastar) மாவட்டத்தில் பர்ஜி பேசுவோர் தொகை 84,607; ஒரிசாவில் கொரபுட் மாவட்டத்தில் (Koraput District) கொண்ட (Konda)

---

1. C. D. P.—பக். 17
2. C. D. P.—பக். 17

பேசுவோர் தொகை 12,298; கொரபுட்டிலும், அதைச் சார்ந்த ஆந்திரப் பகுதிகளிலும் கத்பா மொழி பேசுவோரின் தொகை 2000; பெங்கோவும், மண்டாவும் இப்பொழுது திராவிட மொழிகளுள் சேர்க்கப்பட்டுள்ளன. சந்தாவில் பேசப்படும் நயிகி என்பதும் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளது. கோந்த் மொழி பேசுவோர் தொகை 600,000; குயி (Kui) மொழி பேசுவோர் தொகை 510,907; குவி (Kuvi) மொழி பேசுவோர் தொகை 168,027.

மத்தியப் பிரதேசத்தில் கோந்த் மொழி பேசுவோர் பல வகைத் திரிபு மொழிகளைப் பேசுகின்றனர். பீஹார், ஒரிசா மத்தியப் பிரதேசங்களில் குருக் (Kurukh) மொழி பேசுவோர் தொகை 1, 132,931. (இதனை ஒரோஒன் என்றும் கூறுவர்.) பீஹார், மேற்கு வங்காள எல்லையோரங்களில் மால்தோ பேசுவோர் தொகை 88,645; இது குருக் மொழியோடு நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது.[1]

மேற்குப் பாகிஸ்தானில் பிராஹுமொழி மட்டும் பேசப்படுகிறது. இஃது ஈரானிய மொழியாலும், இந்தோ ஆரிய மொழிகளாலும் பெரிதும் திரிபுற்று விளங்குகிறது. பிராஹு மொழியை 200,000 பேர் பேசுகிறார்கள். தென் ஆப்கானிஸ்தானத்தில் மட்டும் 400,000 பேர் பிராஹு மொழி பேசுவதாய்த் தெரியவருகிறது.[2]

பழந்திராவிடத்திலிருந்து கி. மு. 15ஆம் நூற்றாண்டுக்கு முன்பே தென் திராவிட மொழிகள் பிரிந்திருக்க வேண்டும். தெலுங்கு, துளு முதலிய மொழிகள் கி. மு. 10 முதல் 6 நூற்றாண்டுகளில் பிரிந்திருக்க வேண்டும். கி. மு. 4, 3ஆம் நூற்றாண்டுகளிலேயே கன்னடமும், தமிழும் வேறு வேறாக இயங்கி இருக்க வேண்டும். தமிழும், கன்னடமும் ஒன்றாக இயங்கிய காலத்தில் ககரம், சகரமாகத் திரிபு பெறவில்லை. பிற்காலத்தில் தமிழ் மொழியில் பல மொழி முதற் ககரங்கள் சகரமாகத்

1. C. D. P. —பக். 18
2. C. D. P. —பக் 18

திரிந்துவிட்டன. கன்னடத்தில் இன்றும் அவை திரிபு பெறுமல் வழங்குகின்றன. தமிழ், கன்னடப் பிரிவை உணர்த்துதற்கு இதுவே தக்க சான்ருகும்.

கன்னட வடிவமே தமிழின் தொல்வடிவங்கள் என்பதற்கு இவை சான்று பகரும்.

கன்னடம்	தமிழ்
கெல	சில
கிறி	சிறி
கீ	சீ

இ, ஈ, எ, ஏ, ஐ (அய்) தொடரும் ககர முதற் சொற்கள் எல்லாம் தமிழில் சகரமாகிவிட்டன. கெம் என்பது செம் எனத் திரிபு பெற்றுள்ளது. 'கெம்பு' என்பது கன்னடச் சொல் என்றும், அது பிற்காலத்தில் தமிழில் புகுந்ததால் திரிபு பெறவில்லை என்றும் கூறுவர். கன்னடத்தில் அண்ண மெய்யாதல் என்னும் விதி அமையவில்லை.

கன்னட, தெலுங்கு மொழிகளில் வழங்கும் எகரமும், ஒகரமும் தமிழ், மலையாள மொழிகளில் இகர, உகரமாயின என்பர்.

செய்யும் என்னும் வாய்பாடு, முற்றுப் பொருளில் பலர் பாலுக்கு வாராது எனத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது கன்னடத்தில் அஃது எல்லாப் பால்களிலும் வருகிறது. இவ்வரையறை ஏற்பட்ட பிறகே தமிழிலிருந்து கன்னடம் பிரிந்திருக்க வேண்டும் எனக் கூறுவர்.[1]

இதே காலத்தில்தான் தொதவரும், கொதவரும் தமிழ் இனத்திலிருந்து தனியே பிரிந்திருக்க வேண்டும். அதன் பிறகே அவர்கள் மொழி வகையாலும், சமூகப் பழக்க வழக்கங்களாலும் தனித்தியங்கி மலைப் பகுதிகளில் ஒதுங்கி வாழத் தலைப்பட்டனர் எனத் தெரிகிறது.[2]

---

1. C. D. P.—பக். 19
2. C. D. P.—பக். 19

கன்னடம் தமிழிலிருந்து பிரிந்த பிறகே தொல்காப்பியமும், அகத்தியமும் தமிழுக்குத் தனி இலக்கணம் வகுத்திருக்க·வேண்டும்; செய்யுள் இலக்கணம், வழக்கு இலக்கணம் என இருவகை இலக்கண வரையறை தோன்றியிருக்க வேண்டும்.

தமிழும், மலையாளமும் கி. பி. 13, 14ஆம் நூற்றாண்டுகளிலேயே முழுப் பிரிவு அடைந்தன. தமிழில் நன்னூலும், மலையாளத்தில் லீலாதிலகம் எனும் இலக்கணமும் இக் காலத்துத் தோன்றின.

திராவிட மொழிகள் சித்திய இனத்தைச் சார்ந்தவை என்னும் கருத்தே நாளுக்கு நாள் வலிமை பெற்று வருகிறது. சித்திய மொழிகளுள்ளும் உரலியம், அல்தெய்க் மொழிகளோடுதான் (Uraliyam and Altaic) உறவு உடையன என்பர். மொழி வகையால் மட்டுமன்றி, இனஉறவு வகையாலும் இம் மொழி இனங்களோடு திராவிட இனம் நெருங்கிய தொடர்புடையன என்பர்.[2] இக் கருத்தினை டாக்டர் கால்டுவெல் மட்டுமன்றிப் பேராசிரியர் பர்ரோவும் வற்புறுத்தியுள்ளார்.

✓தென் திராவிடத்தின் தனிக் கூறுகளாகக் கீழ் வருவனவற்றைக் காட்டுவர்.

✓(1) தென் திராவிட மொழிகள் அல்லாத ஏனைய மொழிகளில் பெண்பால் ஒருமைக்கும், அஃறிணை ஒன்றன் பாலுக்கும் ஒரே விகுதியே வருகிறது. தென் திராவிட மொழிகளிலேயே இரண்டுக்கும் இரு வேறு விகுதிகள் காணப் படுகின்றன. தெலுங்கு இவ் வகையில் மத்திய திராவிட

---

1. C. D. P.—பக். 21 .

2. So far the most ambitious, the most Promising and the most convincing hipothesis is that of uraliyam and Altaic relationship with Dravidian not only linguistic but. also anthropological, ethnograph archaeological and general historic considerations may point in this direction—C.D.P. பக். 22

நியதியைப் பெற்றுள்ளது. தமிழைப் போல் பெண்பால் ஒருமைக்குத் தனி விகுதி அதில் இல்லை.[1]

(2) தமிழில் பல சொற்களில் மொழிமுதற்கண் சகரம் கெட்டுள்ளது. (மத்திய திராவிட மொழியில் சுப்பு என வழங்குவது தமிழில் உப்பு என வழங்குகிறது.) சீ என்பது ஈ என வழங்குவதை இதற்குச் சான்றாகக் காட்டுவர்[2].

(3) தெலுங்கில் ஒலி இடம் பெயரல் என்னும் நியதி காணப்படுகிறது. அது தமிழ்ச் சொற்களில் காணப்படவில்லை. தமிழ் இரண்டு என்பதே தெலுங்கில் ரெண்டு என வழங்கி மீண்டும் அது தமிழ்ப் பேச்சு மொழியில் இடம் பெற்றுள்ளது என்பர்.[3]

(4) தென் திராவிட மொழிகளிலும், கன்னடத்திலும், ககரம் கெடாமல் நிற்கத் தமிழில் அது சகரமாய் மாறியது.

கன்னடம்	தமிழ்
கெவி	செவி
கெம்	செம்

(5) தென் திராவிடத்திலும், வட திராவிடத்திலும் யான் யாம் என்பவற்றின் குறுக்கல் வடிவங்கள், யன் யம் என அமையாமல், என் எம் என அமைந்துள்ளன. இஃது இம் மொழிகளின் தனி இயல்பாகும் என்பர்.[4]

(6) தென் திராவிட மொழியினர் மட்டும் பழைய வளைநா ஒலிகளாகிய ண, ள என்பவற்றைப் போற்றி வருகின்றனர். வட திராவிட, மத்திய திராவிட மொழியினர் அவற்றைப் பெரும்பாலும் இழந்துவிட்டனர் என்பர்.[5]

---

1. A History of the Tamil language—பக். 24
2. D. V. M. பக்கம்509; History of the Tamil Languageபக். 25
3. A History of the Tamil Language—பக். 24
4. D. V. M.—பக். 512
5. D, V. M.—பக். 514

23. செந்தமிழும் கொடுந்தமிழும்

தொன்றுதொட்டுத் தமிழ், பேச்சுத் தமிழ், இலக்கியத் தமிழ் என இருவகையாக இயங்கி வருகிறது. 'வழக்கும் செய்யுளும்' எனத் தொல்காப்பியர் குறிப்பிடுவதும் இவ்விரு வகைப் பிரிவையேயாகும். வழக்கு என்பது பேச்சுத் தமிழ்; செய்யுள் என்பது இலக்கியத் தமிழ். செய்யுள் வடிவாகவும், உரைநடை வடிவாகவும் வழங்கும் இலக்கிய மொழியைச் செந்தமிழ் என்றும், பேச்சு வழக்கைக் கொடுந்தமிழ் என்றும் வழங்கி வருகின்றனர்.

வடவேங்கடம், தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகத்துக் கற்றோர் அனைவரும் அறிந்து கொள்ளக்கூடிய பொதுத் தமிழே இலக்கியத் தமிழாகும். பிற்காலத்தில் இடத்துக்கு இடம் வேறுபடும் திரிபுகளைத் தவிர்த்து, அனைவரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய பொது வடிவங்களைத் தமிழில் எழுதி வந்தனர். அதுவே செந்தமிழ் எனப்பட்டது. பிறகு அது புலவர் தமிழ் என வழங்கலாயிற்று. பழங்காலத்தில் செந்தமிழ் என்பது இலக்கிய வழக்குத் தமிழ் என்ற பொருளிலேயே வழங்கியது.

இக் காலத்தில் புலவர் நடை வேறு, பொதுமக்கள் நடை வேறு என இருவேறாகப் பிரிந்து எழுத்து நடை இயங்குகிறது. பத்திரிகைத் தமிழே பொதுமக்கள் தமிழ் எனலாம். மக்கள் மிகுதியாக வழங்கும் வழக்குச் சொற்களையே பத்திரிகைகள்

மிகுதியாக எடுத்தாளுகின்றன. அதனால், பத்திரிகை நடை புலவர் நடையோடு வேறுபடுகிறது. புலவர்கள் பழந் தமிழ் இலக்கியச் சொற்களையும், இலக்கண வடிவங்களையும் கையாளுகின்றனர். இவர்கள் நடையை இக் காலத்தில் செந்தமிழ் நடை என்பர்.

கொடுந்தமிழில் எத் தகைய கொடுமையும் நிலவவில்லை. செந்தமிழுக்கு மாறுபட்ட வழக்கே கொடுந்தமிழாகும். வளைவு, நெகிழ்வு என்னும் பொருள்களிலும் கொடுமை எனும் சொல் வழங்கிவருகிறது. வட்டாரத்திற்கு வட்டாரம் மொழி வழக்குகள் மாறி வருகின்றன. ஒலித்திரிபால் மாறு படுதலும், சொல் வழக்கால் வேறுபடுதலும் என மொழி இருவகையாகத் திரிந்து இயங்குகின்றது. இத்தகு வழக்கு களையே கொடுந்தமிழ் என்பர். சுருங்கக் கூறின் பேச்சு வழக் குத் திரிபு என இதனைக் குறிப்பிடலாம்.

தனிப்பட்ட ஒவ்வொருவர் பேச்சிலும் சில தனிக் கூறுகள் நிலவாமல் இல்லை. இவற்றைத் தனிப் பேச்சு (idiolect) என்பர். ஒருவருக்கு மேற்பட்டவர் பேசும் பேச்சு, பேச்சுநடை (dialect) என வழங்குகிறது. இனம் இனமாகக் கூடி வாழ்பவர் பேச்சுகளில் தனிக் கூறுகள் நிலவுகின்றன. இவற்றையும் பேச்சுமொழித் திரிபுகள் என்றே கூறலாம்.

பழங்காலத்திலேயே சொல் வழக்காறுகளில் இடத்துக்கு இடம் வேறுபாடிருந்தது. இலக்கண உரையாசிரியர்கள் அவற்றை எடுத்துக் காட்டியுள்ளனர்; தென் பாண்டி நாட்டார் ஆவினைப் பெற்றம் என்றும், சோற்றைச் சொன்றி என்றும், குட்ட நாட்டார் தாயைத் தள்ளை என்றும், குடநாட்டார் தந்தையை அச்சன் என்றும், கற்கா நாட்டார் வஞ்சரைக் கையர் என்றும், வேணாட்டார் தோட்டத்தைக் கிழார் என்றும், பூழி நாட்டார் சிறு குளத்தைப் பாழி என்றும், பன்றி நாட்டாரும், அருவா நாட்டாரும் வயல் என்பதைச் செய் என்றும், சிறு குளத்தைக் கேணி என்றும், அருவா வடதலை நாட்டார் புளியை எகின் என்றும், சீத நாட்டார்

தோழனை எலுவன் என்றும், தோழியை இகுளை என்றும், மலைநாட்டார் நீரை வெள்ளம் என்றும், புனல் நாட்டார் தாயை ஆய் என்றும் வழங்கினர் என்பர்.

இப்பொழுதும் நீரைக் குறிக்க மலையாள மொழி வெள்ளம் என்ற சொல்லையே கையாளுகிறது. அச்சன் என்ற சொல்லும் மலையாள வழக்கிலுள்ளது. இகுளை, கேணி, செய், எகின், ஆய், பெற்றம் முதலிய சொற்கள் எல்லாம் பழந் தமிழில் இலக்கியச் சொற்களாகவே வழங்கியுள்ளன. எகின் என்பதைத் தொல்காப்பியர் மரப் பெயராகவே குறிப் பிட்டுள்ளார்.

பற்றின் காரணமாகச் சிலர் சோழநாட்டைச் செந்தமிழ் நாடு என்றும், பாண்டிய நாட்டைச் செந்தமிழ் நாடு என்றும் கூறி வந்தனர். செந்தமிழ் இலக்கியம் பயிலும் தமிழகத் தையே செந்தமிழ் நாடு என்று குறிப்பதில் தவறில்லை என்ற கருத்தால் பாரதியார் செந்தமிழ்நாடு என்று தமிழகத்தைக் குறிப்பிட்டார்.

தனிப்பாடலொன்று கொடுந்தமிழ் நாடுகள் இவை எனக் குறிப்பிடுகிறது.

தென்பாண்டி குட்டம் குடங்கற்கா வேண்பூழி
பன்றி அருவா அதன்வடக்கு—நன்றாய
சீதமலாடு புனல்நாடு செந்தமிழ்சேர்
ஏதமில் பன்னிருநாட் டெண்.

முதலில் தமிழ் கிளைமொழியாகத் திரிபு பெற்றது. பேச்சு வழக்குத் தமிழே கிளைமொழியாகும். ஒரு மொழி இடத்துக்கு இடம் வேறுபட்டுத் தனி வழக்குகளைப் பெறுமாயின் அது கிளைமொழி எனப்படும். பொது மொழியோடு பெரும்பாலும் ஒத்துச் சிறுபான்மை வேறுபடுவது கிளை மொழி எனினும் ஒக்கும். பொதுமொழியோடு மிகுதியாக வேறுபட்டு இயங்கும் நிலையை ஒரு மொழி பெற்றுவிட்டால் அஃது இனமொழி எனப்படும். தமிழின் கிளைமொழியாக இருந்த மலையாளம்

இன்று பெரிதும் வேறுபட்டு இனமொழியாக வழங்குகிறது. இவ்வாறே ஏனைய திராவிட மொழிகளும் ஒரு காலத்தில் கிளை மொழிகளாக இயங்கிப் பிறகு பெரும்பாலும் வேறுபட்டு இன மொழிகளாகி விட்டன என்பது வரலாற்றுண்மையாகும்.

இடத்துக்கு இடம் மொழி வேறுபடுதல் போலச் சேர்ந்து வாழும் இயல்புபற்றி மக்கள் சமூக நிலையிலும் தனித் தனிக் கிளை மொழிகள் வழங்காமல் இல்லை. சேரிவாழ் மக்கள் தனித்துச் சேர்ந்து வாழ்தலால் அவர்கள் மொழி தனிக்கூறு களும், திரிபுகளும் பெற்றுக் கிளை மொழியாக விளங்குகிறது. அவ்வாறே பார்ப்பனச்சேரி மொழியும் தனிக் கிளை மொழியாக இயங்கி வருகிறது. பார்ப்பனர் தமிழைச் சிதைத்து வழங்குவ தோடு, வடமொழியையும் ஆங்கில மொழியையும் மிகுதி யாகக் கலந்து பேசுகின்றனர். அவர்கள் பேச்சு மொழியில் உயிர் நீட்சியும் ஒலியிடம் பெயரலுமாகிய இருவகை நியதிகள் சிறப்பாக இடம்பெற்றுள்ளன. தமிழ்ச் சொற்களே வேற்று மொழிச் சொற்கள் போல் அவர்களிடம் வழங்குகின்றன. இப் பேச்சு நடையை இன்றைய திரைப் படங்கள் கையாண்டு வருகின்றன. நத்தையில் முத்து, சூரியகாந்தி, கவுரவம், வியட்நாம் வீடு, டைகர் தாத்தாச்சாரியார் முதலிய படங்கள் இப் பார்ப்பனச்சேரி மொழியை மிகுதியாகக் கையாண் டுள்ளன.

உயிர்நீட்சி *(முதல்)*

அகமுடையான்—ஆம்படையான்

அகமுடையாள்—ஆம்படையாள்

தகப்பனார்—தோப்பனார்

அகத்துக்காரி—ஆத்துக்காரி

உயிர்நீட்சி *(ஈற்று நிலை)*

அவர்கள்—அவாள்

பிராமணர்கள்—பிராமணாள்

ஒலி இடம் பெயர்தல்

எனக்கு—நேக்கு
உனக்கு—நோக்கு

தமிழ்ப் பேச்சு மொழியில் ழகர, ளகர உச்சரிப்பு மாறுதல் குறிப்பிடத்தக்க திரிபாகும். தெற்குப் பகுதிகளில் இன்று ழகரம் ளகரமாகவே ஒலிக்கப்படுகிறது.

ஈரோட்டில் ளகரம் லகரமாகவே ஒலிக்கப்படுகிறது.

ஈழநாட்டில் ழகரம், எழுத்து வழக்கில் உள்ளதே தவிரப் பேச்சு வழக்கில் அறவே மறைந்துவிட்டது.

தஞ்சை மாவட்டத்தில் எண்பது என்பதை எம்பளது என்று குறிப்பர்.

அமங்கலத்துக்காகப் போடப்படுவது என்ற வழக்கில் பந்தல் என்பது செட்டி நாட்டில் வழங்குகிறது.

கோவையில் போடு என்னும் துணைவினையை மிகுதியாக வழங்குகின்றனர்.

ஏனைய பகுதிகளில் இடு அல்லது விடு எனும் துணை வினையை வழங்குகின்றனர்.

செய்து போட்டு வந்தான்—கோவை

உரைத்திட்டு வந்தான் }
செய்துவிட்டு வந்தான் } ஏனைய பகுதி

நிற்கிறாய் என்பது திருநெல்வேலிப் பகுதியில் நிக்கிறாய் என வழங்குகிறது. என்னடா நிற்கிறாய் என்பதனை 'என் ன்டா நிக்கி' எனவும் வழங்குகின்றனர். இருக்கிறது என்பது வடஆர்க்காடு மாவட்டத்தில் 'கீது' என வழங்குகிறது.

வீரசோழியம் பதினோராம் நூற்றாண்டில் வழங்கிய ஒலித் திரிபுகளையும், சொல் திரிபுகளையும் குறிப்பிடுகின்றது. அதன் உரையாசிரியர் கொங்குநாட்டு வழக்குகளையும், சோழநாட்டு வழக்குகளையும், தொண்டைநாட்டு வழக்குகளையும் தனித் தனியே எடுத்துக் காட்டுகிறார்.

கொங்கு நாட்டுத் தமிழ்

நாழி—நாளி
உழக்கு—உளக்கு
கோழி—கோளி
வாழை—வாளை
வழி—வளி
முழை—முளை
விளக்கு—விழக்கு
பளிங்கு—பழிங்கு
தளிகை—தழிகை

இவற்றால் ளகரமும் ழகரமும் ஒன்றாகவே கருதப்பட்டன என்பது புலனாகிறது.

சோழ நாட்டு வழக்குகள்

றகரம் தகரமாய்த் திரிந்து, அத் தகரம் மீண்டும் சகர மாய்த் திரிந்து ஒலிக்கிறது.

வெற்றிலை—வெத்திலை—வெச்சிலை
முற்றம்—முத்தம்—முச்சம்
கற்றை—கத்தை—கச்சை

தொண்டை நாட்டுத் தமிழ்ச் சொல் வழக்கு மாறுதல்கள்

நெல்லின் பக்கத்தில் நின்றது—நெல்லுக்கா நின்றது
வீட்டின் பக்கத்தில் நின்றது—வீட்டுக்கா நின்றது

இவற்றைத் தொண்டை நாட்டு வழக்குகளாய்க் குறிப் பிடுவர்.

இவையேயன்றிப் பொதுவகையாய்ச் சில பேச்சு வழக்கு களையும் குறிப்பிடுவர்.

இவனைப் பார்க்க—இவனைப் பாக்க
ஈங்கு—இங்காக்க

சேற்று நிலம்—சேத்து நிலம்
ஆற்றுக்கால்—ஆத்துக்கால்
இப்படிக் கொத்த—இப்படிக் கொற்ற
வாழைப்பழம்—வாயைப்பயம்
உயிர்—உசிர்

இக் காலத்தில் பேச்சு வழக்கில் றகர, தகரங்கள் சகர மாய் ஒலிக்கின்றன.

போயிற்று—போச்சு
ஆயிற்று—ஆச்சு
செய்தான்—சேஞ்சான்
வைத்தான்—வச்சான்

றகரம் தகரமாய் ஒலித்துப் பின்னர் அண்ணமெய் யாதல் என்னும் விதியின்படி இ, ஈ, ஐ, ய வர அத் தகரம் சகர மாயிற்று. இறந்த கால இடைநிலை தகரத்திற்கு மாறாகச் சகரம் பேச்சு வழக்கில் வழங்குகிறது.

24. தமிழ் உயர்தனிச் செம்மொழி

(1) 'தமிழ் என்ற சொல்லே திராவிடம் என வடமொழியில் வழங்குகிறது' என்பார் கால்டுவெல். தமிழைக் குறிக்க வழங்கிய திராவிடம் எனும் சொல் பிற்காலத்தில் திராவிட இன மொழிகள் அனைத்தையும் குறிக்கும் பொதுச்சொல்லாகவும் வழங்கியது.

(2) திராவிட மொழிகள் அனைத்திலும் சிறந்த இலக்கிய வளமும், திருந்திய அமைப்பும் கொண்டது தமிழே. மிகச் சிறந்த அடிப்படைச் சொல் வடிவங்களைப் பெற்றிருப்பதோடு மற்ற மொழிகளுக்கும் தரத்தக்க வகையில் ஒன்றுக்கு மேற்பட்ட வடிவங்களையும் அது தாங்கி வருகிறது.

(3) தமிழர் தொழிலாற்றுந் திறமும், ஊக்க மிகுதியும், திரைகடல் ஓடியும் பொருள் தேடும் இயல்பும் படைத்தவர். மலேயா, ஈழம், ஆப்பிரிக்கா முதலிய வெளிநாடுகளில் தமிழரே ஏனைய திராவிட இனத்தவரினும் மிகுதியாய்ச் சென்று குடியேறியுள்ளனர். 'மதறாஸ்' என்பது தமிழ் நாட்டின் தலைநகராகும். மதில் (சுவர்) என்பது கோட்டைச் சுவரை உணர்த்திப் பின் அதனால் சூழப்பட்ட நகரை உணர்த்திற்று என்பார் கால்டுவெல்.

சேர, சோழ, பாண்டியர்களைப் பற்றி வடநூல்களிலும், அசோகர் கல்வெட்டுகளிலும் குறிப்புகள் கிடைக்கின்றன. தெலுங்கர்களால் தமிழ் அரவம் எனச் சுட்டப்படுகிறது.

மூச்சொலிகள் (Aspirates) அற்ற மொழி (அ+ரவம்)—ஒலி யற்றது) என்ற பொருளில் இச்சொல் வழங்கி இருக்கலாம் எனக் கால்டுவெல் கருதுகிறார்.

தமிழ் எனும் சொல்லின் தோற்றநிலை புலப்படவில்லை; அதுபோலத் தெலுங்கு எனும் சொல்லின் பொருளும் தெளிவு பெறவில்லை எனக் கூறலாம். மலை மிகுந்த பகுதியில் வாழ்ந்த வர்கள் மலையாளிகள் எனப் பெற்றனர். அவர்கள் மொழி மலையாளம் ஆயிற்று. கன்னடம். கருநாடகம் எனும் சொல்லின் திரிபாய் இருக்கலாம். துளு, குடகு மொழிகளையும் சேர்த்துத் திருந்திய மொழிகள் ஆறு என்பர். ஏனைய இலக்கிய வளமற்ற மொழிகளாகும்.

திராவிட மொழிகள் ஓர் இனம் எனக் கருதப்படுகிறது. இம் மொழிகளுள் எம் மொழியிலிருந்தும் மற்றவை பிறந்தன என்று கூற முடியாது. ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையான திரிந்த வடிவங்களைப் பெற்றுத் தனித்தனி மொழியாகக் கிளைத்துள்ளன. மலையாளம் ஒன்றைமட்டுமே நேரே தமிழி லிருந்து கிளைத்தது எனக் கூற முடியும்.

வடமொழித் தாக்குதலுக்கு மிகுதியாக உட்படாமல் உயர்தனிச் செம்மொழியாக விளங்குவது தமிழ் ஒன்றே. அதனால்தான் இது செந்தமிழ் எனச் சிறப்பிக்கப்படுகிறது. ஒவ்வொரு நாட்டிலும் கவிஞர் மொழியிலும், உழவர் ஒலி யிலும்தான் மொழியின் தொன்மையையும், தூய்மையையும் காண முடியும். தமிழ் இவ்விரு நிலைகளாலும் வடமொழிக் கலப்புப் பெறுமல் இயங்கி வருகிறது.

மிகவும் தொன்மை வாய்ந்த மொழிகளுள் தமிழும் ஒன்று. இது திருந்திய இலக்கிய வளம் மிக்க மொழியாகும். தெலுங்கும், கன்னடமும்கூட மிகப் பழமை வாய்ந்த மொழி களே எனினும், அவற்றின்கண் தமிழைப் போலத் தொன்மை வாய்ந்த இலக்கியங்கள் இல்லை.

உயர்தனிச் செம்மொழி எனத் தமிழ் போற்றப்படுவதற் குரிய காரணங்கள்;

(1) ஏனைய திராவிட மொழிகளின் இலக்கிய நடை பேச்சு நடையோடு முற்றிலும் வேறுபடுகிறது. தமிழ் இலக்கிய நடை, பேச்சு நடையினின்றே உருவாகியுள்ளது. பேச்சு மொழியே இலக்கியத்தில் பெரிதும் போற்றப்படுகிறது. தலைமையும், சிறப்பும் அதற்கே அளிக்கப்படுகின்றன. பேச்சு நடையும், இலக்கிய நடையும் பிரிவின்றி ஒத்தியங்கி வருகின்றன.

(2) தமிழ் மொழியின் சொற்களும், இலக்கண வடிவங்களும் தொன்றுதொட்டு வளர்ந்து வந்திருக்கின்றன. அகத்தியம், தொல்காப்பியம் முதலிய இலக்கண நூல்கள், தமக்கு முன்பிருந்த ஆசிரியர்களின் கருத்துகளையும் ஏற்றுக்கொண்டமையை 'என்பர்', 'என்மனார்', 'என்ப' எனும் தொடர்களால் குறிப்பிடுகின்றன. பிறமொழி இலக்கணம் தமிழின்கண் புகுத்தப்படவில்லை. தன்னியல்பாலெழுந்த இலக்கணமே அதற்கு அமைந்துள்ளது.

(3) ஒரு பொருளைக் குறிக்கத் தமிழில் பல சொற்கள் வழங்குகின்றன. ஏனைய திராவிட மொழிகளில் அவை ஒவ்வொன்றும் தனித்தனிச் சொற்களாக நிலவுகின்றன. இவ்வியல்பே தமிழின் சொல்வளத்துக்குக் காரணமாகும்.

வீடு, இல், மனை, குடில் எனும் சொற்கள் தமிழில் ஒரு பொருளையே குறிக்க வழங்குகின்றன. 'வீடு' ஒன்றே இன்று பேச்சு வழக்கிலும், ஏட்டு வழக்கிலும் மிகுதியாக இடம் பெற்றுள்ளது. ஆனால், தெலுங்கில் இல் என்பதும் கன்னடத்தில் மனை என்பதும் தனித்தனிச் சொற்களாக வழங்குகின்றன.

(4) கன்னடமும், தெலுங்கும் இன்றைய தமிழோடு வேறுபட்டு வழங்கினாலும், பழந்தமிழ் வடிவங்களோடு ஒத்திருப்பது தமிழின் தொன்மையைப் புலப்படுத்தும்.

(5) தமிழ் வேர்ச் சொற்கள் பல, தெலுங்கு மொழியில் ஒலியிடம் பெயரல் (metathesis) எனும் விதிப்படி மாறியுள்ளன.

சிறப்பாகச் சுட்டுப் பெயர்களும், மூவிடப் பெயர்களும் இத் தகைய மாற்றங்களைப் பெற்றுள்ளன.

அதனை—தானி

அவன்—வாடு; இவன்—வீடு

யான் —அன்—நா

நம்—மன

(6) தமிழில் புகுந்த வடசொற்கள் பெரிதும் உருமாறி மருவி வழங்குகின்றன. தமிழின் தொன்மைக்கு இதுவும் ஒரு சான்றாகும்.

(7) கன்னடப் பகுதியிலும், தெலுங்குப் பகுதியிலும் கல்வெட்டுச் செய்திகள் சமஸ்கிருதத்தில் விளங்கத் தமிழ் நாட்டுப் பழங்கல்வெட்டுகளில் அவை தமிழில் வரையப் பெற்றுள்ளன.

தமிழ் உயர்தனிச் செம்மொழியாக விளங்குவதோடு, தொன்மை மிக்க வழக்காறு பெற்ற மொழியாகவும் விளங்கு கிறது என்பது இவற்றால் புலனாகிறது. மேலும் பிறமொழித் தாக்குதல் குறைவாகவும், தொடர்ந்த இலக்கிய வழக்காறு பெற்றதாகவும் இது வழங்கி மொழி ஆராய்ச்சிக்கு மிகவும் உதவுகிறது; திராவிட இன மொழிகளின் தொல்வடிவங்களைக் காட்டும் பொதிப் பொருளாகவும் திகழ்கிறது.

25. திராவிட மொழிகளும் வடமொழிகளும்

திராவிட மொழிகள் வடமொழியினின்றும் முற்றிலும் வேறுபட்டனவ என்பதற்குக் கால்டுவெல் கீழ்வரும் காரணங் களைக் குறிப்பிடுகிறார்.

(1) தமிழ் மொழியில் இயற் சொற்களே மிகுதியாக வழங்குகின்றன; வடசொற்களோ மிகவும் குறைவு.

(2) மொழிக்கு அடிப்படையான மூவிடப் பெயர்கள், எண்ணுப் பெயர்கள், பெயர் வினைகள், கால விகுதிகள் தொடர் அமைப்பு முறைகள் முதலியவற்றால் தமிழ் வடமொழியோடு முற்றிலும் வேறுபட்டு இயங்குகின்றது.

(3) தன்னொடு கலந்துவிட்ட பிறமொழிச் சொற்களைப் பிரித்து,அவற்றைத் திசைச் சொற்கள் எனவும் வடசொற்கள், எனவும் வேறுபடுத்தி ஒதுக்கி வந்துள்ளது.

(4) தமிழ் மக்கள் பேச்சு வழக்கிலும், கவிஞர்களின் செய்யுள் வழக்கிலும் வடசொற்கள் மிகக் குறைவாக வழங்கி வருகின்றன.

(5) திராவிட அடிப்படைச் சொற்களும், அவற்றின் அடிச்சொற்களும் வடமொழிச் சொற்களோடு முற்றிலும் மாறுபட்டு இயங்குகின்றன.

(6) இலக்கண அமைப்பிலும் திராவிட மொழிகளும், வடமொழியும்' முற்றிலும் வேறுபட்டியங்குகின்றன.

அடிப்படை இலக்கண வேறுபாடுகள்

✓(1) திராவிட மொழிகளில் பொருள் நோக்கில் திணை பால், பாகுபாடுகள் அமைந்துள்ளன. சொல் நோக்கில் வடமொழியில் திணை, பால் பாகுபாடு அமைந்துள்ளது.

✓(2) திராவிட மொழிகளில் பெயர்ச்சொற்கள் பன்மை விகுதிகளை ஏற்ற பிறகே வேற்றுமை உருபுகளை ஏற்கும்.

வடமொழியில் இதற்கு மாறுபட்ட முறையே உள்ளது ஆண்டு ஒருமைக்கும், பன்மைக்கும் தனித்தனி வேற்றுமை முடிபுகள் கூறப்படுகின்றன.

தமிழில் வேற்றுமை உருபுகள் எளிதில் பிரித்தறியும் வகையில் பெயர்ச்சொற்களோடு ஒட்டு நிலையாகச் சேர்ந்துள்ளன.

✓(3) திராவிட அஃறிணைப் பெயர்களில் பெரும்பாலும் ஒருமை பன்மை வேறுபாடில்லை. ஒருமை வடிவே பன்மைக்கும் வழங்குகிறது.

(4) நான்கன் உருபுகளாகிய கு கி, அல்லது கெ (go) வடமொழி உருபுகளோடு ஒத்தமையாது சித்திய மொழியோடு ஒத்தியங்குகிறது.

✓(5) வடமொழியில் இலக்கண உருபுகள் முந்து நிலைகளாக (prepositions) அமையத் திராவிட மொழிகளில் பிந்து நிலைகளாக (post positions) அமைகின்றன.

✓(6) வடமொழியில் பெயரடைக்கும், பெயருக்கும் திணை, பால் இயைபு உண்டு. இவ்வியைபு திராவிட மொழிகளில் இல்லை.

அச்சா லட்கா; அச்சி லட்கி

(இந்தியும் வடமொழி அமைப்பினதே)

நல்ல பையன்; நல்ல பெண்; நல்ல மாடு

(7) தமிழ் மொழியில் பண்புச் சொற்கள், தனித்து வருதலோடு, பெயரெச்ச வினையாகியும் அடையாகின்றன. வட மொழியில் பண்புச் சொற்கள் பெயரெச்ச வடிவாதல் இல்லை.

செந்தாமரை

செய்ய தாமரை

(8) முன்னிலையாரைத் தன்மைப் பன்மையில் உளப்படுத்தல், பிரித்துக் கூறல் எனும் இருநிறமும் திராவிட மொழிகளில் உள்ளன. ஐரோப்பிய மொழிகளிலும், வட மொழியிலும் இவ்விரு வகைநிலைஇல்லை.

(9) வடமொழியில் இருப்பது போலச் செயப்பாட்டு வினைக்கெனத் தனி விகுதிகள் திராவிட மொழிகளில் இல்லை; படு, உண் முதலாய துணை வினைகள் சேர்ந்து செயப்பாட்டு வினைகள் அமைகின்றன.

(10) திராவிட மொழி இணைப்பிடங்களில் இணைப்பிடைச் சொற்களுக்கு (Conjunctive particles) மாறாக எச்ச வினைகள் வருகின்றன.

He came and saw

அவன் வந்து பார்த்தான்

(11) உடன்பாட்டு, எதிர்மறை வினைகளைப் பெற்றிருத்தல் திராவிட மொழிகளின் சிறப்பியல்பாகும்.

(12) இணைப்பிடப்பெயருக்கு மாறாகத் திராவிட மொழிகளில் பெயர் எச்ச வினைகள் வருகின்றன.

This is the boy who came

வந்த பையன் இவன்.

(13) தொடரமைப்பும், சொற்கள் தொடர்ந்து நின்று ஒன்றை ஒன்று தழுவும் முறையும், எச்சம் முதலியவற்றின்

அமைப்புகளும் திராவிட மொழிக்கே உரிய தனிச் சிறப் பியல்புகளாகும்.

திராவிட மொழியில் வடசொற்கள்

திராவிட மொழிகளில் பல வடசொற்கள் புகுந்துள்ளன. அவற்றுள் சிலவற்றை மாற்றுமலும்,சிலவற்றைத் தம்மியல்புக் கேற்பத் திரித்தும் திராவிட மொழிகள் ஏற்றுக்கொண் டுள்ளன.

✓ வடமொழி, திராவிடம் எனும் இரண்டனுக்கும் பொது வாக வழங்கும் சில சொற்களை ஆராய்ந்து, அவை திராவிட மொழிக்கே உரியன எனக் கால்டுவெல் தக்க சான்றுகளுடன் எடுத்துக்காட்டியுள்ளார்.

✓ இரு மொழிக்கும் பொதுவாக அமைந்த சொற்களுள் திராவிட மொழிகளுக்கு இன்றியமையாதனவாக இருப் பனவும் அடிச்சொற்கள் தெளிவாக அமைவனவும் திராவிட மொழிகளையே சாரும் என்பது கால்டுவெல் கருத்தாகும்.

✓ நீர், மீன் எனும் தமிழ்ச் சொற்களுக் கிணையாக வட மொழியில் நீர, மீன எனும் சொற்கள் வழங்குகின்றன.

✓ இவை தமிழின்கண் அடிப்படைச் சொற்களாய் இருத்தலானும், பெருவழக்கின ஆகலானும், திராவிட மொழி களுள் பலவற்றில் வழங்கலானும், இவற்றுக் கிணையானசொற் களைத் திராவிட மொழிகளில் காண இயலாமையானும் திராவிடச் சொற்களே ஆகும். இவை தமிழினின்றே வட மொழிக்கண் சென்றிருக்க வேண்டும்.[1]

✓ சந்தனம் எனும் தமிழ்ச் சொல்லுக் கிணையாக வட மொழியில் சந்தன (Sandana) எனும் சொல் வழங்குகிறது. சாந்து, சாந்தம், சாது எனும் சொற்கள் தமிழின்கண் வழங்கலானும், கன்னடத்தில் சாது (Sadu) எனவும்,

---

1. Collected papers—பக். 299

தெலுங்கில் சாது (Cadu) எனவும் வழங்கலானும் இதன் அடிச்சொற்கள் திராவிட மொழிகளில் தெளிவாக விளங்குத லானும் இது திராவிடச் சொல்லேயாகும். வடமொழி திராவிடத்தினின்றும் கடன்பெற்றிருக்க வேண்டும்.

சாவு (தமிழ், கன்னடம்) என்பதற் கிணையாக வட மொழியில் சவ (Save) என்னும் சொல் வழங்குகிறது. இதன் அடிச்சொல்லாகிய சா என்பது திராவிட மொழிகளில் தெளிவாக விளங்குதலால் இது திராவிடத்தினின்றே வட மொழிக்கண் சென்றிருக்க வேண்டும்.

தமிழில் வளை யெனவும் கன்னடத்தில் பளெ (Bale) எனவும் வழங்கும் சொல்லுக் கீடாக வடமொழியில் வலய என வழங்குகிறது. இதுவும் திராவிடத்தினின்றே பெறப் பட்டதாகும்.

தொல்வழக்கை ஒட்டியும் சொற்களின் தோற்றம் உறுதி செய்யப்படுகிறது. பழந்தமிழ் இலக்கியங்களில் வழக்காறு பெற்ற சொற்களாயின் அவை திராவிட மொழிகளுக்கே உரியன எனக் கருத வேண்டியுளது.

தமிழ், மலையாளம், தெலுங்கு மூன்றிலும் வல்லி எனவும், கன்னடத்தில் பள்ளி (Balli) எனவும் வழங்கும் சொல்லுக் கீடாக வடமொழில் வல்லி என வழங்குகிறது. வள்ளி என்பது தமிழில் தாவரத்தை உணர்த்துகிறது. இதனால், வல்லி என்பது தமிழிலிருந்தே வடமொழிக்கண் சென்றிருக்க வேண்டும்.

பழங்காலத்து வழங்கிய பண்பாட்டுச் சொற்களுள்ளும் தொழில் நுட்பச் சொற்களுள்ளும் சிலவற்றை வடமொழியி னின்றும் திராவிடம் கடன் பெற்றிருக்கலாம்.

செடி, கொடிகளை உணர்த்தும் சொற்களைக் கடன் பெற்றது எனக் கூறுவதில் பொருளில்லை.

---

1. Collected papers—பக். 300
2. ,, ,, —பக். 301
3. ,, ,, —பக். 301

அரசன், தூது, தவசி, தெய்வம், தச்சன், நேமி, கம்மியன் என்பன வடமொழியினின்று பெறப்பட்டன என்பது பேராசிரியர் புர்ரோவின் கருத்தாகும்.

பவழம், பவளம் எனத் தமிழிலும், பவிழம் என மலையாளத்திலும், பவள எனக் கன்னடத்திலும், பகடமு, பவடமு எனத் தெலுங்கிலும் வழங்குகின்றன. ப்ரவால என்பது வடசொல்லாகும். தென் கடலில் பவழம் கிடைத்தமையாலும், அது மிகப் பழைய சொல்லாய் இருத்தலாலும் அது திராவிடச் சொல்லேயாகும். திராவிடத்தினின்று அது வடமொழிக்கண் புகுந்திருக்க வேண்டும்.[1]

கவுள் எனும் தமிழ்ச் சொல்லுக் கிணையாகக் கபோல (Kapola) எனும் வடசொல் வழங்குகிறது. இந்தோ ஐரோப்பிய மொழிகளில் இதன் அடிச்சொல் காணப்படாமையால், இது தமிழினின்றே வடமொழிக்கண் சென்றிருக்க வேண்டும்.

தமிழ்ச்சொல்	வடசொல்
கூகை	—கூக (ghuka)
கொப்புளம்	—கூபுச (kupusa)
முல்லை	— மல்லிகா (mallika)
புலால்	— பலால (palala)
எருக்கு	— அர்க (arka)
கைதை (தாழை)	— கேதெக (keteka)
தாழை	— தால (tala)
காழ்	— கால (kala)
புழுகு (அம்பு முனை,	— புங்க (punkha)
உரிஞ்சு (உராய்)	— உஞ்சி
செண்பகம்	— சம்பக
அழிஞ்சில்	— அங்கொல (ankola)

1. " " —பக். 301

கரிசல்	— கஜ்ஜல (kajjala)
குளம்பு	— குல்ப (kulpha)
சடை	— ஜடா (jata)
சொட்ட (Cotta) தெலுங்கு	— சட்ஹ
மள்ளன்	— மல்ல
பல்லி	— பல்லி (Palli)
தூவல் (பஞ்சு)	— தூல (tula)
குழை	— கொரக (Koraka)
மயில்	— மயூர
வல்	— பல (bala)
தண்டு	— தண்ட (danda)
கொடு (வளைவு)	— குடில (kutela)
குடி	— கூட (kuta)
கடு	— கடு (katu)
கட்டு	— கட (kata)
கடை (katai)	— (வி) கட (Vikata)
கடைக்கண்	— கடாக்ஷ

இவை யெல்லாம் திராவிட மொழியினின்று வடமொழி பெற்ற சொற்களாகும் எனப் பேராசிரியர் பர்ரோ காட்டுவார்.

ரிக் வேதத்தில் 25க்கும் மேறபட்ட திராவிடச் சொற்கள் புகுந்துள்ளமையையும் எடுத்துக் காட்டுவார்.

கடுக (katuka), குண்ட, (kulpha) (ankle), கூட (kuta) khala, danda, pushpa, phala, bala, bija, mayura, langala (Plough), munji — புல்வகை, ukha (a part of the boby), puj (to honour).

அரணி (அரை), உலூகல (ulukhala — உலக்கை), karamba — (குழம்பு), kana — (காண), குண்ரு — (குணி) குணக்கு, குலாய — (குழு), குலா — குழு, நட (nada) —

நாடல், பிண்ட — (பிண்டு), (தெலு), bila — விளவு manduka — மண்தூங்கு, vrla — விரல்.

ரிக் வேதத்தில் இச் சொற்கள் புகுந்தமை வாயிலாக வட இந்தியாவும், மேற்கு இந்தியாவும் திராவிடர்கள் பரவி இருந்த இடங்களாகும் எனும் வரலாற்றுண்மை புலப்படு கிறது. ஆசியர் தென்னகம் புகுமுன்பே இத் திராவிடச் சொற்கலப்பு ஏற்பட்டுள்ளது.[1]

1. C.P. பக். 311

26. சொற்பொருள் மாற்றம்

சொற்கள், தம்மையும், பொருளையும் உணர்த்தவல்லன என்பார் தொல்காப்பியர்.

'சொன்மை தெரிதலும் பொருண்மை தெரிதலும்
சொல்லின் ஆகும்.'

நீயென் கிளவி, தஞ்சக் கிளவி என வருவனவும், இது பெயர், இது வினை, இது இடை, இஃது உரி என அறிய வருவனவும் தம்மை உணர்த்துவனவாம் (சொன்மை தெரிதலாம்).

சாத்தன், சாத்தி எனப் பொருளறிய நிற்றல் பொருளுணர்த்துவனவாம் (பொருண்மை தெரிதலாம்).

பருப்பொருள், நுண்பொருள் எனப் பொருள் இருவகைப் படும். அவற்றை உணரச் சொற்கள் கருவியாகின்றன.

சொற்கள் பொருளுணர்த்துங்கால், வெளிப்படையாகவும் குறிப்பாகவும் உணர்த்தும்.

சொல்லளவால் பொருளறிய நிற்றல் வெளிப்படை; சொல்லளவாலன்றிச் சொல்லுவான் குறிப்பால் பொருளறிய நிற்றல் குறிப்பு.

ஒன்றொழி பொதுச்சொல், விகாரம், தகுதி, ஆகுபெயர், அன்மொழி, சிலேடை, உருவகம், குழூஉக்குறி, வினைக்குறிப்பு, முதற் குறிப்பு, தொகைக் குறிப்பு முதலியன குறிப்பாற் பொருளுணர்த்துவனவாகும்.

சில சொற்கள் பெயரையோ, வினையையோ சார்ந்து நின்று சூழ்நிலைக் கேற்பப் பொருள் உணர்த்த வல்லன.

தில், மன், கொல், உம், ஏ முதலாய இடைச்சொற்களும், பகுதி ஒழிந்த பகுபத உறுப்புகளும் (இடைநிலை, சந்தி, சாரியை, விகுதி), வேற்றுமை, உவமை, பண்பு முதலாயவற்றின் உருபுகளும், இசைநிறை, அசைநிலை போன்றவையும் அத் திறத்தனவாகும்.

தமக்கென அவற்றிற்குப் பொருள் இல்லை. உரிச் சொற்களுக்குத் தமக்கெனப் பொருள் இருப்பினும் தனித்து நின்று பொருள் உணர்த்தின் பயன் விளைவதில்லை.

இடுகுறி, காரணம்

சொற்கள் இடுகுறியானும், காரணத்தானும் பொருளுணர்த்துவன. சொல்லுக்கும், பொருளுக்கும் தொடர்பிருக்க வேண்டும் என்ற நியதியில்லை. தொல்காப்பியரும் 'மொழிப்பொருட் காரணம் விழிப்பத் தோன்றா' என்பர்.

உரிச்சொற்களுக்கு இலக்கணங் கூறுங்கால் தொல்காப்பியர் 'இசையினுங் குறிப்பினும் பண்பினுந் தோன்றி' எனக் குறிப்பிடுகின்றார். இதனால், சொற்கள் இசையானும், சில குறிப்புகளானும், பண்புகளானும் தோன்றியிருக்கலாம் எனக் கருதலாம். இரட்டைக் கிளவி ஒலிக் குறிப்பாலும், பண்பு குறிப்பாலும் பொருள் தருகிறது.

மரபும் ஆக்கமும்

குறிப்பிட்ட சொற்கள் குறிப்பிட்ட பொருள்களையே தொன்றுதொட்டு உணர்த்தி வருகின்றன. அவை மரபு சொற்கள் என வழங்குகின்றன. சில பொருள்களை உணர்த்துதற்கு மரபு சொற்கள் இல்லாத போது புதிய சொற்கள் படைக்கப்படுகின்றன. அவை ஆக்கச் சொற்கள் என வழங்குகின்றன.

ஒரு பொருளும் பல பொருளும்

ஒரு சொல் பல பொருளையும் தருதல் உண்டு. திசைச் சொற்கள் பல, மொழிக்கண் புகுவது இதற்குக் காரணமாகும்.

பலபொருள் ஒருசொல் பொருள் தரல்

பல பொருள்களை உணர்த்தும் சொற்கள் வினையாலும், இனத்தாலும், சார்பாலும் பொதுமை நீங்கிக் குறித்த பொருளை உணர்த்தும்.

மாப் பூத்தது—வினையால் மரத்தை உணர்த்திற்று.

மாவும் மருதும் ஓங்கின—இனத்தால் மா என்பது மரத்தை உணர்த்திற்று.

கவசம் புக்கு நின்று 'மாக்கொணு' என்ற வழிச் சார்பால் மா குதிரையை உணர்த்திற்று.

வழக்கு வேறுபடல்

உவன், உது, உவ்விடம் என இன்றும் ஈழ நாட்டில் வழங்குகின்றன. இவை தமிழ் நாட்டில் வழக்கிழந்து விட்டன.

'மேலும்கொடு' எனும் பொருளில் சென்னையில் வழங்கும் 'கொசுறு' எனும் சொல் தமிழ் நாட்டில் பிற பகுதிகளில் வழங்குவதில்லை. தேங்காயின் மேலோட்டை வடஆர்க்காடு மாவட்டத்தார் 'கொட்டாங் குச்சி' என வழங்குகின்றனர். அதனையே கோவை மக்கள் 'தொட்டி' என்கின்றனர்.

ஈழத்தில் 'நுளம்பு' எனும் சொல் கொசுவைக் குறிக்க வழங்குகிறது. தமிழகத்தில் அவ் வழக்கில்லை.

புத்தகத்தின் அட்டையை 'மட்டை' எனலும், அவதானித்தல், கதைத்தல் முதலியனவும் ஈழநாட்டு வழக்குகளாகும்.

காலமும் இடமும்

சொற்கள் இடந்தோறும் வேறுபடல் மிகக் குறைந்த வழக்கே. காலந்தோறும் வேறுபடல் பெருவழக்காகும்.

சிறப்புப் பொருட்பேறு

பல பொருள்களுக்கும் பொதுவாக வழங்கும் ஒரு சொல் காலப்போக்கில் ஒரு பொருளையே குறித்தல் உண்டு. அதனைச் சிறப்புப் பொருட் பேறு என்பர்.

பொன், இழவு, புல், நெய் என்பன முதலில் பல பொருள் களுக்குப் பொதுவாக வழங்கிப் பின் ஒரு பொருளுக்கே உரிமை யாகிவிட்டன.

பொதுப் பொருட்பேறு

முதலில் சிறப்புச் சொற்களாய் நின்று குறிப்பிட்ட பொருளை உணர்த்தி வந்த சொற்கள் காலப் போக்கில் பல பொருளை உணர்த்திப் பொதுச் சொற்களாதலும் உண்டு. அவற்றைப் 'பொதுப் பொருட்பேறு' என்பர்.

எண்ணெய், மரம், மரக்கால், கறி என்பன முதலில் குறிப்பிட்ட பொருள்களை உணர்த்திப் பின் பல பொருள் களுக்குப் பொதுவாக நிற்கும் சொற்களாகி விட்டன.

எள்ளிலிருந்து எடுக்கப்படுவது எனும் பொருள்படும் எண்ணெய் என்பது இன்று எல்லா நெய்களையும் (Oil) உணர்த்துகின்றது. அகக்காழ் உடையன மரம்; புறக்காழ் உடையன புல் என்பர் தொல்காப்பியர். இன்று மரம் என்பது தென்னை, பனை முதலியவற்றையும் குறிக்கிறது.

கறி என்பது மிளகிட்ட கறியை உணர்த்தி நின்று இன்று மிளகிடாத கறியையும் உணர்த்துகிறது. மரத்தால் செய்த 'மரக்கால்' எனும் அளவு கருவி இன்று பிறவற்றுக்கும் பெயராகிவிட்டது.

உயர் பொருட்பேறு: பிள்ளை, பார்ப்பு, களிப்பு

கீரிப்பிள்ளை, அணிப்பிள்ளை என அஃறிணைக்கு வழங்கிய பிள்ளை என்பது மக்கள் குழந்தைகளுக்கு வழங்கி இன்று மக்கள் சாதிப் பெயராய் உயர்ந்துவிட்டது.

பறவைக் குஞ்சுகளைக் குறிக்கும் பார்ப்பு என்பது இன்று பாப்பா என மக்கள் குழந்தைகளை உணர்த்துகிறது. சிலருக்கு இயற்பெயராகவும் வழங்குகிறது.

கள்ளுண்டு களித்தலுக்கு வழங்கிய களிப்பு என்பது இன்று உவகை நிலையை உணர்த்துகிறது.

இழி பொருட் பேறு

மணம் எனும் பொருள் தரும் நாற்றம், குவியல் எனும் பொருள்படும் குப்பை முதலாய சொற்கள் இன்று இழி பொருட் பேறுகிவிட்டன.

நுண்பொருட்பேறு

தலை, அரை, கால், நோக்கம், சூழ்ச்சி, பார்வை முதலாய பருமையை உணர்த்திய சொற்கள் இன்று நுண் கருத்துகளை உணர்த்துகின்றன.

பருப்பொருட்பேறு

அகம், புறம், விருந்து, வறுவல், முறுக்கு, பகை முதலாய நுண் பொருட் சொற்கள் இன்று பருப் பொருள்களை உணர்த்து கின்றன. இம் மாற்றத்தைப்

"பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல
காலவகையி னானே"

என்பார் நன்னூலார்.

27. சொல் இலக்கண மாற்றம்

காலந்தோறும் சொற்களும், அவற்றின் வடிவங்களும் இலக்கண உருபுகளும் மாறுதல் உண்டு. தொல்காப்பியத் திற்கும், நன்னூலுக்கும் இடையே சில மாற்றங்கள் காணப் படுகின்றன.

தொல்காப்பியமும் நன்னூலும்

(1) முதல், சார்பு எழுத்துகள்பற்றி நன்னூலுக்கும், தொல்காப்பியத்துக்கு மிடையே வேறுபாடுண்டு.

குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் எனும் மூன்றனை மட்டுமே தொல்காப்பியம் சார்பெழுத்தெனக் கூற, நன்னூல் ஏனைய ஏழனைக் கூட்டிச் சார்பெழுத்துப் பத்தெனக் கூறுகிறது.

(2) மொழி முதல், இறுதி எழுத்துகளிலும் இவ்விரு நூல்களும் மாறுபடுகின்றன.

(3) எழுத்துகளின் பிறப்பு, முயற்சிகளைப் பொறுத்த அளவில் தொல்காப்பிய நெறியையே பெரும்பாலும் நன்னூல் கடைப்பிடிப்பதால் அவ் விரண்டனுக் கிடையே மிகுதியான வேறுபாடு விளையவில்லை.

உயிரும், இடையின யகரமும், மிடற்றின்கண்ணும், மெல்லினம் மூக்குவளியானும் பிறக்கும் எனக் கூறி ஏனைய இடை, வலி, ஆய்தங்களுக்கு இடம் குறிப்பிடாது தொல்காப் பியம் செல்ல, நன்னூல் அவையும் முறையே மிடற்றையும்,

உரத்தையும், தலையையும் இடமாகக் கொண்டு பிறக்கும் எனக் கூறுகிறது.

(4) பதவியல் என்பது நன்னூலாரே புகுத்திக்கொண்ட ஒன்று. அது பண்பு சொற்களின் மாற்று வடிவங்களையும், ஒலித் திரிபுகளையும் விரித்தோதுகிறது.

(5) தொல்காப்பியம் ஈறுதோறும் தனித்தனியே கூறும் பல புணர்ச்சி விதிகளையும், சில சிறப்பு விதிகளையும் நன்னூல் தொகுத்துக் கூறுகின்றது.

(6) கள் என்பது அஃறிணைக்கே உரியதெனத் தொல்காப்பியர் கூற, உயர்திணைக்கும் உரியதென நன்னூல் நவில்கிறது.

(7) மூவிடப் பெயர்களுள் தன்மைப் பெயராக யான் என்பதனை மட்டுமே தொல்காப்பியம் கூற, நான் எனும் புது வடிவு ஒன்றனையும் நன்னூல் சேர்த்தோதுகிறது.

(8) வேற்றுமை உருபுகளுள் மூன்றன் உருபுகளாக ஒடு, ஆன் என்பனவற்றைத் தொல்காப்பியம் கூற நன்னூல் அவற்றோடு ஓடு, ஆல், உடன் என்பனவற்றையும் சேர்த்தோதுகிறது.

இன் ஒன்றனையே ஐந்தன் உருபெனத் தொல்காப்பியம் கூற, நன்னூல் அதனோடு இல் என்பதனையும் சேர்த்துக் கூறுகிறது.

அது ஒன்றனையே ஆறன் உருபாகத் தொல்காப்பியம் கூற, நன்னூல் அதனோடு ஆது என்பதனையும் சேர்த்து அவ்விரண்டும் ஒருமைக்குரியன எனவும், அ என்பது பன்மைக்குரித்தெனவும் கூறுகிறது.

கண் ஒன்றனையே ஏழன் உருபெனக் குறிப்பிட்டுக் கால், புறம், அகம் முதலாயவற்றை அதற்கு அண்மைச் சொற்களாகத் தொல்காப்பியம் கூற, நன்னூல் கண், கால், புறம், அகம் முதலாய அனைத்தையும் உருபெனவே விதந்தோதுகிறது.

(9) தொல்காப்பியம் தொடரியலுக்கும், சொல்லிய லுக்கும் தனித் தனியே சிறப்பிடம் தந்து, கிளவியாக்கம், வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல், விளிமரபு, எச்ச வியல் என்பவற்றால் தொடரியலையும், ஏனைய பெயரியல், வினையியல், இடையியல், உரியியல்களால் சொல்லியலையும் எடுத்தோத, நன்னூல் சொல்லியலுக்கே சிறப்பிடந் தந்து அதனையே ஐந்தியல்களால் ஓதுகிறது. பொதுவியலால் தொடரியலைச் சிறிதளவு விதந்தோதுகிறது.

(10) தன்மைப் பன்மை வினைகள் உயர்திணைக்கே உரியன என்பார் தொல்காப்பியர். இருதிணைக்கும் உரியன என்பார் நன்னூலார்.

(11) வியங்கோள் வினை படர்க்கைக்கு மட்டுமே உரிய தென்பார் தொல்காப்பியர். மூவிடத்திற்கும் உரியதென்பார் நன்னூலார்.

(12) வியங்கோள் விகுதிகளைத் தொல்காப்பியம் விதந் தோதவில்லை. நன்னூல் விதந்துரைக்கிறது.

(13) பெயரெச்ச வாய்பாடுகளாகச் செய்த, செய்யும் எனும் இரண்டினை மட்டும் தொல்காப்பியம் கூற நன்னூல் செய்கின்ற என்பதனையும் சேர்த்துக் கூறுகிறது.

(14) வினையெச்ச வாய்பாடுகளுள் செய்யா, செய்வான் செய்பான், செய்பாக்கு என்பனவற்றை நன்னூல் புதியன வாகச் சேர்த்துள்ளது.

(15) செய்கு என்னும் வாய்பாடு வினையொடு முடியினும் முற்றாகவே கருதப்படும் என்பார் தொல்காப்பியர். நன்னூல் செய்கும் என்பதையும் உடன் சேர்த்துக் கூறுகிறது.

(16) செய்து, செய்யூ, செய்பு, செய்தென, செய்யியர், செய்யிய, செயின், செய, செயற்கு எனும் ஒன்பதும் வினை யெச்ச வாய்பாடுகளெனத் தொல்காப்பியம் கூறுகிறது.

இவற்றுள் செயற்கு எனும் வாய்பாடு நன்னூலில் இடம் பெறவில்லை.

(17) பின், முன், கால், கடை, வழி, இடத்து எனும் விகுதி பெற்ற வாய்பாடுகளைக் காலங் கண்ணிய வினையெச்சக் கிளவிகளாகத் தொல்காப்பியம் கூறுகிறது. இந் நுட்பத்தை நன்னூல் காட்டவில்லை.

(18) நன்னூல் கால எழுத்துகளைத் தெளிவாகக் கூறுகிறது. தொல்காப்பியம் வாய்பாடுகளால் குறிப்பாக உணர்த்துகிறது. செய்து, செய்யும் என்பவை முறையே இறந்த காலத்தையும், நிகழ்காலத்தையும் காட்டுதலை மட்டும் குறிப்பிடுகிறது.

(19) தொகைநிலைத் தொடர்களுள் அன்மொழித் தொகை, பண்பு, உம்மை, வேற்றுமை எனும் மூன்று தொகை நிலைத் தொடர்களினடியாகத் தோன்றும் எனத் தொல்காப்பியம் கூறுகிறது. உவமை, வினைத் தொகை எனுமிரண்டனையும் சேர்த்து, 'ஐந்தொகை மொழிமேல் பிறதொகல் அன்மொழி' எனக் கூறுகிறது நன்னூல்.

28. மொழிக் கலப்பு

வடமொழி தமிழகத்தில் கால் ஊன்றிய போதினும் தமிழோடு முற்றிலும் கலந்து அதனை மாற்றும் ஆற்றலை அது பெறவில்லை. புலவர்கள் வடசொற்களைப் புகுத்த முயன்ற போதெல்லாம் அதற்கு எதிர்ப்புத் தோன்றிக்கொண்டே இருந்தது.

பிற மொழிச் சொற்களைத் தமிழ் ஏற்கும் பொழுது அவற்றின் ஒலியியல்பைத் தம்மியல்புக்கு ஏற்றவாறு மாற்றியே ஏற்றுக்கொண்டது.

'வடசொற் கிளவி வடஎழுத்து ஒரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லாகும்மே'

என்பது தொல்காப்பியம். வடசொற்கள் புகுந்தன வாயினும் வடமொழியின் ஒலிகள் தமிழில் இடம் பெறவில்லை. சில ஒலிகளை எழுதிக்காட்ட வேண்டிய நிலை ஏற்பட்டதால் ஹ, ஷ, ஸ, ஜ முதலாய ஒலிகளையும், அவற்றுக்குரிய எழுத்துகளையும் தமிழ் ஏற்றுள்ளது.

தொல்காப்பியர் காலத்தில் சில வட சொற்களே தமிழ் மொழியில் இடம்பெற்றன. 'காலம், உலகம்' என்பனவற்றை வடசொற்கள் என்பாரும் உளர். அவை தமிழ்ச் சொற்களே.

சங்க காலத்தில் இமயம், கங்கை, வாரணவாசி, பாடலி புத்திரம் முதலிய ஊர்ப் பெயர்கள் இடம் பெற்றுள்ளன. இவையேயன்றி 'யவனர்' என்ற புதிய சொல்லும் புகுந்துளது. புறநானூற்றிலும் சில வடசொற்கள் புகுந்துள்ளன.

சங்க இலக்கியங்களுள், காலத்தால் பிற்பட்ட நூல்களாகிய கலித்தொகையிலும், பரிபாடலிலும், திருக்குறள் மணிமேகலை, சிலப்பதிகாரம் முதலிய நூல்களிலும் வடசொற்கள் மிகுதியாகக் கலந்துள்ளன. எனினும், அவை தமிழ் ஒலிகளைப் பெற்றுத் தமிழ்ச் சொற்களாகிவிட்டன. சமய ஞானமும், தத்துவ விசாரணைகளும் பெருகிய காரணத்தால் இந் நூல்களில் வடசொற்கள் இடம்பெற்றன.

இடைக் காலத்தில் (14, 15ஆம் நூற்றாண்டுகளில்) மணிப் பிரவாளநடை என்ப தொன்று எழுந்தது. அது தமிழ் வாக்கிய அமைப்பையும், வடமொழியும் தமிழும் இணையாகக் கலந்த சொற்கலப்பையும் கொண்ட நடையாகும். மணியும், பவளமும் கலந்தமைந்த மாலை போல அஃது அழகு பயப்ப தெனக் கருதினர். 'ஸ்ரீ புராணம்' எனும் சைன நூல் இக் கலப்பு நடையால் எழுதப்பட்டதே.

வைணவ உரையாசிரியர்களும் இம் மணிப் பிரவாள நடையைக் கையாண்டு உரை நடையில் வடமொழிச் சொற்களை மிகுதியாகக் கலந்தனர்.

வடமொழி நூல்களை வலியக் கற்றதால்தான் சங்க காலத்தில் வடசொற்கள் தமிழில் புகுந்தன என்பதைவிடப் பேச்சு வழக்காகிய பிராகிருத மொழிவாயிலாகவே புகுந்தன என்பது பொருந்துவதாகும்.

பல்லவரும், பிற்காலச் சோழர்களும் வடமொழிக்கும், வடமொழி நூல்களுக்கும் ஆக்க மளித்தனர். அதனால், வட நூற்பயிற்சி மிகுதியாயிற்று.

பல சொற்கள், நேரே வடமொழியினின்றும், அதன் சிதைவு மொழியாகிய பிராகிருதப் பேச்சு மொழியினின்றும் திரிந்து தமிழ்க்கண் புகுந்துள்ளன. பல்லவர் காலத்தில் பல சொற்கள் பிராகிருதம் வாயிலாகப் புகுந்தன என்புர்.

விஞ்ஞாபனம் என்பது நேரே புகுந்த வடசொல் என வி. கோ. சூ. காட்டுவார். பல்லவர் காலத்தில் புகுந்த சொற்

களாகப் பருப்பதம், பரமேச்சுரன், நட்டம், விண்ணப்பம் முதலியவை காட்டப்படுகின்றன.

[1] சோழர் காலத்தில் வடமொழி இலக்கியங்கள் மிகுதியாகப் பயிலப்பட்டன. அதனால், இலக்கியச் சொற்கள் நேரே தமிழில் புகுந்தன; சில சொற்கள் திரிபு பெறுமலேயே புகுந்தன. இராசராசன், குலோத்துங்கன், விசயாலயன் முதலியவை வடசொற்களே.

வடமொழி வழக்காறுகள்

வடசொல்லும், எழுத்தும் புகுந்ததோடு இலக்கிய இலக்கண வழக்காறுகள் சிலவும் புகுந்துவிட்டன. சேனவரையர் வடமொழிப் போக்கை ஒட்டியே தொல்காப்பியத்திற்கு உரை வகுத்துள்ளார். பதவியல் என்ற தனியியலையே வடமொழி இலக்கணத்தை ஒட்டி நன்னூலார் புகுத்தியுள்ளார். திருக்குறள் உரையில் பரிமேலழகர் பல வடமொழி வழக்குகளைப் புகுத்தியுள்ளார். தண்டியலங்காரம் வடமொழிப் போக்கைத் தழுவி அணி வகைகளை விரிவுபடக் கூறுகிறது.

பிறமொழிக் கலப்பு

[1] கீழ் வருபவை வேத காலத்திலேயே வடமொழியில் அமைந்துவிட்ட சொற்கள் என்பர்.

தமிழ்		வடமொழி
பழம்	—	Phala
மயில்	—	மயூர
களம்	—	Khala
வல் (வன்மை)	—	பல
கைதை	—	கைதகா
ஏலம்	—	ஏலா
பல்லி	—	பல்லீ
புற்று	—	புத்திகா

[1] மயில் எனும் தமிழ்ச் சொல்லே வடமொழியில் மயூரம் எனப் புகுந்திருக்க வேண்டும். மய்-மயிர்-மஞ்ஞை எனத்

தமிழில் வழங்குகின்றன. முண்டா மொழியில் 'மரக்' எனும் சொல்லின் மூலம் மயில் எனும் தமிழ்ச் சொல்லே என்பர்.[1]

மயில், களம், பழம் எனும் தமிழ்ச் சொற்களினின்றே மயூரம், கல (khala), பல (phala) எனும் சொற்கள் வடமொழியில் புகுந்திருக்கவேண்டும் என்பார் பேராசிரியர் பர்ரோ.

நீர், மீன் என்பன தமிழினின்றே நீரம், மீன என வடமொழியில் புகுந்தன.

தமிழ் 'வல்' என்பதே பல என வடமொழியில் புகுந்திருக்க வேண்டும் எனவும், கைதை (kaltha), ஏலம் (ela), பல்லி (palli), மயில் (மயூர), புற்று (புத்திகா) என்பன வேதங்களில் புகுந்த தமிழ்ச் சொற்கள் எனவும் பேராசிரியர் எமனோவ் கூறுகிறார்.

அந்தம், அமரர், அமுதம், அவி, உவமம், ஏது, கரணம், காரணம், குணம் முதலியவற்றைத் தொல்காப்பியர் காலத்தில் தமிழ் ஒலி மரபிற் கேற்ப முற்றிலும் திரிந்து புகுந்த வட சொற்கள் என்பர்.

அரசர், அரணம், அவை, ஆசான், ஆசிரியர், ஆணை, உரு, ஏமம் என்பவை ஓரளவு திரிந்து புகுந்தன என்பர்.[2]

காமம் என்பதை வடசொல் எனக் கூறி, அது தொல்காப்பியத்தில் இடம் பெற்றதென்பர்.[3]

யவனர், யூபம் முதலிய சொற்கள் சங்க காலத்தில் புகுந்தன. கண்ணன் என்பது கிருஷ்ணன் என்பதன் மரூஉ என்பர்.[4]

---

1. கலைக் களஞ்சியம்-தமிழ்—பக். 469
2. தமிழ் மொழி வரலாறு—மோசசு பொன்னையா—பக். 167
3. A Histor of the Tamil Language—பக். 172
4. " " —பக். 172

சாவகர், சாரணர், தானம், தருமம், ஞானம், விஞ்சை, இய்க்கி, இந்திரன், அந்தி முதலியன சிலப்பதிகாரத்தில் இடம் பெற்றுள்ளமையை எடுத்துக் காட்டுவர்.[1]

தருமம், பாவனை, கந்தம், நரகர், அநித்தம், துக்கம், முதலிய சொற்கள் மணிமேகலையில் வந்துள்ளன என்பர்.[2]

ஆதி, பகவன், பாக்கியம் என்பன திருக்குறளில் இடம் பெற்றுள்ளன.

வழுதுணங்காய், தவளைக் காய், மீசை முதலிய சொற்கள் முண்டா மொழியிலிருந்து தமிழில் புகுந்துள்ளன. நீர் என்னும் சொல் தேங்காய் என்ற பொருளில் முண்டா மொழியில் வழங்குகிறது. அதனல், இளநீர் என்பதில் நீர் என்னும் சொல் முண்டா மொழியினது என்பர்.

கீழைத் தீவுகளிலிருந்து பல நறுமணப் பொருள்கள் நம் நாட்டில் புகுந்தன. அவற்றுள் தக்கோலி, அருமணவன் முதலியவற்றை அடியார்க்கு நல்லார் காட்டுவர்.

முருங்கை என்பதனைச் சிங்களச் சொல் என்பர். படகு வகையைச் சார்ந்த 'சம்பான்' என்னும் சொல்லும், பெரிய மண் கலத்தைக் குறிக்கும் 'காங்கு' என்னும் சொல்லும், 'பீங்கான்' என்னும் சொல்லும் சீன நாட்டிலிருந்து வந்தவை என்பர்.[4]

மத்திகை, சுருங்கை, கன்னல், ஓரை என்பனவற்றைக் கிரேக்க மொழிச் சொற்கள் என்பர்.[5]

தபா (முறை), ரஜா, இமாம், இலாகா, பிஸ்மில்லா, உருசு, காயம் (உறுதி), ஜேப்பி, சைத்தான், தகவல், தாக்கீது,

---

1. ,, ,, —பக். 173
2. ,, ,, —பக். 173
3. தமிழும் பிற பண்பாடும் —பக். 76
4. தமிழும் பிற பண்பாடும் தெ. பொ. மீ. —பக். 86
5. ,, ,, பக். 76

தவாலி, நகாரா, மக்கர், மால் (மகால்) முதலியவற்றை அராபியச் சொற்கள் என்பர்.[1]

சிப்பந்தி, தாவாலி, தம்பிடித்தல, தர்க்கா, நாஸ்தா, மஜா, மாலீசு, மோரா, லங்கர், லுங்கி, சாக்கு, ஜமுக்காளம், ஜன்னல், சால் (வை), ஜோக்கு, சர்க்கார், சுமார் என்பனவற்றைப் பாரசீகச் சொற்கள் என்பர்.

அக்கப்போர், அக்ரகாரம், அக்கு, அசல், ஆசாமி, அண்டா, அனு, அபினி, அம்பர், அம்பாரம், அம்பாரி, அமுல், அலக்கலக்கா, அலாதி, அமீன், இந்துஸ்தான், ராஜி, ராஜினமா, ராட்டினம், ராத்தல், லங்கோடு, இனும், ருஜு, ஊதா, ஊதுவத்தி, ஐவேஜி, அவுட்டு, அச்சா, கச்சேரி, கஜானு, கசகசா, கசாப்பு, கெடுபிடி, கப்பி, கம்மி, கைலி, கிராக்கி, கறுர், கலாய், காப்பிரி, காய்லா, காலி, கீல், குடுத்துணி, குத்தகை, குலாம், சந்தா, சப்பரம், சர்க்கா, சராசரி, சாமான் முதலியவற்றை உருது மொழிச் சொற்கள் என்பர்.[2]

முகமதியர்களுக்குப் பின் வந்த டச்சுக்காரர் வழியாகக் கக்கூஸ், துட்டு, பம்பளிமாஸ் முதலிய சொற்கள் தமிழில் புகுந்தன என்பர்.

பதினைந்தாம் நூற்றாண்டில் முதன் முதலாகத் தமிழ் நாட்டில் புகுந்த போர்ச்சுகீசியரைக் குறிக்கும் பறங்கி என்னும் சொல்லை அடையாகக் கொண்டு பல சொற்கள் அமைந்துள்ளன. பறங்கிக்காய், பறங்கிச்சக்கை, பறங்கிப் பேட்டை, பறங்கிமலை முதலியன அத் தகையவை என்பர்.[3]

அலமாரி, கோப்பை, ஜன்னி, அன்னுசி, கடுதாசி, அல்பனத்தி, கிராதி, கொரடா, த்ராவி, பாதிரி, பீப்பாய்,

---

1. " " பக். 77
2. தமிழும் பிற பண்பாடும்— பக். 78
3. " " பக். 78

மேசை, மேஸ்திரி, வராந்தா முதலியனவும் போர்த்துகீசியச் சொற்களே என்பர்.[1]

போர்த்துகீசியருக்குப் பின்வந்த பிரஞ்சுக்காரர்களால் ஆசு (Ace), குசினி, பீரோ, லாந்தர் முதலாய சொற்கள் புகுந்தன என்பர்.

தமிழ்க்கண் புகுந்த ஆங்கிலச் சொற்களுக்கு அளவே இல்லை.

உயில், ஏக்கர், காப்பி, கொக்கோ, கோர்ட்டு, சம்மன், சவரன், சிமிட்டி, சினிமா, டிக்கெட், நம்பர், பாங்க், பேப்பர், லீவு, அமீனு அவற்றுள் குறிப்பிடத் தக்கன.

மராத்தியர் தஞ்சையில் ஆண்டமையால் உணவு வகைச் சொற்கள் பல புகுந்தன.

அட்டவணை, கைலாகு, கச்சாயம், அபாண்டம், காமாட்டி, கில்லாடி, குண்டான், கேசரிபாத், கோசும்பரி, சாம்பார், சவுக்கார், சாவடி, சேமியா, பட்டாணி, பேட்டை, லாவணி, ரசவாங்கி, வில்லங்கம், ஸொஜ்ஜி முதலியன அவற்றுள் குறிப் பிடத் தக்கன.

அட்டிகை, இதா, எகத்தாளம், எட்டன், சமாளித்தல், சொத்து, பட்டாக்கத்தி, பம்பு, (மூங்கில்), பித்தலாட்டம் முதலியவற்றைக் கன்னடச் சொற்கள் என்பர்.[2]

அக்கடா, ரெட்டி, ரவிக்கை, லஞ்சம், உப்பசம், கட்டடம், கட்டப்பாறை, கந்தை, கண்ணராவி, கபோதி, கம்பத்தம், கலப்படம், குப்பம், கெடுவு, கொாலுசு, சந்தடி, சலவை, ஜளிப்பு, சிட்டிகை, சிமிளி, உருண்டை, சொக்கா, தடவை, திப்பி, திமிசு, தும்பு, தெப்பல் (அடி), தோத்தி (வேட்டி), நீச்சு, (மீன் நாற்றம்), பட்டறை, பலப்பம், பவிசு, பால்மாறு

---

1. ” ” பக். 79
2. ” ” பக். 79

தல், போல் (உள்ளீடு இன்மை), வெல்தி, ஜாஸ்தி, சந்து, சுளுவு முதலியவற்றைத் தெலுங்கு சொற்கள் என்பர்.

பழங்காலத்தில் வடசொற்களும், இடைக் காலத்தில் இந்துஸ்தானிச் சொற்களும் புகுந்தமை போலத் தற்காலத்திலும் கற்றோர் பேச்சிலும், கலை, விஞ்ஞானக் கருத்துகளிலும் ஆங்கிலச் சொற்கள் மிகுதியாகக் கலந்துள்ளன. மேல் நாட்டு நாகரிகமும், விஞ்ஞானப் பொருள் சிந்தனையும் பெருகிவிட்ட காரணத்தால் இவ்வாறு புகுதலைத் தவிர்க்க முடியவில்லை. பாமர மக்கள் பேச்சிலும் சில ஆங்கிலத் திரிபு சொற்கள் இடம் பெறுகின்றன. இக் காலத் தமிழ் உரைநடையே ஆங்கிலப் போக்கை ஒட்டி வளர்ந்துள்ளது எனில் அது மிகையாகாது. உரைநடை வளர்ச்சிக்கு ஆங்கிலம் மிகுதியாக உதவியுள்ளது. ஆங்கிலம் கற்றவர்கள் தமிழில் எழுதும் பொழுது, அவர்கள் சிந்தனை ஆங்கில அடிப்படையில் விளங்குவதால், அச் சாயல் தமிழ் நடையில் படிந்துவிடுகிறது. இது விலக்க முடியாத ஒன்று.

29. மொழி நிலை

சொல்லமைப்பை ஒட்டிச் சொற்களைத் தனிநிலை மொழிகள், ஒட்டுநிலை மொழிகள், உட்பிணைப்பு நிலை மொழிகள் என மூவகையாகப் பிரித்துக் காண்பர்.

அடிச் சொல் தனித்து நின்று பொருளுணர்த்தின் அது தனி நிலைமொழி(Isolative Languae) எனப்படும்.

எளிதில் பிரித்தறியக் கூடியவகையில் அடிச்சொல்லோடு உருபு ஒட்டிநிற்பின் அஃது ஒட்டுநிலைமொழி (Agglutinatire Language) என்ப்படும்.

பகுதியும், விகுதியும் பிணைந்து, பிரிந்தறியக் கூடாத நிலையில் நிற்பின் அஃது உட்பிணைப்பு நிலைமொழி (Infleotional Language) எனப்படும்.

சீனமொழிச் சொற்களில் ஒவ்வொரு அசையும் தனித்தே இயங்குதலால் அதனைத் தனிநிலை மொழி என்பர். ஆண்டு விகுதிகளும் தனித்தே இயங்குகின்றன.

திராவிடமொழிச் சொற்களில் எவ்விதச் சொல்லும். நேரசையாகவோ, நிரையசையாகவோ, பிரித்தறியக் கூடிய வகையிலிருத்தலால் அதனை ஒட்டுநிலை மொழி என்பர்.

தமிழில் சில சொற்கள் தனிநிலையிலும் உட்பிணைப்பு நிலையிலும் இயங்குகின்றன.

நீ வா—இவை தனிநிலைச் சொற்கள்

கல்லை—கல் + ஐ } இவை ஒட்டு
பார்த்தான்— பார் + த் + த் + ஆன் } நிலைச்சொற்கள்

கொண்டா, கொணு, } உட்பிணைப்பு
அஞ்செவி, பராரை, ஆந்தை } நிலைச்சொற்கள்

மிகுதி பற்றித் திராவிட மொழி ஒட்டுநிலை மொழி யெனக் கூறப்படுகிறது.

வடமொழியில் சொற்கள் பகுதியும், விகுதியும் பிணைந்து, பிரித்தறியக் கூடாத நிலையில் நிற்றலால், அதனை உட்பிணைப்பு நிலைமொழி என்பர்.

சொற்கள் தொகுநிலையாகவும் பிரிநிலையாகவும் இயங்கும்.

காணுன்—தொகுநிலை

காண் + ஆ + ன்—காண்—பகுதி; ஆ—எதிர் மறைநிலை நிலை; ன்—ஆண்பால் விகுதி.

அவன் காண வில்லை—பிரிநிலை

அவன்—ஆண்பாற் சொல்; காண — வினைச்சொல் (எச்சம்); இல்லை—எதிர்மறைக் குறிப்புவினைமுற்று.

இக் காலத்துத் தொகுநிலைச் சொற்களுள் பல பிரிநிலை மொழிகளாகவும் வழங்குகின்றன.

கண்டிலன் எனும் தொகுநிலைச்சொல் அவன் நேற்றுக் காண வில்லை எனப் பிரிநிலையாக வழங்குதல் காண்க.

பழங்காலத்தில் மொழிகள் தொகுநிலையை நோக்கி நின்றன என்றும், இக் காலத்தில் பிரிநிலை நோக்கிச் செல் கின்றன என்றும் ஆட்டோ எஸ்பெர்சன் குறிப்பிடுவார். தொகுநிலையில் செறிவு இடம் பெறும்; பிரிநிலையில் நெகிழ்வு இடம் பெறும். பிரிநிலையில் இயங்கும் மொழி நுட்பமான கருத்துகளை எளிதில் உணர்த்தும்; அவற்றை எப்படி வேண்டு மானாலும் மாற்றி இயைக்க வியலும் எனக் குறிப்பிடுவர். இரண்டு நிலைகளிலும் நன்மை இல்லாமல் இல்லை.

சொல்நிலையில் பகுதி, விகுதி, இடைநிலைகள் இடம் மாறினல் பொருள் விளங்காது. இவ் வகைகள் தொடர்தலில் குறிப்பிட்ட நியதி உண்டு.

சென்ருன்—சென்+ற்+ஆன்

இவற்றை முன்பின்னுக மாற்றினல் சொல்லும் தன்னியல்பை இழந்துவிடும்; பொருளும் விளங்காது.

அவன் ஊருக்குச் சென்ருன்'

இத் தொடரில் சொற்கள் இடம் மாறினலும் பொருட் சிதைவு விளைவதில்லை.

தனிச்சொல் இயல்பினை நன்னூல் தெளிவுபடுத்துகிறது.

உணர்ச்சி காரணமாகச் சொற்கள் முறை மாறி நிற்றலும் உண்டு.

'கண்டனன் கற்பினுக்கு அணியை'

சொற்களில் உணர்ச்சிக்கும், சூழ்நிலைக்கும் ஏற்பப் புது வகைச் சொற்கள் இடம்பெறுதல் உண்டு.

இடைச் சொற்களின் சேர்க்கை வியப்பு, அச்சம், அவலம், இரக்கம், முதலிய உணர்ச்சிகளைத் தருதல் உண்டு.

அவனு செய்தான்—வியப்பு

ஐயகோ என்செய்வேன்—அச்சம்; அவலம்

இளமை கழிந்ததுமன்—இரக்கம்

புலைத்தி—புலைச்சி—திரிதலுக்கு எடுத்துக்காட்டு

இருக்கிறது—இருக்குது—கெடுதலுக்கு எடுத்துக்காட்டு

பெயர்—பேர்;பெயரன்—பேரன்—நீளலுக்குச் சான்று.

மரநுனி—நுனிமரம்; வாய்க்கால்—கால்வாய்—நிலைமாறலுக்கு (Metathesis) எடுத்துக்காட்டு

தப்பை—பத்தை; சிவிறி—விசிறி; இரண்டு—ரெண்டு; எனக்கு—நேக்கு; உனக்கு—நோக்கு முதலியவற்றையும் நிலை மாறலுக்கு எடுத்துக் காட்டலாம்.

போலி எனப்படும் நகர, ஞகரத் திரிபுகளை மரூஉ முடிபு என்பர்.

ஐந்து—அஞ்சு; உய்ந்தனன்—உய்ஞ்சனன் — மரூஉவுக்கு எடுத்துக்காட்டு.

அருமருந்தன்ன—அருமந்த

சோழநாடு—சோணாடு

பாண்டிய நாடு—பாண்டி நாடு

மலையமான் நாடு—மலாடு

முதலியன பழங்காலத்தில் வழங்கிய மரூஉ முடிபு சொற்களாகும்.

ஒலிநயச் சேர்க்கை

உகரம் அல்லது அகரம் தொன்று தொட்டுத் தமிழில் ஒலிநயச் சேர்க்கைகளாக வந்துள்ளன.

உணர்ச்சியின் மிகுதியை வெளிப்படுத்த ஒரு சொல்லே பல முறை அடுக்கி வருதலுண்டு.

ஓடினாள் ஓடினாள் ஓடினாள் வாழ்க்கையின் கரையோரத்திற்கே ஓடினாள்.

ஒரு பொருட்பன்மொழி மிகுதிப் பொருளை உணர்த்தும்.

மீமிசை, சரிநிகர்ச்சமம், ஈர்ந்தண்புனல்

புதுமையும், சுறுசுறுப்பும், சுவையும், கலந்து பேசுவோர் குறுமொழி (Slang) பேசுதலுண்டு.

நாடகத்தில் இவ் வழக்கு மிகுதியாகக் கையாளப்படுகிறது. இது பெரும்பாலும் உருவகமாக அமைகிறது.

காக்காய் பிடிக்கிறான்; மாமியார் வீடு; கம்பி நீட்டு கிறான்; குல்லாய் போடுகிறான்.

உருவகம், ஆகுபெயர், பிறிது மொழிதல், இடக்க ரடக்கல், குழூஉக்குறி, மங்கலம், தகுதிவழக்கு முதலியன குறிப்பு மொழிகளாக அமைகின்றன.

அவன் சிங்கஏறு—உருவகம்
காளை வந்தான்—உவமை ஆகுபெயர்
பீலிபெய் சாகாடும் அச்சிறும்—பிறிதுமொழிதல்
கால்கழீஇ வருதும்—இடக்கரடக்கல்
தண்ணீர் சாப்பிட்டான்—குழூஉக்குறி
செத்தாரைத் துஞ்சினார் என்றல் மங்கல வழக்கு

கொச்சை மொழி

கீழ்த்தர நிலைப் பேச்சைக் கொச்சைமொழி எனலாம். கல்லாதவர் மொழி பெரும்பாலும் கொச்சையாகவே இருக்கும். மரூஉ முடிபு கொச்சை மொழியன்று.

நான் கட்கி போச்சே—நான் கடைக்குப் போகையில்
என்னாத்தான் நெனக்கிறே—என்னதான் நினைக்கிறாய்

இவை கொச்சை வழக்குகளாம்.

ஆச்சு, போச்சு மரூஉ முடிபுகளாம்.

பேச்சு வழக்குத் திரிபுகள்

(1) மரூஉ முடிபுகள், (2) அண்ணமெய்யாதல் (3) பல்லின மாதல் எனும் மூன்றும் பேச்சுவழக்குத் திரிபுகளுள் குறிப் பிடத் தக்கனவாகும்.

வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரியார் மரூஉ முடிபுகளைத் தோன்றல், திரிதல், கெடுதல், நீளல், நிலைமாறல் என ஐவகைப்படுத்திக் காட்டுவர். யாது, யாவது என்றாதல் தோன்றல்; புலைத்தி, புலைச்சி என்றாதல் திரிதல்; இருக்கிறது, இருச் தது என்றாதல் கெடுதல். பெயரன், பேரன்

என்றுதல் நீளல்; கால்வாய், வாய்க்கால் என்றுதல் நிலைமாறல்.

அருமருந்தன்ன என்பது அருமந்த எனவும், ஆயிற்று என்பது ஆச்சு எனவும்; இருக்கிறது என்பது கீது எனவும் வழங்குகின்றன.

பற்றுவரவு, பத்துவரவாயிற்று, உற்றுப் பார்த்தான், உத்துப்பார்த்தானாயிற்று; கற்றுக்கொண்டான், கத்துக் கிட்டானாயிற்று; குற்றச்சாற்று, குத்தச் சாத்தாயிற்று.

மைத்துனன்—மச்சான்; வைத்தான்—வச்சான்; தைத்து—தச்சு; பெரிது—பெரிசு; வயது—வயசு முதலியன தகரம் சகரமாக மாறுதலுக்குச் சான்றுகளாகும்.

இறந்தகால இடைநிலையாகிய தகரமும் பேச்சுவழக்கில் செய்தான்—சேஞ்சான்; பெய்தது—பேஞ்சது எனச் சகரமாகிறது.

மொழியிறுதி வல்லொற்றுத் தனித்து நிற்பதில்லை. உகரத்தோடு சேர்ந்தே நிற்கும். தேக்கு, கச்சு, கட்டு, ஒன்பது, மார்பு, அற்று.

மொழியிறுதி மெல்லின, இடையின மெய்களும் புணர்ச்சிக்கண் உகரமும், அகரமும் பெறுகின்றன.

உரினுக்கடிது; பொருநுக்கடிது, ஈமுக்கடிது, உருமுக் கடிது—உகரம் பெற்றன.

கம்மக்குடம், வல்லப்பலகை, தமிழப்பிள்ளை, தாழக் கோல்—அகரம் பெற்றன.

நெடிலையும், குறிலையும் அடுத்துவரும் ஒற்றுகளும் குறிலிணைப் பதங்களும் பேச்சு வழக்கில் இக் காலத்தில் உகரத்தால் முடிகின்றன.

ஊர்—ஊரு, பேர்—பேரு, பார்—பாரு. நெடிலொற்று உகரம் பெற்றது.

சொல்—சொல்லு, கண்ணு—கண், புண்—புண்ணு, மண்—மண்ணு—குறிலொற்று உகரம் பெற்றது.

தெரு—தெருவு, புழு—புழுவு, கரு—கருவு, உரு—உருவு—குறிலிணைப்பதம் உகரம் பெற்றது.

முதன் முதலில் மொழியிறுதி வல்லினம் ஒலிநயச் சேர்க்கையாக உகரம் பெற்றது. தொல்காப்பியர் காலத்தில் உகரமும் அகரமும் சேர்ந்தன. சங்க காலத்தில் இப் போக்குப் பெருகத் தொடங்கிற்று.

பேர் — யாறு — பேரியாறு; சிறு — யாழ் — சீறியாழ் முதலாய சொற்களால் இகரமும் ஒலித்துணையாய் வருதல் காண்க.

இக் காலத்தில் வல்லினமன்றிப் பிற மொழி இறுதி எழுத்துகளும் தனித்திருந்து,உகரத்தைப் பெற்றுமுடிகின்றன. பாலீறுகளும் சரியாக ஒலிக்கப்படுவதில்லை.

நான்—நானு

நாம் இரண்டு பேரும்—நாமரெண்டுபேரும்

அவன்—அவ (இறுதிமெல்லொலி கலந்த உயிர்)

30. காலந்தோறும் ஏற்பட்ட மாறுதல்கள்

1. உயிர்ஒலி மாற்றங்கள்

அகரம்

ச, ஞ, ய அகரத்தோடு வாரா தென்பார் தொல்காப்பியர். ஞமலி, யவனர் எனச் சங்க இலக்கியத்தில் இடம் பெற்றுள்ளன. இவற்றைப் பிற மொழிச் சொற்கள் என்பர்.[1]

பல்லவர் காலத்திலும், சோழர் காலத்திலும் அகரம் எகரமாக மாறின என்பர்.

கங்கை—கெங்கை (சோழர் கல்வெட்டு)
தண்டம்—தெண்டம் (,,)

வட சொற்களுள் சில இம் மாற்றத்தைப் பெற்றன என்பர்.[2]

கல்—கெல்; களிறு—கெளிறு (சோழர் கல்வெட்டுகள்)

ச, ஞ, யக் களைத் தொடரும் அகரம் ஐகாரமாக மாறுதலும் உண்டு.

அரசர்—அரைசர் (பல்லவர் கல்வெட்டு)
தச்சன்—தைச்சன் (12ஆம் நூற்.)[3]

அகரம் இதழ்குவி உயிராகவும் மாறுதல் உண்டு.

---

1. C. D. P. பக். 43
2. A History of the Tamil Language—பக். 178
3. C. D. P. பக். 43

அனுபவித்து—அனுபொவித்து (சோழர் கல்வெட்டு)
புதவரி—புதொவரி (,,)
கேட்டீர்கள்—கேட்டீர்கொள் (மணிப்பிரவாள நடை)
காடுகள்—காடுகொள் (,,)

ஆகாரம்

தமிழில் ஆகாரம் தொடரும் சொற்களுள் சில திராவிட மொழிகளில் ஏகரமாக வருகின்றன.

ஞான்று (தமிழ்)—நேடு (தெலுங்கு)
ஞாலம் (,,)—நேல (,,)
யானை (,,)—ஏனுக (,,)
யாடு (,,)—ஏடு (துளு)[1])

இகரம்

இகர, எகர மாற்றங்கள் திராவிடத் தென்மொழியிலேயே அமைந்து கிடந்தன.

இடை—இடம் (தமிழ்) -எட (கன்)

இத் திரிபு பேச்சு மொழியிலும் காணப்படுகிறது.

இடம்—எடம்
இளநீர்—எளநீர்
விரல்—வெரலு
கிழங்கு—கெழங்கு

இதழ் மெய்களான பகர, மகரங்களைத் தொடரும் இகரம் பேச்சு மொழியில் உகரமாக மாறுகிறது.

பிடி—புடி
பிட்டு—புட்டு
பிள்ளை—புள்ளை
மிட்டாய்—முட்டாய்

இதழ் மெய்களின்பின் தொடரும் இகரம், வளைநா ஒலிகள் வர, ஒகரமாக மாறுகிறது.

பிழைப்பு—பொழப்பு
பிணம்—பொணம்
முடை—மொடை
மிளகு—மொளகு

இகரம் அகரமாக் மாறியமையைச் சோழர் கல்வெட்டுகளில் காணலாம்.[2]

எதிர்—எதர்
ஞாயிறு—ஞாயறு
வயிறு—வயறு

---

1. A History of the Tamil Language—பக். 127
2. C. D, P.—பக். 47

இகரம் உகரமாக மாறுதல் உண்டு

களிறு—களுறு
தமிழ்—தமுழ்
மதில்—மதுல்
தளிர்—தளுர்
துளிர்—துளுர்

ஈகாரம்: மாற்றம் இல்லை.

உகரம்

உகரம் மொழியீற்றின்கண் வல்லெழுத்துத் தொடரு மிடத்துக் குற்றியலுகரமாக மாறுகிறது; அடுத்து யகரம் வருமிடத்துக் குற்றியலிகரமாக மாறுகிறது. (தொல்-எழுத்து-36, 37, 407; 34, 35, 411.)

மொழியீற்றின்கண் உள்ள உகரம் தெலுங்கில் சில சொற்களில் இகரமாக மாறுகிறது.

பத்து—பதி (தெலு:)
மறு—மறி (தெலுங்கு)
மாசு—மாசி (தெலுங்கு)[1]

தமிழிலும் யகரம் வருவழி உகரம் இகரமாக மாறு கிறது.

சிறுவர்—சிறியோர்
பெருமை—பெரியோர்
அருமை—அரியது
கருமை—கரியது
முதுமை—முதியோர்

வடசொற்களில் அகரமோ, ஒகரமோ மெய்களைத் தொடருமிடத்து உகரம் ஒகரமாக மாறுதலைச் சோழர் கல்வெட்டுகள் காட்டுகின்றன.

புத்தகம்—பொத்தகம்
உலகம்—ஒலகம்
குலோத்துங்க—கொலத்துங்க

தமிழ்ச் சொற்களிலும் இம் மாற்றம் காணப்படுகிறது.
குலை—கொலை[2]

ஊகாரம்: மாற்றம் இல்லை.

---

1. C. D. P.—பக். 48
2. C. D. P.—பக். 55

எகரம்

கன்னட மொழியில் எட்டாம் நூற்றுண்டிற்குப் பிறகு இகரமோ, ஒகரமோ தொடருமிடத்து எகரம் இகரமாக மாறியுள்ளது.

எலி (தமிழ்)—எலி—(பழங்கன்னடம்)—இலி (புதுக் கன்னடம்)

எதிர் — இதிர் (கன்); வெதிர்—பிதிரு; செவிடு — கிவிடு (கன்)—தெறி—சிறி (கன்)[1]

11, 13 ஆம் நூற்றுண்டுச் சோழர் கல்வெட்டுகளில் எகரம் இகரமாக மாறியமை காணப்படுகிறது.

எனக்கு—இனக்கு

ஏகாரம்

பழந்திராவிட மொழிகளில் ஏகாரமும், ஆகாரமும் மாறி வந்துள்ளன.

தேய் (தமிழ்)—சாய் (தமிழ்)
சாந்து, சாத்து, சச்சு (கன்).
சேர் (தமிழ்)—சார் (தமிழ்)
யாண்டு, ஆண்டு (தமிழ்)—ஏடு (கன்; தெலுங்கு)
யானை (தமிழ்); ஆனை (தமிழ்)—ஏனிக (தெலுங்கு)[2]

ஒகரம்

பேச்சுத் தமிழில் ஒகரம் உகரமாக மாறுகிறது.

கொடை—குடை
கொடு—குடு

குகைக் கல்வெட்டில் (கி. மு. மூன்றும் நூற்றுண்டு) குடுபிதா (கொடுப்பித்தான் என்னும் பொருளினது) என்னும் வடிவமும் உளது.[3]

ஓகாரம் : மாற்றும் இல்லை.
ஐ, ஔ : கூட்டு வடிவங்கள் ஆகும்.

2. மெய்யொலிகள்

ககரம்

ககரம் இ, எ தொடருமிடத்துத் தமிழில் சகரமாக மாறுகிறது. இம் மாற்றம் கன்னடத்தில் நிகழவில்லை.

---

1. C. D. P. —பக்.60
2. C. D. P. —பக். 60
3. C. D. P.—பக். 63

கெவி (கன்)—செவி (தமிழ்)
கெம் (கன்)—செம் (தமிழ்)
கீ (கன்)—சீ (தமிழ்)
சீமு (தெலுங்கு).

கன்னடம், குடகு, துளு மொழிகளில் ககரம் நிலை பெற்றிருக்கத் தமிழ், மலையாளம், தெலுங்கு மொழியில் சகரமாக மாறியுள்ளது. [1]

சில சொற்களின் இடையிலுள்ள ககரம் கெட்டு முதலுயிர் நீளுதலும் உண்டு,

அகப்பை—ஆப்பை
பகல்—பால்
பகுதி—பாதி
மிகுதி—மீதி
புகுந்து—பூந்து
துகள்—தூள்
மகன்—மான்
பெருமகன்—பெருமான்

சோழர்,பல்லவர் கல்வெட்டுகளில் ககர,யகர மாற்றங்கள் காணப்படுகின்றன.

இகல்—இயல் (சோழர் கல்வெட்டு)
வைகாசி—வையாசி (பல்லவர், முற்காலச் சோழர் கல்வெட்டுகள்)
கன்னிகள்—கன்னியள் (பிற்காலச் சோழர்) [2]

சகரம்

தென் திராவிட மொழிகளில் மொழி முதலில் சகரம் கெடுதலும் உண்டு; கெடாத இடங்களில் தகரமாக மாறுகிறது.

சழல் (பழந்திராவிடம்)—அழல்; தழல்—(தமிழ்)
சேர் (கொலாமி)—ஏர் (தமிழ்) [3]

தொல்காப்பியர் காலத்தில் சகரம் அகரமோடு மொழி முதலில் வருதல் இல்லை. சங்க காலத்தில் சமம் என வழங்கியுள்ளது (புறம் 15/9).

சில சொற்களில் யகரம் வரவேண்டிய இடத்துச் சகரம் வந்துள்ளது.

குயவர்—குசவர் (சோழர் கல்வெட்டு கி. பி. 1060)

---

1. C. D. P. — பக். 117
2. C. D. P. — பக். 117
3. C. D. P. — பக். 106

குயக்காணம்—குசக்காணம் (எட்டாம் நூற்றாண்டுக் கல்வெட்டு)
உயர்த்த—உசத்த (சோழர் கல்வெட்டு)[1]

சில சொற்களில் முதலிலுள்ள சகரம் தகரமாக மாறியுள்ளது.

சண்டேஸ்வர—தண்டேஸ்வர (சோழர் கல்வெட்டு)[2]
செருமுனை—திருமுனை

இரட்டித்து நின்ற சகரம் (ச்ச்) சகரத்தோடும், யகரத்தோடும் மாறி வருகிறது.

நச்சு—நசை—நயம்
பச்சை—பசுமை—பய்ம்பொன் [3]

டகரம்

தென் திராவிட மொழிகளில் டகரம் ளகரமாகவும் ணகரமாகவும் மாறிவருகிறது. இவற்றுள் ளகரமே பழையது.

தடி (தமிழ்); தளி (தமிழ்); தடி (தெலுங்கு)
நீளம் (தமிழ்); நீடு; நீட்டு (தமிழ்)
ஆள், ஆண்—ஆடவர்
டகரம் ழகரத்தோடும், மாறி வருகிறது.
ஏழு (தமிழ்)—ஏடு (தெலுங்கு)
வழக்கம் (தமிழ்)—வாடுக (தெலுங்கு)
நீழல்—நீட (தெலுங்கு)

தகரம்

இ, எ, ஐ தொடரும் தகரம், பேச்சு மொழியில் சகரமாகிறது.

பெரிது—பெரிசு
சிறிது—சிறிசு
புதிது—புதிசு

இவற்றை ஒட்டி ஒப்புமையாக்கத்தால் பழசு முழுசு என்ற சொற்கள் அமைந்தன என்பர்.[4]

---

1. C. D. P.—பக். 112
2. C. D. P.—பக். 115
3. C. D. P.—பக். 115
4. C. D. P.—பக். 93

த்த் என்பது இ, ஐ அடுத்து வந்தால் ச்ச் ஆகிறது.

படித்தேன்—படிச்சேன்

சிரித்தான்—சிரிச்சான்

அழைத்து—அழைச்சி [1]

இம் மாற்றம் பல்லவர், சோழர் கல்வெட்டுகளில் காணப்படுகிறது.

வைத்து—வைச்சு

பிற்காலப் பல்லவர், முற்காலச் சோழர் கல்வெட்டுகளில் இம் மாற்றம் காணப்படுகிறது.

மலையாள மொழியில் தகரம், சகரமாய்த் திரிந்த வடிவமே வழங்குகிறது.[2]

நகரமும் யகரமும் ஞகரமாக அம் மொழியில் மாற்றம் பெற்றுள்ளது. அண்ண ஒலியாதல் என்னும் விதிப்படி அமைந்த வடிவங்கள் அம் மொழியில் மிகுதி என்பர்.[3]

பகரம்

பகரம், வகரமாக மாறியதைக் கல்வெட்டுகள் காட்டுகின்றன.

மார்பில்—மார்வில் (சோழர் கல்வெட்டு—1051)

இயல்பினில்—எல்வினில் (சோழர் கல்வெட்டு-1193)

பகரம் மகரமாக மாறுதலும் உண்டு.

நிபந்தம்—நிமந்தம் (சோழர்—1058)

வ் ப்—ப்ப் என மாறுதலும் உண்டு.[4]

குவி—குப்பை

உவர்—உப்பு

ஒவ்பு – ஒப்பு

கவ்பு—கப்பு (கவடு—கவி)

---

1. C. D. P. — பக். 94
2. D. N. P. — பக். 94
3. D. N. P. — பக். 94
4. C. D. P. — பக். 87; 88

'தபு' என்ற சொல்லிலிருந்துதான் தவறு என்ற சொல் உண்டாகி இருக்கவேண்டும். இம் மாற்றம் பழங்காலத்திலேயே நிகழ்ந்திருக்க வேண்டும். தப்பு (தவ்+பு) என்ற சொல்லும் தோன்றியிருக்க வேண்டும்.

தபு; தபுதி (பழஞ்சொற்கள்)[1]

றகரம்

தொல்காப்பியம் றகரத்தை வல்லினம் எனக் கூறுகிறது. இன்று அது இடையின ரகரம் போலவே ஒலித்து வருகிறது

மேற்கு - மேர்க்கு (சோழர்-1076)
விறகு—விரகு (சோழர்-1133)
இரண்டாவது—இறண்டாவது (சோழர்-1072)
ற்ற் த்த் என ஆதலும் உண்டு.
மாவேற்றத்து—மாவேத்தத்து (கி.பி. 550)

பன்னிரண்டாம் நூற்றுண்டு வரை கன்னடக் கல்வெட்டுகளில் ரகர, றகர வேறுபாடு போற்றப்பட்டு வந்துள்ளது. 13ஆம் நூற்றுண்டுக்குப் பிறகு பேச்சுத் தமிழில் இவ் விரண்டிற்குமுள்ள வேறுபாடு மறைந்து விட்டது.[2]

பழந்தெலுங்கிலும் றகர, ரகர மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன.

இறங்கு (தமிழ்)
எறகு, எரகு (தெலுங்கு)
எறகு(கன்னடம்)

1. C. D. P.—பக். 89
2. C. D. P.—பக். 97

வறலு; வரலு (தெலுங்கு)
(ஒளிவிடுதல் என்னும் பொருளது).

ங ஞ ண ந ம ன

மகரம்

மகர, வகர மாறுபாடு காணப்படுகிறது.
மயல்—வயவு (வயவு—ஆசை)
வானம்—மானம்
வேய்—மேய்
மீசை—வீசை
மிருகம்—விருகம் (சோழர் கல்வெட்டு)
மலை—வலை. [2]

வகர மரங்களுள் எது பழையது என்று கூறுவதற்கில்லை. தென் திராவிட மொழிகளில் இம் மாற்றம் பழங்காலத்திலிருந்தே நிகழ்ந்து வருகிறது.

கவனம் (தமிழ், மலையாளம்) கமனமு (தெலுங்கு)
நவை (தமிழ்)—நமை (தமிழ்)—நமச்சல்

மகர, னகர மாற்றங்களும் பழந்தமிழில் நிகழ்ந்துள்ளன.

மரம்—மரன் (தமிழ்); ம் (ர்)ானு (தெலுங்கு)
நிலம்—நிலன்; முகம்—முகம்; இடம்—இடன் (தமிழ்)

முப்பது என்பது நுப்பது எனத் திருச்சி, தஞ்சைப் பகுதிகளில் வழங்குகிறது. நாற்பதை ஒட்டி முப்பது, நுப்பது எனத் திரிபு பெற்றது. [3]

நகரம்

நகரமும், னகரமும் சூழ்நிலையொட்டி மாறிவரும் மாற்றொலிகள் எனலாம். நகரம் வருமிடத்தில் னகரம் வருவதில்லை.

நகரம் பெற்ற வடிவமும், பெறுத வடிவமும் என இரு வடிவங்கள் வழங்கின.

நீர்—ஈர்; நோய்—ஓய்

---

1. C. D. P.—பக். 97
2. C. D. P.—பக். 126
3. C. D. P.—பக். 128

னகரம்

னகரமும், லகரமும் றகரமும் மாறி வருகின்றன.

பொன்—பொலிவு—பொற்கொடி
சில் — சின் — சிற்
பல் — பன் — பற்

ணகரம்

ணகரமும் ளகரமும் டகரமும் மாறிவருகின்றன.

கொள் — கொண் — வேள் —வேண் —வேட்கை

ஞகரம்

ஞகரம், நகரமாகவோ, பகரமாகவோ மாறி நிற்கிறது.

ஞண்டு—நண்டு (தமிழ்)
ஞமலி (தமிழ்)—நெமலி (கன்.,தெலுங்கு)
ஞாலம்—நேல (தெலுங்கு)

தமிழில் ஆகார எகாரங்களோடு மட்டும் ஞகரம் மொழி முதற்கண் வந்தது. மலையாளம் ஞகரத்தை மொழி முதற் கண் முழுவதும் போற்றி வருகிறது.

ஞாயிறு—நாயிறு (சோழர் கல்வெட்டு)
ஞான்று—நான்று (8ஆம் நூற்றுண்டு)

கன்னடத்தில் ஞகரம் சகரத்தோடு இணைந்து வருமே யன்றித் தனித்து வருவதில்லை.[1]

யகரமும் ஞகரமும் மாறி வருதல் உண்டு.

யமன் — ஞமன் —நமன்
யான் (தமிழ்)—ஞான் (மலையாளம்)
நான் (பிற்கால வழக்கு)

அப்பர் காலத்தில் நகரம் ஞகரமாக (அண்ண ஒலி யாக) மாறியுள்ளது.

---

1. C. D. P. பக். 136

கைந்நின்ற—கைஞ்ஞின்ற
மெய்ந்நின்ற—மெஞ்ஞின்ற
ஐந்நூறு—ஐஞ்ஞூறு (வீரசோழியம்)

தொல்காப்பியர் காலத்தில் யகரம் ஞகரமாக மாறி யுள்ளது.

மண்+யாத்த—மண் ஞாத்த
பொன்+யாத்த—பொன்ஞாத்த
(தொல்–எழுத்து–146)

ஙகரம்

ககரமுன்னர் ஙகரம் வரும்.
அங்கு, தங்கு, பங்கு, சங்கு

அங்ஙனம், இங்ஙனம், உங்ஙனம், யாங்ஙனம் என்பன முறையே அங்கனம், இங்கனம், உங்கனம், யாங்கனம் என்பவற்றின் திரிபுகளாகும்.

ய ர ல வ ழ ள

இவற்றுள் யகரமும், வகரமுமே மொழி முதலில் வரும். இவற்றுள் ழகர, ளகர மாற்றங்கள் குறிப்பிடத் தக்கவை யாகும்.

கிழமை—கிளமை (பல்லவர் கல்வெட்டு)
சோழ—சோள (சோழர்–1064)
புகழ்—புகள் (சொழர்–1098)
கிழக்கு—கிளக்கு (பல்லவர், எட்டாம் நூற்றுண்டு)
புகழ்—புகள் (,, ,,)

இம் மாற்றம் 13ஆம் நூற்றுண்டு வரை நிகழ்ந்தது. பதினோராம் நூற்றுண்டைய வீரசோழியம் ளகரத்திற்குக் கூறிய சந்தி விதிகளை ழகரத்திற்கும் கூறியது.

வாழ்+நாள்—வாணுள்
திகழ்+தசக்கரம்—திகடசக்கரம் (கந்தபுராணக் காப்புச் செய்யுள்)

நன்னூல் இதனைக் கூறவில்லை. அதனால், இவ்வாறு வருதல் அவர் காலத்தில் போற்றப்படவில்லை என்பது தெரிகிறது.

சோழ+நாடு—சோணாடு என மருவியது.

அளபெடைகள்

உயிர் பின் உயிர் வருவழி யகர, வகர உடம்படுமெய் பெறல் ஒருவகை; அளபெடுத்து இயங்குவது ஒருவகை.

சிறு+அன்—சிறுவன்—சிருஅன்
குரு+இ—குருவி—குரீஇ

அடிச்சொல்லும் விகுதியும் சேரும்பொழுது இரண்டனையும் பிரித்துக்காட்டும் வகையில் உயிரீறு அளபெடுக்கிறது என்பர்.

தழு—தழூஉ

இதுவே தொன்மை நிலை. தொல்காப்பியர் காலத்தில் யகர. வகர உடம்படுமெய் இடம் பெறலாயிற்று. சங்க இலக்கியத்தில் இவ் விருவகை வடிவங்களும் இடம் பெற்றன.

சிறு அர்—சிறுர்
மரீஇ—மருவி

மெல்லின நெகிழ்வு

சங்க காலத்தில் னகர, ணகர ஈறுகள் மென்மை இழந்து லகர ளகரமாயின என்பர்.[1]

ஆன்—ஆல் (மூன்றன் உருபு)
இன்—இல் (ஐந்தன் உருபு)
வெண்—வெள்

1. A History of the Tamil Language—பக். 190

இணைமெய்யொலிகள்

தொல்காப்பியர் போலும் என்பது மருவி போன்ம் எனத் திரிபு பெற்றதைக் குறிப்பிடுகிறார். சங்க காலத்தில் இத் தகைய இணைமெய்கள் மேலும் இடம் பெற்றன.

மருண்ம், கேண்ம், சென்ம்[1]

3. சொல்நிலையில் மாறுதல்கள்

தன்மைச் சொற்கள்

(1) மூவிடப் பெயர்களுள் தொல்காப்பியர் குறிப்பிடும் தன்மைப் பெயர்கள் யான் (என்), யாம் (எம்), நாம் (நம்) என்பன. பிற்கால நான் என்பது புதிய வடிவமாகும். இது பரிபாடலிலும், சிலப்பதிகாரத்திலும், மணிமேகலையிலும் இடம்பெறுகிறது. நன்னூல் இதனையும் குறிப்பிடுகிறது.[2]

(2) யகரம் மொழிமுதற்கண் அகரத்தோடு வருதலில்லை எனும் நியதி பற்றியே யான் என்பது யன் என ஆகாமல் என் என்றாகியது. இது தென் திராவிட மொழியியல்பாகும்.

(3) தெலுங்கு, மத்திய திராவிட மொழியாகலின் அனக்கு' என்பது ஒலி இடம் பெயர்ந்து 'நாக்கு' என அமைந்துள்ளது.[3]

(4) நீ என்பது ஒருமை வடிவமாயினும் நின் என்பதை நோக்கும் போது நீன் என்பதே தொல்வடிவமாக இருந்திருக்க வேண்டும் எனக் கருதவேண்டியுள்ளது.

(5) யாம் என்பதன் ஒலி இடம் பெயர்ந்த வடிவமே தெலுங்கு 'மா' என்பது. அஃது எம் என்னும் பொருளது.[4]

---

1. A History of the Tamil Language—பக். 108
2. D. N.—பக். 176
3. D. N.—பக். 179
4. D. N.— பக். 179

(6) 'யாங்கள்' என்னும் வடிவம் முதன் முதலில் சிலப்பதிகாரத்தில் இடம் பெறுகின்றது.[1]

(7) யான் என்பதே மலையாளத்தில் ஞான் எனத் திரிபு பெற்றிருக்க வேண்டும். அம் மொழியில். யாமை, ஞாமை என்றாகியுள்ளது.

முன்னிலைப் பெயர்கள்

(1) நீயிர், நீவிர், நும், நின் என்பன தொல்காப்பியர் குறிப்பிடும் வடிவங்களாம். நிம் என்பது மகரத்தின் சாயல் படிந்து நும் எனத் திரிந்தது. நிம் என்பதை நோக்க நீம் என்பது பழையவடிவமாக இருந்திருக்க வேண்டும் எனத் தெரிகிறது.

(2) நின் என்பதே தொல்காப்பியர் குறிப்பிடும் வடிவாகும். உன், நுன் என்பன நின், நும் எனும் பன்மை வடிவங்களை ஒட்டி அமைந்தவையாகும்.

உன்னுடைய தூமலர்ச் சேவடி காண்பான்.

—அப்பர் தேவாரம்

(3) உம் என்பதனைத் தொல்காப்பியர் குறிப்பிடவில்லை. அது சங்க இலக்கியத்தில் இடம் பெறுகிறது.

படர்க்கைப் பெயர்

தாம், தான், தம், தன் என்பன தொல்காப்பியர் குறிப்பிடும் வடிவங்களாகும்.

தங்கள் என்ற வடிவம் முதன் முதலில் சிலப்பதிகாரத்திலும், மணிமேகலையிலும் இடம் பெறுகிறது.

எண்ணுப் பெயர்கள்

(1) மூவிடப் பெயர்களைப் போலவே எண்ணுப் பெயர்களும் தொன்மை வாய்ந்தவை. நூறு, ஆயிரம்,

1. D. N. — பக். 185
2. D. N. — பக். 185
3. D. N — பக்: 191

நூறாயிரம் என்பவற்றைத் தொல்காப்பியர் பேரெண் களாகக் குறிப்பிடுகிறார்.

(1) ஆம்பல், தாமரை, வெள்ளம் என்பன அவர் காலத்தில் மிகுதியைக் காட்டும் எண்ணுப் பெயர்களாக வழங்கின.

(2) ஒரு, ஓர் என்பன இரு, ஈர் என்பனவற்றை ஒட்டி ஒப்புமை யாக்கத்தால் அமைந்தவை என்பர்.[1]

(3) இரளை (நற். 123/10) என்பது இணையைக் குறிக் கும் சொல்லாகும். இதுவே இரண்டு என்பதன் பகுதியாய 'இரண்' என்பதாகும்.[2]

(4) 'நுப்பது' என்னும் சொல்வழக்குத் தஞ்சை, திருச்சி மாவட்டங்களில் வழங்குகிறது. இது நாற்பது என்பதை ஒட்டித் திரிபு பெற்றிருக்க வேண்டும்.

(5) 'நால்கு' என்பதே தொல் வடிவமாக இருந்திருக்க வேண்டும். மூன்று, ஐந்து என ஏனைய எண்ணுப் பெயர் களில் மெல்லினமும், வல்லினமும் தொடர்ந்திருத்தலை ஒட்டி இதுவும் 'நான்கு' என மாறியிருக்க வேண்டும்.

(6) ஐந்து, ஆறு என்பன மொழிமுதல் சகரம் கெட்ட வடிவங்கள் என்பர். 'சய்ந்து', 'சாறு' என்பனவே முறையே அய்ந்து (ஐந்து), ஆறு என மாறியிருக்க வேண்டும்.[3]

(7) ஏழ், எழு என்பன நெடில், குறில் வடிவங்களாகும். பேர், பெரு, கார், கரு என அமைவதைப் போல இவ்விரு வடிவங்கள் இடம்பெற்றிருக்க வேண்டும். ஏழ் என்பதே பழமையதாக இருந்திருக்கலாம்.

(8) தெலுங்கில் எனிமிதி என்பது தொம்மிதியை ஒட்டி அமைந்த சொல்லாகும். எண் என்பதே எட்டு என்பதன் அடிச் சொல்லாகும்.

---

1. D. N.—பக். 144
2. D. N.—பக். 145
3. D. N.—பக். 156–58

(9) ஒன்பது, தொம்மிதி (தெலுங்கு), தொண்ணூறு, தொள்ளாயிரம் என்பன ஆய்வுக்குரிய வடிவங்களாகும். 'தொண்டு' என்பதே ஒன்பதைக் குறிக்கும் பழைய சொல்லாகும். தொண்டுபத்து என்பது மருவி ஒன்பதாயிற்று. ஒண்பது என்றிருக்க வேண்டியது ஒன்று என்பதன் ஒப்புமை யாக்கத்தால் ஒன்பதாயிற்று. பத்து என்பதன் பேரெல்லையைக் கொண்டு 'ஒன்பது' எனக் குறிக்கப்பட்டுள்ளது. 'தொண்', 'தொள்' என்பனவும் இவ்வாறே அடுத்த பேரெண் எல்லையைக் கொண்டு குறிக்கப்பட்டனவாகும்.

(10) பதின் என்பது பத்து என்பதன் மற்றொரு வடிவமாகும். பதினொன்று என்பதில் பதின் உள்ளதைக் காணலாம். பன்னிரண்டு என்பதில் 'தி' கெட்டுப் 'பன்' என நின்றது.

(11) 'நூறு' என்பது பழந்திராவிடச் சொல்லே. வந்த என்ற தெலுங்குச் சொல்லும் உள்ளது. வெய்யி, வேலு (1000) என்பது தெலுங்கில் வழங்கும் தனிச் சொற்களாகும். இவற்றின் இனச் சொற்கள் ஏனைய திராவிட மொழிகளில் இல்லை. சஹஸ்ரம் என்பதன் திரிபே ஆயிரமாகும்.

திணைபால் ஈறுகள்

(1) னகர ஈறு ஆண்பாலையும், ளகர ஈறு பெண்பாலையும், ரகரஈறு பலர்பாலையும் உயர்திணையில் உணர்த்தின. அஃறிணை ஒன்றன்பாலுக்கெனத் தனி விகுதி இல்லை; பலவின்பாலுக்குக் கள் விகுதி இடம்பெற்றுள்ளது.

(2) கள் என்பது முதன்முதலில் மக்கள் என்னும் உயர்திணைச் சொல்லில் இடம் பெற்றுள்ளது. அஃறிணைப் பன்மையிலும் அஃது அருகியே வழங்குகிறது.

மாண்புகள்—தொல். 1098
யாண்டுகள்—புறம். 375/4
அரண்கள்—பதிற். 44/13
இயங்கள்—பத்துப்பாட்டு. 10/227

'மா விரைந்தனவே' என்ற தொடரில் மா பன்மைக்கு வந்துள்ளது. இதனைக் கள் விகுதி பெருமைக்குச் சான்றாகக் காட்டுவர்.[1]

பிற்காலத்தில் கள் என்பது உயர்திணைக் கண்ணும் வரலாயிற்று.

வாளிகள்—பரி. 19/54
நோன்பிகள்—சிலப். 10/124; மணி. 37/5
பெண்கள்—சிலப். 30/50

சில சொற்களில் ரகரத்திற்கு மேலும் கள் இடம் பெற்றுள்ளது.

அரசர்கள்—கலி. 15/3
வானோர்கள்—சிலம்பு. 24/53[2]

கள் உயர்திணையில் இடம்பெறுவது பிற்கால வழக்கு என்பதனை இச் சான்றுகள் விளக்குகின்றன.

வேற்றுமை

(1) இரண்டாம் வேற்றுமை உருபு ஐ, உ, அ, என்பனவாகும். பழந்தமிழில் உயர்திணைப் பெயர்களில் மட்டும் இவை இடம் பெற்றன.

வேந்தனை வேந்தன் அடல் குறித்தன்று
—தொல். 1008
கொண்கனை நயந்தோர் —ஐங். 137/2

'காவலோனக் களிறஞ் சும்மே' என்பதில் அம் என்பதன் திரிபே 'அக்' ஆயிற்றென்பர். அகரமும் இரண்டாம் வேற்றுமை உருபேயாகும். இது செய்யுளில் மட்டுமே வரும்.

(2) ஆன், ஆல், ஆன என்பன மூன்றன் உருபுகளாகும். ஆன என்பது செய்யுளில் மட்டுமே வரும். ஆன் என்பதன் திரிபே ஆல் ஆகும். ஆல் என்பது சங்க இலக்யத்திலும் இடம்பெற்றுள்ளது.

---

1. D. N. 41
2. D. N. 42
3. D. N. 255

மருப்பினால் குத்தி—கலி. 106/20
வில்லினால் எய்தலோ இலர்——கலி. 137/11
கையால் அளத்தல்—பரி. 12/43[1]

ஒடு, ஓடு, உடன் என்பன உடனிகழ்ச்சிப் பொருளில் வருகின்றன.

(3) 'கு' என்பது நான்கன் உருபாயினும் 'க' எனும் மாற்று வடிவமும் வழங்குகிறது.

'கடி நிலையின்றே ஆசிரியர்க்க' —தொல். எ.கா.389

(4) இன் என்பது ஐந்தன் உருபாகும். இஃது உவமை உருபாகிய 'இன' என்பதோடு நெருங்கிய தொடர்புடையது.

(5) அது என்பது ஆறன் உருபாகும். அதனோடு ஆது என்பதும் வழங்குகிறது. இதனைச் செய்யுள் வழக்கு என்பர்.

(6) இடம் உணர்த்தும் பல்வகைச் சொற்களும் ஏழன் உருபகளாகின்றன.

ஆன், அத்து முதலிய சாரியைகளும் ஏழன் பொருளைத் தருகின்றன

(7) விளிவேற்றுமை பெயர்ச் சொற்களின் இறுதித் திரிபு, நீள்பு, ஏ, ஈர் சேருதல் முதலிய மாற்றங்களால் அமைகிறது.

வினைச்சொற்கள்—தன்வினை, பிறவினை

தன்வினை, பிறவினைப் பாகுபாடுகள் தமிழில் இன்றியமையாதன. மெல்லின வடிவம் தன்வினையையும் வல்லின வடிவம் பிறவினையையும் காட்டுகின்றன.

சேர்ந்தேன்—தன்வினை; சேர்த்தேன்—பிறவினை.

வி, பி என்பன பிறவினை விகுதிகளாக அமைகின்றன.

முதன் முதலில் தொல்காப்பியத்தில் 'அம்ம கேட்பிக்கும்' (சூ. 751) எனும் தொடரில், 'பி' விகுதி காணப்படுகிறது.[2]

---

1. D. N.—பக். 290
2. D. V. M.—பக். 8

சங்க இலக்கியங்களில் வி, பி பெற்ற வடிவங்கள் வருகின்றன.[1]

> படர்வித்தவள் —கலி. 141
> போர்ப்பித்திலது —புறம். 285

தற்காலத்தில் வினைச்சொற்களில் பிறவினைகளுக்குப் பதிலாகத் துணைவினைகள் சேர்கின்றன.

பேசவை; தின்னச் செய்வை, செய் என்பன துணை வினைகள்.

வினை வகைகள்

(1) முற்று, எச்சம் என வினை இருவகைப்படும்.

'செய்யும் சாத்தன்' என்பதே பழைய தொடராக இருந்திருக்க வேண்டும்.

அதுவே பின்னர்ப் பெயரெச்சம், வினையெச்சம் எனும் பாகுபாட்டைப் பெற்றிருக்க வேண்டும்.

பழங்காலத்தில் வினைமுற்றுகள் பால் ஈறு பெறும லேயே இயங்கின என்பது தெரிய வருகிறது.

(2) செய்த, செய்யும் என்பன தொல்காப்பியர் குறிப்பிடும் பெயரெச்ச வாய்பாடுகளாகும். செய்கின்ற என்பது நன்னூலார் நிகழ்காலத்திற்குக் குறிப்பிடும் வாய்பாடாகும். இது பிற்காலத்து மாறுதலாகும்.

காலம் காட்டல்

வினைச் சொற்கள் காலம் காட்டுவதில் காலந்தோறும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

1. இறப்பு

பழங்காலத்தில் இறப்பு, இறப்பல்லாத காலம் எனும் பிரிவே இருந்திருக்க வேண்டும். நிகழ்வுவினையும், எதிர்வு

---

1. D. V. M.—பக். 8

வினையும் தெளிவான கால இடைநிலைகளைப் பெற்றிருக்க வில்லை. இறந்த கால வினைகள் மட்டும் தெளிவான கால இடைநிலைகளைப் பெற்றிருந்தன.

'த்' இறந்தகால இடைநிலை யாகும். அதன் மாற்று வடிவங்கள் ட், ற் என்பன. இவையே யன்றி இகரமும் இறந்த காலம் காட்டியது.

2. நிகழ்வு

கிறு, கின்று என்பன பிற்காலத்தில் இடம்பெற்றவை. முதன் முதலாகச் 'சேர்கின்ற' எனும் சொல் பரிபாடலில் (22-35) வருகிறது. அடுத்துச் சிலப்பதிகாரத்திலும், மணி மேகலையிலும் வருகிறது.[1]

ஓசனிக்கின்ற, ஊர்கின்ற, உருள்கின்ற } சிலம்பு வடிவங்கள்
சாதிக்கின்ற —மணிமேகலை வடிவு.[2]

பண்டைக் காலத்துக் கின்று, பெயரெச்ச வடிவங்களி லேயே இடம் பெற்றுள்ளது. ஏழு, எட்டாம் நூற்றுண்டு களில் ஆழ்வார், நாயன்மார் பாடல்களில் முற்று வடிவங் களிலும் கின்றுஇடம்பெற்றுள்ளது.[3]

பதினேராம் நூற்றுண்டில் தோன்றிய வீரசோழியம் கின்று, கிறு என்பவற்றை நிகழ்கால இடைநிலைகளாகக் குறிப்பிடுகிறது. அதனை ஒட்டி நன்னூலும் குறிப்பிடுகிறது.

ஆநின்று, ஆகிடந்து, ஆவிருந்து என்பன இடைக் காலத் தமிழில் நிகழ்கால இடைநிலைகளாக இடம் பெற்றுள்ளன.

1. D. V. M.—பக். 240
2. D. V. M.—பக். 540
3. D. V. M. பக். 240

3. எதிர்வு

தொல்காப்பியர் எதிர்காலத்திற்கென எவ்விடை நிலையையும் குறிப்பிடவில்லை. என்றாலும், 'செய்த, செய்யும்' என்னும் வாய்பாடுகளால் 'த்' என்பது இறப்பைக் காட்டுதலையும் 'உம்' என்பது நிகழ்வையும், எதிர்வையும் காட்டுதலையும் புலப்படுத்துகிறார்.[1]

'கிறு' என்பது நிகழ்வுக்குரிமையாக, 'உம்' என்பது எதிர்வுக்குரிமையாயிற்று. இவையே யன்றி வ, ப என்பன எதிர்கால இடைநிலைகளாகவும், கு எதிர்கால விகுதியாகவும் வழங்குகின்றன.

செய்வேன், உண்பேன், வருகு

தன்மை

தன்மையில் து, தும் என்பன இறப்பு, எதிர்வுக்கு இடம்பெற்றன.

வருது, வருதும்

முன்னிலை

றி, தி, இர் என்பன முன்னிலையில் நிகழ்வு, எதிர்வுகளைக் காட்டின.[1]

என்றி, படர்தி, அறிதிர்

4. கில் என்னும் இடைச்சொல்

கில் எனும் இடைச்சொல் கிறு, கின்று என்பவற்றோடு தொடர்புடையது. கரக்கிற்பென், காண்கிற்பார் இவை போன்ற வடிவங்களில் இச்சொல்லைக் காணலாம்.

இவ் வழக்குக் கலித்தொகைக்குப் பின்னே தோன்றிற்று.[2]

---

1. D. V. M.—பக். 244
2. D. V. M. —பக். 245

எதிர்மறை

நன்னூலார் ஆகாரத்தை எதிர்மறைப் பொருளைத் தரும் விகுதியாகக் குறிப்பிடுகிறார். அஃது இடைநிலையாகவும் வந்து எதிர்மறைப் பொருளைத் தருகிறது.

மாட்டேன், மாட்டான் எனும் தன்மை,படர்க்கை எதிர் மறை முற்றுகளிலும், காணாது, செய்யாது எனும் எதிர்மறை வினையெச்சங்களிலும், வாராத, செய்யாத எனும் எதிர் மறைப் பெயரெச்சங்களிலும் 'காணேம்' எனும் தன்மைப் பன்மை வினைமுற்றிலும், அஃது இடம் பெற்றுள்ளதைக் காணலாம். வேண்டா எனும் பழந்தமிழ் வடிவு இன்று வேண்டாம் என வழங்குகிறது.[1]

சங்க காலத்தில் அல், இல் என்பன எதிர்மறை இடை நிலைகளாக வழங்கின. அவற்றோடு பால் ஈறுகளும் சேர்ந் தன.

செல்லலம், நில்லலன், பேணலர், கொள்ளலிர்.[2]

திருக்குறளில் இல், இல்லை என்பன பால் ஈறு பெறாமல் வழங்குகின்றன.

யாம் கண்டது இல் —(திருக். 1071)
யாம் அறிவது இல்லை —(திருக். 61[3])

தற்காலத்தில் இல்லை, அல்ல என்பன தொடர் நிலையில் பயனிலைகளாக நின்று எதிர்மறைப்பொருளைத் தருகின்றன.

கண்டது இல்லை
வர இல்லை
செய்வது இல்லை
பேசுவது அல்ல
வர அல்ல

நேற்று, இன்று, நாளை என்பன சில சொற்களுக்கு முன்னின்று காலங்களைக் காட்டுகின்றன.

---

1. D. V. M.—பக். 332
2. D. V. M.—பக். 333
3. D. V. M.—பக். 334

31. தமிழ் எழுத்து வடிவ வரலாறு

எழுத்து வடிவங்கள் நிலையானவை அல்ல; காலந் தோறும் மாறும் இயல்பின. அச்சு எந்திரம் வந்தபின் எழுத்து வடிவங்கள் நிலைபேறு பெற்றுவிட்டன. ஏடுகளில் எழுதி வந்த காலத்தில் அவை மிகவும் மாற்றமடைந்து வந்தன. தமிழகத்தைப் பொறுத்தவரை எழுத்து வரலாற்றை அறியக்கல்வெட்டுகள் பொதுவாகஉதவுகின்றன.

எழுத்துகள் ஒலிகளுக்கு அறிகுறியாக வழங்குவன. முதன் முதலில் ஓவியங்கள் அறிகுறிகளாக நின்று கருத்துகளை விளக்கிவந்தன. பின் அவ் வடிவங்கள் சிதைந்து கருத்துகளுக்கு அறிகுறியாய் நின்றன. நாளடைவில் அவை அசைகளுக்கு அறிகுறியாகிப் பின்னர்த் தனி ஒலிகளை விளக்கும் எழுத்துகளாக அமைந்தன என்பர்.

சீன மொழி இன்றும் கருத்துகளுக்கு அறிகுறியாக வடிவங்களையே பெற்றுள்ளன. சீனச் சொற்கள் ஓரசைச் சொற்களாகவே இருத்தலின் அவற்றிற்குரிய வகையில் அவ் வடிவங்கள் அமைந்துவிட்டன. புதிய புதிய கருத்துகள் கூட்டு வடிவங்களால் அமைக்கப்படுகின்றன. அழுகையைக் காட்ட 'மனிதனும் இருதயமும்' எழுத்துகளாக அமைகின்றன; உணர்ச்சியைக் காட்ட 'மனிதனும் கையும்' அமைகின்றன. அடிப்படை வடிவங்களோடு துணைக் கோடுகளும் சேர்ந்து கருத்து நுட்பங்களை விளக்குகின்றன.

உலக எழுத்துகள் மூன்று

உலக மொழிகளுள் பலவற்றின் எழுத்துகள், எகிப்து, சுமேரியா, சீனு எனும் மூன்றன் எழுத்துகளையே மூலமாகக் கொண்டுள்ளன என்பது ஆராய்ச்சியாளர் துணிபாகும்.

எகிப்து எழுத்துகள்

மூல எழுத்துகளுள் ஒன்ருன எகிப்து எழுத்துகளை மாற்றித் தம் எழுத்துகளை முதன் முதலில் அமைத்துக் கொண்டவர் கிரேக்கர்களே. அவர்களுள்ளும் பொனீஷியர் கள் (Phonecians) குறிப்பிடத்தக்கவர்கள். எகிப்து எழுத்து களைக் கிரேக்க நாட்டுக்குக் கொண்டுவந்தவர் அவர்களே.

அடுத்து இலத்தீன் முதலாய இந்தோ ஐரோப்பிய மொழிகளும் அவ்வாறே தம் மெழுத்துகளை அமைத்துக் கொண்டன.

எகிப்து எழுத்துகளை உள்ளவாறே ஏற்றுக்கொண்ட வர் செமிடிக் இனத்தவர். அவர்கள் பேசும் செமிடிக் மொழியின் ஒரு பிரிவே இந்திய பிராமி எழுத்தாக அமைந்தது. இப் பிராமியிலிருந்து தேவநகாரி எழுத்துத் தோன்றிற்று.

சுமேரியர்

சுமேரிய எழுத்துகள் களிமண்ணில் எழுதப் பெற்றவை; நேர்க் கோடுகள் நிரம்பியவை. இவற்றை வெட்டெழுத்துகள் (Cuniform) என்பர். இவை பாரசீக மொழிகளால் மேற்கொள்ளப்பட்டு மேற்கு ஆசியாவில் பரவின. பிராஹுஈ மொழியும் இச்சுமேரிய எழுத்து வடிவையே கொண்டுள்ளது என்பர்.

தமிழ் எழுத்துகள்

பண்டைத் தமிழ் எழுத்து வடிவங்களையும் அவற்றின் தோற்றத்தினையும் அறிதற்குரிய சான்றுகள் கிடைக்க

வில்லை. எனினும், இன்று வழங்கி வரும் எழுத்துகள் பிராமி எழுத்தையொட்டி அமைந்தவை என்பதில் மட்டும் கருத்து வேறுபாடில்லை. அசோகர் கல்வெட்டெழுத்துகளும், இன்றைய தமிழ் எழுத்துகளும் மிக்க தொடர்புடையன வாகக் காணப்படுகின்றன.

பழந்தமிழ் எழுத்து வடிவங்களைப்பற்றிப் பின்வரும் மூன்று மாறுபட்ட கருத்துகள் நிலவுகின்றன.

(1) பண்டைக் காலத்திருந்து தமிழர் தமக்கெனத் தனி எழுத்து முறை ஒன்றனைப் பெற்றிருக்க வேண்டும். அம் முறை தன்னியல்பாகவும் அமைந்திருக்க வேண்டும்.

(2) சுமேரிய எழுத்தினை ஒட்டியும் பண்டை எழுத்து கள் அமைந்திருக்கலாம். பிராஹுய் மொழி, சுமேரிய எழுத்தினைப் பெற்றிருப்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

மத்திய ஆசிய சித்திய இனத்தோடும், பிராஹுய் மொழி யோடும் தொடர்புறுத்தப்படும் திராவிட மொழியைச் சுமேரிய எழுத்து வரலாற்றோடும் தொடர்புபடுத்திக் காணல் பொருத்தமே எனச் சிலர் கூறி வருகின்றனர்.

தமிழக மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களில் கி.மு. மூன்றும் நூற்றாண்டுக் குகைக் கல்வெட்டுகளில் பிராமி எழுத்து வழங்கியுள்ளது தென்னிந்தியாவில் வழங்கும் கிரந்தம், தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், ஆகிய மொழிகளுக்கு அதுவே மூலம் எனத் தெரியவருகிறது. இப் பிராமி எழுத்துப் புகுந்து, பண்டைத் தமிழ் எழுத்தினை ஒழித்திருக்க வேண்டும்.

தொல்காப்பியர் காலத்து வழங்கிய எழுத்தும், குகைக் கல்வெட்டெழுத்தும் ஒன்று, வேறு என்பதிலும் கருத்து வேறுபாடுண்டு.

(1) புத்த துறவிகள் தமக்குக் கைவந்த பிராமி எழுத்துகளால் பேச்சொலிகளையும் பிராகிருதச் சொற்களை யும் எழுதி இருக்க வேண்டும் என்பது ஒருசாரார் கருத்து.

இதற்கெதிராக இவ்வெழுத்து வேறு, தொல்காப்பிய எழுத்து வேறு என்னும் கருத்தும் நிலவுகிறது.

(2) புத்த துறவிகள் தமிழகத்தில் வழங்கிய எழுத்துகளாலேயே எழுதி இருக்க வேண்டும். அவ்வெழுத்துப் பிராமி எழுத்தே. அதுவே தொல்காப்பிய எழுத்துமாகும் எனும் கருத்தும் பலரால் வற்புறுத்தப்படுகிறது.

அசோகர் காலத்தில் புகுந்த பிராமி எழுத்துத் தொல்காப்பியர் காலத் தமிழ் எழுத்தினை ஒழித்துத் தமிழகத்தில் கால்கொள்ளத் தொடங்கிற்று. (1) கிரந்த எழுத்து, (2) பழந்தமிழ் எழுத்து (3) வட்டெழுத்து எனும் மூவகை எழுத்துகளும் அப் பிராமி எழுத்திலிருந்தே கிளைத்தன.

ஏழாம் நூற்றாண்டிலிருந்தே கிரந்த எழுத்தும், பழந்தமிழ் எழுத்தும் கல்வெட்டுகளில் வழங்கத் தலைப்பட்டன. வட்டெழுத்து எட்டாம் நூற்றாண்டிலிருந்துதான் கிடைக்கிறது.

வடமொழி ஒலிகளையும், சொற்களையும் எழுதுதற்குப் படைக்கப்பட்டதே கிரந்த எழுத்தாகும்.

வட்டெழுத்தென்பதே யாண்டும் பரவி நின்ற எழுத்தாகும்.

பல்லவர் காலத்தில் கிரந்தமும் தமிழும் கலந்த கலப்பெழுத்தால் எழுதிவந்தனர். அது கிரந்தத் தமிழ் எனப்பட்டது.

சோழர் காலத்தில் மீண்டும் பழந்தமிழ் எழுத்துகளே கால்கொள்ளத் தொடங்கின. இக் காலத் தமிழ் எழுத்துகள் அவற்றை ஒட்டியே அமைந்து, நிலையான வடிவத்தைப் பெற்றுள்ளன.

பல்லவர் உன்னத நிலையில் வாழ்ந்த காலத்தில், தொண்டைமண்டலத்தையும்,சோழ நாட்டையும்,கொங்கு நாட்டின் ஒரு பகுதியையும் ஆண்டுவந்தனர். அதனால், அப் பகுதிகளில் கிரந்தத் தமிழ் வழங்கி வந்தது.

பாண்டி மண்டலம், மலைநாடு; கொங்கு நாட்டின் மற்றொரு பகுதியாகிய இடங்களில் வட்டெழுத்து வழங்கி வந்தது.

இவ்விரு பிரிவுகளையும் ஒட்டிய எல்லைப் புறங்களில் கிரந்தத் தமிழ், வட்டெழுத்து எனும் இருவகைகளும் கலந்து வழங்கின.

பல்லவர் வலி குன்றச் சோழர்கள் தலையெடுத்துத் தமிழ்நாட்டின் பேரரசர்களாக விளங்கிய காலத்தில் இந் நாடு முழுவதிலும் அவர்கள் பழந்தமிழ் எழுத்தைப் பரப்பினர். அன்று முதல் தமிழ்நாடு முழுவதும் பழந்தமிழ் எழுத்தே வழங்கிவருகிறது.

சோழர்களின் ஆதிக்கத்தை நேராகப் பெறாத மலை நாட்டில் வட்டெழுத்து வழக்கும் இருந்துவந்தது. ஆண்டுள்ளார் தங்கள் மணிப்பிரவாள மொழிக்குரிய எழுத்தாகக் கிரந்த எழுத்தை 'ஆரிய எழுத்து' என மாற்றி அமைத்துக்கொண்டதால், வட்டெழுத்து ஒதுக்கப்பட்டுச் சிலரால் மட்டுமே பயிலப்பட்டு வந்தது. அது கோலெழுத்து எனவும், கண்ணெழுத்து எனவும் வழங்கி நாளடைவில் மறைந்துவிட்டது.

'வம்ப மாக்கள் தம்பெயர் பொறித்த
கண்ணெழுத்தப் படுத்த எண்ணுப் பல்பொதி'

எனச் சிலப்பதிகாரம் அரசியலார் கையாண்ட எழுத்தைக் குறிப்பிடுகிறது. அது வட்டெழுத்தாகும்.

கிரந்தம், பழந்தமிழ், வட்டு எனும் மூவகை எழுத்துகளும் தமிழ்க் கல்வெட்டுகளில் இடம்பெற்றன என்பதில் கருத்து வேறுபாடு சிறிதும் இல்லை.

சோழர் பரப்பிய பழந்தமிழ் எழுத்துப் பிராமி எழுத்தோடு தொடர்பு உடையது என்பதிலும் கருத்து வேறுபாடு இல்லை.

சேர நாட்டில் வழங்கிய வட்டெழுத்துப் பிராமி எழுத்திலிருந்து கிளைத்தது என்பதிலேயே கருத்து வேறுபாடுள்ளது. சேர நாட்டு எழுத்துப் பழந்தமிழ் எழுத்தின் வழி வந்தது; அதுவே தொல்காப்பியர் காலத்தில் வழங்கிய எழுத்தாகும் எனும் கருத்து வற்புறுத்தப்படுகிறது. இதனால், வட்டெழுத்துப் பழந்தமிழ் எழுத்திலிருந்து நேரே கிளைத்த ஒன்று என்பது பெறப்படுகிறது.

வட்டெழுத்தும் ஏனைய கிரந்தம், பழந்தமிழ் எழுத்துக்களைப் போலவே பிராமி எழுத்தினின்றே தோன்றியது எனத் தி. நா. சுப்பிரமணியம் கூறுகிறார்.[1]

1. பண்டைத் தமிழ் எழுத்துகள் பக். 106

தொல்காப்பியர் குறிப்பிடும் வரிவடிவங்கள்

எழுத்துகளின் ஒலி வடிவத்தைக் குறிப்பிடுவதைப் போலவே வரிவடிவங்கள் சிலவற்றையும், முறை வைப்பையும் குறிப்பிடுகிறார்.

முதலெழுத்துகள் 'அகரமுதல் னகர இறுவாய் முப்பஃது' என்பர்.

மெய்களும் எகர, ஒகர, மகரக் குறுக்கமும் புள்ளி பெறும் எனக் கூறுகிறார்.

'புள்ளியில்லா எல்லா மெய்யும்
உருவுரு வாகி அகரமொடு உயிர்த்தலும்
ஏனை உயிரோடு உருவுதிரிந்து உயிர்த்தலும்
ஆயீ ரியல உயிர்த்தல் ஆறே'

என உயிர் மெய்க்கு வடிவு கூறுகிறார்;[1] ஆய்தத்தை முப்பாற்புள்ளி எனக் குறிப்பிடுகிறார். எனவே, மெய்கள் புள்ளி பெற்றும், உயிர்மெய்கள் புள்ளி இன்றியும் எழுதப்பட்டன என்பதும் தெரிகிறது. எகரமும் ஒகரமும் புள்ளி பெற்றன. ஆய்தத்தை முப்பாற்புள்ளி என்றனர். ஏனைய உயிர்களைப் பற்றிக் குறிப்பிடாமையால் அவை புள்ளி பெறாத தமக்கேயுரிய வடிவின என்பது பெறப் பட்டது.

வீரமா முனிவர் செய்த தொண்டு

பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த வீரமா முனிவர் தமிழ் எழுத்து முறையில் சில சீர்திருத்தங்களைச் செய் துள்ளார். எகரத்துக்கும், ஒகரத்துக்கும் புள்ளிகளை நீக்கி ஏகாரத்திற்குக்கால் இட்டும் ஓகாரத்திற்குச் சுழி தந்ததும் மாற்றம் விளைவித்தார்; ரகரத்திற்குக் கால் இட்டும் ஏனைய நெடில் அறிகுறிக்கு 'ா' காலின்றி வேறுபடுத்தியும் காட்டினர்; உயிர் மெய்களுள் எகர, ஒகரங்களுக்கு ஒற்றைக் கொம்பையும், அவற்றின் நெடில் வடிவங்களுக்கு இரட்டைக் கொம்பையும் அமைத்தார்.

---

1. தொல்காப்பியம் எழுத்தியல் சூ. 17

மேற்கோள் நூல்கள்

1. Comparative grammar Dr. Caldwel 1961

2. Collected papers Prof. T. S. Burrow 1968

3. A History of the Tamil Language Dr. T. P. Meenakshi-sundaram Pillai 1965

4. Dravidian Verb Morphology Dr. P. S. Subramanian 1971

5. Dravidian nouns Dr. S.V. Shanmugam 1970

6. Comparative Dravidian Phonology Dr. Kamil zvelebil 1971

7. தமிழ் எழுத்தியல் இன்றும் அன்றும் டாக்டர் முருகரத்தினம் 1973

8. இலக்கண உலகில் புதிய பார்வை டாக்டர் பொற்கோ 1973

9. தமிழும் பிற பண்பாடும் டாக்டர் தெ. பொ. மீனாட்சிசுந்தரம் பிள்ளை 1973

10. தொல்காப்பியம் எழுத்தும் சொல்லும்

11. நன்னூல்

12. வீரசோழியம்

13. தமிழ் மொழி வரலாறு மோசசு பொன்னையா M.A. 1972

14. பண்டைத் தமிழ் எழுத்துகள் தி. நா. சுப்பிரமணியன் 1938

நூல்கள் கிடைக்குமிடம்

அணியக வெளியீடுகள்

ஆசிரியர் : ரா.சீ

1. அணியகம், சென்னை-30. ✆ 644 9630
2. பாரி நிலையம், சென்னை - 108.
3. சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.
4. ஹிக்கின் பாத்தம்ஸ், சென்னை - 2.
5. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.
6. நியூ புக் லாண்ட், சென்னை - 17.
7. கிரி டிரேடிங் ஏஜென்சி, சென்னை-4.

002144